
Registered as a News Paper
பக்கம் - 26

# ஈழநாதம்

விலை: 16.00
வெள்ளிநாதம் Weekly
நாதம்-15 வெள்ளி-30 24-30 செப்ரெம்பர் 2004



# திருமுக அறிமுகம்

யாழ் தென்மராட்சியின் மட்டுவில் கிராமத்தில் 1899 ஆம் ஆண்டு ஆணிமாதம் 27ஆம் திகதி சின்னத்தம்பி வள்ளியம்மை தம்பதிகளுக்கு மகனாகப்பிறந்தார் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள். தயாரின் தனங்கிளப்பு ஊரிலுள்ள காரைத்தூவிநாயகர் குலதெய்வமான படியால் இவருக்கு கணபதிப்பிள்ளை என்ற பெயர் சூட்டப்பெற்றது.

மட்டுவில் அமெரிக்கமிசன் பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியை கற்றார். அதன் பின்னர் தனது 17ஆவது வயதில் நம்பிக்கை, தெய்வபயம் இலக்கிய, இலக்கண அறிவு நிரம்பப் பெற்ற மட்டுவில் க.வேற்பிள்ளையிடம் பாடம் கற்று வந்த பொழுது நாவலர் காவியப் பாடசாலையைப் பற்றி கேள்விப்பட்டு அங்கு சென்று கல்விபயின்றார். வண்ணார்ப்பண்ணை காவியப்பாடசாலை பெரிதும் அவரை விருப்பத் தோடு கல்வி கற்க வைத்தது. சுண்ணாகம் அ.குமாரசுவாமிபுலவர். புலவர், த.கைலாசப்பிள்ளை, வித்துவான் ந.சுப்பையாபிள்ளை. ஆகியோரிடம் இலக்கண, இலக்கியங்களை குருசீட முறையில் கற்றார். பழமையில் பற்று வைக்கும் பணிகளை இவர் காவியப் பாடசாலையில் கற்றுக் கொண்டார். மதுரைச் தமிழ்ச் சங்க பண்டிதர் பரிட்சையில் சித்தி பெற்றார்.

தனது 3 ஆவது வயதில் தாயை இழந்த பண்டிதமணி சி.கனபதிப்பிள்ளை அவர்கள் சிறந்த கல்வி மானாக வளர வேண்டும் என்பதில் பண்டிதமணியின் தந்தை சின்னத்தம்பி ஆர்வமுடன் செயற்பட்டார்.

திருநெல்வேலி சிவன் கோயிலுக்கு அருகில் கல்வியில் துறைபோன பலரும் ஒன்று கூடி நாட்டு நடப்புகள் பற்றி அலசுவார்கள் ஆங்கில இலக்கியம், விஞ்ஞானம், கணிதம் போன்ற துறைகளில் தங்கள் கருத்துக்களை எடுத்துக்கூறி விவாதிப்பார்கள்.அந்த கலந்துரை யாடல்களில் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையும் கலந்து கொள்வார். இதனால் பண்டித மணிக்கு ஆங்கில இலக்கியங்களில் நாட்டம் ஏற்பட்டது.

யாழ் மத்திய கல்லூரி ஆசிரியராக விளங்கிய கலைப்புலவர் நவரட்ணம் என்பவர் 1931 ஆண்டு திருநெல்வேலியில் கலா நிலையம் ஒன்றினை ஆரம்பித்து வைத்தார். அதில் உறுப்பினராகவும் பண்டிதமணி அவர்கள் இருந்தார். பண்டிதமணி ஆசிரிய கலாசாலையில் பயிற்சியை முடித்துக் கொண்டு திரு நெல்வேலியில் சைவ ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் 1929ஆம் ஆண்டு தமிழ் விரிவுரையாளராக இருந்ததனால் கலா நிலையத்திற்கு அடிக்கடி வந்து பல தொண்டுகள் புரியத்தொடங்கினார். மக்களின் பார்வைக்காக இலக்கண, இலக்கிய புத்தகங்களையும் தருவித்தார். எந்நேரமும் கலாநிலையம் மக்களால் சூழப்பட்ட ஒரு இடமாகத் திகழ வைத்தார்.

நகைச்சுவை ததும்ப உரையாற்றும் அவர் சிறந்த பேச்சாளராகவும் திகழ்ந்தார். இந்தியாவில் இருந்து அறிஞர்களை வரவழைத்து சமய சொற் பொழிவுகள் நிகழ்த்தினார்.

பண்டிதமணி அவர்கள் ஆசிரிய கலாசாலையில் கற்பிக்கும் முறை வித்தியாசமானது. மிகுந்த நகைச்சுவை உணர்வுடன் கல்வி புகட்டுவார். இதனால் மாணவர்கள் மத்தியில் விருப்புடையவராக விளங்கினார். இவரின் பாடத்தை மாணவர்கள் வாஞ்சையுடன் கற்றனர்.



இவரது நவபாரதம் என்ற உருவகக்கதை 1938 ஆம் ஆண்டு ஈழகேசரி ஆண்டு மலரில் வெளி வந்துள்ளதை அறிந்த பலரும் தேடித் தேடி படித்தார்கள். இவ்வாறு 30 வருடங்கள் சைவாசிரியப் பணியை தொடர்ந்து செய்தார் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள். இவரிடம் கல்வி பயின்ற மாணவர்கள் பெரும் புலவர்களாக விளங்கியதுடன் சிலர் சமய பண்பாட்டினை பரப்புவர்களாகவும் இருந்துள்ளார்கள்.

## பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை

பணிவும் அடக்கமும் மிகுந்த பண்டிதமணி அவர்கள் சிறந்த பேச்சாளர். சிறந்த எழுத்தாளரும் ஆவார். இவரது படைப்புக்கள் மாணவர்களின் உயர்தர வகுப்பு பாடங்களில் சேர்க்கப்பட்டுள்ளன. 'கம்பன் ஒரு வம்பன', 'அவையடக்கம்' போன்றவை க. பொ.த. சாதாரண தரம் மாணவர்களுக்கான பாடநூலில் சேர்க்கப்பட்டுள்ளன.

இவர் எழுதிய கந்தபுராண தக்ஷண காண்ட உரை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் யானைமேல் வைத்து ஊர்வலமாக எடுத்து சென்ற சிறப்பும் பெற்றது. சைவ சமயம், தமிழிலக்கியம், மெய்யியல், தமிழர் பண்பாடு ஆகிய துறைகளில் இவர்ஆற்றிய உரைகளும், எழுதிய கட்டுரைகளும் தொகுக்கப்பட்டு 23 நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன.

1978 ஆம் ஆண்டு இலங்கை பல்கலைக்கழகம் பண்டித மணிக்கு "இலக்கய கலாநிதி" பட்டத்தை வழங்கி கௌரவித்தது. யாழ்ப்பாணத்து மக்களை மனிதர்களாக வாழச் செய்வது புராண படனமாகும் கந்த புராண கலாச்சாரம் தான். அந்நிய நாட்டவரின் ஆசை வார்த்தையில் மயங்காது மக்களை காத்து வந்தது. தமிழ், சைவம் இரண்டையும் இரு கண்களாக போற்றிய பண்டிதமணி அவர்கள் 86 ஆண்டுகள் நைட்டிக பிரமச்சாரியாக வாழ்ந்து 1986 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 13ம் திகதி இறைவனடி சேர்ந்தார். அவரது பூதவுடல் திருநெல்வேலி கலா நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் நூற்றாண்டு விழா 1999 ஆம் ஆண்டு விமரிசையாக கொண்டாடப்பட்டது.

அட்சயன்

# காரசாரம்

# எங்களுக்கென்று திட்டமிட்ட; கல்வி ஏன் இல்லை.....?

சுயநிர்ணய உரிமை, சுயநிர்ணய உரிமையெண்டு எல்லாவிடயத்திலும் பேசுகிறோம். ஆனால் இந்தச் சுயநிர்ணய உரிமையை நாம் பயன்படுத்துகிறோமா? என்றால் இல்லை. சமாதான உடன்பாடு காணப்பட்டு இரண்டு வருடங்களாகிவிட்டது. ஆனால் நாங்கள் என்னவோ, டொனமூர் சோல்பரிகாலத்தில் இருப்பது போலதான் தெரிகிறது. டொனமூர் அரசியல் திட்டத்தின் போது, எங்கள் ஆங்கிலம்படித்த தமிழ் அரசியல்தலைவர்கள், ரொம்பவும் வேதனைப்பட்ட விசயம் ஒன்று உண்டென்றால், அது சர்வசனவாக்குரிமை. 'எங்கட பெண்களுக்கு வீட்டுநிர்வாகமே பார்க்கத்தெரியாது அதுகளுக்கேன் அரசியல்' என்ற மாபெரும் உண்மையப்போட்டுடைத்தது இவர்கள்தான். அதன்பிறகும் சிங்களத் தலைவர்களும் தமிழ்த்தலைவர்களும் சுயநிர்ணய உரிமை கேட்டபோது வெள்ளைக் காரத்துரைமார் சொன்னது என்ன வென்றால் இலங்கையருக்கு ஆளத்தெரியாது. அவர்களுக்கேன் ஆட்சியுரிமை என்றதுதான்.

அதெல்லாம் பழைய கதை. ஆனால் இப்பவும் நாங்கள் அந்தநிலையிலயிருந்து மாறவில்லை என நினைத்துக்கொண்டிருக்கிற வெள்ளைத்தோல் துரைமாருக்கு நாங்களும் ஏன் ஆமாசாமி போடுகிறோமென்றதுதான் விளங்காதபுதிராகத்தெரிகிறது.

தமிழர்கள் ஆட்சியில் என்னவோ தன்னிறைவை அடைய வேண்டுமென்று துடித்தாலும், நடைமுறையில் அவர்களைப் பற்றித் தீர்மானமெடுக்க முடியாதவர்களாகவே போய்விட்டார்கள். இந்த வெள்ளைத்துரைமாரும் துரைச்சாமிமாரும், தமிழீழப்பரப்புக்குள் வந்து நின்றுபோடும், அட்டகாசங்களைப்பார்த்தால் அப்படித்தான் தெரிகின்றது.

முக்கியமாக எங்களுடைய எதிர்காலச் சந்ததியினரை, தங்களுடைய இஷ்டப்படி ஒரு செம்மறியாட்டுக்கூட்டமாக மாற்றி விடத்தயாராகவே உள்ளனர். பாடசாலைகளில் நடைமுறையிலுள்ள கல்வித்திட்டங்களே படுமோசமானதாக இருக்கிறது. போதும், போதாததற்கு, இவர்கள் வேறு. பாடசாலை செல்லும் சிறுவர்களுக்கு சுமார் முப்பது வருடங்களுக்கு முன்னர் மாலையில் பெற்றோருடைய வேலைகளில் பங்கெடுக்க, விளையாட, விளாத்தி மரத்துக்கு கல்லெறிய, போழையடிக்க என்று தாராளமான நேரமிருந்தது. ஆனால் இப்போதுள்ள பிள்ளைகளுக்கு அது கிடையவே கிடையாது.

போர்ச் சூழல்காரணமாக இடம்பெயர்ந்து, இடம்பெயர்ந்து பல பாடசாலைகட்கு அலைந்தும் ஆசிரியர்கள் இல்லாமையாலும், விருப்பமற்ற, பயங்கரமான சூழ்நிலைகளாலும் பாதிக்கப்பட்டு கல்வியை முன்னெடுக்க முடியாத பிள்ளைகள்மீது விசேட கவனம் எடுக்கவேண்டும். இதற்காகவே கல்விநிலையை வைத்து பிள்ளைகளை வகுப்புகளில் தரம்பிரிப்பார்கள். நன்கு படிக்கக்கூடியபிள்ளைகளை விட படிப்பில் குறைவாக உள்ளவர்கள் மீது தனிக்கவனம் செலுத்துவதற்காகவே அவ்வாறு செய்யப் படுகிறது என்று கூறப்பட்டாலும், நடப்பது என்ன? கெட்டித்தனமாகப் படிக்கக்கூடிய தரத்தில் உள்ள பிள்ளைகளே விசேட கவனத்தைப் பெறுகின்றார்கள். ஏன்? பாடசாலையின் தரத்தை உயர்த்திக்காட்ட இது அவசியம் ஆகிறது.

அப்போ பின்தங்கிய பிள்ளைகள் என்ன செய்வது, அவர்களுக்கென்றொரு திட்டத்தை வடிவமைக்க உள்ளூரில் யாருமில்லாமல் போகவே யுனிசெப் நிறுவனம் பெரிய தொகைப்பணத்துடன் பெரியதொரு திட்டத்தையும் கொண்டுவந்து திணித்திருக்கிறது.

"மெல்லக்கற்போம்" இது உண்மையில் 'பிள்ளைகளின் சுதந்திரத்தை கொல்லக்கற்போம்' என்றே இருக்கவேண்டும். காலை ஏழரை மணிக்குப் பாடசாலைச் சுவர்களுக்குள் அடைக்கப்படும் சிறுவர்கள் மாலை ஐந்து மணிவரை சிறை வைக்கப்படுகிறார்கள்.

ஒன்பது வயதுவரை ஒரு பிள்ளையின் பாடசாலை நேரம். மூன்றரை மணித்தியாலயங்களே இருக்கவேண்டும் என்ற கல்வி, குழந்தைகள் உளவியலாளர்களால் கொண்டுவரப்பட்டு சகல பாடசாலை களிலும் நடைமுறையிலிருந்தாலும் மூன்று நான்கு வயதுப் பிள்ளைகளை இங்கே ஐந்தரை மணிநேரம் (08.30 - 2.00)கற்கும் கொடுமையும் யுனிசெவ்வின் புண்ணியத்தில் நடக்கிறது. இந்த நிறுவனங்களுக்குத்தேவை வேலை. ஒரு திட்டத்துக்கென ஒதுக்கப்படும் நிதியில் அறுபது வீதமானபணம் இந்த வெளிநாட்டு நிறுவனங்களின் வெளிநாட்டு ஊழியர்களின் உணவு, சம்பளம், போக்குவரவு, சேவை என முடிகிறது. இதே திட்டங்களில் வேலை செய்யும் உள்ளூர் ஊழியர்களின் சேவை ஊதியம் போன்றவை இருபது வீதத்தை விழுங்கிவிடும். பத்துவீதம், கூட்டங்கள், பட்டறைகள், பயிற்சிகள் என்று போக மீதம் பத்துவீதமே பாதிக்கப்பட்டபயனாளிகளுக்குச் சேர்கிறது.

இப்படியிருக்க, எங்களுடைய பிள்ளைகளுக்குப் பாடசாலை நேரத்திலேயே கற்பித்தலை மேற்கொள்ள ஏன் முயலக்கூடாது. ஒரேகட்டடத்தில் இரண்டு பாடசாலைகள், காலையிலொன்று, மாலையிலொன்று என, நடத்திய தேசம் தானே இது.

நான்கு வயது மழலை இரண்டு மணிக்குப் பாடசாலையிலிருந்து வந்து சாப்பிடக்கூட முடியாமல் சோர்ந்து படுக்கிறது. பாடசாலையில் மெல்லக்கற்போரைச் சொல்லவே வேண்டாம். பாடசாலைவிட்டதும் துள்ளிக்கொண்டு வீதிக்கோடும் ஏனைய பிள்ளைகளைப் பார்த்து ஏங்கிநிற்பதும் கொலைக்களத்துக்குப் போகும் குற்றவாளிகளைப் போல அடைபட்டுக்கிடந்துவிட்டு அசந்து போய் வீட்டுக்கு வருவதை ஒரு பெற்றாராக நின்று பாருங்கள் அப்பிள்ளைகளின் முகங்களை இன்னும் மீதமிருக்கும் அந்த ஒரு மணித்தியாலப் பகல் பொழுதில் விளையாடக்கூடமுடியாமல் சோர்வு அவர்களை ஆட்கொள்கிறது.

இந்தப் பிள்ளைகள் விரைவில் கல்வியை வெறுத்து விடுவார்களா? இல்லையா? ஐந்து வயதுச்சிறுமி, ஆறரைமணிநேரக் கல்வியில் சலிப்படைந்து தாயிடம் கேட்டாளாம் "அம்மா நான் பள்ளிக்கூடம் போகேல்ல எனக்கு மாடு வாங்கித்தாங்கோ" என்று அவள் அப்படிக் கேட்டதற்குக் காரணம் அந்தத்தாய் பிள்ளையிடம் அடிக்கடி "நீ படிக்காட்டி மாடுமேய்க்கத்தான் போவாய்" என ஏசியது.

மாடு மேய்ப்பது அப்படி ஒன்றும் கேவலமான வேலை அல்ல என்பது நியூசிலாந்தைப் பார்த்தவர்களுக்குத் தெரியும். ஆனால் எங்கள்நாட்டில் அது அந்த அர்த்தத்தில் சொல்லப்படுவதில்லை.

எங்களுக்கென்று நாங்கள் திட்டமிட்டகல்விநேரம் ஏனில்லை.

வாஸ்து சாஸ்திரம் பார்த்து வீடு கட்டி குசினி எந்தப் பக்கம், குளியல் எந்தப்பக்கம் கிணறு எந்தப்பக்கம் என்று முறைவைத்து அடியளந்துமனை கட்டுவது தமிழர்சால்பு இப்போ எங்களுக்கான வீட்டைக்கூட யாரோ கட்டிவிடுகிறார்கள், பத்தடி உயரத்தில் சீற்றில் கூரை போட்டுக்கட்டப்பட்ட வீடுகளில் மக்கள் வாழவேண்டியுள்ளது. காரணம் வீடுகட்டுவதற்கான பண உதவியைச்செய்யாமல் வீட்டையே கட்டித்தரவிளைகின்றன நிறுவனங்கள். நாலு வளவுக்கு நடுவாகமூலையில் ஒருகுழி அந்த ஒரே குழிக்கு நாலு மலசல கூடங்களின் கழிவுகளும் சேரும் குழாயமைப்பு- நாலுமலசலகூடங்களுக்கான திட்டமிடலின், மூன்று குழிகள் வெட்டிக்கட்டும் காசு... எவருடையபையில்.

ஆஸ்பத்திரி, கட்டித்தர வேண்டியது அரசாங்கம். வெளிநாட்டு நிறுவனங்கள்தான் அதை செய்கின்றன என்றால், யார் அரசு?

பற்றாக்குறையிலுள்ள பணியாளர்களுக்குப்பதிலாக ஊழியர்களை நியமிக்க ஊதியம் வழங்க ஏன் யாரும் முன்வரவில்லை. உண்மையில் ஆசிரியர்களே பற்றாக்குறையாக உள்ள பாடசாலைகளில் திறமையுள்ள ஒரு ஆசிரியர் இருந்தால்... அவரையும் நகரப்பாடசாலைக்கு மாற்றிவிடுகிறார்கள், என்கிறார் ஒரு பின்தங்கிய கிராமவாசி. அது ஆசிரியரின் விருப்பமாக இருந்திருக்குமென்றால் அதுவுமில்லை.

மேலும் மேலும் நசுக்கப்பட்ட ஏழைமக்கள் கல்விநெருக்கடிகளால் பாரம்பரியமாகவே அடங்கிப்போகவேண்டுமென்பது பட்டணத்தவர் கொள்கை. மூன்றாம் உலகநாடுகளின் அபிவிருத்திக்கு உழைப்பதாகப் பேர்பண்ணி ஆடம்பர உணவகங்களில் உணவருந்தி குளிரூட்டியவாகனங்களில் உலா வரும துரைமாரின் எண்ணமும் வேறல்ல. இரப்போர் இருக்கும் வரை கொடுப்போரும் இருப்பர். கொடுப்போரே ஆள்வோர் - யாரை சிந்திப்போம்.

மாயா

# தயாசந்தகிரிக்குப் புதிய பொறுப்பு
# யுத்த மூலோபாயத்தில் மாற்றம்?

நிலாந்தன்

சிறிலங்காவின் கடற்படைத் தளபதி தயா சந்தகிரி முப்படைகளின் தலைமை அதிகாரியாக நியமிக்கப் பட்டிருக்கிறார். ஒரு கடற்படைத் தளபதி இந்தப் பொறுப்புக்கு நியமிக் கப்பட்டிருப்பது சிறிலங்கா படைத் துறை வரலாற்றில் குறிப்பாக ஈழப் போர் தொடங்கியபின் இதுவே முதற் தடவை.

இந்த நியமனத்தை இரண்டு விதமாக வியாக்கியானம் செய்யலாம். முதலாவது, இது ஒருவிசுவாச



நியமனம். இரண்டாவது, இது இல ங்கைஅரசாங்கத்தின் போரியல்மூலோ பாய மாற்றம் ஒன்றைக் குறிக்கும் நியமனமாக இருக்கலாம் என்பது.

முதலாவதின்படி, சந்திரிகா தனக்கு மிகவும் விசுவாசமான ஒரு தளபதிக்கு மேற்படி பொறுப்பைத் தந்ததன் மூலம் முப்படைகள் மீதிலு மான தனது பிடியை இறுக்கியி ருக்கிறார் என்பது. அல்லது அவர் தயாசந்தகிரியின் விசுவாசத்திற்குப் பரிசளித்திருக்கிறார் என்றும் எடுத்துக் கொள்ளலாம். அல்லது யுத்தகாலங் களில் தரைப்படைத் தளபதிகளுக்கே வழங்கப்பட்டுவந்த இந்தப் பொறுப்பை, யுத்தநிறுத்தகாலம் இது என்பதால் அதாவது சண்டை செய்யத் தேவையில்லாத ஒரு காலகட்டத் திற்குரிய நியமனமாக அவர் அதை கடற்படைத்தளபதிக்குத் தந்திருக் கிறார் என்றும் எடுத்துக்கொள்ளலாம்.

ஆனால் இதெல்லாம் ஒரு பெரிய பிரச்சினை இல்லை. பிரச் சினை எதுவெனில், இரண்டாவது வியாக்கியானம்தான். அதைக்குறி த்தே தமிழ்கள் அதிகம் உசாராகவும் அசாதாரண முன்னெச்சரிக்கையுணர் வோடும் இருக்கவேண்டியிருக்கும். எனவே அந்த இரண்டாவது வியாக் கியானத்தைப் பார்ப்போம். அதாவது சிறிலங்கா படைத்துறை தனது போரி யல் மூலோபாயத்தை மாற்றுவதற்கு யுத்தநிறுத்தத்தை ஒரு கால அவ காசமாகப் பயன்படுத்துகிறதா? என் பது, இதை சிறிது விரிவாகப்பார்ப் போம்.

சில ஆண்டுகளுக்கு முன்பு (ஆண்டு சரியாக ஞாபகத்தில் இல்லை - அநேகமாக றிவிறச இடப் பெயர்விற்கு சிறிது முன் பின்னாக இருக்கலாம்) சிறிலங்காப் படைத் துறையின் ஓய்வுபெற்ற இரண்டாம் நிலை அல்லது மூன்றாம் நிலைத் தளபதி ஒருவர், ஐலன்ட் பத்திரி கையில் ஒரு கட்டுரை எழுதியிருந் தார். அவருடைய பெயரை முழு அளவில் ஞாபகப்படுத்த முடிய வில்லை. ஆனால் அது ஏதோ ஒரு பெரேரா என்று முடிந்ததாக ஒரு சின்ன ஞாபகம்.

அந்தக் கட்டுரை அதிகம் பெரியதல்ல. ஆனால் மிகவும் ஆழ மானது. அது அப்போதிருந்த (இப்பொ ழுது வரையிலும் உள்ள) சிறிலங்கா வின் யுத்தமூலோபாயத்தை நிரா கரித்து தனது தரப்பு நியாயத்தை ஒரு கணிதச் சமன்பாட்டை நிறுவுவதுபோல நிறுவி யிருந்தது. அந்தக் கட்டுரை யின் சாரம்சம் வருமாறு; இலங்கை ஒரு தீவாயிருப்பதால் அதன் பாதுகாப்பு மூலோபாயம் எனப் படுவது அதிக பட்சம் கடல்மைய மூலோபாயமாகவே இருக்கவேண்டும் இதன்படி கடற் படையைத்தான் பெருப்பிக்கவும் பலப்படுத்தவும் வேண்டும்.

ஆனால் சிறிலங்காவின் எல்லா அரசாங்கங்களும் தரைப்படையைத் தான் அளவிற்கு மிஞ்சி வீங்க வைத் துள்ளன.

புலிகளின் பலம் எனப் படுவது (என்று அந்தக்கட்டுரை கருதுவது) அவர்களுடைய விநி யோக வழிகள்தான். இந்தக் கடல் வழி விநியோகவழிகளை அடைத்து விட்டால் புலிகளிற்கு விநியோகம் இல்லாது போய்விடும்.எனவே ஒரு கட்டத்துக்கும் மேல் புலிகளின் போர்த்திறன் வளரமுடியாது.

இப்படி புலிகளின் கடல் விநியோகவழிகளைத் தடுக்கவல்ல ஒரு கடற்பாதுகாப்பு மதிலைப் போடு வதற்கு பலமான ஒரு கடற்படை வேண்டும். அதோடு அந்தக்கடற் படையிடம் ஒரு வான்படை அலகும் இருக்கவேண்டும். இதன்மூலம் புலிகளின் விநியோகவழிகளை மூடி விட்டால் குறிப்பிட்ட ஒரு கால கட் டத்துக்குப்பின் தொடர்ச்சியான விநி யோகமற்ற ஒரு நிலையில் முடக் கப்பட்டிருக்கும் புலிகளை தரைப் படையின் படை நடவடிக்கைகளால் நசுக்கிவிடலாம்.

இதை இப்படிச்செய்வ தென்றால் முதலில் கடற்படையின் பருமனை இப்பொழுதிருப்பதைவிட பல மடங்கு அதிகரிக்கவேண்டும். அப்படி கடற்படையை பெருப்பிக்கும் வேலைகளைச் செய்துகொண்டிருக் கும்போதே தரைப்படையின் பரு மனையும் குறிப்பிட்ட ஒரு விகிதத் திற்கு குறைத்துக்கொண்டு வர வேண்டும். அதாவது அளவிற்கு மிஞ்சி வீங்கிக்காணப்படும் தரைப்படையின் பருமனைக்குறைக்கும் நடவடிக் கையும் தரைப்படையோடு ஒப்பிடு கையில் சிறியதாகக் காணப்படும் கடற்படையின் பருமனை பெருக்கும் நடவடிக்கையும் சமாந்தரமாகச் செய்யப்படவேண்டும்.

இதுதான் அந்தக்கட்டு ரையின் சாரம்சம். இதன்படி புலிக ளைத் தோற்கடிப்பது என்பது அவர் களை கடல்வழியாக சுற்றிவளைப்ப திலிருந்தே தொடங்கப்படவேண்டும் என்ற தொனி அந்தக்கட்டுரையில் காணப்பட்டது. அதோடு அப்போ திருந்த (இப்பொழுதுமுள்ள) வீங்கிய தரைப்படை நாட்டிற்கு - அதுவும் போரில் ஈடுபடும் ஒரு நாட்டிற்கு மேல திக சுமை என்றமுடிவிற்கு நாம் வரக்கூடிய விதமாக அந்தக்கட்டுரை அமைந்திருந்தது.

தற்சமயம் கொழும்பில் நிகழ்ந்துள்ளபடைத்துறைக் கட்ட மைப்பு மாற்றம் மேற்படி கட்டுரையை தவிர்க்கவியலாதபடி ஞாபகத்திற்கு கொண்டுவந்தது.

அந்தக்கட்டுரை வெளிவந்த காலம் கடுஞ்சண்டை நடந்துகொண் டிருந்தது. எனவே தரைப்படையின் அளவைக்குறைத்து கடற்படையின் அளவைப் பெருக்கக்கூடிய ஒரு கால அவகாசமும் ஓய்வும் இல்லாதிருந்த ஒருகாலகட்டம் அது. எனவே இப் பொழுது நிலவும் யுத்த நிறுத்தச் சூழலை அதற்கு வசதியாகப்பயன் படுத்த அரசாங்கம் முயல்கிறதா?

தயாசந்தகிரி பதவியேற்ற பின் பத்திரிகையாளர்களைச் சந்தித்தபோது கடற்படையின் ஒரு பகுதியாக வான்படை அலகு ஒன்றை உருவாக் குவது பற்றியும் கேட்கப்பட்டதை இங்கு சுட்டிக்காட்டவேண்டும்.

தவிர, அமெரிக்காவின் பசுபிக் பிராந்திய கடற்படைப்பீடத்தின் கட்டளைத்தளபதியின் வருகை மற்றும் இந்தியக் கடற்படைத் தலைமை அதிகாரியின் வருகை என்பவற்றோடு, அமெரிக்காவிடம் இருந்து கறேஜஸ் கப்பலை வாங்கியது, இந்தியாவிடம் இருந்து மேலும் ஒரு கப்பலை வாங்கவிருப்பது போன்ற எல்லாவற்றையும் கூட்டிக்கழித்துப்பார்த்தால் இந்த அச்சம் மேலும் அதிகரிக்கும்.

குறிப்பாக திருகோண மலையின் பாதுகாப்பைக் குறித்து அவர்கள் அதிகம் பேசிவருவதும் இதோடு தொடர்பு படுத்திச் சிந்திக் கப்படவேண்டிய ஒரு விசயம்தான்.


ஏற்கனவே இந்திய - சிறிலங்கா கடற்படைகளிற்கிடையில் நெருக்கமான உறவும் உளவுத் தக வல் பரிமாற்றமும் உண்டு. இது தவிர இந்திய மீனவர்களை ஈழத்து மீனவர்களோடு மோத விடுவதில் இரு நாட்டுப்புலனாய்வு நிறுவனங்களும் வெற்றி பெற்றுவிடத்துடிக்கின்றன. இந்நிலையில் மீனவர்களிற்கிடையில் விரோதத்தை உண்டாக்கி அதைப் பேணுவதன்மூலம் கடலில் ஒரு வித உளவியல் மதிலைப்போடும் அதேசமயம், இந்தியக் கடற்படையும் சிறிலங்காக்கடற்படையும் நெருங்கி ஒத்துழைப்பதன்மூலம் மெய்யாகவே கடலில் ஒரு ரோந்து வேலியைப் போட்டுவிடலாம் என்று இரு நாட்டுக் கடற்படைகளும் நம்புகின்றன.

அவர்களிற்கு இப்பொழுது உறுத்தலாயும் பிரச்சினையாயும் இருப்பது கடற்புலிகளின் விரைந்த வளர்ச்சிதான். இந்தப்பிராந்தியத்தில் ஒரு மூன்றாவது கடற்படை இருப் பதை இந்தியா விரும்புவதாகத் தெரியவில்லை. இடைக்கால நிர் வாக ஏற்பாடு எதிலும் கடற்புலிகளின் இருப்பை நியாயப்படுத்தக்கூடிய எந்த வொரு ஏற்பாட்டையும் அல்லது புரிந் துணர்வு உடன்படிக்கையைப் போல கடற்புலிகளைப்பற்றி துலக்கமாக வரையறுக்காத எந்தவொரு ஏற் பாட்டையும் இந்தியா ஏற்றுக் கொள்ளும் என்று தோன்றவில்லை.

எனவே யுத்தமூலோ பாயத்தை அதிகம் கடல்சார்ந்ததாக மாற்றுவதன்மூலம் கடற்புலிகளின் வீச்செல்லையை மட்டுப்படுத்துவ தோடு நீண்டகால நோக்கில் புலி களை சுற்றிவளைத்து மடக்கி விடலாம் என்று கொழும்பில் உள்ள போரியல் நிபுணர்களும் அவர்களுடன் சேர்ந்து சிந்திக்கும், இந்தப்பிராந் தியத்தில் கடற்புலிகளின் பிரசன் னத்தை விரும்பாத எல்லாச் சக்தி களும் திட்டமிடக்கூடும்.

ஆனால் இதில் அவர்களிற் குள்ள நடைமுறைப் பிரச்சினைகள் இரண்டு. முதலாவது, முன்பு சொல் லப்பட்ட அந்தக்கட்டுரை எழுதப் பட்டகாலத்தில் இருந்த கடற்புலிகள் அல்ல இப்பொழுதிருப்பது. கடந்த ஒரு தசாப்த காலத்துள் கடற் புலிகள் பெற்றிருக்கும் அபரிதமான வளர்ச் சியை வைத்துக்கூறுமிடத்து, அந்த ஓய்வுபெற்ற தளபதி அறிவுரை கூறியகாலம் கடந்துபோய்விட்டது என்றே சொல்லவேண்டும். இனி சிறிலங்கா கடற்படையை அசா தாரணமாகக் கட்டியெழுப்புவது என் பது கடற்புலிகளுடன் மோதித்தான் சாதிக்கப்பட வேண்டியிருக்கிறது. இது முதலாவது.

இரண்டாவது, யாழ்ப்பாணத் தைத் தக்கவைப்பதற்காக அங்கே பெருமளவு துருப்புக்களை முடக்கி வைத்திருப்பது என்பது. சிறிலங்கா இராணுவத்தில் ஏறக்குறைய 1/3 பகுதி யளவு துருப்புக்கள் யாழ்ப் பாணத்தில்மினக்கெடவேண்டியிருக் கிறது. யாழ்ப்பாணத்தைப்பிடித்து வைத்திருப்பதற்கு அவர்கள் கொடுக் கும் விலை இது. இந்தவிலை ஒரு சுமையாக மாறியதன் விளைவே பின்வந்த தோல்விகள் அனைத்தும்.



எனவே தரைப்படையைக்குறைத்து கடற்படையைப்பெருப்பிப்பது என்பது யாழ்ப்பாணத்தைப் பிடித்துவைத்துக் கொண்டிருக்கும்வரை சாத்தியப் படப்போவதில்லை. உண்மையில் யாழ்ப்பாணத்தின்மீது அவர்கள் பெற்ற வெற்றி எனப்படுவது போரியல் அர்த்தத்தில் ஒரு சுய பொறியே.

எனவே யாழ்ப்பாணத்தை வைத்திருக்கும் ஆசை உள்ளவரை தரைப்படையின் பருமனை குறைப்பது கடினம் இப்படிப்பார்த்தால் யுத்த மூலோபாயத்தை கடல்சார்ந்த தாக அல்லது கடல்மைய மூலோபா யமாக மாற்றுவது என்பது நடை முறையில் கடினமானது.

ஆனால், யுத்த நிறுத் தத்தை எவ்வளவு காலம் நீடித்துச் செல்வது என்பது பற்றி சந்திரிகா விடம் இருக்கக்கூடிய ஒரு கால நிரலை வைத்துப்பார்த்தால்தான் இதுபற்றி திட்டவட்டமான முடிவு களைக்கூறமுடியும். குறிப்பாக அமெரிக்க இந்தியக்கடற்படைகள் போட்டி போட்டுக்கொண்டு உதவ முன்வரும் இத்தருணத்தில் யுத்த மூலோபாயத்தை மாற்றும் வரையி லுமாவது யுத்தநிறுத்தத்தைப்பேணு வது என்ற ஒரு முடிவை அதாவது கொள்கைத் தீர்மானத்தை சந்திரிகா எடுப்பாராயிருந்தால் தமிழர்களும் வேறு விதமாகவே சிந்திக்கத் தூண்டப்படுவர்.

விரைவில் எதிர்பாருங்கள்...!
நேதாஜி எழுதும் புதிய அரசியல் தொடர்
தமிழ் தேசியமே தமிழர் இலட்சியத்தின் ஆதாரம்

# நறுக்கென...

## ரணிலின் சீண்டலும் சந்திரிகாவின் எரிச்சலும்



இடைக்கால நிர்வாக அதிகாரசபை தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள யோசனைகளின் அடிப்படையில் ஒஸ்லோ உடன்பாட்டின் பிரகாரம் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க அரசு முன்வருமேயானால் அதற்கான ஆதரவை தாம் வழங்கத்தயார் என மற்றுமோர் தடவை ஐக்கியதேசியக் கட்சியினதும், எதிர்க் கட்சியினதும் தலைவரான ரணில் விக்கிரமசிங்க நோர்வேயின் சிறப்புத்தூதுவர் எரிக்சொல் ஹெய்மிடம் உறுதிபடக்கூறியுள்ளார். ரணிலின் இந்தக்கூற்று அரசுக்கும், சனாதிபதி சந்திரிகாவுக்கும் எரிச்சலையும், சிக்கலையும் ஏற்படுத்தும் ஒன்றாகும்.

ஆளும் கட்சிக்குள் இ.த.அதிகாரசபை தொடர்பாக பல்வேறுபட்ட கருத்து முரண்பாடுகள் அதிகரித்து, அதற்கு எதிரான சக்திகளின் வலுகூடியுள்ள நிலையில் சனாதிபதியால் அது தொடர்பாக தீர்க்கமான முடிவொன்றிற்கும் வரமுடியாமல் உள்ளது என்பது உண்மையே.

குறிப்பாக ஜே.வி.பியினர் தமக்கு இன்று கிடைத்துள்ள வலுவான அரசியல் தளத்தை தக்கவைத்துக்கொள்ளவும், பெரும்பான்மை பௌத்த சிங்கள மக்களிடையே தங்களையே அவர்களின் எதிர்கால இரட்சகர்களாகக்காட்டிக்கொள்ளவும் தமது ஒருகாலத்தைய புரட்சிகர பொதுவுடமைமற்றும் சமதர்மக்கொள்கைகளைக் குழிதோண்டிப்புதைத்துவிட்டு, பேரினவாத சித்தாந்தத்தை தமக்கானதாக்கிக்கொண்டுள்ளநிலையில் அவர்களின் செல்வாக்கு அதிகரிப்புக்கு தனது தூரதிருஷ்டி ஞானக்குறைவே காரணம் என உணர்ந்துள்ள சந்திரிகா இ.நி.அ.சபை குறித்து பேசத்தான் சம்மதித்தால் அதனை வைத்தே ஜே.வி.பி தனது அரசியல் எதிர்காலத்தை பாழடித்துவிடும் என்றும் அஞ்சுவதாகக் கேள்வி. ஏற்கெனவே ஜே.வி.பியினருடன் அரசியல் - கூட்டை ஏற்படுத்திக் கொண்ட காரணத்தால் சந்திரிகாவின் சொந்தப்பரம்பரைக்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளேயே கருத்து முரண்பாடுகள் அதிகரித்துள்ளன. கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் ஜே.வி.பியின் மேலாதிக்கம் கட்சிக்குள் வளர்வதை எரிச்சலுடனே நோக்குகின்றார்கள்.

இப்படியான சூழலுக்குள் சந்திரிகா பலவிடயங்களில் தீர்க்கமான முடிவை எடுக்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகியுள்ளதுடன்..... அது குறித்து அதீத குழப்பங்களுக்குமுள்ளாகியுள்ளார் என்றே கூறவேண்டும்.... சமாதானப் பேச்சுவார்த்தை முயற்சிகளை விரும்பியோ விரும்பாமலோ தொடரவேண்டும். இதுவிடயத்தில் ஜே.வி.பியை சமாளிப்பதுடன் அவர்களை மெல்ல மெல்ல வலிமையற்றவர்களாக்க வேண்டும். அதற்கேற்ப அரசியலில் தோற்றங்களை ஏற்படுத்தவேண்டும்.

சமாதானப்பேச்சுக்கள் தொடர்பாக ரணில் விரித்துள்ள வலைக்குள் விழாது தப்பவேண்டும். எதிர்க்கட்சியின் ஆதரவுடன், ஜே.வி.பியை புறந்தள்ளிவிட்டு இ.நி.அ.சபை மட்டத்தில் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு வெளி- மற்றும் உள்சக்திகளின் அழுத்தங்கள் அதிகரிக்கத் தொடங்கியுள்ள நிலையில் இதற்கு முடிவுகண்டேயாகவேண்டும். அடுத்த ஆண்டில் அவரின் நிறைவேற்று அதிகாரசனாதிபதி பதவிக்காலம் முடிகிறது. அதற்கேற்ப தனது அரசியல் எதிர்காலத்தை உறுதிப்படுத்தத் திட்டமிடவேண்டும்.

சந்திரிகா என்னசெய்யப்போகிறார்.?

---



## சலிப்படையாத விக்கிரமாதித்தனும் சலிப்படைந்து போன எரிக்சொல்ஹெய்மும்

வெறும் நம்பிக்கையை மட்டுமே மனதில் கொண்டவராக இலங்கைக்கு வருகைதந்த நோர்வேயின் விசேடதுாதுவர் எரிக்சொல்ஹெய்ம், கடைசியில் விரக்தியையும் வெறுப்பையும் மட்டுமே சுமந்தவராக நோர்வேக்கு திரும்பிச்சென்றுள்ளார்.

இப்போது அவருக்கு நிச்சயமாகத் தெரிந்திருக்கும்- அதாவது சிறிலங்காவில் சமாதான நடவடிக்கைகளில் ஈடுபடுவதென்பது கல்லில்நாருரிக்கிற வேலையென்பதே அதுவாகும்.

ஒவ்வொருதடவை இலங்கைக்கு அவர் வரும்போதும் இருக்கின்ற பரபரப்பு அவர்திரும்பிப்போகின்றபோது இருப்பதில்லை...

அவரும் சோர்வடைந்தவராகவே திரும்பிச் செல்வார். சமாதான முயற்சிகளின் பெறுபேறாக குறைந்தபட்சம் அச்சமற்ற இயல்புவாழ்வாவது கிடைக்குமென்ற நம்பிக்கையுடன் காத்திருக்கும் மக்களுக்கும் ஏமாற்றமே மிஞ்சியிருக்கும்.

இம்முறையும்கூட அதுவே நடந்துள்ளது. சமாதானம் தொடர்பான நடவடிக்கைகளில் விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்து கிடைக்கின்ற ஒத்துழைப்பும் ஊர்வமூட்டலும் அரசாங்கத்தரப்பிலிருந்து கிடைப்பது கிடையாது. எந்தக்காலத்திலும் அமைதிப்பேச்சுவார்த்தை தொடர்பாக சிறிலங்காவை ஆண்ட மற்றும் ஆளும் வர்க்கத்தினரிடம் ஒரு தெளிவான கருத்து நிலைப்பாடு இருந்ததே கிடையாது.

அதற்கு அவர்களின் பேரினவாதச்சிந்தனைகள் அவர்களை அனுமதித்ததும் கிடையாது. இந்தநிலையில் பேச்சுவார்த்தை முயற்சிகளுக்கு நோர்வே அனுசரணையாளருடன் இணங்கிப்போய் உதவுதல் என்பதில் சிறிலங்கா ஆட்சியாளருக்கு எப்போதுமே உடன்பாடு இருந்ததும் இல்லை.

எரிக்சொல்ஹெய்ம் அவர்களை சமாதான முயற்சிகளில் ஒருபக்கச் சார்பாக நடக்கிறார் எனக் குற்றம்சாட்டி அவரை திருப்பி அழைக்குமாறு நோர்வே அரசுக்கு அழுத்தம் கொடுத்த அதே சந்திரிகாதான் மீண்டும் அவரது வருகையை வரவேற்கிறார் என்றால் யோசித்துப்பாருங்களேன்...

நோர்வேநாட்டின் தேசியக்கொடியை எரிப்போரை தடுக்கவோ, கைதுசெய்யவோ திராணியற்று, அதற்குமௌன அங்கீகாரம் வழங்கும் சந்திரிகாவால் நோர்வேயின் விசேடதூதுவருடன் நேர்மையாகவும் உண்மையாகவும் நடந்துகொள்ளத்தான் முடியுமா?

எப்படி நடந்துகொள்வார் என சொல்ஹெய்மாலும் நம்பத்தான் முடியுமா? சாத்தியமேயில்லை!

ஆனால் அவர்தன் விக்கிரமாதித்த முயற்சியை தொடரவே செய்வார். சமாதான நாடகத்தில் அவரின் பாத்திரத்தை அவர் செய்யத்தானே வேண்டும்..! சரி! இந்த நாடகம் எத்தனை நாட்களுக்குத் தொடரப்போகிறதாம்?

ஆனாலும் சொல்ஹெய்ம் இம்முறைசலிப்படைந்து போய்விட்டார் என்பது உண்மையே..! அரசின் மீதான நம்பிக்கையை அவர் இழந்து போய்விட்டார் என்றே தோன்றுகிறது.

'சிறிலங்கா இராணுவம் தமிழ்க்குழுக்களுடன் இணைந்து செயற்படுவதை நிறுத்தவேண்டும்' என பத்திரிகையாளரிடம் அவர் தெரிவித்தமையானது 'சமாதானக் குழப்பிகள்' யார் என்பதை சொல்ஹெய்ம் புரிந்துகொண்டுள்ளார் என்பதையே உறுதி செய்கிறது.

அடுத்த வரவின்போது அவர் இன்னமும் கடுமையாக எதனையாவது கூறுவார் என்றே தோன்றுகின்றது.

---

## தயாசந்தகிரியின் பதவியேற்பிற்கு அருண்பிரகாஷ் கைகொடுப்பா..?



இந்தியக் கடற்படைத்தளபதியின் இலங்கை விஜயத்திற்கான காரணம் குறித்து இந்திய - இலங்கை அரச மற்றும் பாதுகாப்புத்தரப்பினர் என்னதான் கருத்துக்களை முன்வைத்தாலும் இந்த விஜயத்தின் உள்நோக்கம் குறித்த ஊகங்களும் சந்தேகங்களும் சற்று அதிகமாகவே உள்ளன.

இம்மாதம் 12ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரையிலான அவரது நான்குநாள் விஜயத்தின்போது இந்தியக் கடற்படைத்தளபதி அட்மிரல் அருண் பிரகாஷ் அவர்கள் சற்று அளவுக்கு அதிகமாகவே சிறிலங்கா கடற்படையினருக்கு நம்பிக்கையூட்டியதுடன், விடுதலைப்புலிகளையும் மிரட்டும் பாணியில் கருத்துக்களையும் அள்ளிவீசிவிட்டுச்சென்றுள்ளார் என்றே கூறவேண்டும்.

'போர் ஒன்றை மீண்டும் விடுதலைப்புலிகள் ஆரம்பிப்பார்களே ஆனால் அப்போது இந்தியப்படைகள் இலங்கை அரசாங்கத்திற்கு உதவியளிக்கும்' என அந்த இந்திய அட்மிரல் ஒரு விருந்துபசார நிகழ்வின்போது விருந்தில் சொக்கிப்போய் இலங்கைப் பாதுகாப்புத்தரப்பினருக்கு உற்சாகமூட்டும்வகையில் கூறியுள்ளதையடுத்து சிறிலங்கா படைத்தரப்பினர் பெரும் நம்பிக்கை கொண்டுள்ளனராம்...

குறிப்பாக சிறிலங்கா கடற்படையை - அதன் தாக்குதல் திறனை - வலுப்படுத்த இந்தியக்கடற்படை முழுஅளவில் உதவும் என்ற வாக்குறுதியும் அவரால் வழங்கப்பட்டுள்ளதாம்....

இந்தியா இலங்கைக்கு கடன் அடிப்படையில் பாரிய கடலோர பாதுகாப்புக் கலம் ஒன்றையும் வழங்கப்போகிறதாம்...

தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்புலிகள் அணி இலங்கைக்கு மட்டுமல்ல இந்தியக் கடற்படைக்கும் அச்சுறுத்தலாக உள்ளதாம்...

பாக்குநீரிணையில் இலங்கை இந்திய கடற்படையினரின் கூட்டுரோந்து நடவடிக்கை குறித்தும் ஆராயப்படுகிறதாம்...

இலங்கையின் பிரதேச ஒருமைப்பாட்டை பாதுகாக்க இந்திய அரசு உதவுமாம்...

இவையாவும் அந்த இந்திய அட்மிரலின் விஜயத்தையடுத்து வெளிவந்துகொண்டிருக்கும் செய்திகளாகும்.

இந்தச் செய்திகள்யாவும் சிறிலங்கா கடற்படைத் தளபதியான தயா சந்தகிரிக்கு கலையேற்றக்கூடியவைகளேயாகும். அதுவும் அவர் கூட்டுப் படைகளின் தளபதியாகவும் பதவியேற்றுள்ளவேளையில் இந்தியக் கடற்படைத்தளபதியின் விஜயமும் நிகழ்ந்துள்ளது.

எதுவானாலும் கிடக்கட்டும்... நடக்கட்டும்... ஏதோ இலங்கைக்கு இந்தியா திடீரென புதிதாக உதவப்போரதாகவெல்லே அருண்பிரகாஷ் பிரகடனம் செய்துவிட்டுப்போயுள்ளார்...

இந்தியா எப்போதுமே இலங்கைக்கு உதவும் உள்நோக்கத்துடன்தானே இலங்கை விவகாரத்தில் தலையீடு செய்து வந்துள்ளது. இனிமேல் புதிதாக என்ன செய்யப்போகிறதாம்?

அதுசரி இந்தியக் கடற்படைத்தளபதி வந்து தன்பாட்டுக்கு ஏதேதோ உளறிவிட்டுப் போயுள்ளார்..

அமெரிக்க கடற்படை அதிகாரிகளில் எவராவது அடுத்து இலங்கைக்கு வந்து தானே ஆகவேண்டும்... இல்லையேல் இலங்கைவிவகாரத்தில் இந்திய - அமெரிக்க தலையீடுகளின் சமநிலை பாதிப்புற்றுவிடுமே!

**செங்குட்டுவன்**

# தமிழரின் பூர்வீக நிலமான அம்பாறை திட்ட மிட்டவகையில் சிதைக்கப்படுகிறது

தமிழீழத்தின் பாதங்கள் சிதைக் கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அம்பாறை மாவட்டத்தில் தமிழர்களின் எச்சங்கள் அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அம்பாறை எனும் தமிழ்ப் பெயர் மறைக் கப்பட்டு திகாமடுல்ல எனும் சிங்களப் பெயர் கொண்டுவரப்படுகிறது.

தமிழீழத்திலிருந்து புத்தளம் அழிந்துவிட்டதோ என்ற நிலையிலிருக்க அம்பாறை அழிவின் விளிம்பில் இருக் கின்றது. இவ்விடயத்தில் அக்கறை செலுத்த வேண்டியவர்கள் அமைதியாக இருப்பது வேதனையளிக்கின்றது. கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம் என்றிராமல் தற்போதே அனைவரும் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இலக்காகவும் தமிழர்களின் எச்சங்களை அழிப்பதை நோக்காகக்கொண்டும் அம் பாறை மாவட்டம் திகாமடுல்ல என சிங்கள மயமாக்கப்பட்டது.

இன்று அம்பாறை மாவட்டம் என்ற பெயர் வழக்கில் இல்லை. சட்டபூர்வபதி வேடுகளில் அம்பாறை என்பதற்குப் பதிலாக திகாமடுல்ல என்றே பயன்படுத்தப்படு கின்றது. அம்பாறை என்ற சொல்லைப் பயன் படுத்தவே பலர் அஞ்சுகின்றனர்.

தமிழர்களின் காணிகளை அரச காணி என அரசாங்கம் அபகரித்து வைத் திருக்க வெளி மாவட்டத்திலிருந்துவரும் சிங்களவர் அக்காணிகளை சொந்தமாக்கு கின்றனர், இதற்கு காணிஅமைச்சும்

**அம்பாறை (அழகியபறை) மாவட்டம் காலப்போக் கில் சிங்கள மயமாவதை இலக்காகவும் தமிழர்களின் எச்சங்களை அழிப்பதை நோக்காகக்கொண்டும் அம்பாறை மாவட்டம் திகாமடுல்ல என சிங்கள மயமாக்கப்பட்டது.**

**இன்று அம்பாறை மாவட்டம் என்ற பெயர் வழக்கில் இல்லை. சட்டபூர்வ பதிவேடுகளில் அம்பாறை என்பதற்குப் பதிலாக திகாமடுல்ல என்றே பயன்படுத்தப்படுகின்றது. அம்பாறை என்ற சொல்லைப் பயன்படுத்தவே பலர் அஞ்சு கின்றனர்.**

1948இல் இலங்கைத்தீவை ஆங்கிலேயர் விட்டுச்சென்றபின்னர் தமிழர் தாயகப்பகுதியில் நிலப்பரப்பிற்கும்- இனத் தொகுப்பிற்கும் - இயற்கைக்கும் உள்ள தொடர்புகள் மாற்றியமைக்கும் கொள்கையில் கொழும்பு அரசு செயற்படத்தொடங்கியது.

கச்சேரியும் உதவிபுரிகின்றன. அல்லது கண்மூடியிருக்கின்றன. ஆனால் தமிழர்கள் சொந்தக்காணிக்குச் செல்ல அரச இயந்திரம் தடுக்கின்றது.

புதிய அம்பாறை மாவட்டத்தில் அன் றைய D.R.O நிர்வாகப் பிரிவுகளாக கரை

களில் ஆலையடி வேம்பும், திருக்கோயில் பிரதேச செயலாளர் பிரிவு மட்டுமே தமிழ்ப்பிரதேசமாக உள்ளது. ஏனையவை முஸ்லிம் மன்றும் சிங்களப் பிரிவுகளாகவுள்ளன, சில கலப்புப் பிரிவுகளாகவும் இருக்கின்றன. அம் பாறை நகரம் சிங்களவர் மயமாகிவிட்டது.



இவ் இயற்கை அம்பாறை மாவட் டத்துடன் 1986ஆம் ஆண்டு பொலநறுவை மாவட் டத் திலிருந் து தெகியத்த கண்டிய எனும் சிங்களப் பிர தேச செயலாளர் பிரிவும் பதுளை மாவட்டத்திலிருந்து பதியத்தலாவையும் மற்றும் மகாஓயா சிங் கள பிரதேச செயலாளர் பிரிவு களும் அம்பாறையுடன் இணைக் கப்பட்டு தமிழர் தாயகம் சிங்கள வர் பூமியாக சனத்தொகையில் காட்டப்பட்டிருக்கின்றது. 3/5 சிங்கள வர் 2/5 முஸ்லிம் 1/5 தமிழர் ஆக மாற்றப்பட்டுள்ளன. அட்டா ளைச் சேனை பி.செ.பிரிவில் 500 ஏக்கர்காணி “புனித பூமி” என்ற பெய ரில் விகாரைகட்ட சுவீகரிக்கப்பட்டது. ஆயினும் அம்மக்களுக்கு இதுவரை அரசு நட்டஈடு எதுவும் வழங் கவில்லை. ஆனால் குடியேற்றப் பட்ட சிங்களவருக்கு விசேட சலுகைகள் வழங்கப்பட்டன.

தமிழர்களுடைய காணிகள் சிங்கள வரினால் பறிக்கப்பட்டு தமிழர்களின் வாழ்வு

அம்பாறை மாவட்டத்தின் அரச அதிபர் களாக கடமையாற்றுபவர்கள் சிங்கள இனத்தை சேர்ந்தவர்களாகவே இருந்து வருகின்றனர். தமிழர்கள் எவரும் இதுவரை அரச அதிபராக நியமிக்கப்பட்டதாக இல்லை.

அம்பாறை மாவட்டத்தில் மேலதிக அரச அதிபராக வந்த எல். நாராயண சாமி, எஸ். சிவானந்தன், அமுதசா கரன் போன்றோர் குறுகிய காலத் தில் அப்புறப்படுத்தப்பட்டனர்.

தமிழர்களின் பாரம்பரிய மாவட்டமான அம் பாறையில் தமிழர்கள் ஆள முடியாத நிலை மட்டுமல்ல, வாழமுடியாத நிலைகூட ஏற்பட் டுள்ளது.

அம்பாறைக் கச் சேரியில் 99% ஊழியர்கள் சிங்கள இனத்தவர். திணைக் களத் தலைவர்கள் முழுக்க முழுக்க சிங் களவர். தமிழர்கள் எவரும் இல்லை.

தமிழர் தாயகமான வடக் குக்கிழக்கு மாகாணத்தில் மட்டும் தான் தமிழர்களுக்கு தனியான பிரதேச செயலாளர் பிரிவுகளும், சிங்களவருக்கு தனியான பிரதேச செயலாளர்பிரிவு களும் பிரிக்கப்பட்டுள்ளன. வடக்குக்கிழக்கு தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் வாழும் தமிழர்களுக்கு ஏன் தனியான நிர்வாக அலகு பிரிக்கப்படவில்லை. இதுவும் அம்பாறைச் சிங்களவருக்கு அரசு வழங்கிய சலுகையே.

கடந்த காலத்தில் அம்பாறையில் இருந்த 59 இந்து ஆலயங்கள் இருந்த

திட்டமிட்டசிங்களக் குடியேற்றங்கள் மூலம் தமிழர் நிலப்பரப்பில் இயற்கைக்கு மாறான முறையில் இனத்தொகுப்பு வீதாசாரம் மாற்றி யமைக்கப்படுகின்றது.

அம்பாறையில் எல்லைகள் மீள் வரைபு மூலம் தமிழர் நிலப்பரப்புகள் துண் டாடப்படுவதும் சிங்கள நிலப்பகுதிகளை தமிழர்நிலப் பகுதியுடன் இணைப்பதுமான சதித்திட்டங்கள் உருவாக்கப்பட்டிருக் கின்றன.

இதன்மூலம் சிங்கள மரபுவழிக் கோட்பாடுகளும், அடையாளங்களும், எச்சங் களும் தமிழர் தாயகத்தில் உருவாக்கப்பட்டு தமிழர் எச்சங்களும் அடையாளங்களும் அழிக்கப்படுகின்றன.

ச.சசிகரன்

1952ஆம் ஆண்டு பட்டிப்பளை ஆறு கல்லோயா எனும் சிங்களப் பெயரா கியது. ஆற்றுக்கு குறுக்கே அணைகட்டப் பட்டு சேன நாயக்க சமுத்திரம் உருவாக்கப் பட்டது. இவற்றின் பயன் முழுவதும் சிங் களமக்கள் பயன்பெறக்கூடியவாறு திட்ட மிடப்பட்டு. சிங்களவர் குடியேற்றப்பட்டனர்.

1961.04.10ஆம் நாள் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஒரு பகுதியை பிரித்து எடுத்து அம்பாறை மாவட்டம் என அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி சிறிமாவோ பண் டார நாயக்க புதிய மாவட்டமாக பிரகடனப் படுத்தினார்.

அம்பாறை (அழகியபறை) மாவட் டம் காலப்போக்கில் சிங்கள மயமாவதை

வாகுப்பற்று, நாடுகாடுப்பற்று, வேகம்பற்று, அக்கறைப்பற்று, பானமைப்பற்று ஆகிய வற்றைக்கொண்டிருந்தது. கரைவாகுப்பற்று என்பது இன்றைய கல்முனைத் தமிழ் பிரிவு, கல்முனை முஸ்லிம்பிரிவு, காரைதீவு, நிந்தவூர்

**தமிழர் தாயகமான வடக்குக்கிழக்கு மாகாணத்தில் மட்டும்தான் தமிழர்களுக்கு தனியான பிரதேச செயலாளர் பிரிவுகளும், சிங் களவருக்கு தனியான பிரதேச செயலாளர் பிரிவுகளும் பிரிக்கப்பட்டுள்ளன. வடக்குக்கிழக்கு தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் வாழும் தமிழர்களுக்கு ஏன் தனியான நிர்வாக அலகு பிரிக்கப்படவில்லை. இதுவும் அம்பாறைச் சிங்களவருக்கு அரசு வழங்கிய சலுகையே.**

செயலாளர் பிரிவுகளைக்கொண்டது. நாடுகாடுப் பற்று என்பது இன்றைய சம்மாந் துறை, நாவிதன் வெளி, இறக்காமம் ஆகிய செயலாளர் பிரிவுகளைக்கொண்டது. வேகம் பற்று என்பது இன்றைய அம்பாறை, உகணை, தமணை ஆகிய பிரதேச செய லாளர் பிரிவுகளைக்கொண்டது. அக்கறைப் பற்று, இன்றைய அட்டாளைச்சேனை அக்கறைப்பற்று, ஆலையடி வேம்பு, திருக்கோயில் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளையும் கொண்டிருக்கின்றது.

இவ் 14 பிரதேச செயலாளர் பிரிவு

சீரழிக்கப்பட்டு சிங்களவருக்கு சுகபோகம் அளித்தது அரசு.

கல்லோயாத்திட்டம் ஏற்படுத்தப் பட்டபோது 44 குடியேற்றத்திட்டங்கள் உரு வாக்கப்பட்டன. இதில் 38 சிங்களவருக்கும்

6 தமிழர்களுக்கும் எனக்கூறப்பட்டது. தமிழர் கள் என்ற பெயரில் இஸ்லாமியத் தமிழ ருக்கு அவ்ஆறு குடியேற்றங்களும் வழங் கப்பட்டன.

1977இல் இருந்து ஐ.தே. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டி.தயாரட்ண தனது வாக்கு வங்கியினை பலப்படுத்தும் இலக்கில் தமிழர்களினதும் முஸ்லிம்களின தும் காணிகளை அபகரித்து தென்னிலங்கை யிலிருந்த சிங்களவரை கொண்டுவந்து குடியேற்றினார்.

1961ஆம் ஆண்டில் இருந்து

இடம் தெரியவில்லை என அம்பாறை மாவட்ட இந்துமா மன்றத்தலைவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

இவ்வாறாக தமிழரின் புராதன சின்னங்களும் அடையாளங்களும் அழிக்கப்பட்டுவருகின்றன. தமிழரின் பூர்வீகம் சிதைக்கப்பட்டுவருகின்றது. தமிழரின் தாயகம் ஏப்பமிடப்பட்டிருக்கின்றது. சிங்கள வராலும் முஸ்லிம்களினாலும் அம்பாறைத் தமிழர்கள் முற்றுகையிடப்பட்டிருக்கின் றார்கள்.

அம்பாறை கஞ்சிக்குடிச்சா றுபோஸ் பகுதிகளில் புலிகளின் படைத்தளங் கள் இருந்ததினாலேயே இப்பெருநிலப் பூமிகள் சிங்களவரினால் அபகரிக்கப்படாமல் எஞ்சியிருக்கின்றன.

அழிவின் விளிம்பில் இருக்கும் அம்பாறை மாவட்டம் முற்றாக அழிவதனைப் பார்த்துக்கொண்டிருக்க பொறுமையுடன் இனியும் சும்மா இருக்கமுடியாது. தமிழர்கள் தொடர்ந்தும் விட்டுக்கொடுப்புடன் சகிப்புத் தன்மையினை கடைப்பிடிக்கக் கூடாது.

தமிழர் தாயகமான அம்பாறை ஏப்பமிடப்படுவதனையும் தமிழர்களின் பண்பாட்டு விழுமியங்கள் அழிக்கப்படு வதனையும் தமிழ்தலைவர்களும் புத்திஜீவிகளும் கல்விமான்களும் கருத்தில் எடுத்து தமிழர் தாயகமான அம்பாறை மாவட்டத்தை மீண்டும் கட்டியெழுப்ப முன்வரவேண்டும்.

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி. 24 . 09 . 2004
மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

## பேச்சுப்பல்லக்கு..!

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பான சனாதிபதி சந்திரிகாபண்டாரநாயக்க குமாரதுங்கவின் வாய்ப்பேச்சையும், வாய்ச்சவடாலையும் கேட்டுக்கேட்டு இலங்கை மக்கள் எரிச்சலின் எல்லைக்கே வந்துவிட்டனர் எனக்கூறலாம்.

ஷஏட்டுச்சுரக்காய் கறிக்கு உதவாது, என்ற பழமொழியைப் போல இலங்கை இனப்பிரச்சினையை தீர்க்கும் மார்க்கங்கள் தொடர்பாக இலங்கைக்குள்ளும் இலங்கைக்கு வெளியிலும் சனாதிபதி சந்திரிகாவினால் விடுக்கும் அறிக்கைகள் சமாதானத்தை ஏற்படுத்த உதவுவதாக இல்லை.

மாறாக சர்வதேச சமூகத்தை பேச்சளவில் திருப்திப்படுத்தி அரசு தனக்கான காரியங்களை ஒப்பேற்றுவதற்கு மட்டும் பயன்படுத்துகின்ற ஒரு குறுக்கு வழியாக மட்டுமே இருக்கிறது.

அமெரிக்காவில் இடம்பெற்ற ஆசிய சமுக கூட்டமொன்றில் சனாதிபதி சந்திரிகா உரையாற்றும் போது கவர்ச்சிகரமான சில விடயங்களைக் கூறியுள்ளார்.

''பேச்சுவார்த்தைகள் மூலமாகவே நாம் சமாதானத்தை அடைய முயல்கின்றோம். யுத்தத்தின் மூலமாக அல்ல'' எனவும்

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் உரையாற்றும் போது சமாதானத்தை இலகுவில் அடைந்து விடமுடியாது என்பதை நன்கறிந்திருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்.

சனாதிபதி சந்திரிகாவின் இக்கூற்றுக்களை இலங்கையின் தற்போதைய களயதார்த்தத்தோடு ஒப்பீடு செய்து பார்ப்பது அவசியமாகிறது.

இலங்கையில் சமாதானத்தை எட்டுவதற்கான பேச்சு மூலமான முயற்சிகள்தொடர சனாதிபதி சந்திரிகா அம்மையாரின் அரசோ பேச்சு மூலமாக சமாதானத்தை எட்டுவதற்கு பதிலாக கிழக்கில் சில தமிழ்க் குழுக்களையும் இராணுவ புலனாய்வு பிரிவினையும் இராணுவத்தினரையும் பயன்படுத்தி புலிகளுக்கு எதிரான தாக்குதளை ஊக்குவித்து வருகிறார்.

இறுதியாக கடந்த செவ்வாய்க்கிழமையும் கிழக்கில் பனிச்சங்கேணிப் பகுதியில் புலிகளுக்கு எதிரான ஒரு கிளைமோர் தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலில் புலிகளுக்கு சேதமெதுவும் ஏற்படாதபோதும் புலிகள் இயக்க உறுப்பினர்களை இலக்கு வைத்தே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்தகைய தாக்குதல் சம்பவங்கள் பல கிழக்கில் நடத்தப்பட்டுவருகிறது. இத்தகைய தாக்குதலுக்கு சில புலிகள் இயக்க உறுப்பினர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் சனாதிபதி சந்திரிகா தெரிவிப்பது போல பேச்சு மூலமாக சமாதானத்தை எட்ட இத்தகைய தாக்குதல் எவ்வாறு உதவப்போகிறது.

அத்தோடு பல சுற்று சமாதானப் பேச்சுக்களின் பின்னர் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான திட்டவரைபொன்றை சர்வதேச மற்றும் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் அறிஞர்கள் பலரைக்கொண்டு தயாரித்து அரசிடம் சமர்ப்பித்து இருக்க அதன் அடிப்படையில் பேச்சுக்களை முன் நகர்த்தமுயலாது காலத்தை இழுத்தடித்துவரும் சனாதிபதி சந்திரிகா சமாதானத்தை அவ்வளவு இலகுவில் அடைய முடியாது என்று தொனிப்பட பேசியுள்ளார்.

சனாதிபதி சந்திரிகாவின் இக்கூற்றானது சமாதானத்தை அடைய இருக்கும் இலகுவான வழிகளை நாடப்போவதில்லை என்பதையே காட்டுகிறது.

இவ்வாறான நிலையில் சனாதிபதி சந்திரிகா தெரிவிப்பதுபோல பேச்சு மூலமாக சமாதானத்தை அடைய முயல்கிறோமேயொளிய யுத்தத்தின் மூலமாக அல்ல என்ற கூற்றை சந்தேகத்துடனேயே நோக்க வைக்கிறது.

அவ்வாறாயின் சொல்லிலும் செயலிலுமாக நடைமுறையில் காத்திருக்கும் இலகுவான வழியை தெரிவு செய்ய அவர் தயங்காது முன்வருதல்வேண்டும் அவர் வருவாரா? எந்த நம்பிக்கைகளும் இதுவரை இல்லை என்பதே இலங்கையின் இன்றைய யதார்த்தம்.

## மகிந்தராஜபக்ஷவுடனான மோதலும் பலவீனப்படும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும்

சந்திரிகாவுக்கும் மகிந்த ராஜபக்ஷவிற்கும் இடையிலான மோதல் இன்று முற்றிவிட்டது.

சனாதிபதிக்கும் பிரதமருக்குமான மோதலாகவன்றி, ஒரு கட்சிக் குள் இருக்கும் இரண்டு ஒத்துப் போகாத முரண்படும் இரண்டு தலைவர்களுக்கிடையிலான மோதலாக இப்போது அறிக்கைகள் என்ற ரீதியிலும், சில மட்டுப்படுத்தப்பட்ட வசதிகள்மூலமான பழிவாங்கல்கள் என்றவகையிலும் தொடர்ந்த இவ் மோதல் இவ்வாரம் சற்றுவெளித் தெரியும்வகையிலான சூசகமான கருத்துமோதலாக சனாதிபதி சந்திரிகாவை எச்சரிக்கும் பாங்கிலான நடவடிக்கையாக தொடர்ந்துள்ளது.

சனாதிபதி சந்திரிகாவின் இரண்டு தடவைக்கு மேல் தொடர முடியாத சனாதிபதிப் பதவிக்குப் பதிலாக அரசியல் அமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தி தன்னை மீண்டுமொரு அரசியல் தேவதையாக இலங்கை ஆட்சிபீடத்தில் அலங்கரிக்கும் கனவு கலைந்துபோக தன்னாலேயே ஒடுக்கப்பட்ட தன் தம்பியான அநுராபண்டாரநாயக்காவை அரியணையில் ஏற்றும் அவசரத்தில் மகிந்த ராஜபக்ஷவுடன் மோதத்தயாராகி விட்டார் போலும்.

சந்திரிகாவின் மோதலை மகிந்தராஜபக்ஷவும் போட்டோம் உடைத்தோம் என்றில்லாது, கட்சிக்குள்லேயேயிருந்து அவரோடு மோதும் வல்லமை தனக்கு இருக்கிறது என்பதை சந்திரிகாவுக்குச் சுட்டிக்காட்டும் வண்ணம் காய்களை நகர்த்திவருகிறார்.

தற்போது நாட்டில் மின்சார ரயில்களின் வேகத்தைவிட நாளுக்கு நாள் அதிகவேகத்தில் ஏறிவரும் விலைவாசி ஏற்றத்தினால் குளம்பிப் போயிருக்கும் அரசின் அலுவல்கள் எல்லாவற்றையும் ஒரு குழப் பத்திற்குள் ஆழ்த்தக்கூடியவகையில் மக்களைத் தூண்டி அரசுக்கெதிராக போராட்டங்களைத் தூண்டக் கூடியதான கருத்துக்களை பிரதமர் மகிந்தராஜபக்ஷ தெரிவித்து வருகிறார்.

அண்மையில் கண்டியில் நடைபெற்ற பொதுவைபவம் ஒன்றில் கலந்துகொண்ட மகிந்தராஜபக்ஷ 'நான் இன்று எதிர்க்கட்சியில் இருந்திருந்தால் அன்றாடம் அதிகரித்துவரும் விலைவாசி உயர்வை எதிர்த்து வீதியில் இறங்கி பாரிய மக்கள்போராட்டம் ஒன்றை நடத்தியிருப்பேன். ஆனால் பிரதமர் என்ற பதவி என் கைகளைக் கட்டிப் போட்டுள்ளது' எனத்தெரிவித்துள்ளார்.

இப்படியாயின் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ விரைவில் பிரதமர் பதவியை தூக்கிஎறியலாம் என்கிறாரா? அல்லது தூக்கிஎறியப்படுவேன் என்கிறாரா? அல்லது சனாதிபதி சந்திரிகாவின் அரசுக்கு எதிராக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியின் போராட்டங்களுக்கு தன்னுடைய ஆதரவு வழங்கப்படலாம் என்கிற செய்தியை சூசகமாக சந்திரிகாவிற்குத் தெரிவிக்க விரும்புகிறாரா என்கிற ஒரு நிலை காணப்படுகிறது.

எது எப்படியோ சந்திரிகாவுக்கும் மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான மோதலானது பலவீனப் பட்டுப்போயிருக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் மேலும் பல சரிவுகளை ஏற்படுத்தப்போகிறது என்பதையே தெளிவாகக்காட்டுகிறது.

இன்னுமொருவகையில் சுதந்திரக்கட்சியோடு கூட்டுவைத்துக் கொண்ட ஜே.வி.பியின் வருகையோடு சுதந்திரக்கட்சிக்குள்ளேயே முற்றி விட்ட முரண்பாடுகள் மேலும் முற்றி இலங்கையின் பிரதான இரண்டு கட்சிகளில் ஒன்று என்ற அந்தஸ்தை சுதந்திரக்கட்சி இழக்கக்கூடிய நிலையை ஏற்படுத்தினாலும் ஏற்படுத்தலாம்.

ஜே.வி.பியானது இலங்கையின் மூன்றாவது பெரும் அரசியல் சக்தியாகத் தன்னைவளர்த்துவிட்ட நிலையில் தனக்கான கொடிமரமாக தன் கட்சியின் அடுத்தகட்டப் பாச்சலுக்குத் தேவையான நிதியிலிருந்து ராஜீக அந்தஸ்துவரை சுதந்திரக் கட்சிக்கூடாகப் பெற்றுவிடும் நோக்கோடு அது திட்டமிட்டு செயற்பட்டு வருகிறது.

ஜே.வி.பியின் இந்தக்கனவுக்கு சுதந்திரக்கட்சிக்குள் இருக்கக்கூடிய ஒரே நம்பிக்கைத்தூண் சந்திரிகாவின் தம்பியான கோமாளி இளவரசர் என வர்ணிக்கப்படும். அநுராபண்டாரநாயக்காதான்.

ஜே.வி.பியின் மூலமாக சந்திரிகா இன்று ஏற்படுத்தி வைத்திருக்கும் நிலை அல்லது ஜே.வி.பியினால் சந்திரிகா எதிர்நோக்கும் நெருக்கடி நிலை என்பது இதே அநுராபண்டாரநாயக்காவினால் ஏற்படுத்தப்பட்டது என்பதும் உண்மையே.

இப்போது நிலைமை முற்றி எல்லாக்காரியங்களும் எல்லாநகர்வுகளும் சந்திரிகாவுக்கான சரிவுகளாகவும் சுதந்திரக்கட்சிக்கான அழிவுகளாகவும் நிலைமைமாறியபடியிருக்கிறது.

எந்தச்சூழ்நிலையைத் தனக்குச் சார்பாகப்பயன்படுத்த சந்திரிகா விரும்பினாரோ அதே நெருக்கடியான சூழ்நிலைதான் இன்று சனாதிபதி சந்திரிகாவை நெருக்கியபடியிருக்கிறது. அநுராபண்டாரநாயக்காவை சந்திரிகாவின் இன்றைய கனவு அரியனையில் ஏற்றவேண்டுமானால் பிரதமர் மகிந்தராஜபக்ஷவை ஓரம்கட்டியே ஆகவேண்டும். ஆனால் அவ்வளவு இலகுவாக ஓரங்கட்டக் கூடிய ஒரு அரசியல் செல்வாக்கு அற்றவராக கட்சிக்குள்ளேயே என்றாலும், கட்சிக்குவெளியே என்றாலும் இருப்பவரல்ல மகிந்தராஜபக்ஷ.

மகிந்த ராஜபக்ஷவுக்கென ஒரு பலமான அணித்திரட்டல் அரசியல் ரீதியாக அவருக்கு வலுச்சேர்த்தபடியே இருக்கிறது.

இதில் ஏற்படும் உடைவு என்பது சுதந்திரக்கட்சிக்கான அழிவில் கொண்டுபோய்விடும். அதே நேரம் ஐக்கியதேசியக்கட்சிக்கான ஒரு பலத்தை அல்லது ஐக்கிய தேசியக்கட்சிக்கு வெளியில் ஒரு பலத்தை அது நிச்சயம் ஏற்படுத்தவே செய்யும்.

இந்தநிலையில் சந்திரிகாவின்முன் சமாதானம் ஒருபுறம் அச்சுறுத்த கட்சிக்குள் தோன்றக்கூடிய நெருக்கடி இன்னொருபுறம் அச்சுறுத்த வெளியில் மக்களின் போராட்டங்கள் அச்சுறுத்தலாகப் போகும் நிலையில் இலங்கையின் அரசியல்களத்தில் பல சுவாரஸ்யமான அரங்கேற்றங்கள் நடக்கப் போகிறது.



இதில் சமாதானத்தை விசுவாசத்தோடு சந்திரிகாமுன்னெடுக்க முனைவாரானால் மக்களுக்குள் இன்று கோபங்களை ஏற்படுத்தியிருக்கும் பொருளாதார நெருக்கடிகளை பெருமளவு தணிக்கக் கூடியதாக இருக்கும்.


அதாவது சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கும் பட்சத்தில் சர்வதேச நாடுகள் வழங்கப்போகும் பெரும் நிதிக்கொடைகளைக்கொண்டு மக்களின் கோபங்களை தணிக்கக் கூடியதாக இருக்கும். ஆனால் அவ்வளவு இலகுவாக சமாதானத்தின் பாதையில் பயணிக்க சந்திரிகா விரும்புவார் எனக்கருதிவிடமுடியாது. பதிலாக குழப்பங்களுக்குள் இருந்து சில குரோதமான முடிவுகளைக் கொண்டு தன்னுடைய நெருக்கடிகளைத் தீர்க்கத் துணியக்கூடும். ஆனால் இவை சுதந்திரக் கட்சிக்குள் ஏற்படப்போகும் உடைவை அல்லது ஐக்கியமக்கள் சுதந்திரமுன்னணியின் அரசை களத்திலிருந்து அகற்ற பெருமளவு துணைபோகும் என்று நம்பலாம்.

இந்தநிலையில்கட்சி மோதலைத் தணித்து சமாதானத் தீர்வில் கவனத்தைச் செலுத்தி தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பார் என்று எவ்வளவு காலம் தமிழ்மக்கள் நம்பியிருப்பது?

----- இ.ரமேஸ்

# வேறு வழியில்லை மக்களுக்கு


பு.சத்தியமூர்த்தி



வரும் வாரம் சிறிலங்காவின் மக்களுக்கு பெரும் அதிர்ச்சிவைத்தியம் வழங்குவதாக அமையப்போகிறது. சிறிலங்காவின் அரசாங்கத் தரப்பு வெளியிடும் தகவல்கள் அதனைக்காத்திரமாக முன்னுணர்த்துகின்றன. பத்திரிகைகளில் வெளிவரும் தகவல்களை ஒழுங்காகப் பார்த்துவருகின்ற சாதாரண குடிமகன் ஒருவருக்கு இதயத் துடிப்புவீதம் கட்டுப்பாட்டை மீறி அதிகரிப்பது இயல்பாகிவிட்டது.

பொருண்மிய உதவிகள் அதிகரிக்கப்படும் என்று வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நம்பி வாக்களிப்பது சிங்கள மக்களின் பொதுவான இயல்பாக விளங்குகிறது. இந்தப் பண்பை அல்லது பலவீனத்தையே சிறிலங்காவின் இருபெரும் கட்சிகளும் தமது தேர்தற்காலத் துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தி வருகின்றன. தற்போது ஜே.வி.பியும் இதில் இணைந்து கொண்டுள்ளது.

இவ்வாறானதொரு வாக்குறுதிகளின் தொகுதியையே கடந்த ஏப்ரல் 2ஆம் திகதிப் பொதுத்தேர்தலுக்கு முன்பாக ஐ.ம.சு. முன்னணி மக்கள் முன் வைத்தது. இரண்டு கொத்து அரிசியையும், எட்டு றாத்தல் தானியத்தையும், சந்திர மண்டலத்திலிருந்தாவது கொண்டு வரப்படவிருந்த அரிசியையும் நம்பி வாக்களித்திருந்த சிங்கள மக்கள் இந்தமுறையும் தம்மீது எறியப்பட்ட கவர்ச்சிகரமான வாக்குறுதிகளின் வலைக்குள் வீழ்ந்திருந்தனர்.



ஆனால், அதன் விளைவோ நேர் எதிரானதாக அமைந்துவிட்டதுதான் பரிதாபமானது. இன்று அரிசி 'சந்திர மண்டலத்திலிருந்து வருகின்ற பொருளோ' எனச்சந்தேகிக்கக்கூடிய வகையில் 47ரூபாவைத் தாண்டி விலை போகிறது. இது 60ரூபாவை தொடக்கூடுமெனவும் எச்சரிக் கப்படுகிறது. 'பட்டு வேட்டி பற்றிய கனவிலிருந்தவனின் கட்டியிருந்த கோவணமும் பறிபோனகதை' எனத்தமிழிலே இதனை குறிப்பிடலாம்.

சிறிலங்காவின் மக்களின் துன்பியல் இத்துடன் முடிந்துவிடப்போவதில்லை. பாணின்விலை மூன்று ரூபாவால் அதிகரித்துவிட்டது. 1994ஆம் ஆண்டு சந்திரிகா அம்மையார் ஆட்சிக்கு வரும்போது 3/50 இற்கு பாண் வழங்குவதாகக் கூறியிருந்ததும், ஆட்சியைப் பிடித்ததும், அதை நடைமுறைப்படுத்தியதும், ஆட்சி நிறைவில் பாணின்விலை 11ரூபாவைத் தொட்டிருந்ததும் உங்களுக்கு நினைவுக்கு வரக்கூடும்.

போக்குவரத்துக் கட்டணங்கள் 16 வீதத்துக்கும் மேலாக அதிகரித்துவிட்டன. இப்போது மின்சாரம், தண்ணீருக்கான கட்டணங்கள் அதிகரிக்கப்படப்போகின்றன. சமையல் எரிவாயுவின் விலை மேலும் அதிகரிக்கப்படவேண்டுமென எரிவாயு நிறுவனங்கள் அழுத்தம்கொடுக்கின்றன. தென்பகுதி நகரப்புற மக்கள் எரிவாயு விலையேற்றத்தால் இப்போதே தவியாகத்தவிக்கிறார்கள்.

ஆனால், இவை எல்லாவற்றையும் தூக்கிச் சாப்பிடக்கூடிய ஒரு பாரிய அதிர்ச்சி இனித்தான்வரப்போகிறது. மானியங்கள் வழங்குவதை அரசு நிறுத்திவிடப்போகிறது என நிதியமைச்சர் சரத்அமுனுகம வெளியிட்டிருந்த எச்சரிக்கை அமுலாக்கப்படப் போவதான பலமான அறிவிப்பொன்று வெளியாகியுள்ளது. டீசலுக்கான மானியம் விலக்கப்படப்போகிறது என்பதே இவ் அறிவித்தல்.

இதன் தாக்கம் எப்படி அமையப்போகிறது? டீசலுக்கு எவ்வளவு மானியம் வழங்கப்படுகிறது? இந்தத் தகவலைக் கவனியுங்கள். சிறிலங்காவின் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வெளியிட்ட உத்தியோக பூர்வமான தகவலின்படி ஒருலீற்றர் பெற்றோலை விற்றால் 50 சதமும் ஒருலீற்றர் மண்ணெண்ணையை விற்றால் 2.50 சதமும், ஒரு லீற்றர் டீசலை விற்றால் 10ரூபாவும் நட்டம் ஏற்படுகிறது! அதாவது ஒரு லீற்றர் டீசலுக்கு குறைந்தது 10ரூபா மானியமாக அரசினால் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கப்படுகிறது. இதனால்தான் சிறிலங்காவின் பொருளாதாரத்தை உறிஞ்சிக் குடிக்கும் பஞ்சபூதங்களில் ஒன்று எனப்பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை நிதியமைச்சர் சரத்அமுனுகம வர்ணித்திருந்தார்.

அப்படியாயின் டீசலுக்கான மானியம் விலக்கப்படுமாயின் அதன் விலை எத்தனை ரூபாவால் அதிகரிக்கப்போகிறது? ஒரு லீற்றரை விற்கும்போது 10 ரூபா நட்டம் ஏற்படுகிறதெனில் குறைந்தது 10ரூபாவைவிட அதிகமான ஒரு தொகையால் டீசலின்விலை அதிகரிக்கப்படக்கூடுமென எதிர்பார்க்கமுடியும்!

டீசல் எதற்கெல்லாம் பயன்படுகிறது? போக்குவரத்து சாதனங்கள் பெரும்பாலானவற்றுக்கான எரிபொருள் டீசல்தான். அதுமட்டுமன்றிக் கைத்தொழிற்சாலைகளின் சக்திமூலமும் பெரும்பாலும் டீசல்தான். விவசாயிகளின் உழவு இயந்திரங்கள் லேண்ட் மாஸ்ரர்கள் அனைத்துக்குமே டீசல்தான் எரிபொருள். இவைஅனைத்துமே ஏற்றியிறக்கல், உற்பத்தி என ஒவ்வொரு பொருளுடனும், அதன் இடத்துக்கிடம் நகர்த்துவதிலும் நேரடியாகத்தொடர்புபட்டிருக்கின்றது.

ஆகவே டீசலின் விலை அதிகரிக்குமாயின் மறுகணமே அனைத்துப் பொருட்களினதும் விலைகள் மேலும் மேலும் அதிகரிக்கும். போக்குவரத்துக் கட்டணங்கள் மீளவும் உயரும். இதை மக்கள் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றனர்? விலைவாசி அதிகரிப்புக்கு எதிரிடையாக மக்களின் வருமானம் எவ்வாறிருக்கிறது? அதைக்கேட்டு எங்களின் வயிற்றெரிச்சலை ஏனப்பா கிள்ளுகிறாய் என்றா கேட்கிறீர்கள்? தெரிகிறது. தொழிலாளர்களின் கூலிகளோ, உத்தியோகத்தர்களின் சம்பளங்களோ சிறிதளவும் அதிகரிக்கவில்லை. அதிகரிப்பதாகவும் தெரியவில்லை. தொழிற்சங்கங்கள் தலைகீழாக நின்றும் எந்தப்பலனும் இதுவரை கிடைக்கவில்லை. வீதியில் இறங்கப் போகிறோம் என்ற எச்சரிக்கை மெல்ல மெல்ல மேலெழுகிறது. இதனிடையே தொழிற்சங்கங்கள் கோரிய சம்பள உயர்வினை வரவு-செலவுத்திட்டத்திலேயே வழங்கமுடியும் என்று அரசாங்கம் உடனடியாகவே அறிவித்துவிட்டது. அப்படியாயின் 3000ரூபா இடைக்காலக்கொடுப்பனவையாவது வழங்குங்கள் எனக்கோரி வந்த தொழிற்சங்கங்கள் தமது கோரிக்கையை இப்போது உயர்த்தியுள்ளன. இன்றையவிலை அதிகரிப்பு வேகத்துக்கு 3000ரூபா போதாது. 5000ரூபா இடைக்காலக் கொடுப்பனவை வழங்குங்கள் என நிதியமைச்சரைக்கோரியுள்ளன.

அப்படியாயின் டீசலுக்கு மானியம் விலக்கப்பட்டால், அதன் பின்னான விலையேற்றத்தின் பின் தொழிற்சங்கங்களின் கோரிக்கை எப்படி அமையும்? 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவைக் கோரப் போகின்றனவா அவை?

இதன் மறுபக்கமாக அரச தரப்பிலிருந்து- குறிப்பாக நிதியமைச்சிலிருந்து வந்திருக்கும் தகவலோ வயிற்றில் புளியைக் கரைப்பதாக அமைகிறது. நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக வரவு-செலவுத்திட்டத்தைப் பூரணப்படுத்தமுடியாத நிலையில் நிதியமைச்சு உள்ளதாம். இதனால் நாடாளுமன்றில் வரவு-செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படுவதற்கு மேலும் 10 நாட்கள் தாமதமாகலாம் ஏன்கின்றது தகவல். அதுமட்டுமல்ல, மக்களுக்கான நிவாரணங்களையோ சம்பள அதிகரிப்புகளையோ வழங்கமுடியாத சூழல் நிலவுகிறதாம். எப்படியிருக்கிறது நிலைமை?

சிறிலங்காவுடன் அதிகளவிலான வர்த்தகத் தொடர்புகளைக்கொண்ட நாடுகளின் நாணயங்களுக்கெதிராக சிறிலங்கா ரூபாவின் பெறுமதி தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்துவருகிறது. இரண்டரை மாதங்களுக்கான செலவினை செய்வதற்கான வெளிநாட்டுச் சொத்துக்கள் மட்டுமே அரசின் கைவசம் உள்ளது. வரவு செலவுத்திட்ட பற்றாக்குறைக்கு நிதியிடுவதற்கான வெளிநாட்டுதவிகளும் சர்வதேச நிதிநிறுவனங்களின் உதவிகளும் எட்டாக்கனிகளாகவுள்ளன.அவற்றின் நிபந்தனைகளை நிறைவேற்றமுடியாத அகப்புறச்சிக்கல்களுக்குள் அரசு சிக்கிப் போயுள்ளது. நாடு இவ்வளவிலிருந்தும் மீளவேண்டுமாயின் அரசாங்கம் துணிவான, நேர்மையான தீர்மானங்களை எடுத்து அவற்றை விசுவாசமாகவும் விரைவாகவும் செயற்படுத்தவேண்டும். ஆனால் நடப்பது என்ன? சமாதான முயற்சிகளிலிருந்து நழுவிக்கொண்டும் எதிர்த்தரப்பினரின் நம்பிக்கையினைச் சிதைத்துக்கொண்டும் சீண்டிக்கொண்டும் இருக்கிறது அரசாங்கம். விளைவு என்ன தெரியுமா? அண்மையில் மஹியங்கணையில் உரையாற்றிய சனாதிபதி சந்தி ரிகா இவ்வாறு குறிப்பிட்டார். 'மக்கள் அரசிடமிருந்து உதவிகளைப் பெறுவதற்கு கொஞ்சம் காத்திருக்கவேண்டும்.!'

நாம் மேலே பார்த்ததெல்லாம் மக்கள் பொறுத்திருக்கக்கூடிய சூழல் இருப்பதாக காட்டுகின்றனவா? அப்படியாயின் என்ன நிகழப்போகிறது? வீதிகள் மக்களால் நிரம்பவும், அரச அதிகார பீடங்கள் சுற்றிவளைக்கப்படவும் வேளை வருகிறதா? அரசு இதேபோக்கில் போனால் அது நிகழ்ந்துவிடக்கூடும். ஏனெனில் மக்களுக்கு வேறுவழியில்லை. அவர்களின் 'தாங்கும் சக்தி' காலியாகி விட்டது.

# சமாதான முயற்சிகள் நகர...

கடந்தவாரம் இலங்கைக்கு வருகைதந்த நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல்கெய்ம் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகும் என்ற நம்பிக்கையற்றவராக தனது இம்முறை, விஜயத்தாலும் பயனில்லை என்ற நிலையில் நோர்வே திரும்பியிருக்கிறார்.

அத்துடன் மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்காலத்தன்னாட்சி அதிகாரசபைத் திட்டவரைபின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்க அரசாங்கம் முன்வர வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார்.

அதேவேளை ஜே.வி.பியினரைச் சந்திக்க தான் எடுத்த முயற்சி தோல்வியடைந்து விட்டமையையும் அவர் குறிப்பிடத்தவறவில்லை.

ஆனால் அவர் இம்முறை இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்ள முன்னர் சமாதான நடவடிக்கைகளில் சில திருப்பங்கள் ஏற்படும் என எதிர்வு கூறியிருந்தார்.

அவ்வேளையில் சமாதானப்பேச்சுவார்த்தைகள் தொடர ஜே.வி.பி முட்டுக்கட்டையாக இருந்தால் அதனையும் மீறி பேச்சுக்களை நடத்துவது எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவுடன் ஆட்சியைத் தொடர சனாதிபதி தீர்மானித்துள்ளதாகவும் சனாதிபதி மாளிகைச் செய்திகள் வெளிவந்திருந்தன.

அதுமட்டுமல்லாது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் சந்தித்துள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதே ஒரே வழியாக இருந்தமையும் நோர்வே தூதுவரின் நம்பிக்கை பலிக்குமோ? என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்தியிருந்தது.

ஆனால் அவ்வாறெதுவும் நடந்துவிடவில்லை.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஒரு சில நாட்களுக்குள் மாற்றம் எதுவும் ஏற்பட்டுவிடும் என நம்பிக்கை கொள்பவர்கள் அல்ல. ஏனெனில் அவர்கள் இப்பிரச்சினையுடன் கடந்த 56 வருடங்களாக வாழ்ந்து பல அனுபவங்களைப் பெற்றவர்கள் என்பதுடன் சிங்கள ஆட்சியாளர்கள் எப்படியானவர்கள் என்பதை நன்கு புரிந்துகொண்டிருக்கிறார்கள்.

ஆனால் அதனையும் மீறி குறிப்பிட்ட சில நாட்களில் அதிசயமாக மாற்றங்கள் ஏற்பட சந்தர்ப்பங்கள் இல்லை என முற்றுமுழுதாக கூறிவிடவும் முடியாதுதான்.

ஆனால் நோர்வேயின் சிறப்புத் தூதுவர் திருப்பம் ஏற்படும் எனக் கூறிய நாளிலிருந்து அவர் வருகை தரும்வரை நடந்த வேறு சம்பவங்களை அவதானித்தால் இதில் ஏமாற்றம் அடைய எதுவும் இல்லை.

ஏனெனில் இக்காலப் பகுதியில் சில நாடுகள் சிறிலங்கா அரசாங்கத்திற்கு நிதி உதவி வழங்கவும் சில படைஉதவி வழங்கவும் உறுதியளித்தன. இதன்மூலம் அவை சமாதான முயற்சிகளுக்கு உதவுவதாகவும் கூறிக்கொண்டன. ஆனால் அவர்கள் தெரிந்தோ அல்லது தெரியாமலோ சமாதான முயற்சிகளில் ஏற்படலாம் என எதிர்பார்த்த திருப்பங்களை இல்லாதொழித்துவிட்டன என்பதே உண்மையாகும்.

சிறிலங்கா ஆட்சியாளர்கள் தாம் பலமானநிலையில் இருப்பதாக கருதினால் பேச்சுக்களுக்கு வரமாட்டார்கள் என்பதைப் பலமுறை நிரூபித்திருக்கிறார்கள். 1994ஆம் ஆண்டு நடுப்பகுதியில் ஐக்கிய தேசியக்கட்சி 12வருட காலம் யுத்தத்தை நடத்தி களைத்துப்போயிருந்த நிலையில் சந்திரிகா குமாரதுங்க சமாதானம் பற்றிக்கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்து சிலகாலம் பேச்சுக்களை நடத்தினார். பின்னர் நிதிரீதியான பலத்தைப் பெற்றதும் படையைத் தயார்படுத்தி யுத்தத்தை நடத்தினார்.

பாதுகாப்பிற்கு ஐ.தே.க ஒதுக்கிய நிதி போல இரண்டரை மடங்களவு அதிக நிதியை ஒதுக்கி விரைவிலே யுத்தத்தை முடிவுக்குக்கொண்டுவரமுடியும் என நம்பினார். ஆனால் ஏழு வருடகாலத்தில் அதைவிடப் பெருமளவு நிதியை ஒதுக்கி பொருளாதாரரீதியில் பெரும் சீரழிவுக்கு சிறிலங்காவைக் கொண்டுசென்றார்.

இந்நிலையில் ஐ.தே.க. சமாதானம் என்ற கோஷத்துடன் ஆட்சிக்கு வந்தது.

அந்த ஆட்சியைக் கவிழ்த்துவிட்டு இப்போது ஆட்சிப் பொறுப்பைச் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஏற்றுக்கொண்டிருக்கின்றபோதிலும் பொருளாதார ரீதியாக பெரும் சகதியில் ஆட்சி மாட்டிக் கொண்டுள்ளமை. வெளிப்படையான விடயமாகும். இதிலிருந்து மீளவே சமாதானம் குறித்து அவர் பேசிவருகிறார் என்பதை எவராலும் மறுக்க முடியாது.

விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத்தன்னாட்சி அதிகாரசபையின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்கலாம் என ஏற்றுக்கொள்ளும் சர்வதேசத்தால் பேச்சுவார்த்தை மேசைக்கு இப்போது கொண்டுவரப்படவேண்டியவர்கள் சிறிலங்கா ஆட்சியாளர்களே. சமாதான நடவடிக்கைகள் நகரவேண்டுமானால் அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டியவர்களாக உள்ள சிறிலங்கா ஆட்சியாளர்களை பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்துவரவேண்டும். இதற்கு சமாதான



முயற்சிகளில் உண்மையிலேயே சிறிலங்கா ஆட்சியாளர்கள் விருப்பம் உள்ளவர்களாயின் சர்வதேசத்தின் நடவடிக்கைகள் எதுவும் தேவைப்படாது ஆனால் அவர்கள் அவ்வாறில்லாதிருக்கின்ற நிலையில் எதனைச் செய்வது சரியென முடிவெடுக்கவேண்டிய தேவை உள்ளது.

சமாதான முயற்சியில் ஈடுபட்டுவரும் நோர்வே தரப்பை முற்றுமுழுதாக நிராகரித்து வரும் ஒரு கட்சியை நம்பி அதன் பிடியிலே சிக்கி ஆட்சி நடத்தும் இன்றைய அரசாங்கம் ஒப்புக்குத்தானும் பேச்சுவார்த்தைக்கு தானாகவே முன்வரும் என எதிர்பார்ப்பது இயலாத காரியம். அத்துடன் அந்த ஆட்சியைப்பலப்படுத்தி சமாதான முயற்சிகளில் ஈடுபடச் செய்யலாம் என நினைப்பது அதைவிட இயலாத விடயம்.


**வேலவன்**

---

# நேர்நோக்கு

## வேட்டுச்சத்தங்கள் நின்றபோதும் தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை

கடந்தகால போர் அழிவுகளால் மிக மோசமாக, பாதிக்கப்பட்ட ஒரு பிரதேசமாக வவுனியா மாவட்டம் அமைகின்றது. வவுனியா மாவட்டத்தில் கடந்த 1990 ஆம் ஆண்டுமுதல் தொடர்ந்து ஏற்பட்ட இராணுவநடவடிக்கை மூலம் மாவட்டத்திற்குள்ளேயே இடம் பெயர்ந்தும் வேறு மாவட்டங்களுக்கு இடம்பெயர்ந்தும் வாழ்ந்து வந்தனர். இவைதவிர கடந்த 1997ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினால் வவுனியா வடக்கு, பிரதேசத்தை ஆக்கிரமிக்கும் நோக்குடனும் ஏ.9, சாலையைக் கைப்பற்றும் நோக்குடனும் மேற்



கொள்ளப்பட்ட ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கை அதற்கு பக்கதுணையாக மேற்கொள்ளப்பட்ட எடிபல, ரணகோஷ I,II படை நடவடிக்கைகள் மூலம் பல ஆயிரக்கணக்கான மக்கள் தமது சொந்த வாழ்விடங்களையும் விவசாய விளைநிலங்களையும் விட்டு இடம்பெயர்ந்து பெரும் அவலங்களுடன் வாழ்ந்தனர். விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட ஓயாத அலைகள் மூலம் தமிழர் தாயகப் பகுதி, மீட்கப்பட்ட பின் மக்கள் சொந்த இடங்களில், மீளக் குடியமர்ந்தனர். மீளக் குடியமர்ந்த மக்களுக்கு சமாதானத்தில் செய்ய வேலைத்திட்டங்கள், அல்லது அபிவிருத்திப்பணிகள் எவையும் இதுவரையில் 20 வீதத்திற்குக் கூட அபிவிருத்தி செய்யப்படவில்லை என்றே கூறவேண்டும்.

அந்தவகையில் கடந்த 1999ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட ரணகோஷ, இராணுவ நடவடிக்கைமூலம் இடம்பெயர்ந்து சென்ற ஒரு கிராமமும் இராணுவ, உயர்பாதுகாப்பு வலயம் என இருந்து விடுவிக்கப்பட்டபகுதியாகவுள்ள வவுனியா கல்மடுப் பிரதேசத்தில் புனர்வாழ்வு அபிவிருத்திப்பணிகளை மேற்கொள்வதாக கூறிக்கொள்ளும் சர்வதேச, தொண்டு நிறுவனங்கள் வாக்குறுதிகளை மட்டுமே வழங்கிச் சென்றனவே தவிர, தமக்கு அடிப்படை உதவிகள் கூட கிடைக்கவில்லை என, கல்மடு பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்பொழுது கல்மடுப் பிரதேசத்தில் கடந்த யூன் மாதம் வரையும் 119 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்து கொண்ட நிலையில் இக்கிராமத்தில் மருத்துவ வசதியில்லை, பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை, போக்கு வரத்து வசதி இன்மை போன்ற பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். ஒருவருக்கு, நோய் ஏற்பட்டுவிட்டால் 20 Km தூரத்தில் உள்ள வவுனியா பொது மருத்துவமனைக்கு வந்தே சிகிச்சை பெறவேண்டும். அவ்வாறு, சிகிச்சை பெறுவதாயின் கால்நடையாகவோ துவிச்சக்கர வண்டி மூலமோ சென்று தமது சிகிச்சையை பெறவேண்டும். இது, ஒருபுறம் இருக்க ஏராளமான விவசாய நிலங்களைக் கொண்ட கல்மடுப் பிரதேசத்தில் சிலபகுதி, விவசாய நிலங்களை பயிர்ச் செய்கைக்கு படையினர் அனுமதித்து இருந்தாலும் விவசாய நடவடிக்கையை நிம்மதியாக மேற்கொள்ள முடியாத நிலை எனவும் காலை 9.மணி முதல் பிற்பகல் 5.மணி வரையும் மட்டுமே வயல் நிலங்களில் நடமாட முடியும் இந்த தேச எல்லைக்குள்தான் பயிர்ச் செய்கையோ, விவசாய நடவடிக்கைகளையோ பார்வையிட சிறிலங்கா அரசு அனுமதிக்கின்றது என்றும் இவ்வளவு கட்டுப்பாடுகளுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் மத்தியில் எவ்வாறு தாம் நிம்மதியாக, தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்வது. என்றும் கல்மடு மக்கள் மிகுந்த கவலையுடன் தமது உள்ளக் குமுறலை வெளிப்படுத்தி கொள்கின்றனர். கல்மடு மக்கள் அன்றாட, ஜீவனோபாயத்துக்கே, வழியின்றி அல்லற்படும் நிலைமை, கண்டு கொண்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மேற்படி கிராமத்தில் புனர்வாழ்வு அபிவிருத்தி திட்டங்களை ஆரம்பித்து செயற்படுத்திவருகின்றமை தமக்கு ஓரளவு நிம்மதியளிப்பதாக, மக்கள் நம்பிக்கையுடன் கூறுகின்றனர்.

வவுனியா மாவட்டத்தின் இன்னுமொரு கிராமமான கொல்லர்புளியங்குளத்தினை எடுத்துக்கொண்டால், இக்கிராமம் வவுனியா நகரில் இருந்து 35 கிலோ மீற்றர் தொலைவில் ஏ.9 சாலையை, மையமாகக் கொண்டுள்ள இக்கிராமத்தில் 65 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ள நிலையில் இவர்களுக்கு, எந்தவித அடிப்படை வசதிகளும் மேற்கொள்ளப்படாதுள்ளன.

இதேபோன்று வவுனியா பன்றிக்கெய்த குளம் பிரதேசத்தினை, எடுத்துக்கொண்டால் அப்பிரதேச மக்களும் இதேபோன்ற மருத்துவ வசதி, கல்வி வசதி, போக்குவரத்து வசதி போன்ற அடிப்படை வசதிகள் இன்றி, மிக நீண்ட காலமாக, வாழ்ந்துவருகின்றனர். இவ்வாறான கிராமங்களில் தேவைப்பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு ஓரளவு, அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டாலும் அவை, இக்கிராமங்களில் இருந்து இழக்கப்பட்டவற்றின் 10 வீதத்திற்கும் குறைவானவையே என்றே கூறவேண்டும்.

எமது தமிழ்மக்கள் இழந்த பெறுமதி மதிப்பிட முடியாத சொத்துக்கள், விலைமதிப்பற்ற மனித உயிர்கள் இவற்றை எல்லாம் ஈடுசெய்வது என்பது பொய்த்துப் போன ஒரு காரியம்தான். எமது மக்கள் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக, அழிவுகளையும் இழப்புக்களையும் தொடர் சந்திப்பாக சந்தித்தவர்கள் இன்று ஏதோ ஒரு மௌனித்த சமாதானம் உலாவருகின்றது. துப்பாக்கி வேட்டு சத்தம் மட்டும் நின்றுவிட்டதே தவிர, எமது மக்களின் எந்தவிதமான அடிப்படை தேவைகளும் அவர்களது அபிலாசைகளும் நிறைவேற்றப்படவில்லை. போரினால் அழிக்கப்பட்ட எமது தேசத்தில் எமது மக்களின் கல்வி அடிப்படை வசதிகளையும் கட்டி எழுப்புவது என்பது இயல்பான காரியம என்று கருதமுடியாது என்றே கூறவேண்டும்.

**பாஸ்கரன்**

## பயணம்-04

வவுனியா.நவ்வி, குஞ்சுக்குளம் மக்கள்

# கல்வி மற்றும் போக்குவரத்தில் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்

வவுனியா மாவட்டத்தின் வவுனியா தெற்கு (ஓமந்தை) பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நவ்வி குஞ்சுக்குளம் பகுதி மக்களை சந்திக்கும் நோக்கோடு அப்பகுதிக்கு சென்றோம். நட்டாங்கண்டல் ஊடான எமது பயணம் எமக்கு ஒரு அனுபவமாகவே இருந்தது. இவ்வீதிகளில் காணப்படுகின்ற பாரிய கிடங்குகள் மழைநீரினால் நிறைந்து காணப்பட்டது. இதனால் நவ்வி, குஞ்சுக் குளத்திற்கான எமது பயணத்தின் ஒரு குறிப்பிட்ட



வவுனியா தெற்கு வலயக்கல்விப்பணிப்பாளர், சி.தண்டாயுதபாணி

நேரத்தை இவ்வீதியின் சீர்கேட்டினால் இழக்க வேண்டி ஏற்பட்டது. சிரமத்தின் மத்தியில் இப்பகுதியை சென்றடைந்த நாம் குஞ்சுக்குளம், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர்; நடராசா செல்வராசா அவர்களை சந்தித்தோம். இப்பகுதியின் தற்போதைய நிலவரம் தொடர்பாக அவர் கூறுகையில்.


"எங்கட பகுதியில பெரிய பிரச்சினையே கல்விதான். ஏனெண்டு சொன்னா நவ்வி அ.த.க.பாடசாலையில தரம் ஆறு வரையும் தான் இருக்கு. ஆனால் பதினொராம் ஆண்டு படிக்கிற பிள்ளையளும் இஞ்ச படிக்குதுகள் ஆனா இந்த பிள்ளைகளுக்கு கணிப்பீடு இல்ல. அதோட ஓ.எல் பாடம் எழுத வேற ஒரு பள்ளிக்கூடத்திலதான் விண்ணப்பம் செய்யவேணும். இதால நிறையப் பேர் தங்கட பிள்ளையள வெளியால (இராணுவ கட்டுப்பாட்டு பகுதியில்) விட்டுத்தான் படிப்பிக்கினம். தொடர்ந்து பிள்ளையள் படிக்கிறதிலயும், கஷ்ரம். நாங்கள் தான் படிக்கவில்லை பிள்ளைகள் எண்டாலும் படிச்சு நல்லாவருங்கள் எண்டால் இந்தப் பள்ளிக்கூடம் இப்படிக்கிடக்கு. நாங்கள் சம்பந்தப்பட்ட ஆக்களிட்ட கேட்டனாங்கள் பிள்ளை களுக்கு பாடம் எடுக்கேல்ல என்ன பிரச்சினை எண்டு தரம் உயர்த்திறது கஷ்டமாம். இப்ப செய்யேலாதாம் எண்டினம். கணிப்பீட்டிற்கு வேறபள்ளிக்கூடத்து அதிபரிட்ட கையெழுத்து வாங்க வேண்டிக்கிடக்கு. இந்த பள்ளிக் கூடத்தில மாலை நேரக்கல்வியும் இப்ப நடக்கிறேல்ல. இஞ்ச ரியூசன் சென்றர் இல்ல. இப்படித்தான் எங்கட பிள்ளையளின்ர கல்வி போகுது.

எங்களுக்கு போக்குவரத்தும் பாரிய பிரச்சினையா இருக்கு. இஞ்ச உள்ள 620திற்கு மேற்பட்ட குடும்பங்களும் என்னதேவைக்கும் மல்லாவி, அல்லது வவுனியாதான் செல்ல வேணும்.

இஞ்சயிருந்து நட்டாங் கண்டல் ஊடாக மல்லாவி செல்கிற றோட்டும் சரியில்லை. மூன்று முறிப்பு றோட்டு 05கிலோமீற்றர் வரை வெட்டிப்போட்டு விட்டிட்டினம் அதுவும் சரியில்லை. புளியங்குளம் போறரோட்டும் சரியில்லை. இதால இஞ்சயிருந்து நெல், வெங்காயம், மரக்கறி எல்லாம் கொண்டுபோய் சந்தைப்படுத்த முடியாம இருக்கிறது. அறா விலைக்குத்தான் வியாபாரிமார் கேக்கினம். அவங்களைப் பிழை சொல்லமுடியாது. எங்கட ரோட்டு இப்பிடி இருக்குது. மருத்துவ வசதியளும் இல்ல, அதுவும் பெரியபிரச்சினைதான். என்கிறார் அவர்.

இவருடனான சந்திப்பை நிறைவு செய்து கொண்டு நவ்வி கிராமத்தை சேர்ந்த திரு.ஆறுமுகம் அவர்களைச் சந்தித்தோம். அவர் கூறுகையில் வீதியும், பாடசாலைக் கல்வியும் தங்களுடைய வாழ்க்கைக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதாக கூறியதுடன் தங்களுடைய கிராமத்தில் உள்ள நவ்வி சிறிவாணி ஆரம்ப பாடசாலையில் தரம் 5 வரை உள்ளதாம். இப்பாடசாலையில் ஒரு ஆசிரியர் மாத்திரம் கடமையாற்றுவதால் சில வேளைகளில் ஆசிரியர்களுக்கான, கருத்தூட்டல், கூட்டம் போன்ற வற்றிற்கு செல்லும் போது பாடசாலை பூட்ட வேண்டியுள்ள தாகவும் இதனால் பிள்ளைகளின் கல்வி பாதிப்படைவதாகவும் கூறினார். நாம் இவ்விடயமாக இப்பாடசாலையின் ஆசிரியர் சு.வினேந்திரராசா அவர்களை சந்தித்தோம். அவரின் கருத்துப்படிதான் ஒருவரால் மாத்திரம் இப்பாடசாலை மாணவர்களுக்குக் கற்பித்தல் செயற்பாட்டை செய்ய முடியாதுள்ளதாகவும், சில சந்தர்ப்பங்களில் பாடசாலை பூட்டிச் செல்ல வேண்டியுள்ளதாகவும் கூறினார்.

நாம் இவர்களுடனான சந்திப்பை நிறைவு செய்து கொண்டு குஞ்சுக்குளம் ஆரம்ப பாடசாலைக்கு சென்றோம். அங்கே இப் பாடசாலையை மேற்பார்வை செய்ய வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.சி.தண்டாயுதபாணி அவர்கள் வருகை தந்திருந்தார். எம்மை இன் முகத்துடன் வரவேற்ற அவர் இப் பாடசாலைகளின் நிலவரம் தொடர்பாக கூறுகையில்



நடராசா செல்வராசா

### அருள்

"நவ்வி சிறிவாணி ஆரம்பப் பாடசாலையில் ஆண்டு 1-5வரையுமே உள்ளது. இதில் மொத்தமாக இருபத்தெட்டு மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இதற்கு இன்னுமொரு ஆசிரியர் தேவையெனும் மக்களின் கருத்து உண்மையே ஆனால் எங்களின் கல்விவலயத்தில் 40வீதமான ஆசிரியர் பற்றாக் குறையாக உள்ளனர். இதனால் இவ்வாறான பாடசாலைக்கு இன்னுமொரு ஆசிரியர் நியமிக்க நாம் விரும்பினாலும் நியமிக்க ஆசிரியர் பற்றாக்குறை இடங்கொடுப்பதில்லை. குறிப்பாக 311 ஆசிரியர்கள் எமக்கு தேவையாக உள்னர். அண்மையில் வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட ஆசிரியர்கள் 06 பேர். எனவே இவர்களைக் கொண்டு தேவைகளை பூர்த்தி செய்ய முடியாது. இனிவரும் காலங்களில் வழங்கப்படும் நியமனங்களில் இருந்து இப் பாடசாலைக்கு ஆசிரியர் ஒருவரை நியமிக்கவுள்ளோம்.

அத்துடன் குஞ்சுக்குளம் அ.த.க.பாடசாலை ஒரு ஆரம்பப் பாடசாலையாகவே இன்னும் உள்ளது. இப்பாடசாலையை உடனடியாக பதினொராம் ஆண்டுவரை தரமுயர்த்த முடியாது. காரணம் மாணவர்கள் தொகை அயல் பாடசாலைக்கிடையிலான தூரம் போன்ற பல கொள்கைகளை கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள சுற்று நிருபம் இதற்கு இடங்கொடுக்காது.

எமது வலயத்தை பொறுத்த வரை 89 பாடசாலைகள் உள்ளன. இதில் 62 பாடசாலைகள் மாத்திரம் சொந்த இடத்தில் இயங் குகின்றன. ஏனையவை சொந்த இடங்களில் இயங்கவில்லை. அவ்வாறு சொந்த இடங்களில் இயங்க முடியாத பாடசாலைகளை பிறிதொரு பாடசா லையுடன் இணைத்து செயற்படுத்தி வருகின்றோம்.

அந்த வகையில் இப்பாடசாலையும் இடம்பெயர்ந்த சொந்த இடத்தில் முழுமையாக இயங்காத பாடசாலையினை இணைத்து இப் பாடசாலை மாணவர்கள் கல்வியை இலகுபடுத்தியுள்ளோம்.



இப்பகுதியில் வாழும் மக்கள் பரந்த பிரதேசத்தில் குறைந்தளவு மக்கள் வாழ்கின்றனர். இவ்வாறான நிலையில் ஆளணி சுற்று நிருபத்தின்படி ஆரம்ப பாடசாலைகள்தான் இருக்க முடியும். இவ்வாறு சிறிய பாடசாலை ஒன்றை மூடியிருக்கின்றபோது குறுகிய மாணவர்கள் அடிப்படை கல்வி அற்றுப் போகும்நிலை ஏற்படுகின்றது. இதனால் இப்பாடசாலைகளை மூடி விடவும் முடியாதுள்ளது. தரமுயர்த்துவதும் உடனடியாக முடியாதுள்ளது. ஆனாலும் இந்த குஞ்சுக்குளம் ஆரம்ப் பாடசாலையை தரமுயர்த்த நடவடிக்கை எடுத்து வருகின்றோம்" என்றார் அவர்.

இப்பகுதியில் உள்ள நவ்வி சிறிவாணி ஆரம்பப்பாடசாலை ஒரு ஆசிரியருடன் இயங்குவதால் இம்மாணவர்களின் அடிப்படைக் கல்வி வீழ்ச்சி காணுவதாக இப்பகுதி மக்கள் கூறுகின்றனர். அத்துடன் மாணவர்கள் தொகை குறைவாக இருந்தாலும் தரம்-ஒன்று தொடக்கம் ஐந்து வரை ஒரு ஆசிரியர் கல்வி புகட்டுவதென்பது சாத்தியப்படாத விடயமாக உள்ளது என இப்பாடசாலை அதிபர் கூறுகின்றார். எனவே இப்பாடசாலைக்கு இன்னுமொரு ஆசிரியர் நியமிக்கவேண்டியுள்ளதென்பது ஒரு உடனடித்தேவையாக உள்ளது.

இம்மக்களின் போக்குவரத்து வசதியென்பது தற்போது பெய்துவரும் மழையினால் செயலிழந்து போயுள்ளது. இதனால் இப் பகுதி மக்கள் தங்களின் விவசாய உள்ளீடுகளை விற்பனைக்காக கொண்டுசெல்வதிலும் பலத்த நெருக்கடியை சந்திக்கின்றனர்.


குறிப்பாக மருத்துவ தேவையை பூர்த்தி செய்ய, மல்லாவி வைத்திய சாலைக்கோ அல்லது நட்டாங்கண்டல் மருத்துவமனைக்கோ செல்லவேண்டியுள்ளது. ஆனால், இவ் நட்டாங்கண்டல் வீதி பயணம் செய்வதற்கு ஏற்றதாக இல்லை இதனால் இப்பகுதி மக்கள் பலத்த நெருக்கடியை சந்திக்க வேண்டியுள்ளது.


இவ்வீதிகளின் சீரின்மையினால் தங்களின் விவசாய உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்த முடியாது தவிக்கின்றனர். இந் நிலையால் இவர்களின் உற்பத்திப் பொருட்கள் வெளியில் இருந்து வரும் மொத்த வியாபாரிகள் குறைந்த விலைக்கே கொள்வனவு செய்கின்றனர் இதனால் இவ்விவசாயிகள் நட்டமடைந்து அடுத்த தமது விவசாய நடவடிக்கைகளை மேற் கொள்ள முதல் இன்றி தவிக்கவேண்டி ஏற்படுகின்றது.

இவ்வீதிகள் துரித கதியில் புனரமைப்புச் செய்யப்படாவிடின் இனிவரும் மாரிகாலம் இம்மக்களுக்கு ஒரு சாபக்கேடான காலமாகவே இருக்கும்.



# ஐக்கிய நாடுகள் சபை நாடுகளுக்கான வலைப்பொறி





இரண்டாம் உலக யுத்தம் முடிந்தபின்னர் வெற்றி பெற்ற அரசியல் தலைமைகள் உருவாக்கிக்கொண்ட அமைப்பே ஐக்கிய நாடுகள் சபை. அதனை மிக உயர்வாக முதன்மைப்படுத்திய சக்திகள் உலகத்தை அதன் வலைப்பின்னலுக்குள் சிக்க வைத்தன. இதனால் ஐ.நா. அமைப்பே உலகம் எனக்கருதி நாடுகளும் ஏனையநாடுகளும் ஒன்றுசேர்ந்த கூட்டாக ஐ.நா. அமைந்திருந்தது. இது பனிப்போர்க்காலத்தில் மிகநேர்த்தியானதாக அமைந்திருந்ததுடன் சமபலத்தை நோக்கிய நகர்வுக்குள் உலகத்தை இழுத்துச் சென்றது. ஆனால் பனிப்போர் முடிந்ததுடன் அமெரிக் காவின் பொம்மையாக விளங்கும் நிலை தவிர்க்க முடியாத செய்தியாகக் காணப்பட்டது. இது நீடித்த தொன்றாக விளங்கும் போது ஐ.நா. சபைக்கான கூட்டத் தொடர் நியூயோக்கில் நடைபெறுகின்றது.

## ஐ. நா மாநாடு

பல உலகத்தலைவர்களும் சந்திக்கின்ற மைய அமைப்பாக ஐ.நா. விளங்குவது போன்று மாநாடு நிகழும் மையமாக அமெரிக்க தலைநகரம் விளங்குகிறது. ஆரம்பத்தில் அதிக முக்கியத்துவம் இல்லாதபோதும், தற்போது வறிய பின்தங்கிய நாடுகள் எல்லாவற்றினதும் முக்கிய நிகழ்வாக ஐ.நா. மாநாடு மாறிவிட்டது. ஐ.நா. மாநாட்டை நோக்கிய அரசுகளின் நகர்வுகளும், அரசியல் தலைமைகளின் போக்குகளும் தீர்மானிக்கப்படுகின்ற நிலை காணப்படுகிறது. 2004 ஆம் ஆண்டு உலக சமாதானத்துக்கும் அமைதிக்குமான கருப்பொருளைக்கொண்ட ஐ.நா. மாநாடு காலத்துக்கு ஏற்ப பிரகடனங்களை வெளியிடும் அமைப்பாக மாறிவருகின்றது.

இதேவேளை உலகத் தலைவர்களின் கொள்கை வகுப்பில் ஐ.நா. மாநாடு எத்தகைய பங்குவகிக்கிறதோ இல்லையோ தென்னாசியத் தலைவர்களிடம் தனித்துவமான கொள்கை வகுப்புக்கள் வெளிவந்துள்ளன. இலங்கை சனாதிபதியை பொறுத்தவரை உலக நாடுகளிடமிருந்து நிதியுதவியைபெறுவதும் சமாதானத்தை தான் நிலைநாட்ட முயலுவதாகவும் காட்டும் போக்கு நிச்சயம் படம்பிடித்துக் காட்டப்படும். அவ்வாறே இந்தியத் தலைவர் நிரந்தர அங்கத்துவம் நோக்கிய விதத்தில் இந்தியாவை நகர்த்துவதாகவும் பாகிஸ்தான் தலைவர் இந்தியத் தலைவருடன் உரையாடுவதையும் குறிப்பதாகவே அமைக்கப்பட்டுள்ளது. ஏனைய தென்னாசிய தலைவர்கள் தமது நாடுகளின் பிரச்சினைகளை உரைக்கவும் ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு ஐ.நா மாநாடு பரஸ்பரம் பிரச்சினைகளை சந்தித்து உரையாடும் மையமாக மாறுகின்றது. கடந்த வருடம் பேசிய விடயங்களில் எத்தனை சதவீதத்தை நிறைவேற்றின என்பது கேள்விக்குரியதாகும்.

## சட்டவிரோத போர்

ஐ.நா. சபையின் பொதுச்செயலாளர் கொபி அனான் அமெரிக்கா, ஈராக் மீது நிகழ்த்திய போரையேசட்டவிரோதமான போர் என குறிப்பிட்டிருந்தார். அமெரிக்காவும் அதன் கூட்டணியினரும் ஈராக் மீது நிகழ்த்திய, நிகழ்த்தி வரும் போர் சட்டவிரோதமானதென்பதை மிகத்தெளிவாக அவர் வெளிப்படுத்தினார். ஆனால் கொபி அனானின் கருத்தை காலம் கடந்த சிந்தனையாக உலக ஊடகங்களால் மதிப்பிடப்பட்டது. ஈராக் போரையும் போருக்கு பிந்திய அனைத்து நிகழ்வுக்கும் பின்னர் கொபி அனான் இவ்வாறு குறிப்பிடுவது அவர் மீதும் ஐ.நா. அமைப்பின் மீதும் சந்தேகத்தை கிளப்பியுள்ளது.



இத்தகைய பிரகடனங்கள் ஐ.நா. சபையின் பலவீனத்தை காட்டுவதைக் காட்டிலும் செயலாளரின் பலவீனத்தையே உலகுக்கு உணர்த்துகின்றது. கொபிஅனானின் பதவிக்காலம் முடிவடையும் காலம் அண்மித்துவிட்டதனால் இவ்வாறு குறிப்பிடுவதாகவும் விமர்சிக்கப்படுகின்றது. ஆனால் இதில் அமரும் எந்தத் தலைமைக்கும் இதுவேதான் பதிலாக அமையப் போகின்றது. ஐ.நா. என்பது அமெரிக்காவின் பொம்மை. இடையிடையே அமெரிக்காவுக்கு எதிராக செயலாளர் அறிக்கை விட்டு யதார்த்தத்தை வெளிப்படுத்தினாலும் அமெரிக்காவின் நேசிப்புக்குரியவர் கொபிஅனான் என்பதை மறுக்கமுடியாது. அவ்வாறு இருந்ததன் பிரதிபலனே இரண்டு தடவைகள் பொதுச் செயலாளராக ஐ.நா. சபையை அலங்கரிக்க முடிந்தது. உலகத்தின் தலைவர்களை விலைக்கு வாங்குவதில் அமெரிக்கர்கள் வல்லவர்கள். அதிலும் பலவீனமான தலைமைகள் அமெரிக்காவின் முதற்கட்டப் பேரம் பேசலுக்குள்ளேயே வீழ்ந்துவிடுவார்கள். இந்த வரிசையில் ஒருவராகத்தான் ஐ.நா.வின் பொதுச்செயலாளரை பார்க்கலாம் இவர்களால் உலகத்திற்கோ அல்லது உரிய நாட்டுக்கோ சொல்லும்படியான எந்த வித இலாபமும் கிடைக்கப் போவதில்லை.

வேண்டுமாயின் இனி அமெரிக்க உலக நாடுகள் மீது திணிக்கப்போகும் போர்களை ஐ.நா. சபைக்கூடாகவே கொள்ள வேண்டுமென கொபிஅனான் கூறலாம். அது தவிர்ந்து எதனையும் ஐ.நா. என்ற அமைப்பின் சார்பு நிலையிலிருந்து மேற்கொள்ள முடியாத அளவுக்கு கொபிஅனானின் அணுகுமுறை அமைந்துவிட்டது.

## சீனாவின் வீட்டோ

ஐ.நா. சபையில் சீனாவுக்கு வீட்டோ அதிகாரம் அமெரிக்க- சீனஉறவு புதுப்பித்த காலத்துக்கு பின்பே வழங்

**ஐங்கரன்**

கப்பட்டது. அதுவரை சீனா தற்போது சண்டையிட விரும்பும் தைவானுக்கே உரித்துடையதாக அமைந்திருந்தது. பனிப்போர்க் காலத்தில் சித்தாந்தத்தை கடந்த நிலையில் அமெரிக்காவுக்கும் சீனாவுக்குமான நெருக்கத்தினால் கிடைத்த வாய்ப்பாகவே ரத்து அதிகாரம் விளங்குகிறது.

சூடான் அரசுமீது அமெரிக்கா ஐ.நா. வில் முன்மொழிந்த பொருளாதாரத்தடை தொடர்பாக நிகழ்ந்த வாக்கெடுப்பிலும் சீனா மௌனமாகிவிட்டது. இதே போன்று பல தடவை வெளியே அமெரிக்காவுக்கு எதிரானவற்றைக் கூறி பிரசாரப்படுத்திவிட்டு இறுதியில் பின்வாங்குகின்ற தந்திரத்தை பின்பற்றிவரும் நாடாகக் காணப்படுகிறது.

சீனாவின் ரத்து அதிகாரத்தை ஆசியர்களின் ரத்து அதிகாரத்திற்கு ஒப்பாக நோக்கப்படுவதுண்டு. பாரிய மக்கள் தொகையைக்கொண்ட சீனா முழு ஆசிய ஆபிரிக்க லத்தீன மெரிக்கக் கண்டங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் நாடாக விளங்குகின்றது. அந்தவகையில் ஈராக் மீதான முதலாவது அமெரிக்கப்போரை புதிய உலக ஒழுங்கின் ஆரம்பக் கட்டத்தில் ரத்து அதிகாரம் மூலம் சீனா நிறுத்தியிருக்குமாயின் உலக ஒழுங்கில் அதிக நெருக்கடி ஏற்பட்டிருக்கும். அவ்வாறான இன்னோர் சந்தர்ப்பமே சூடான் மீதான பொருளாதாரத் தடையாகும். இத்தடையை ஆரம்பத்திலிருந்து இறுதிவரை எதிர்க்கப் போவதாக கூறிவந்த நாடு சீனா. அவ்வாறான சீனா அமெரிக்க தூதுவரது சந்திப்பின் பின்பு குத்துக்கரணம் அடித்திருக்கின்றது என்பது மிகவும் ஆபத்தான போக்காகும். சோவியத் யூனியன் வீழ்ச்சிக்குப் பின்பு சீனாவை அதிக அரசியல் திருப்புமுனை சக்தியாக கருதும் உலகத்திற்கு சீனா மேலும் மேலும் ஏமாற்றத்தையே ஏற்படுத்திவருகிறது. சூடானை நோக்கிய அமெரிக்காவின் நகர்வினை அனுமதித்த உலகம் சூடானின் உண்மை நிலையை உணர்வதாக இல்லை. அங்கு ஏற்படபோகும் சுரண்டலை ஐ.நாவின் அனுசரணையுடன் அமெரிக்கா ஆற்றப்போவதே இதன் யதார்த்தமாகும். சீனா எப்போதும் மூடிய திரைக்குள் தனது அரசியலையும் தனது பிராந்தியப் போக்கையுமே கருதி செயற்படுகின்றது. சீனா உலகத்தையும் உலகத்தின் எதிரியை தனது பொது எதிரியாகக் கருதி செயற் படும் காலம் எப்போது ஏற்படு கின்றதோ அப்போதே சீனாவின் பலம் உலக தனித்துவத்தின்முன் சமபலத்தை நோக்கியதாக அமையும்.

## பலூஜாவின் தாக்குதல்

பலூஜாவின் அமெரிக்கா நிகழ்த்திய தாக்குதலால் 70 இற்கு மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர். நூற்றுக் கணக்கானவர்கள் காயமடைந்தனர். இங்கு நிகழ்ந்த தாக்குதலை அமெரிக்க தீவிரவாதத்துக்கு எதிரானதென கூறியுள்ளதுடன், கொல்லப்பட்டவர்கள் தீவிரவாதிகள் என்றும் அறிக்கை விடுத்துள்ளது. இது உலகிலுள்ள. எல்லா இராணுவத்திற்கும் பொதுவான விடயமாகவே உள்ளது. மக்களை கொன்றுவிட்டு தீவிரவாதிகள் மீதான தாக்குதல் என்பதும் அந்நடவடிக்கை வெற்றிகரமானதெனவும் கூறுவது பொதுவான பண்பாகும்.

ஈராக்கின் சனநாயக அமுலாக்கத்தால் அமெரிக்க நிலைகள் பாதுகாக்கப்படுமெனக் கருதிய அமெரிக்க நிர்வாகம் ஈராக்கிய தீவிரவாதத்தின் நடவடிக்கையால் அதிக பாதிப்பை அடைந்துள்ளது. பாதுகாப்பற்ற நிலையை உணரும் அமெரிக்கத் துருப்புக்களும் அவர்களது கூட்டணியினரும் தொடர்ந்து கடத்தப்படுதல் கொல்லப்படுதல் என மிக மோசமான விளைவுகள் ஏற்படுகின்றன. இடைக்கால சனநாயக அரசாங்கத்தின் உருவாக்கத்தை முதன்மைப்படுத்திக் கொள்கைவகுத்த அமெரிக்க தந்திரசாலிகள் உபாயமின்றி நெருக்கடியடைந்துள்ளனர். போருக்கான அணுகுமுறை விரிவடைய மாற்றுவழிகளின்றி அமெரிக்கா காணப்படுகின்றது.

எனவே ஈராக் விவகாரத்தை அமெரிக்கா எதிர்கொள்ள முடியாதநிலையில் காணப்படும்போது சட்டவிரோதமான போரென அனான் கூறியிருப்பதும் சுவையான அரசியலாக உள்ளது. கொபிஅனானின் நடவடிக்கைக்கு அமெரிக்கா எதிர்ப்புக் காட்டினாலும் ஈரான் விவகாரத்தை உடனடியாக தீர்வுகாண முடியாதுள்ளது. ஆனால் ஐ.நா. சபையின் உறுப்புரிமை முதல் தொழிற்பாடுகள்வரை மிகத் தெளிவாக வரையறுத்து தொழிற்படாதவரை ஐ.நாவினால் வறிய, பின்தங்கிய நாடுகளுக்கு எந்த விமோசனத்தையும் ஏற்படுத்த முடியாது. இது நாற்காலி அரசியலுக்கு ஒப்பான சிந்தனையாகவே உள்ளது. ஆண்டுக்கு ஒருதடவை ஒரு சந்திப்பை நிகழ்த்தி உரையாடிவிட்டு முடிவை அறிவிக்கும் சபையாகமட்டுமே காணப்படும்.

# எமது கலைஞர்கள் விடுதலைப் போராட்டத்தில் அயராது உழைக்கின்ற உழைப்பாளிகள்

**போராட்டகாலத்தில் மக்களிடையே கருத்துக்களை புகட்டவேண்டும். மக்களை ஒன்று சேர்த்து கருத்துரைவழங்க வேண்டும். பேரிகை, முழக்கம்எழுப்பித்தான் மக்களை ஒன்று சேர்க்கவேண்டும். அந்த வகையில் எமது கலைஞர்கள் விடுதலைப் போராட்டத்தின் அயராத உழைப்பாளி கள் என்றே கூறவேண்டும்.**



**சங்கநாதம் பேபி ஆசிரியை**

கலைகள் ஒவ்வொன்றும் 3ஆம் வடிவங்களில் நின்று உணர்த்தும் தத்துவங்களால் அது பல்வேறுபட்ட பெயர்களைத் தன்னகத்தே பெற்றுக்கொள்கின்றது. இன்றைய காலகட்டத்தில் நாட்டின் நெருக்கடியான சூழ்நிலையிலும் மனிதன் மனிதனாக வாழமுடியாத ஒரு நெருக்கடிக்குள் தள்ளப்பட்டு உள்ளதால் மனவிரக்தி அடைந்து சீரழிந்த வாழ்வை எதிர்கொண்டு இருக்கின்றவேளையில் அவனது துயரைப் போக்கும் ஒரு அரியசாதனமாக கலைகள் அமைகின்றது. அதில் முக்கிய பங்கு ஆடற்கலை, இசைக்கலை என்பன முக்கிய பங்குவகிக்கின்றன.

ஆதிகாலமனிதர்களும் யோகிகளும் முனிவர்களும் துறவிகளும் வேட்டையாடும் மக்களும் தமது காதாற்கேட்ட ஒலிகளைக் கொண்டு இசைக்கருவிகளை தயாரித்து அவனது பாடும் மரபுவழி உருவாகியது. அதன் பின் பாடல் அசைவுகளுக்கு ஏற்ப, ஆடற்கலை, தோற்றம்பெற்றது.

அந்தவகையில் தமிழ்மக்கள் மீது இன, ஒடுக்குமுறை, சாதி, பாகுபாடு எனப் பலதரப்பட்ட தடைகளை உடைத்தெறியும் வகையில் தனி ஒரு சக்தியாக நின்று, தியாகி லெப். கேணல் திலீபனின் வேண்டுகோளுக்கு அமைவாக, கவிஞர்களின் கவி வடிவங்களுக்கு உயிரோட்டமுள்ள, உயிர்அசைவு வடிவம் கொடுத்து சமூகச்சீரழிவுகளை ஏற்படுத்துகின்ற சினிமா மோகத்திற்கு எதிராக மக்களை ஒன்று திரட்டி, 400 இற்கு மேற்பட்ட மேடைகளில் அரங்கேறிய சங்கநாதம் நெறியாள்மை செய்கின்ற ஆசிரியரான பேபி ஆசிரியை, ஆற்றிய பணியும் ஆற்றிவருகின்ற பணியும், காத்திரமானது. இப்பணியை, பாராட்டி தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் சிறப்பு விருது வழங்கிக்கௌரவித்த பெருமைக் குரியவர்.

***உங்களுடைய, ஆரம்பகால கலைத்துறை வளர்ச்சி. அதற்கான உந்துதல்பற்றி கூறமுடியுமா?***

1980களில் விடுதலைப்போராட்டம் முனைப்புபெற்று வருகின்ற காலப்பகுதியில் அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்த தியாகி திலீபன் அவர்களுடைய காலப்பகுதியில் என்னுடைய கலைப்பணி, ஆரம்பிக்கப் பட்டது. அன்றைய காலப்பகுதியில் நான் ஒரு அரச ஊழியராக இருந்துகொண்டு அன்னையர் முன்னணி என்ற பெண்கள் அமைப்பினூடாக தொடர்ந்து செயற்பட்டுவந்துள்ளேன். அந்தக் காலப்பகுதியில் தெல்லிப்பழை அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்த லெப்ரினன் கேணல் மதி அவர்கள் என்னுடன் தொடர்புகொண்டு விடுதலைப்போராட்டத்திற்கென, கலைப்படைப்புக்களை உருவாக்குமாறு கேட்டிருந்தார். அவ்விருவருடைய முயற்சியினால் எனது கலைப் படைப்புக்கள் வெளிக்கொணரப்பட்டன. இவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க முதன் முதலாக அன்னையர் முன்னணி என்ற அமைப்பினூடாக "புறப்படுவீர் மண்ணுக்காக" என்ற ஒரு நாடகத்தினை உருவாக்கி அதை நெறியாள்கை செய்து மேடைஏற்றி முதன்முதல் விடுதலைப்புலிகளுடன் இணைந்து எனது கலைப்படைப்புக்களை ஆரம்பித்து இன்றுவரை பல கலைஞர்களை உள்வாங்கி, தற்காலத்தில் மாறிவரும் சினிமா யுகத்திற்கு எதிராக தமிழீழ விடுதலைப்போராட்டத்தை சித்திரிக்கின்ற கலைவடிவங்களை பாடல், அசைவு என்ற அடிப்படையில் நாடகங்களாக, வெளிக் கொணர்ந்து கொண்டு இருக்கின்றோம். முதன் முதல் தயாரிக்கப்பட்ட "புறப்படுவீர் மண்ணுக் காக" என்ற நாடகம் யாழ்ப்பாணத்தில் 45இற்கு மேற்பட்ட மேடைகளில் அரங்கேற்றப்பட்டமை எமக்குக்கிடைத்த ஒரு பெருவெற்றி என்றே கூறவேண்டும்.

***சமூக நாடகங்களை, நெறியாள்கை செய்து அரங்கேற்றியுள்ளதாக முன்னர் கூறியிருந்தீர்கள் அவ்வாறு சமூக நாடகங்கள் பெற்ற வெற்றிகள் பற்றி கூறமுடியுமா?***

நாங்கள் எங்களுடைய கிராமத்தில் சமூகநாடகங்களையும் உதயசூரியன் கலைக் கழகம் என்ற ஓர் கழகம் செயற்பட்டது. இதன் மூலம் எமது நாடகங்கள் அரங்கேற்றப்பட்டு வந்தது. இதன் மூலம், பெண்களின் ஆளுமைகள், கலைப்படைப்புக்கள் கலைவடிவங்கள் வெளிக்கொணரப்பட்டன.

**நேர்காணல்**
**சு.பிரபா**

கலைத்துறை சம்பந்தமான கல்வியை, கற்றுள்ளதனால் என்னையே இக்கழகத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற கலைநிகழ்வுகளை, மேற்கொள்ளும்படி கூறி என்னை இக்கழகத்தின் செயலாளராக நியமித்துக் கொண்டனர்.

இவ்வாறு பணியாற்றி வருகின்ற காலப்பகுதியில் பெண்மனம் என்ற சமூக நாடகம் தெய்வத்தாய், எதிர்பார்ப்பு போன்ற சரித்திர நாடகங்களையும் நெறியாள்கை செய்து அரங்கேற்றி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியதோடு, மக்கள் மத்தியில் ஒரு விழிப் புணர்வினையும், ஏற்படுத்திவந்தோம். தெய்வத்தாய் என்ற நாடகம் ஔவை மூதாட்டியின் வரலாற்றினை எழுத்துருவாக்கம்செய்து நெறியாள்கை செய்திருந்தேன் இந் நாடகம் பலமன்றங்களுடன் அகில இலங்கைரீதியில் போட்டியிட்டு, 12 தங்கப் பதக்கங்களைப்பெற்றுக் கொண்டது. இந்த நாடகம் இந்தமன்றத்திற்கு பெற்றுக்கொடுத்த வெற்றியுடன் எனக்கும் ஒரு மதிப்பை பெற்றுத்தந்தது என்றே கூறவேண்டும். இதனைத் தொடர்ந்து சமூக நாடகங்கள், வரலாற்று நாடகங்கள், சரித்திர நாடகங் கள் என்பவற்றை தொடர்ந்து நெறியாள்கை செய்து அரங்கேற்றிவந்தோம்.

***கடந்த 1995ஆம் ஆண்டு யாழ் இடப்பெயர்வுகளை தொடர்ந்து வன்னியில் மூலை, முடுக்கெங்கும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய தெரு வெளி அரங்குகள் விரிவடைந்து செல்ல ஆரம்பித்தன. இதன் முக்கியத்துவம் பற்றி கூறமுடியுமா?***

வீதிநாடகம் என்பது மக்களை கலை உணர்விற்குள் உள்வாங்கும் ஒரு நிகழ்வு என்றே கூறவேண்டும். அதாவது நடன, நாடக, ஊடக நெறியாளராக பணியாற்றிக்கொண்டு இருக்கும்போது வீதிநாடக மரபு முக்கியமான ஒன்றாக கருத்தில்கொண்டு இதனை ஆரம்பித் திருந்தேன்.

**முதன்முதலாக அன்னையர் முன்னணி என்ற அமைப்பினூடாக "புறப்படுவீர் மண்ணுக்காக" என்ற ஒரு நாடகத்தினை உருவாக்கி அதை நெறியாள்கை செய்து மேடைஏற்றி முதன்முதல் விடுதலைப் புலிகளுடன் இணைந்து எனது கலைப்படைப் புக்களை ஆரம்பித்து இன்றுவரை பல கலைஞர் களை உள்வாங்கி தற்காலத்தில் மாறிவரும் சினிமா யுகத்திற்கு எதிராக தமிழீழ விடுதலைப்போராட் டத்தை சித்திரிக்கின்ற கலைவடிவங்களை பாடல், அசைவு என்ற அடிப்படையில் நாடகங்களாக, வெளிக்கொணர்ந்துகொண்டு இருக்கின்றேன்.**

பெரும் போரும் போரின் அழிவுகளும் பொருளாதாரத் தடைகளும் எமது இனத்தை சூழ்ந்திருந்த காலப்பகுதியில் நாங்கள், பெரிய அளவிலான அரங்குகளை அமைத்து மக்களை ஒன்று திரட்டி கலைப்படைப்புகளை செய்யமுடியாத பொருளாதார பலம் இன்மை காரணமாக காலத்தின் தேவையை கருத்தில் கொண்டு எமது பணி என்ன, போராட்டத்திற்கு கலைஞர்கள் ஆற்றவேண்டிய பணி எது என்பதை உணர்ந்து வீதி நாடகங்களை, உருவாக்கம் செய்து வீதி வீதியாக இறங்கி அதாவது வாகன வசதி இன்றி, எமது கலைஞர்கள் மிதிவண்டிகளில் தூர இடங்களுக்கு மாதக்கணக்கில் பயணித்து பலதரப்பட்ட வீதி நாடகங்களை, விடுதலைப்போராட்டத்திற்கு எனது கலைஞர்கள்மூலம் செய்துவந்திருக்கின்றோம். இதன் மூலம் தமிழ்மக்களுக்கு காலத்திற்குக்காலம் இழைக்கப்பட்ட கொடுமைகள் துயரங்களை மையமாகக்கொண்டு எழுந்த இவ்வாறான வீதி நாடகங்களை பார்வையிட்ட பல ஆயிரக் கணக்கான இளைஞர் யுவதிகள் போராட்டத் திற்கு தம்மை இணைத்துக்கொண்டு இன்று வெற்றியின் விளிம்பிலே விடுதலைப்போராட்டம் தடம்பதித்துநிற்கின்றது.

***சிறிலங்கா அரசின் போர்நடவடிக்கைகள் சூழ்ந்திருந்த காலப்பகுதியில் பெருந்தொகையான, மக்கள் இடம் பெயர்ந்து அல்லல்பட்டநேரம், விடுதலைக் கருத்துக்களை, விதைக்கவேண்டிய பாரிய பொறுப்பு ஒன்று உங்கள் கையில் இருந்தது. அதனுடைய அனுபவம் பற்றி கூறமுடியுமா?***

போராட்டகாலத்தில் மக்களிடையே கருத்துக்களை புகட்டவேண்டும். மக்களை ஒன்றுசேர்த்து கருத்துரைவழங்கவேண்டும். பேரிகை, முழக்கம் எழுப்பித்தான் மக்களை ஒன்றுசேர்க்கவேண்டும். எமது கலைஞர்கள் விடுதலைப்போராட்டத்தின் அயராத உழைப் பாளிகள் என்றே கூறவேண்டும். பல கருத்துக் களை கலைவடிவங்கள் ஊடாக எடுத்துக்கூறும் போது அவ்வரங்க நிகழ்வுகளின்போது ஏராள மான இளைஞர்யுவதிகள் எழுந்து முன்வந்து போராட்டத்தில் இணைந்து கொள்வார்கள். தீ ஏந்தி, பல நிகழ்வுகளை செய்யும்போது எரி காயங்களுக்கு உள்ளாகி, அதனைப் பொருட் படுத்தாது அடுத்த நிகழ்வுக்கு தயாராக இருப் பார்கள். மிக நீண்டதூரம் மிதிவண்டிகள்மூலம் மாதக்கணக்கில் பயணித்து கலைநிகழ்வில் ஈடுபட்டு வந்துள்ளனர். ஒரு கலைநிகழ்வில் இராணுவ அதிகாரியாக, ஒரு கலைஞன் நடித்தபோது அக்கலைஞனை, பொதுமக்கள் தாக்கிய சம்பவம் கூட உண்டு. எமது கலைஞர் கள் போர்மேகம் சூழ்ந்திருந்த காலப்பகுதியில் தமது குடும்பசுமை ஒருபுறம்,தொடர்இடப் பெயர்வுகள் ஒருபுறம், பொருளாதாரத்தடை ஒரு புறம் இவற்றை எல்லாம் எதிர்கொண்டு தங்களாலான உயரிய பணியினை இக்கலை ஞர்கள் ஆற்றிவந்துள்ளனர் என்றே கூற வேண்டும்.

***தமிழீழத்தின் கலைஞர்களினால் வடிக்கப்பட்டதாயகப்பாடல்களுக்கு உயிர் வடிவம் கொடுக்கும்வகையில் "சங்கநாதம்" எனும் நிகழ்ச்சியினை, நெறியாள்கை செய்து அரங்கேற்றி வருகின்றீர்கள் இது பற்றி கூறமுடியுமா?***

(22 ஆம் பக்கம் பார்க்க)

சாந்தா படகுப் படுகொலையுடன் (1990.11.02) சுருவில் உட்பட்ட யாழ்ப்பாண தரைத்தொடர்புத்தீவுகளுக்கான தொடர்பு அறுந்து போனது.

அதன் பின் எழுவைதீவு, அனலைதீவு, நெடுந்தீவு மக்கள்- நயினாதீவு சிறிலங்காப்படைமுகாமுக்கு செல்ல கட்டாயப்படுத்தப்பட்டனர்.

மக்கள் தம்மிடம் இருப்பு இருக்கும்வரை படையினருடன் தொடர்புகொள்ளவில்லை. இருப்பு முடிய மக்கள் பட்டினியை எதிர் கொள்ளத்தொடங்கினர். கடற்படையின் கடலாதிக்கம் அவர்களை யாழ்ப்பாணத்துடன் தொடர்புகொள்ளவிடவில்லை. கடைசி ஆற்றாமையால் 1990 டிசம்பரில் மக்கள் பிரதிநிதிகள் - படகுகளில் வெள்ளைக்கொடிகளைக்கட்டி நயினாதீவுக்கு சென்றனர். அங்கு கடற்படையதிகாரிகளிடம் தமது பட்டினி நிலையைக் கூறி யாழ்ப்பாணம் செல்ல அனுமதிகேட்டனர். அதற்கு கடற்படையினர் அனுமதி மறுத்தனர். இந்தநிலையில் நயினாதீவு அன்னதான மடத்தில் வைத்து அரிசி, சீனி, பருப்பு மூடைகள் வழங்கப்பட்டன.

அதனை மக்கள் பெற்றுக்கொண்டும் கடற்படையுடன் சமரசம்

# ஒரு பயணத்தின் மீள்நினைவுகள்...

15



செய்து இருக்க மக்கள் விரும்பவில்லை. இதன் விளைவாக மக்கள் இத்தீவுகளில் இருந்து படகுகளில் இரவில் இந்தியாவுக்கு செல்லத் தொடங்கினர். அதுவும் சிறிலங்கா கடற்படையினரின் சுற்றுக்காவல் நேர ஒழுங்குகளை அவதானித்து- இந்தத்தீவுகளின் மக்கள் இந்தியாவுக்குத் தப்பியோடத் தொடங்கினர். 1990 நவம்பரில் ஒருபடகு சிறிலங்கா கடற்படையின் தாக்குதலுக்கு இலக்கானது. இதில் 5பேர் கொல்லப்பட்டனர். இவர்கள் அனலைதீவு, எழுவைதீவுகளைச் சேர்ந்தவர்கள் இதில் தன் மனைவி- பிள்ளைகளை இழந்து அனலைதீவு வாசி ஒருவர் ஒரு அரச பணியாளராக இருந்தவர் அவர்அத்துடன் பிரமை பிடித்தவர் ஆனார். அது முதல் அவர் தன் போரால் பாதிக்கப்பட்ட வரலாறையே அறிமுகமாகுபவரிடம் கூறுகிறார். இந்திய இராணுவம் தன்னை பிடித்து வதைத்தது முதல் தன் மனைவி பிள்ளைகளுடன் உயிர்காக்க இந்தியாவுக்கு அகதியாகச் சென்றபோது சிறிலங்கா கடற்படை வேட்டையாடியதை- தன் வாழ்வின் சிதைவை பற்றியே புலம்புவார்.

அவரின் பாதிப்பு அறியாமல் தெரிந்தவர்களுடன் சென்று அவருடன் அறிமுகமான போது உடனடியாக தனது பிரபாலத்தை அவர் தொடங்கினார். அது மனதை தாக்கும் ஒரு பதிவு.

இதைவிட அனலைதீவிலிருந்து 67 பேருடன் இந்தியா சென்ற படகொன்று தனுஷ் கோடிஅருகே கடலில் மூழ்கிப்போனது. இதில் அனைவரும் நீரில் மூழ்கிமாண்டனர்.
(1990 ஒக்டோபரில் இது நடந்தது)

காரைநகரிலிருந்து நவம்பர் 15 இல் படகில் தப்பிச் சென்ற மக்களை கடற்படை தாக்கியதில் 5 மக்கள் படுகொலையாகினர்.

இதைவிட வேலணைப்பகுதியிலிருந்து இந்தியாவுக்கு தப்பிச் சென்ற மக்களின் படகு ஒன்றும் தனுஷ் கோடியருகே கடலில் மூழ்கி 90 பேர்வரை பலியாகிய சம்பவம் ஒன்று உள்ளது.

இப்படியாக வாழமுடியாமல்- தப்பவும் முடியாமல் இந்தத் தீவுகளில் மக்கள் சிறிலங்கா கடற்படையின் பொறிக்குள் சிக்கித் தவித்தனர்.

சிறிலங்காக்கடற்படை இம் மக்களை கேவலமாக பயன்படுத்த முனைந்தது. தன்னில் இம் மக்கள் தங்கியிருக்க வேண்டும் என்பதற்காக அவர்களுக்கு உணவுப்பொருட்கள் ஆனைப்பசிக்கு சோளப்பொரி அளவில் கொடுக்கப்பட்டுவந்தன. அவை நயினாதீவில் சென்று பெறப்பட வேண்டும்.

இந்த அவலம் தொடர்கையில் ஊர்காவற்றுறையிலிருந்து அடுத்த கட்ட நகர்வு சிறிலங்கா படைத்தரப்பு தயார்படுத்தலில் ஈடுபட்டுவந்தது. அந்தப்படை நடவடிக்கை யாழ்ப்பாண நகரை கைப்பற்றுவதற்கான முதற்கட்டமாகும். கிட்டத்தட்ட மூன்றாவது நடவடிக்கையாக யாழ்ப்பாணத்தின் நகரை கைப்பற்ற இருந்தது. இது கொப்பேகடுவ குழு கொல்லப்பட்டவேளையில் அம்பலமானது.


அந்த முதற்கட்ட நடவடிக்கை சிறிலங்கா படைகள் ஊர் காவற்றுறையில் தம்மை தயார்படுத்தின.

இது தீவுகளிலிருந்து மக்களை முற்றுமுழுதாக விரட்டுவதாக வும் அமைந்தது.

**துருவன்**




# ஒலிபெருக்கிகளுக்குப் பதிலாக பூக்களா....?



ஜப்பானில் ஒலி பெருக்கிகளுக்கு பதிலாக பூக்களைப் பயன்படுத்தமுடியும் என இயற்பியல் விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். இயற்கையான பொருட்களை பயன்படுத்தும்முறை தற்போது இயற்பியல் துறையிலும் புகுந்துள்ளது. மின்னோட்டங்களை ஒலியாக மாற்றும் பணியினை இந்த இயற்கை பூக்கள் செய்கின்றன. இவ்வாறு மின்னோட்டங்களை ஒலியாக மாற்றுவதோடு மட்டுமல்லாமல், ஒலியின் அளவை பெருக்கும் தன்மையையும் இந்த இயற்கைப் பூக்கள் கொண்டுள்ளன. பொதுவாக அக்காலத்தில் ஒலி பெருக்கியாக கோணவடிவத்தில் செய்யப்பட்ட காகிதம் அல்லது உலோகமோ பயன்படுத்தப்பட்டுவந்தது. தற்போது உள்ள இந்தப் புதிய இயற்கைப் பூக்களே ஒலி பெருக்கியாக செயல்படும் கருவிகளுக்கு ஜப்பானில் நல்ல வரவேற்பு உள்ளது. இயற்கை ஆர்வலர்கள் சங்கம் இந்தப்புதிய கருவியை பிரபலமாக்க முழு அளவிலான முயற்சியை எடுத்துவருகிறது. இந்த புதிய கருவியில் காந்தச் சுருள், அலைவுகளை ஏற்படுத்துவதற்கான கருவி ஆகியவை உள்ளன. இந்த கருவியின் உள்ளே இயற்கைப் பூவும் வைக்கப்பட்டுள்ளது. மாறு திசை மின்னோட்டமான இரு திசை மின்னோட்டம் கருவியில் செலுத்தப்படுகின்றது. இவ்வாறு செலுத்தப்படும் மாறு திசை மின்னோட்டம் அதிவேகத்தில் அலைவுகளை ஏற்படுத்துகின்றது. அதிவேக அலைவுகள் காரணமாக இயற்கைப் பூக்களில் இருந்து ஒலி அலைகள் ஏற்படுகின்றன. இயற்கைப் பூக்களே மின்னோட்டத்தை ஒலி அலைகளாக மாற்றுகின்றன. இயற்கைச் சூழலில் இயற்கையின் அடிப்படையில் இதமாக இசையை ரசிக்கவிரும்பும் இசை ஆர்வலர்களுக்கு இந்தப்புதிய இசைக்கருவி சிறந்த வரப்பிரசாதமாக உள்ளது. தற்போது அரங்குகளில் சிறந்தமுறையில் கேட்புத் திறனை வடிவமைக்கவும் இயற்கைப்பொருட்களைப் பயன்படுத்துவதான ஆய்வு தொடர்கின்றது. சணல், தேங்காய் நார், தேங்காய் சிரட்டை, பனைஓலை ஆகியவற்றை அரங்குகளில் சுவர்களை கட்டும்போது பயன்படுத்தி நல்லமுறையில் ஒலி அமைப்பை ஏற்படுத்துவதற்கான ஆய்வுகள் தொடர்கின்றன.

---



# வாழைப்பழத் தோலை எறிந்து விடாதீர்கள்...!

வீணாகும் வாழைப் பழத்தோலில் இருந்து எதைல் அல்ககோலை தயாரிக்க முடியும் என்பதை இந்திய விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

தமிழகம் தாயனூரில் உள்ள வாழைப்பழ ஆய்விற்கான தேசிய மையத்தில் இந்த ஆய்வு நடைபெற்றது.

எதனோல் எனஅழைக்கப்படும் எதைல் அல்ககோல் இந்த ஆய்வில் வீணாகும் வாழைப்பழத்தோலில் இருந்து தயாரிக்கப்பட்டுள்ளது. உருவாகக்கப்பட்டுள்ள எதைல் அல்ககோல் நிறமற்ற திரவமாக இருக்கின்றது. மேலும், நீரில் கரையக்கூடிய இயல்பைப் பெற்றுள்ளது.

வாழைப்பழத் தோல்கள் இந்தமுறையில் முதலில் மென்மையாக்கப்பட்டு நன்றாக கூழாக்கப்படுகின்றன. பின்னர் இது புளிக்க வைக்கப்படுகிறது. இதில் உள்ள பெரிய குளுக்கோஸ் மூலக்கூறுகள் சிறிய மூலக் கூறுகளாக பகுக்கப்படுகின்றன. பின்பு நொதித்தல் வினைக்கு உட்படுத்தப்படுகின்றன.


இந்த நொதித்தல் வினையில் 'குளுக்கோஸ்' கரைசல் ஈஸ்ரில் உள்ள சைமேஸ் எனும் நொதியம் எதைல் அல்ககோல் ஆகவும் காபனீரொட்சைட்டாகவும் மாறுகின்றது.

சீனி ஆலைகளில் விணாகும் கழிவுப் பாகில் இருந்துதான் இது வரை எதைல் அல்ககோல் தயாரிக்கப் பட்டுவந்தது. இந்த முறையில் வீணாகும் கழிவுப் பாகு அடிப்படை மூலப்பொருளாக பயன்படுத்தப்படுவதால் செலவுகுறைவாக ஆகின்றது. ஆனால் இந்த முறையில் எதைல் அல்ககோல் தயாரிக்கப்படும்போது சுற்றுச்சூழல் அதிக அளவில் பாதிப்புக்கு உள்ளாகின்றது.

பீட்ரூட்டிலிருந்து எதைல் அல்ககோல் தயாரிக்கும் முறை ஐரோப்பிய நாடுகளில் புழக்கத்தில் உள்ளது. ஆனால் இந்தமுறையில் செலவு மிகுதியாக ஆகின்றது. வாழைப் பழத் தோலில் இருந்து எதைல் அல்ககோல் தயாரிக்கும்முறை ஆய்வகஅளவில் வெற்றிபெற்றுள்ளதால் இனி வர்த்தக ரீதியாக தொழிற்சாலைகள் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுவருகின்றது.

எதைல் அல்ககோல் அதிகளவில் தயாரிப்பதற்கு ஏற்ற வகையிலான வாழை ரகங்களையும் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.புதிய வாழை அனைத்து வகையிலான நோய் எதிர்ப்பு சக்தியை கொண்டுளளது. என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**குரலோன்**






# நீங்கள் சிற்பிதான்...

சோழ மன்னனின் அரசவை மண்டபம். அரியாசனத்தில் மன்னனை மன்னன். புடைசூழப் புலவர்களும் பொது விருந்தினர்களும் கணிகையரின் நடனம். நடுக்கம்பள விரிப்பில் பாஸ்கரன் நடந்து போனதை யாரும் பார்த்ததாய் இல்லை.

போர் நடந்துகொண்டிருக்கிறது. வேல்களும் வாள்களும் மோதி வீரத்தழும்பேந்தி வீழ்ந்துகொண்டிருக்கிறார்கள் வீரர்கள். பாஸ்கரனை யாரும் வெட்டி வீழ்த்துவதாய் இல்லை.

காலத்தை மறந்துபின் நோக்கிப்போய் சோழர் காலத்திலிருந்தான் பாஸ்கரன். காரணமாய் போனது மகாபலிபுரத்தின் சிற்பங்கள். கல்லில் வடித்த சிற்பங்களுக்குள் மெல்ல ஊடுருவி சோழர் காலத்தில் உலவிக் கொண்டிருந்தான்.

எப்படித் தேடிப்பிடித்தனர் இந்தக் கலையை. உள்ளே ஊடுருவி அந்தக் காலத்திற்கே அடிவைக்க என்ன அழகு, ஆச்சரியம், அனுபவம், அதிசயம்.

இந்தப் பிரபஞ்சத்திற்கு இறப்பே இல்லையா? காலம் நகர்ந்தபோதும், இன்று மறைந்து நாளை வந்தபோதும், நேற்று என்பது இன்றைக்கும் இருக்கிறதா? நாளைக்கும் இருக்குமா? அம்மா அப்பா பாட்டன் பூட்டி செத்துப்போனவர்கள் இன்னமும் இருக்கிறார்களா?

அப்படியென்றால் மனித மூளையில் இருந்து நினைவுகள் மறையும்வரை உலகம் இருக்குமா? சரித்திரம் இருக்குமா? மறையப்போகும் நினைவுகளை கற்களில செதுக்க முனைந்தார்களா? அதை நிறுத்திவைக்க கலைகளும் கையுதவி செய்ததா? செய்கின்றதா?

அந்த சிற்பங்களில் கூர்ந்து புகுந்து சிற்பியாய் சிலை வடித்துக்கொண்டிருந்தான் பாஸ்கரன். வெற்றிலை குதப்பியபடி கர்வங்கொண்ட சிற்பியாய்.

எல்லாமே சுற்றிச் சுழன்றது. யாரோ பிடரியில் அடித்திருக்கவேண்டும், திரும்பிப்பார்த்தான் கர்வமாய். யாரிவன், எங்கேயோ பார்த்திருக்கிறேனே குழம்பிப்போனது எல்லாமே.

"மன்னிக்கவேண்டும் இது எத்தனையாம் நூற்றாண்டு" முன்னால் நின்றவனைப் பார்த்துக்கேட்டான் பாஸ்கரன்.

'நீங்கள் பாஸ்கரன். இப்போது நீங்கள் இருபதாம் நூற்றாண்டின் கடைக்கூறில் இருக்கிறீங்கள். இந்த இடம் மகாபலிபுரம் இவைகள் சோழர் காலச் சிற்பங்கள். நீங்கள் இலங்கை யாழ்ப்பாணத்தில் இருந்து மாணவராய் இந்துக்கோவிலைப் பார்வையிட இங்கு வந்திருக்கிறீர்கள். நீங்கள் இன்னும் பார்க்கவேண்டிய இடங்கள் இன்னும் பலவிருக்கு. நீங்கள் இங்கே சிலைவடித்தது போதும். உங்களைப் பார்த்துக்கொண்டு மற்ற மாணவர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். சிற்பியே அருள்கூர்ந்து வந்தெமது வாகனத்தில் ஏறுவீரா என்றான் அவன் நண்பன் திலகன்.

இப்போதுதான் நினைவுக்கு வந்தான் பாஸ்கரன். சிற்பி என்கிறானா என்னை. இந்தச் சிற்பங்களை வடித்த சிற்பி நானென்றால், ஆ... கொஞ்ச நேரம் இந்தச் சிற்பங்களோடு இருக்க விடமாட்டேன் என்கிறானே. புறுபுறுத்தபடி எழும்பினான் பாஸ்கரன்.

தஞ்சைப்பெரிய கோவிலிலும் பாஸ்கரனைத் தேடித்திரிந்தான் திலகன். அந்தக் கோவிற் சுவர்களோடும் பேசிக்கொண்டிருந்தான் பாஸ்கரன். "நானும் ஒரு சிற்பியாகவேண்டும்" "தந்தேன் வரம் என்றது அந்த அழகுச் சுவர்" "எப்படி சிலை வடிப்பது?"

அது உனக்குள் இருக்கிறது நீதான் அதைச்செதுக்கப் போகிறாய்."

"எதை செதுக்குவது"

"உங்கள் வாழ்க்கையை உங்கள் வீரத்தை உங்கள் சரித்திரத்தை "என்றது அழகுச்சுவர்."

எல்லாவற்றிலும் ஆசை தான் பாஸ்கரனுக்கு. படிப்பிலும் தான். பட்டம்பெற்றும் என்ன புண்ணியம். அவனுக்கு பிடித்த வேலையே கிடைக்கவில்லை. ஆனால் அவனுக்கு பிடித்த காதலி மட்டும் கிடைத்துவிட்டாள்.

காலம் இப்போது பின்னுக்குப் போயிருந்தது. ஒரு நாள் இருந்த அத்தனையுமே இழந்து ஊர்விட்டுப்புறப்படவேண்டியதாயிற்று அகதியாய். அவர் படித்த படிப்பும், அவரது சிற்பிக்கனவும், அப்பாவுடன் பழகிய தச்சுத்தொழிலும், அவருடைய மனைவியும் மூன்று பிள்ளைகளும் மட்டுமே அவருடன் கூடவிருந்தன.

**முல்லை யேசுதாசன்**

இடப்பெயர்வு நீண்டதூரமில்லை. பழகிய ஊர், புதியகுடியிருப்பு, ஊர்போல வராதுதான். இருப்பதற்கும் ஆனமான இடமில்லை. ஒரு வீட்டின் பழைய சாமான்கள் போடும் பத்தியை அடைத்துக்கொண்டு ஒருவீடு. புதிய புதிய வேலைகள் தேடி அன்றாடம் சீவனம். ஆற அமர, கொஞ்சநேரம் தூங்கநேரமிருக்காது, எப்போதும் பம்பர், கெலி, வரும் என்கிற பயம். ஒவ்வொரு நாளும் இறந்தழியும் பொதுமக்கள். அந்தரமானவாழ்வு, அவருக்குள்ளுமிருந்தது.

போராளி ஜீவிதன் வீரச்சாவடைந்தது மனதை வெகுவாக உலுப்பிவிட்டிருந்தது பாஸ்கரண்ணனுக்கு. நேற்றுவரைக்கும் அவரோடும் அவர் குடும்பத்தோடும் நெருங்கியிருந்தவன். அவனை விதைப்பதற்கு அவரும் துயிலும் இல்லம் போனார்.

அவன் மேல் புலிக்கொடி போர்த்திருந்தது. ஈழத்தமிழர் கொடி இதுதானே, அதன் பரிமாணத்துள் புகுந்துகொண்டார். புலியின் கால்களில் ஏறி அதன் காதுகளை தடவிப்பார்த்தார். புலி ஒன்றுமே செய்யவில்லை அவரை. திரும்பிப் பார்த்து சிரித்தது. வா சிற்பியே என்றது. புலியின் பின்னாலுள்ள துப்பாக்கிகளை தடவிப்பார்த்தார். எத்தனை ரவைகள் இங்கே.

இரண்டிஞ்சிக் கனங் கொண்ட பலகை ஒன்றை அறுத்து வேலை செய்த பாஸ்கரண்ணனைக்கண்ட மனைவிக்கு, ஒரு சின்ன ஆறுதல், புதுவேலை ஒன்று செய்கிறார். இன்றைக்கு ஏதேனும் காசு வரப்போகுதென்று.

ஆனால் பின்நேரம் வரை



வேலை முடியவில்லை. "என்ன செய்கிறார் இவர். சைக்கிள் பெடல் கம்பிகளையும் தானே சரிசெய்த உளிகளையும் அந்தப் பலகையில் வைத்துஎன்ன தோண்டிக்கொண்டிருக்கிறார்.

மனைவி கிட்டப் போய் எட்டிப்பார்த்தும் கூட பாஸ்கரண்ணர் திரும்பிப்பார்க்கவில்லை வேலையில் மும்முரமாயிருந்தார். இரவு விளக்கு வெளிச்சத்திலும் வேலை. விடியற்காலையில் அந்தப்பலகையின் முன்னாலேயே படுத்திருந்தார் பாஸ்கரண்ணர். பலகையில் ஒரு சிற்பம். புலிபாய்ந்தபடி, பின்னால் துப்பாக்கிகளும், ரவைகளும் அப்படியே புலிக்கொடி போலவேயிருந்தது. வியந்துபோனாள் மனைவி. இவருக்குள் இவ்வளவு ஆற்றல் இருக்கிறதா? அவரை மெதுவாக எழுப்பினாள் தேனீரைக் கொடுத்தாள்.

அது அவருடைய முதற் சிற்பம். அதை எப்படி உருவாக்கினேன் என்று அவரே ஒருமுறை ஆச்சரியப்பட்டார். ஒரு துணியில் சுற்றிக்கொண்டு ஓடினார் தன் அன்பனுக்குக் காட்ட ஆனந்தப்படுவான் அன்பன். அவன் அப்படித்தான், இவரைப்போலத்தான் அவனும், அவனும் ஒரு சித்திரக்காரன் புகைப்படமில்லாத தன் தோழனின் உருவத்தை மனதில் நிறுத்தி காகிதத்தில் பதித்தவன். அவனுக்குத் தெரியும் சிற்பத்தின் தன்மை. சிலவேளை இதைக் கொடுத்து காசும் பறித்துவிடலாம், செலவுக்கும் உதவும். நினைத்தார்.

பாஸ்கரன் அண்ணர் வைத்திருந்த அந்தப் பொதியின் மேலேயே கண்ணிருந்தது அன்பனுக்கு, என்னவென்று கேட்டான். விரித்து வைத்தார். வியப்பு, பெரிய வியப்பு அன்பனுக்கு. "உங்களுக்கு சிற்பம் செதுக்க தெரியுமா" கேட்டான். "அது ஒரு சின்னப்பிரச்சினை" கொலரை தூக்கிவிட்டுக்கொண்டார் பாஸ்கரண்ணர். சிற்பங்கள் செதுக்குவது பற்றி அவருக்கு என்ன தெரியும். சும்மா கோவில்களில் பார்த்து ரசித்ததோடு சரி, செய்த புலிக் கொடிச் சிற்பத்திலும் எத்தனை இடங்களில் தட்டத்தெரியாமல் தட்டி பிழைபட்டது என்று அவருக்கு தெரியும்.

அண்ண அங்க மேல பாருங்கோ. இது என்னுடைய நண்பனுடைய படம். நான் தான் வரைஞ்சனான். இவன் என்னுடை உயிர். வீரச்சாவடைஞ்சிட்டான் இவனை உங்களால சிற்பமாய் செதுக்கித்தர முடியுமா? இப்ப இவனிட்ட ஏதாவது செலவுக்கு வாங்கிப்போடவேணும் என்பதுதான். அவருடைய இலக்கு. அதுக்கு என்ன சொல்லி சமாளிக்கிறது. சரி செதுக்கித் தாறன் என்று சொல்லுவம். இவன் எங்க இதையெல்லாம் நினைவுவச்சு கேக்கப்போறான் இப் போதைய என்ர பிரச்சினை முடிஞ்சால் சரி.

"அதுடாப்பா பெரியவேலை இல்ல. ஆனா நான் இருக்கிறதுக்கே ஒரு நலல இடம் இல்லை. வீட்டிலையும் சீவியத்துக்கு பெரிய கஷ்டம். இதுக்குள்ள என்னண்டடாப்பா சிற்பமெல்லாம் செய்துகொண்டிருக்கிறது அதுக்கொரு நல்ல வீடு. ஒரு தனிமையான இடம். மனசில எந்த யோசினையும் இருக்கக்கூடாதடாப்பா. இப்ப அதெல்லாம் சரிவராது பேந்து ஒரு நாளைக்கு செய்து தாறன்." சமாளித்தார்.

"சரி உங்களுக்கு ஒரு நல்ல வீடு வேணும் பலகைகள் எடுத்துத்தரோனும், வீட்டையும் கவனிக்கோணும், அவ்வளவு தானே" என்றான் அன்பன். அவன் இப்படிச்சொல்லுவான் என்று அவர் கனவிலும் நினைக்கேல்ல, "சரி இப்ப ஏதாவது செலவுக்கு தாடாப்பா" கொடுத்தான் அன்பன். வாங்கிக்கொண்டே சொல்லாமல் கொள்ளாமல் பறந்திட்டார் பாஸ்கரண்ணர். "இனி இஞ்சாலுப் பக்கம் வாறேல்ல."

நினைக்கவும் இல்லை எதிர்பார்க்கவும் இல்லை பாஸ்கரண்ணர். ஒரு நாள் மோட்டார் சைக்கிளில் வந்துகூப்பிட்ட இயக்கப்பெடியன் ஒருத்தன் கையில் திறப்புடன் நின்றுகொண்டிருந்தான்.

புரவி மீது இருந்து கீழிறங்கிய சேவகன், அரண்மனைத்திறப்பொன்றை பாஸ்கரன் அண்ணனிடம் நீட்டினான். "சிற்பியே தங்களுக்கு தரப்பட்ட அரண்மனையை' வந்து பார்வையிடுகிறீர்களா. பிடித்திருந்தால் ஏற்றுக்கொள்ளுங்கள் இல்லையேல் வேறு அரண்மனை ஒன்று ஒதுக்கித்தருகிறோம். இது தளபதியின் அன்புக்கட்டளை." எம் தமிழ் மன்னர்கள் கலைஞர்களையும் கவிஞர்களையும் எப்படி ஊக்குவித்திருக்கிறார்கள். பாடும் புலவர்க்கு பரிசுகள் தந்தும் சிலை வடிக்கும் சிற்பிக்கு உளியெடுத்துக்கொடுத்துப் பக்கத்தில் இருந்து வெற்றிலை மடித்துக் கொடுத்து பணிவிடைகள் செய்தும் "பாஸ்கரண்ணனை" அழைத்தவன் சொன்னான். "அண்ண உங்களிட்ட அன்பண்ண இந்தத் திறப்பை குடுக்கச் சொன்னவர் வீட்டப் பாக்கட்டாம் பிடிக்காவிட்டால் வேறவீடு பார்த்து தாறதாம். வீட்டைப்பாக்கிறியளே."

"என்ன பிரகண்டமடாப்பா இது. இவங்கள் என்னை பெரிய சிற்பாசாரி எண்டு நினைச்சுக் கொண்டிருக்கிறாங்கள். ஏதோ கஷ்டத்தில எனக்கு தெரிஞ்சதை செய்துகொண்டு போய் கொடுக்க இவங்கள் என்னை என்னண்டு நினைக்கிறாங்கள். வீட்டை வாங்கிப்போட்டு எனக்கு சிற்பம் செய்யத்தெரியாது என்று சொன்னால் நம்புவாங்களோ தெரியாது" "உண்மையை சொல்லுவம் என்று நினைத்தார்."தம்பி உண்மையா எனக்கு சிற்பம் செதுக்கத் தெரியாதடாப்பா.

"அவன் கெஞ்சினான் அண்ண என்னண்ண விளையாடிக் கொண்டு நிக்கிறியள் எனக்கு நிறைய வேலை கிடக்கண்ண." "எனக்கு உண்மையா தெரியாதடாப்பா"

"அண்ண உங்களுக்கு தெரியுமோ தெரியாதோ என்கிறது எனக்கு பிரச்சினையில்லை, உங்களுக்கு வீடிருக்கு போய் என்னண்டாலும் செய்யுங்கோ" "பிழைச்சுதெண்டாடாப்பா"

"ஒண்டு பிழைச்சா இன்னொண்டை செய்யுங்கோண்ண இப்ப ஏறுங்கோ" அவர் மோட்டார் சைக்கிளில் ஏறிவிட்டார்.

"ஒரு நல்ல வீடு கிடைக்கப்போகுது. பிள்ளைகளுக்கு நல்ல சாப்பாடு கிடைக்கப்போகுது. நான் இந்த வேலையை செய்தால் என்ன ஒன்று பிழைச்சா இன்னொண்டை செய்து பார்க்கிறது. முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார். செய்து பாப்பம்.

இருந்தாலும் மனது பயமுறுத்தியது "டேய் பேயா நீ எப்பாகிலும் எந்தச் சிற்பிக்காவது உளியாவது எடுத்துக்கொடுத்திருக்கிறியா? அல்லாட்டி ஆரும் சிற்பம் செதுக்கேக்க ஆகக்கூட அம்மி பொளியிற நேரமாவது அதை நின்று கவனிச்சிருக்கிறியா? மாட்டுப்பட்டுட்டாய் மரியாதை போகப் போகுது" வெருட்டியது.

(24ஆம் பக்கம் பார்க்க)




எதிரியே!
எங்கள் ஊர் பிடிக்கவா வந்தாய்?
இல்லை.
என்போன்ற பாவையரை
உன் காமப் பசிக்கு புசித்திட
வந்தாயோ!
எம்மையும் கேளாமல் எல்லைகடந்
தவனே!
உமக்காய் நாம் விரும்பித்தரப்போவ
தெல்லாம் ஒன்றுதான்!
அது உந்தன் மரணம்
எம்மைப் பொறுத்தவரை ஏகாதிபத்
தியத்திற்கான சிறந்த பரிசு!
உம்மைப் பொறுத்தவரை எம்மிடம்
கேட்காமல் அத்துமீறி எல்லை
கடந்ததிற்கான
அபராதம்!



# மண்ணில் கரைந்த காவியம்

**— க. மிரேசு —**

மேலே குறிக்கப்பட்டுள்ள அர்த்தம் மிகுந்த இந்த கவிதை வரிகள் 1991ஆம் ஆண்டு மட்டு நகரின் அடர்ந்த காடுகளுக்குள் அழியாவோடை எனும் இடத்தில் நடந்த சிறியதொரு கலை நிகழ்வில் வாசிக்கப்பட்டவை.

காடுகளே வாழ்க்கையாகிப் போன அந்த நாட்களின் காரிருள் சூழ்ந்த நாளொன்றின் இரவுப் பொழுது. காட்டின் பல பாகங்களில் மறைந்து தாக்குதல்களை செய்து வந்த அணிகள் அங்கே கூடியிருக்க, அணிகளுக்கு முன்னே இரண்டு கை விளக்குகள் எரிய அந்த வெளிச்சத்தில் மனதிற்குஇதமான ஒரு சிறிய நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது.

பல நிகழ்ச்சிகளிற்குப் பின் ஒரு பெண் போராளி முன்னே வருகிறாள். சிவந்தமுகம், தோற்றத்திற் களவான உயரம், எண்ணெய்யே காணாத அந்த தலைமயிர் நேர்த்தியாக இழுத்து கட்டப்பட்டிருக்கிறது. பல நாட்கள் ஒழுங்காக சாப்பிடாத களைப்பு முகத்தில் தெரிந்தாலும் அதை தன் மெல்லிய புன்னகையினால் மறைத்திட முயற்சித்தவளாய் சபையோருக்கு வணங்கி கவி பாடத் தொடங்கிவிட்டாள். தேன் தமிழாய் இனிமையான கவிபடைத்த அந்தப் போராளியை எல்லோரும் பாராட்டினார்கள். கவிவரிகளுக்காக பாராட்டைப் பெற்றவள், கள்த்திலும் பல தடவை தன் வீரமிகு செயல்களைக்காட்டி பாராட்டைப்பெற்றிருந்தாள்.

லெப்.விவேக்கா வித்தியாசமானவள். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இணையுமுன்பே போராட்டத்தை நேசித்தவள். தலைவரின் மேல் அபார விசுவாசமும், நம்பிக்கையும் கொண்டவள். போராளிகளின் தியாகத்தையும், அர்ப்பணிப்பையும் கேள்விப்படுவதோடு நின்றுவிடாமல் அதன் ஆழத்தை அலசி ஆராய்ந்து ஏனையவர்களிடம் பகிர்ந்து கொள்பவள்.

தமிழர் தாயக விடுதலையின் நியாயத்தை உணர்ந்துகொண்டவள். இந்திய ஏகாதிபத்திவாதிகளின் படையெடுப்பை அடியோடு வெறுத்தவள், எல்லாக்கொடுமைகளுக்கும் முடிவுகட்டப்படவேண்டுமென்றால் நாம் எல்லோரும் இயக்கத்தில் இணைந்துகொள்ளவேண்டும் என தனது பள்ளித்தோழிகளிடம் வாதிட்டவள், பல தடவைகள் இவளின் கருத்துக்கள் வெளியில் தெரியவந்து பாடசாலையிலும், சமூகத்திலும் பலரின் தண்டனைக்கு உள்ளான போதும், தனது அசைந்திடா இலட்சியப்பற்றோடு பல தடவை போராட்டத்தில் இணைய முற்பட்டபோதும், வயது குறைவு என்பதினால் திருப்பி அனுப்பப்பட்டாள்.

லெப்.விவேக்காவின் விடுதலைப்பயணத்திற்கான நேரமும் காலமும் வந்துவிட்டதை அறிந்தவள். இந்தியர் வெளியேறமுன்னரே 1990ஆம் ஆண்டு சனவரி மாதம் போராட்டத்தில் இணைந்துகொண்டாள். தனது ஊரான மட்டக்களப்பு வாழைச்சேனையில் வைத்து ஒரு போராளியுடன் தொடர்புகொண்டு சேர்ந்துகொண்டவள், ஆக்கிரமிப்பாளர்களின் கொடுமைகளை எதிர்க்கவென வேக முடன் பயிற்சியை முடிக்கத் திட்ட மிட்டாள். மட்டக்களப்பு முதலாவது மகளிர் முதலாவதுபயிற்சிப் பாசறையில் பயிற்சியை முடித்து வெளியேறி விட்டாள். லெப். விவேக்காவின் போராட்டத் துடிப்புக்கு பல காரணங்கள் இருந்தன.

இலங்கை, இந்திய நாசகாரப்படைகள் செய்த பல அட்டூழியங்களை கண்முன்னே கண்டவள் விவேக்கா, படுகொலைகள், அத்துமீறல்கள், பாலியல் பலாத்காரங்களை கண்டவளுக்கு இரத்தம் கொதித்தது. தன் கண்முன்னேயே தன் உறவினர்கள் பலர் துடி துடித்ததை கண்டவள். எனவேதான் போராட துணிந்துவிட்டாள்.

1990ஆம் ஆண்டு பிரேமதாசவின் சமாதானத் திரை கிழிந்து சண்டை மூண்டதும் போராளிகள் மட்டக்களப்பின் மேற்கேயுள்ள காடுகளுக்கு செல்லவேண்டியதாயிற்று. அதன் போதுதான் விவேக்காவின் பயிற்சிப் பாசறையும் முடிவுற்றிருந்தது.

ஆனால், லெப்.விவேக்காவிற்கு யூன் மாதம் நடந்த இரண்டாம் கட்ட ஈழப்போரிலே பங்குபற்றவில்லையே என்றகவலை. சண்டை, சண்டை என்றே நஞ்சரிப்பாள் என்று அவளது பொறுப்பாளர் ஜெயா எம்மிடம் பலமுறை சொன்னது இன்றும் ஞாபகமாக இருக்கிறது.

லெப்.விவேக்கா கேட்டுக் கொண்டது போலவே சண்டைக்கு அவளை அனுப்புவதென்று திட்டம் இருந்தாலும் காட்டு வாழ்க்கை மிகவும் நெருக்குவாரத்தை தரத் தொடங்கியது. முகாம்கள் அமைப்பது,உணவு, நீர், வெடிபொருள் என அனைத்தும் சீரற்றதாய் போய்விட திட்டமிட்ட சண்டைகளை தவிர்த்து காடுகளுக்குள்ளாகமுன்னேறிவருகின்ற எதிரியை மாத்திரம் தாக்கும் தந்திரோபாயத்தில் ஈடுபடுவதாயிருந்தது.

இதன் போதெல்லாம் எமது சிறிய, சிறிய பதுங்கித் தாக்கும் கெரிலா அணியோடு லெப் விவேக்காவும் இணைந்து கொண்டு சண்டைபிடித்ததுண்டு. அந்தப் போராளி தனது சக்திக்கு அப்பாற்பட்ட வேலைகளையும், சண்டையையும் செய்தது எம்மையெல்லாம் வியக்கச் செய்தது.

90ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் காடுகளை நோக்கி எதிரி ஒரு நகர்வை மேற்கொண்டான். ‘ஆறுநாள் நடவடிக்கை’ அதன் போது தரவையை கடக்கவிடாது சண்டை செய்யவேண்டியிருந்தது. அந்தச்சண்டையில் லெப்.விவேக்கா தனது எம்.70 துப்பாக்கியுடன் சண்டைபிடித்துக்கொண்டிருந்தாள். எதிரியை எப்படித் தாக்கவேண்டும் என அவளது பொறுப்பாளர் சொல்லச் சொல்ல வேகமாக சண்டை செய்து கொண்டிருந்தாள். தனது போர் அனுபவத்தை தானே பெற்றுக்கொள்ளும் துடிப்பு அவளிடம் இருந்ததை காண முடிந்தது. எமது பதுக்கித்தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாமல் எதிரி ஓட்டமெடுத்தான். அப்படி ஓடிய எதிரி கூட்டமொன்றை கண்டவள் பக்கத்திலிருந்த சக போராளியிடம் துப்பாக்கி எறிகணை ஒன்றை வாங்கி குறிபார்த்து அடித்தாள். இலக்கு சிறிது தவறிவிட்டாலும் எதிரிக்கு சிறு சேதம் ஏற்பட்டதற்கு அறிகுறியாய் ஒருவனை இழுத்தவாறே ஓடிக்கொண்டிருந்தார்கள்.

இதேபோன்றதொரு சண்டையில் 91ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் மட்டக்களப்பு எல்லைக்கிராமமான மண்ணம் பிட்டியில் இலங்கை இராணுவத்தின் சிறிய முகாம் ஒன்றைத்தாக்கவென பல நாட்கள் நடந்துசென்றுகொண்டிருந்த போது, அடர்ந்த காடுகளுக்குள்ளே செல்ல வேண்டியிருந்தது. நகரும்போது இடையிடையே தங்கிச் செல்லும் கட்டாயமும், ஏற்பட்டது. உணவிற்கும், நீரிற்கும் தட்டுப்பாடு வந்து விட்டது. மழை இடைஇடையே தன்னை ஞாபகப்படுத்தியதால் நனைந்துவிட்டதும் அல்லாது குளிர் வாட்டத்தொடங்கியது. இவற்றை யெல்லாம் அந்தச் சிறியவள் தாங்கிக்கொண்டாள் என்றால் அது அவளது விசுவாசமான விடுதலைப்பற்று. பெரியவர்களுக்கே சோர்வு வந்துவிட்டது. ஆனால் அவள் களம் செல்லவே துடித்தாள்.

விவேக்காவின் ஆசையின் படியே பல இடர்களை கடந்து சென்று மண்ணம்பிட்டி எதிரி முகாமை தாக்கிட சந்தர்ப்பம் கிடைத்தது. அந்தச்சண்டையில் ஆண்போராளிகள் அணி ஒன்றுடன் பெண் போராளிகளின் அணியும் சென்றது. அவர்கள் சென்ற பக்கம் எதிரிக்கு இழப்பு அதிகரித்தது உண்மைதான். அதற்கு காரணம் விவேக்கா எதிரியின் ஏ.கே ரக இயந்திரத் துப்பாக்கி ஒன்றை எடுத்து அவனுக்கே தாக்கியது என்பதை பெருமையாகச் சொன்னார்கள். பொறுப்பாளர்களான மாவீரன் லெப்.கேணல் ஜீவனும் விவேக்காவின் பொறுப்பாளர் சுரபியும்.

சண்டை முடிந்து திரும்பும் போது எதிரியின் துப்பாக்கியை மிக எடுப்பாக தனக்கே உரித்தான இளமை துடிதுடிப்புடன் தோளில் சுமந்து கொண்டுவந்தாள்.

லெப்.விவேக்கா இயல்பில் துடிதுடிப்பானவள் என்றாலும் ஓரளவு அமைதியானவளே, போராளிகளிடத்தில் பழகுவதிலிருந்து சண்டைக் களங்களில் எதிரியை எதிர்கொள்வது வரை விவேக்கா தனக்கே உரிய உயர்ந்த எண்ணங்களை வைத்திருந்தாள். எப்போதுமே அவள் தனது நிலையிலிருந்து மாறுபட முடியாதவளாய் இருந்தாள். ஆக்கிரமிப்பாளரை கொன்றொழிக்கவேண்டும் என்பதிலே குறியாய் இருந்தாள்.

(22ஆம் பக்கம் பார்க்க)





## கவிதைகள்

## மனிதர்களாக....

வானம் விரிந்த படி.....
பூமி பரந்தபடி.....
காற்று அணைக்கிறது.....
வா... வந்து என்னருகே
அமர்ந்துகொள்.
நீயும் நானும்
பேசிக்கொள்ளவேண்டும்.
என்னிடம்
அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு என்ற
நாலல்ல... நாலுக்கு மேலும்
உலகம் எதிர்பார்க்கும் எதுவும் என்னிடமில்லை.
கலப்படம் நிறைந்த உன்
இருதயப் போர்வையைக் கழற்றிவை
என் இறுக்கமான முகப்போர்வையை
நானும் கழற்றி வைக்கிறேன்.
எங்களுக்குள் ஆயிரம் நிலவுகளின்
குளிர்மை உண்டு.
பல்லாயிரம் சூரியன்களின்
வெளிச்சம் உண்டு
எரிமலைகளின் குமுறல்களும்
பௌர்ணமிநேரக் கடலின்
ஆர்ப்பரிப்பும் உண்டு.
எல்லாவற்றையும்... எல்லாவற்றையும்
நீயும் நானும்
பகிர்ந்துகொள்வோம்.
இறக்கைகளை இருவரும் இணைத்துக்
கொள்வோம்.
வலிகளையும் வேதனைகளையும்
வல்லமைகளையும் பரஸ்பரமாக்குவோம்.
புரிதலை இன்னும் ஆழப்படுத்துவோம்.
இது திருமணத்துக்கான ஒத்திகையல்ல...
நீயும் நானும் மனிதர்கள் என உணர்ந்து
கொள்வதற்கான
எல்லை கடப்பு...!

ஆதிலட்சுமி சிவகுமார்

## அணைந்த பின்னும் ஒளி கொடுக்கும் அதிசய தீபம்

திலீபன்
முகத்தின் முன் நின்று
சிரித்துக்கொண்டு
முதுகின் பின் நின்று
எம்மை
எரிக்க நினைத்தோரை
எதிர்த்து நின்ற
பெரும் போராளன்.

அமைதிப் படைமுன்
அமைதி கேட்டுத்
தன்னுள்
அனலேற்றித் துடித்த
ஒரு வரலாற்று
வீரன்.

பசியின் துணையோடு
சுதந்திரப் பசிக்கு
இரைதேடிப் பறந்த
ஒரு
விடுதலைப் பறவை.

வடிவங்கள்
மாறினாலும்
இலட்சியத்தில்
மாற்றமில்லை
என்ற கொள்கை
மாறாது
மறத்தலைவன்
வழிநடந்த
ஒரு அறத்தமிழன்.


இவன்
அகிம்சைக்கு
மகுடம் சூடிய
அற்புத வீரம்
அணைந்த பின்னும்
ஒளிகொடுக்கும்
அதிசய தீபம்.



செந்தோழன்

# இலக்கியப்பகிர்வு

# புயலை எதிர்க்கும் பூக்கள்



ஆதிலட்சுமி சிவகுமார் 1982இல் எழுத ஆரம்பித்த எங்கள் மண்ணின் சிறப்பான எழுத்தாளர். இதுவரை ''புயலை எதிர்க்கும் பூக்கள்'' என்ற சிறுகதை நூலையும் ''என் கவிதை'' என்ற கவிதை நூலையும் தந்தவர். பல்வேறு தொகுப்புக்களில் இவரது கதைகள் இடம்பெற்றுள்ளன.

1990இல் வெளியான இவரது ''புயலை எதிர்க்கும் பூக்கள்'' சிறுகதைத் தொகுப்பு அவரது முதலாவது தொகுப்பு. விரைவில் அவரது இரண்டாவது தொகுப்பினை எதிர்பார்க்கும் நிலையில் அவரது முதலாவது தொகுப்பினைப் பார்ப்போம்.

எழுத்தாளர்கள் தமது மனத்தை உறுத்தும் அல்லது கவரும் எல்லாவற்றையும் எழுத்திலே வடித்து விட முடியுமா? எழுத்தாளர் தான் நினைப்பதை எல்லாம் புலம்பித்தள்ளிவிட இயலுமா?

எழுதவேண்டும் என்று நினைப்பதில் தெரிவு செய்து மனத்தில் ஊறப்போட்டு அசைபோட்டு- தன்னளவில் திருப்திப்பட்டபிறகே அதனை எழுதுகின்றார்கள். அவ்வாறு எழுதப்பட்டவை எல்லாவற்றுக்கும் பத்திரிகைகளில், சஞ்சிகைகளில் களம் கிடைத்துவிடப் போவதில்லை.

எந்தவொரு எழுத்தாளனும் தான் எழுதும் எல்லாப் படைப்புக்களும் மிக நல்ல கலைப்படைப்பாக அமைந்துவிடும் என்று எதிர்பார்க்க முடியாது. நல்லகலைப் படைப்பு என்று உதாரணம் காட்டும் எழுத்தாளரின் வேறு ஒரு கலைப் படைப்பு மிக மிகச் சாதாரணமாக அமைந்திருப்பதைக் காணலாம்.

எனவே நூல்களை வெளியிடும் போது தரமான படைப்புக்களைத் தெரிவுசெய்தே வெளியிடுவது பொருத்தமானதாக இருக்கும். ஆனால் எத்தனை எழுத்தாளர்கள், இதில் அக்கறையுடன் உள்ளார்கள். எத்தினை எழுத்தாளர்கள் இதில் வெற்றிபெறப் போகின்றார்களோ தெரியாது.

இத்தகைய பின்னணியிலேயே ஆதிலட்சுமி சிவகுமார் அவர்களின் ''புயலை எதிர்க்கும் பூக்கள்'' சிறுகதைத் தொகுப்பினைப் பார்க்கவேண்டியுள்ளது.

பதின்மூன்று சிறுகதைகளை உள்ளடக்கிய 100 பக்கங்களை உடையது இந்த சிறுகதைத் தொகுப்பு.

இந்த பதின்மூன்று சிறுகதைகளின் கருக்கள் வழக்கமான கருக்கள்தான். இவை பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு எழுத்தாளர்களால் எழுதப்பட்டவைதான். புதிய அனுபவத்தினை, புதிய உணர்வினை இக்கதைகள் எமக்குத் தரப்போவதில்லை.

கலை இலக்கிய வடிவங்களை உருவாக்குதலில் தேர்ந்த திறன் பெற்ற கலைஞர்கள் சமூக அரசியல் துறைகளில் மிகவும் பிற்போக்காளராக இருக்கக்கூடும். அவர்கள் இலக்கியங்களில் உருவம் நேர்த்தியான விதத்திலும், உள்ளடக்கம் பிற்போக்கான தன்மையிலும் வெளிப்பட்டு முரண்படக்கூடும்.

ஆனால், சமூக அரசியல் துறைகளில் தீவிரமான ஈடுபாடும் கொண்டவர்களின் படைப்புக்களில் அவர்களை அறியாமலே அவர்கள் கருத்துக்கள் பிரச்சாரப் பாங்குடன் துருத்திக்கொண்டு தெரிவதுடன் உருவத்தையும் கெடுத்துவிடும்.

என்றாலும் இன்றைக்கு எமது எழுத்தாளர்கள் எங்கே நிற்கின்றார்கள்? எனது மண், எனது மொழி, எனது இனம் என்ற உணர்வு எத்தனை பேரிடம் முனைப்பாக உள்ளது. எத்தனைபேர் இவற்றுக்காக விசுவாசமாக உழைக்கமுற்படுகின்றார்கள்.

இந்த இடத்தில்தான் ஆதிலட்சுமிபோன்ற படைப்பாளர்களின் பங்கு முக்கியம் பெறுகின்றது.

1970ஆம் ஆண்டுக்கு முற்பட்ட எழுத்தாளர்கள் கவிஞர்கள், கலைஞர்களை எடுத்துக்கொண்டால் அவர்களுக்குப் பல பின்னணிகள் இருக்கும். அவர்கள் காலத்துக்குக் காலம் வெவ்வேறு கருத்துக் கொண்டவர்களாக, வெவ்வேறான அரசியல் கொள்கைகள், அமைப்புக்களுக்குப் பின்னால் நின்றவர்களாக இருப்பார்கள். அது காரணமாக அவர்கள் சுயமாக இல்லாமல் தமது மொழி, மண், இனம் என்பவற்றின் மீது நழுவல் பாங்கான தன்மையிலேயே பற்று வைத்திருந்தார்கள். அதனால் அவர்களைப் பற்றி விமர்சிக்க முனைபவர்களும் பச்சைக் காலம், நீலம் காலம் என்றும் முற்போக்கு, பிற்போக்கு, நடுப்போக்கு என்றும் அவரின் பின்னால் இவரின் பின்னால் நிற்பவர்கள் என்றும் குறிப்பிடுவது வழக்கமாக இருந்தது.

ஆனால் இப்போது உள்ளவர்களில் அநேகம் பேர் ஆதிலட்சுமி உட்பட இவ்வாறு குற்றஞ்சாட்ட முடியாது. காரணம் மாறாத வெளிப்படையான அரசியல் கருத்துக்களை உடையவர்கள்.

"எங்கடை சமுதாயத்துக்கு இப்ப எத்தனையோ தேவைகள் இருக்கு. நிகழ்காலச் சமுதாயம் இந்த தலைமுறையிட்டை அம்பிகாவதியையும், அமராவதியையும் எதிர்பார்க்கேல்லை. குற்றுயிரா இயங்கிக் கொண்டிருக்கிற தனக்கு புத்துயிர் அளிக்கக் கூடிய தியாகிகளைத்தான் எதிர்பாக்குது....."

"மரணம் ஒரு முடிவல்ல" என்ற சிறுகதையில் ஆதிலட்சுமி குறிப்பிடுவது கவனத்திற்குரியது.

பதின்மூன்று சிறுகதைகளிலும் பத்துச் சிறு கதைகள் ஈழநாடு, ஈழமுரசு, சிந்தாமணி, சஞ்சீவி போன்ற பத்திரிகைகளிலும் அமிர்த கங்கை சஞ்சிகையிலும் வெளியானவையே. ஏனையமூன்று சிறுகதைகளும் தொகுப்புக்காக எழுதப்பட்டு இருக்கவேண்டும்.

ஒரு கடமை கைலஞ்சம் கேட்கிறது. தண்டிக்கப்பட்ட மனச்சாட்சி, அவர்களுக்குப் பசி போன்ற சிறுகதைகள் ஏனைய கதைகளிலும் ஓரளவுக்கேனும் தனித்துவமானவை.

மரணம் ஒரு முடிவல்ல, நாணலும் திமிரும் தண்டிக்கப்பட்ட மனச்சாட்சி, பூஜிக்க முடியாத பொய் முகங்கள் தீயில் விழுந்த தணல், கருகும் மொட்டுகள் ஆகிய ஆறு சிறுகதைகளும் எமது மண்ணின் போராளிகள் அவர்களின் போராட்டங்களை பற்றி பேசுகின்றன.

"தோற்றுப்போன மனிதாபிமானம்" கதையின் மரபை மீறமுடியாத அக்காவையும் மீறமுனையும் தங்கையையும் காட்டுகின்றார் ஆதிலட்சுமி,

வாழ்க்கைச் சூழ்நிலைகளால், வாழ்க்கையை எதிர்க்க முடியாமல் ஒத்தோடி எதிர்நீச்சல் போட முனையும் பெண்ணை ''இருளில் ஓர் நிலவு'' என்னும் சிறுகதையில் காட்டுகின்றார்.

இக் கதையின் இறுதிவரிகளாக சொல்லப்படும் "சோகத்தால் இருளடைந்து போயிருந்த ஒரு இளைஞனின் இதயத்தில் நிலவாகப் பிரசவித்து வாழ்க்கைப் பாதையில் ஒளியை வழங்க அவள் இதயம் துடித்துக்கொண்டிருந்தது." "என்று கூறப்படுவதன் அர்த்தம் என்ன வென்று புரிந்துகொள்ள முடியவில்லை.

அவருக்கு வயது நாற்பது. அவள் தமயனுக்கும் அவளுக்கு வரப்போகும் மாப்பிள்ளைக்கும் கூட அவளை விட அதிகம் தான். பிறகு எந்த இளைஞனை ஆதிலட்சுமி குறிப்பிடுகின்றார்.

இக் கதையின் தலைப்புக் கூட இக்கதையின் கருத்துக்கு ஊறு செய்வதுபோல உள்ளது.

''இலட்சியத்துணை'' என்னும் சிறுகதையில் "நந்தன்" புரட்சி செய்த பின்னரே அதைப் பார்த்த கதையின் நாயகி காதலினால் புரட்சிகரமான ஒரு முடிவினை எடுக்கமுடிகின்றது.

மரபுகளை மீற முடியாதவர்களாக சோகங்களை, வேதனைகளை, ஏற்றுக்கொள்ளுபவர்களாக பெரும்பாலான (எல்லோரும் அல்ல) பெண் பாத்திரங்கள் அமைந்துள்ளன.

ஒருகடமை கைலஞ்சம் கேட்கிறது. அவர்களுக்குப் பசி குடிசைக்குள் சில கோபுரங்கள் எமது சமுதாயத்தின் நிலைமையினை எடுத்துக்காட்டுகின்றன.

"இரண்டு மாதங்களுக்கு முந்தி எழுதிவைத்த கலியாணம் குழம்பிப்போன விரக்தியில் பொலி விழந்து போயிருக்கும் மூத்தக்கா.... படிக்கப் போறன் என்ற போர்வையில் ரவுணுக்குப் போய் வேறொருத்தனைக் காதலித்து இப்ப அவன் கேட்கிற சீதனத்தைக் குடுக்கவக்கில்லாமல் அவனையும் மறக்க மனமில்லாமல் தத்தளிக்கிற சின்னக்கா பதினேழு வயதில் படிப்பைப் பாதியில விட்டுட்டு மாயமாய் மறைந்துபோன தங்கச்சி, வெளிநாட்டு முகவர் நிலையத்தில முப்பதாயிரம் கட்டிவிட்டு ஆறு மாதமாக அலைந்து திரியும் இவன் நாட்டு நிலைமையால ஏற்பட்டுப் போனகை வறட்சி, இத்தனையும் போதாதென்று வாய்க்கு. வாய்ச்சபடி நொட்டை நொடி சொல்லுற அக்கம் பக்கத்துச் சனங்கள்...." என்று இந்த சமுதாயத்தில் உள்ள ஒரு குடும்பத்தின் உண்மை நிலையை தண்டிக்கப்பட்ட மனச்சாட்சி கதையில் குறிப்பிடுகின்றார்.

"அப்பாவுக்காக அவள் தாலியை மட்டும் கழற்றிவிடவில்லை. தன்னுடைய கலகலப்பு, சந்தோஷம், புன்னகை எல்லாவற்றையுமே கழற்றிவிட்டுச் சோகத்தைச் சூடிகொண்டாள்"

என்பதும் ஆதிலட்சுமியின் எழுத்தாற்றலுக்கு ஒரு சான்றாகும்.

இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்




# வவுனிக்குளத்தின் கீழ் புதையுண்ட பாலிநகரம்

**வவுனிக்குளத்தில் உள்ள சிவன்கோவிலில் இருக்கும் சிவலிங்கம் ஒன்று அகழ்வின்போது எடுக்கப்பட்டது. அது சோழர் கால பண்பாட்டம்சங்களைகொண்டிருக்கிறது. இப்படியாக ஏராளமான தொல்பொருட்கள் கட்டுமானங்கள் இப்போதும் வவுனிக்குளத்தின் கீழ் புதையுண்டு கிடக்கின்றன. பாலி நகரம் வவுனிக்குளத்தின் கீழ் புதையுண்டுள்ளது.**

வவுனிக்குளம்-முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பகுதியில் உள்ள வன்னியின் மிகப் பெரிய நீர்த்தேக்கங்களில் ஒன்று.

இது இப்போது நீங்கள் பார்க்கின்ற இராட்சத வவுனிக்குளத்தை பற்றியல்ல. இதற்கு முன்பாக இருந்த வவுனிக்குளத்தையும்- பாலிநகர் பற்றியும் பார்க்கப் போகிறோம்.

2000 ஆண்டுகளுக்கு முன் அனுராதபுரத்தை மையமாகக்கொண்டு ஆட்சி செய்ததாகக் கூறப்படும் தமிழ் ஆட்சியாளர் எல்லாளன் கட்டியதாக கூறப்படும் குளங்களில் ஒன்றாக கருதப்படுவது வவுனிக்குளம்.

சிங்களவர்களின் பண்டை நூலான மகாவம்சத்தில் இதனை பெலிவாவி (பாலிவாவி) எனக்கூறப்படுகிறது. அனுராதபுரத்திலிருந்து அது இருப்பதாக மகாவம்சத்தில் குறிப்பிடும் இட அமைவு பெலிவாவி- வவுனிக்குளத்தையே அடையாளப்படுத்துகின்றது. பெலிவாவி பாலி ஆறை மறித்துக் கட்டப்பட்டது. பாலி ஆறை மறித்துக்கட்டப்பட்டதால் அது பெலிவாவி அல்லது பாலிவாவி ஆனது. இந்தப்பாலி ஆறு படுகையிலிருந்து **Flax Flawer** என்ற வகை மாணிக்கக் கற்கள் எடுக்கப் பட்டு அனுராதபுரத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டதாகவும் தொல் நூல் குறிப்புகள் உண்டு.

இன்றைக்கு வவுனிக்குள பிரதேசம் தொல் பொருட்களின் மையமாக உள்ளது. பெரும் - பெரும் புத்தர்சிலைகள் உள்ளிட்ட பௌத்த சின்னங்களும் சைவ சின்னங்களும் தொல்பொருட்களாக கிடக்கின்ற பௌத்தம் என்றதும் அது சிங்கள மையம் என்ற முடிவை எடுத்துவிடக்கூடாது. இலங்கையில் முதலில் பௌத்தம் தமிழரிடையேதான் நிலைபெற்றிருந்தது. இத்தகைய தொல்லியல் மையமான வவுனிக்குளப் பகுதியில் பாலிநகரம் (இன்றுள்ள பாலிநகர் அல்ல) என்ற நகரம் இருந்ததாக மகாவம்சம் குறிப்பிடுகிறது.

வவுனிக்குளத்தில் உள்ள சிவன்கோவிலில் இருக்கும் சிவலிங்கம் ஒன்று அகழ்வின்போது எடுக்கப்பட்டது அது சோழர் கால பண்பாட்டம்சங்களைக்கொண்டிருக்கிறது.



இப்படியாக ஏராளமான தொல்பொருட்கள் கட்டுமானங்கள் இப்போதும் வவுனிக்குளத்தின் கீழ் புதையுண்டு கிடக்கின்றன. பாலிநகரம் வவுனிக்குளத்தின் கீழ் புதையுண்டுள்ளது. எல்லாளன் காலப்படி- இது 2300 ஆண்டுகளுக்கு முற்பட்டது.

இப்பொழுது நாங்கள் 18 ஆம் நூற்றாண்டு காலத்துக்கு வருகிறோம்.

வன்னிப் பகுதியில் நீர்ப்பாசன கட்டுமானங்களை மேற்கொள்வதற்கான தேடல்களில் பிரிட்டிஷ் பொறியியலாளர்கள் காடுகளில் அலைந்து திரிந்தனர். இந்த பொறியியலாளர்களில் ஒருவரான **C.F.S** பேக்கர் என்பவர் இன்றுள்ள வவுனிக்குளப்பகுதியில் காடடர்ந்த நிலையில் உடைப்பெடுத்த அணைக்கட்டு ஒன்றை கண்டுபிடித்தார்.

அதனை அவர் அளவு செய்தார் அவர் செய்த அளவை முடிவுகளின் படி அந்தக்குளம் 1975 ஏக்கர் பரப்பில் விரிந்துகிடந்தது. நீர்கொள்ளளவு 596கன அடி அதன் அருகே அழிவடைந்த நிலையில் ஒரு நகர கட்டுமானம் புதையுண்டு கிடந்ததையும் அவர் ப்திவுசெய்துள்ளார்.

இத்தகைய கொள்ளளவு உடைய குளத்துடன் இப்பகுதி ஒரு வளமான நகராக இருந்திருக்க வேண்டுமென அவா குறிப்பிடுகிறார். மிக நீளமாக 13,350 அடி அல்லது இரண்டரை மைல் நீளமாக அந்த அணை நீளமாக இருந்ததெனில் அதன் கட்டுமானப்பெறுமதியை விளங் கிக்கொள்ளலாம்.


5இடங்களில் அந்த அணை உடைப்பெடுத்துக் காணப்பட்டது. பல நூற்றாண்டுகளுக்கு முன்பதாக அது உடைப்பெடுத்திருக்கவேண்டும் என்பதை அங்கிருந்த காட்டினை வைத்து பேக்கர் கணிப்பிட்டிருந்தார். ஐந்து உடைப்புக்களும் ஒரேதடவையில் நிகழ்ந்திருக்கவேண்டும் என்பது அவரின் முடிவு.

1897 நெடுங்கேணியில் இருந்த ஒரு பிரிட்டிஷ் மருத்துவ அதிகாரியின் பதிவின்படி 1897 டிசம்பரில் பெரும் புயல் வீசி 24 மணிநேரம் தொடர்மழை பெய்துள்ளது. அன்றைய மழையளவு 35 அங்குலம் இப்படியான பெரும் மழை ஒன்றின் போதே வவுனிக்குளம் உடைப்பெடுத்திருக்கவேண்டும் என்பது அடுத்தகட்ட ஆய்வில் ஈடுபட்ட பிரிட்டிஷ் நீர்ப்பாசனப் பொறியியலாளர் **H.**பாக்கர் குறிப்பிடுகிறார். இவர் ஒரு நீர்ப்பாசன பொறியியலாளர் என்பதுடன் ஒரு தொல்லியல் ஆய்வாளரும்கூட. இவர் வவுனிக்குளத்தை ஒரு நீர்ப்பாசனக்குளமாக மட்டும் பார்க்காமல் அதன் தொன்மைத் தன்மையையும் பார்த்தார்.

வவுனிக்குள தொல்லியல் மையம் இதுவரை முறையான மேலாய்வுகள் கூட நடக்கவில்லை. வளமிகு பாலி ஆறின் -பாலி வாவியின் மையத்தில் இருந்த பாலிநகரம் புதைவிலிருந்து வெளிப்படச்செய்யப்பட வேண்டும்.

**த.அருவி**

---




# தண்ணீரில் ஒளிந்திருக்கும் நோய்கள்

தண்ணீரில் பதுங்கி இருக்கும் நோய்கள் பல உண்டு கொலரா, காஸ்ட்ரோ என்ரெரைட்டி டைபாயிட், அமிபியாசிஸ், போலியோ, ஹைப் படைட்டிஸ் - ஏ போன்ற பல நோய்களுக்கு மூல காரணமான கிருமிகள் தண்ணீரில் இருக்கின்றன.

வருடந்தோறும் நாட்டின் ஏதாவது மூலையில் தலைகாட்டி. மக்களை கொன்றுகுவித்துவிட்டு செல்வது கொலரா. சுத்தமான நீர் கிடைக்காதபோது அசுத்தமான நீரை பருகுகிறாா்கள். அதுவே 'கொலரா' வரமுக்கிய காரணம். அசுத்தமான நீரில் காய்கறி, பச்சை இறைச்சி போன்ற எதனையாவது கழுவி சாப்பிட்டாலும் இந்நோய் வரும். கவனமாக இருந்தாலே இந்நோய் வருவதை தவிர்த்து விடலாம்.

கொலரா நோய் திடீரென்று தாக்கும். அப்போது நோயாளியின் உடலில் உள்ள தண்ணீர் சத்து இழப்பு ஏற்படும், தண்ணீர் மற்றும் தாதுச் சத்துக்களை செய்ய வேண்டும் என்பதே முக்கியமான முதல் சிகிச்சை.

பலவகை நோய்க்கிருமிகளின் தாக்குதலால், வயிற்றுப் போக்கும் ஏற்படும். கொலராவைப் போல காஸ்ட்ரோ என்டிரைட்டீஸ் நோய் பாதிக்கும்போது உடலில் இருக்கிற சக்தி நிறைந்த தண்ணீர் சத்தே இழப்பாக்கப்படுகிறது.அதுதான் மரணத்துக்கும் காரணமாகிவிடுகின்றது. டைபாயிட்டும் அசுத்த நீரால் ஏற்படும் நோய்தான்.

அமீபிபாசிஸ், ஜியார்டியா போன்ற நோய்களும் அசுத்த நீரால் தோன்றுகிறது. இரத்தமும், சளியும் கலந்த வயிற்றுப்போக்கு இதன் அறிகுறியாகும். குழந்தைக்கு ஏற்படும் பூச்சிக்கடி தொல்லைக்கும் அசுத்த நீரொரு காரணம். இதன்மூலம் வயிற்றில் உருவாகும் கிருமிகள் குழந்தை உண்ணும் உணவில் உள்ள சத்துக்கள் அனைத்தையும் எடுத்துவிடும். இதனால் குழந்தை ஆரோக்கியம் இல்லாதவர்களாக வளர்வார்கள். வைரஸ் கிருமி மூலம் இந்த நோய் தொற்றும். தண்ணீரில் இருக்கும் மோசமான இரசாயனங்கள் மூலம் இந்தத் தொல்லைகள் தோன்றும்.

இந்த நோய்கள் வராமல் இருக்க என்னசெய்யவேண்டும்.

01)சுத்தமான நீரை மட்டும் பருகுங்கள். குடிப்பது, உணவு சமைப்பது, பாத்திரம் கழுவுவது போன்றவைகளுக்கு எல்லாம் சுத்தமான தண்ணீரை பயன்படுத்துங்கள். கொதிக்க வைத்து ஆறிய தண்ணீரை பருகுவதே சிறந்தது.

02)சமைக்காமல் பச்சையாக உண்ணும் காய்கறிகளை கொதித்த நீரில் கழுவிவிட்டுச்சாப்பிடுங்கள்.

03)'ஐஸ்' சில் நோய்க்கிருமிகள் ஆறு வாரங்கள்வரை உயிர்வாழும் 'ஐஸ்' தயாரிப்பில்.

04)கடைகளில், சாலையோரங்களில் ஜூஸ், சர்பத் எலுமிச்சைச்சாறு போன்றவைகளைப் பருகுவீர்கள். அவைகளுக்கு பெரும்பாலும் சுத்தமான தண்ணீர் பயன்படுத்தப்படுவதில்லை.

---

# மூக்கில் இரத்தம் வருதல்...

மூக்கில் பல காரணங்களினால் இரத்தம் வரும் வாய்ப்புண்டு. மிகவும் சாதாரணமாக அடிபடுவதால் இரத்தம் வருகிறது இதைத்தவிர அதிக அளவில் மூக்கினுள் கட்டி இருந்தால் இரத்தம் வரவாய்ப்புண்டு. மேலும் வயதானவர்களுக்கு இரத்தக் கொதிப்பு அதிகமாக இருக்கும் பொழுது இரத்தக்குழாய் உடைந்து அதிக அளவில் இரத்தம் வர வாய்ப்புண்டு 12 வயதிலிருந்து 20 வயது வரை உள்ள ஆண் சிறுவர்கட்கு மட்டும் TMA என்னும் இரத்தக் கட்டி ஒன்று மூக்கின் பின்புறம் இருந்து புறப்படும். இதில் திடீர் என்று அளவுக்கு அதிகமாக இரத்தப் போக்கு ஏற்படும். 1முதல் 1.5 லீட்டர் அளவுள்ள இரத்தம் கூட ஒரேநேரத்தில் கொட்டக் கூடிய வாய்ப்புள்ளது. இதற்கு உடனே அறுவைச் சிகிச்சை செய்து இக் கட்டியை உடனே அகற்றவேண்டும்.இந்தக்கட்டி பெண் குழந்தைகளுக்கு வரவே வராது.

---

# இரத்த அழுத்த நோயாளிகளுக்கு சில ஆலோசனைகள்

உங்கள் எடையில் கவனம் செலுத்துங்கள் அதிக எடைக்கும் உயர் இரத்த அழுக்கத்திற்கும் நிறையத் தொடர்பு உண்டு. அதிக எடை உள்ளவராயின் எடையைக்குறைக்க முயற்சிசெய்யுங்கள். சீனி, சர்க்கரை, சொக்கிளட், ஐஸ்கிரீம் போன்ற இனிப்புப் பொருட்களையும், எண்ணெய், நெய், பட்டர் போன்ற கொழுப்புப் பொருட்களையும், பொரித்த உணவு வகைகளையும் குறைப்பதன் மூலமும் அல்லது தவிர்ப்பதன் மூலமும் போதிய உடற்பயிற்சி செய்வதன் மூலமும் உங்கள் எடையைக் குறைக்கலாம்.

புகைத்தலை முற்றாகத் தவிர்க்கவேண்டும். புகைத்தல் இரத்த அழுக்கத்தை உயர்த்துவதுடன் மாரடைப்பு நோயையும் வரவழைக்கும்.

மதுபானம் அருந்துவதைத் தவிருங்கள். இது உங்கள் இரத்த அழுக்கத்தைக் குறைக்கும். அத்துடன் உங்கள் எடைகுறையவும் உதவும்.

உணவில் உப்பை இயலுமானவரை குறையுங்கள். ஆனால் உப்பில்லாப்பத்தியம் அவசியமல்ல, அதிக உப்புச்சேர்ந்த உணவுவகைகளான கருவாடு, ஊறுகாய், அச்சாறு, மோர்மிளகாய் வத்தல்கள், சோஸ்(sauce), சீஸ்(Cheee), உப்புச்சேர்ந்த பட்டர், மாஜரீன் போன்றவற்றைத்தவிருங்கள்.



# இளைய நாதம்

## பெற்ற பாசம்

மண்ணில் வந்த உயிரை எல்லாம்
எண்ணி முடியுமா?
விண்ணில் பூக்கும் வெள்ளி எல்லாம்
எண்ணல் முடியுமா?
ஆறு கடலின் மணலை எல்லாம்
அளந்து தீருமா
மாறும் மேக வடிவம் யாவும்
வரைந்து தீருமா
விந்தை ஈசன் பெருமை முற்றாய்
விளங்கல் கூடுமா
தந்தை தாயின் அன்பை எல்லாம்
சாற்ற முடியுமா?

## சொற்சிலம்பம் - 54

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| யா | ர் | ஜ | நூ | ற | ஏ | டு |
| கி | கா | நி | ர் | கெள | சி | த் |
| அ | ங் | ல் | ஆ | பி | எ | ட் |
| ழ் | றீ | சீ | வ | உ | லி | யா |
| ண | ஆ | ம் | த் | ம | க | த |
| க் | கை | க | இ | ப் | ம் | தே |
| ணை | பூ | வ | ஓ | ச | வி | னை |

கட்டங்களில் காணப் படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் -52 இன் விடைகள்

01. புத்தளம்

02. ஆனையிறவு

### சொற்சிலம்பம் - 52 இன் பரிசுக்குரியவர்

வை.கோகுலதரனி,
தரம் -6D,
ஹாட்லிக்கல்லூரி,
பருத்தித்துறை.

### சொற்சிலம்பம் - 52 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. ந.கோகுலன், நெல்லியான் வீதி, சுழிபுரம்.
02. த.சுஜிதா, தரம்-3, மு/ஆனந்தபுரம்-,அரசினர் தமிழ் கலவன் பாடசாலை.
03. வை.சுரேகா, தரம்-6, இல.69 சிவநகர், உருத்திரபுரம்.
04. த.நிர்மலன், கோவில்புதுக்குளம், வவுனியா.
05. வ.கிசோபன், தரம்-2, வ/இறம்பைக்குளம், ம.ம.வி.வவுனியா.
06. இ.தனுஜிகா, தரம்-03, கிளி.இராமநாதபுரம்-மகாவித்தியாலயம்.
07. ஹா.மு.அப்ரஸ், மு.ம.ம.வி, மன்/எருக்கலம்பிட்டி.
08. பொ.மொழிச்செல்வம், மு/வள்ளிபுனம்/க/உ/வி புதுக்குடியிருப்பு.

01. விபுலானந்த அடிகள் இயற்றிய சிறந்த நூல்?
01) ........................................

02. ஞாபக சக்தி கூடிய விலங்கு?
01) ........................................

பெயர் :- ........................................

முகவரி :-........................................

........................................

*சொற்சிலம்பம் -54*
*ஈழநாதம்,*
*யாழ் சாலை,*
*கிளிநொச்சி.*

# எமது முள்ளம் பன்றி


வரண்ட எமது வன்னிக் காடுகளில் ஒரு தடவை அலைந்து பார்த்தால் கறுப்பு வெள்ளை வண்ணங்கள்கொண்ட ஒரு சாண் அளவு நீள முட்களை கண்டெடுக்கலாம். அந்த முட்கள் ஒரு விலங்குக்கு உரியவை.

அது என்னவென்று உங்களுக்குத்தெரியுமா. அது தான் முள்ளம்பன்றி.

ஆங்கிலத்தில் பொக்குபைன் (PORCUPINE)என்றழைக்கப்படுகிது எங்கள் பகுதிகளில் வரண்ட காடுகள்-அதன் ஓர பயிர்செய்கை நிலங்களில், வீடுகளில் வளவு ஓரங்களில் முள்ளம் பன்றியை நாங்கள் காணலாம். பகலில் அல்ல இரவில். கிழங்குகள் இதன் பிரிய உணவு என்பதால் இவை பயிர்நிலங்களுக்கு-வீடுகளுக்கு அருகில் வரும். நாம் கொட்டும் உணவுகளை உண்ணவும் இவை காடுகளில் இருந்து வெளிப்பட்டு இரவில் வரும். ஒரு நாள் விளக்கை அதனை நோக்கி பிடித்த போது அது அசையாமல் நேரே பார்த்தபடி நின்றன. இது முள்ளம் பன்றியை நேரே நமது பகுதியில் பார்த்த அனுபவம். குறை ஒளியில் பார்க்கும் ஆற்றல் கொண்ட கண்களில் பிரகாசமான ஒளிகொடுத்தபோது பார்வை அதிர்ச்சியால், அதனால் நகர முடியவில்லை. அதிகம் இரவு பார்வை விலங்குகளுக்கு இந்த சிக்கல் இருக்கிறது.

முள்ளம்பன்றி ஒளியை கண்டதும் அசையாது இருந்த அதேவேளை தன் முட்களை சிலிர்த்துநிமிர்த்திவிட்டு தற்காப்புடனும் நின்றது. இந்த முள்ளுகள் அதற்கு தற்காப்பு கவசம். முள்ளின் கூர்ப்பகுதி வெள்ளை கலந்த பழுப்பாகவும் கீழ்ப்பகுதி கறுப்பாகவும் இருக்கும். சாதாரண முள்ளம்பன்றி எந்தநேரமும் சிலிர்த்திருப்பதில்லை. ஆபத்து ஏற்படும் வேளையிலேயே முட்களை அது சிலிர்த்து நிமிர்த்தும். சிலிர்த்தால் அதன்நிறம் வெள்ளை போலவும் -முட்களை மடக்கும் போது கறுப்புப்போலவும் அது தெரியும். முள்ளம் பன்றிகள் தரையில் குழிதோண்டி அந்த வளையில்தான் தங்கிவாழும். மிக ஆழமாக முள்ளம் பன்றிகளின் வளைகள் இருக்கும். முள்ளம் பன்றி குட்டி ஈனும். குட்டியில் முட்கள் வெறுமனே முடிமாதிரி மெதுமையாக இருக்கும். அது வளரவளர முடிகள் முட்களாக தடித்து வலிமையாகும். உண்மையில் முட்கள் அதன் முடிகள்தான்.

கொறிவிலங்கு வகையான இது மான்-மாடுகளின் எலும்புகள் கொம்புகளையும் கொறித்துண்ணும்.



ஒரு முள்ளம்பன்றி முதிர்ந்தநிலையில் 20 கிலோ நிறைக்கு வரும் முள்ளுகள் 7 அங்குலம்வரை நீளமாக இருக்கும். முள்ளம்பன்றி முட்களை கழற்றி எதிரிமீது எய்வது என்றகதை இருக்கு. ஆனால் அது பொய் அப்படி இல்லை. அது ஆபத்தான நிலையில் முட்களை சிலிர்த்தபடி எதிரிமீது பாய்ந்து அது தாக்கும். அதன் முட்கள் குத்தி விலங்குகள் இறந்துள்ளன. முள்ளம் பன்றியின் கொழுப்பு இறைச்சியில் சிறுத்தைக்கு நல்ல விருப்பம் உண்டு. எமது வேட்டைக் காரரும் முள்ளம் பன்றி இறைச்சி திறம் என்கின்றார்கள்.


ஆனால் முள்ளம்பன்றி அருகிவரும் விலங்கு, அதனை நாம் அழிக்கக்கூடாது.

முள்ளம் பன்றியின் மொத்த நீளம் 92 சென்ரிமீற்றர்கள், ஆணை விட பெண் அளவில் சிறியது.

இதன் உயிரியல் பெயர்- Hystrix indica

# எலியாரின் வண்டில்

## பகுதி-04



# கிளிநொச்சியில் நடைபெற்ற ஆசிரிய வாண்மை விருத்தித்தின நிகழ்வு

வடக்கு கிழக்கு மாகாண ஆசிரிய மத்திய நிலையங்கள் 25-உம் இணைந்து 06 தொகுதிகளாக வடக்கு கிழக்கு கல்வி வலயங்களில் நடத்திவரும் ஆசிரிய வாண்மை விருத்தித்தின நிகழ்வுகள் 01ஆம் கட்டமாக யாழ்ப்பாணத்திலும் 02ஆம் கட்டமாக மட்டக்களப்பிலும் நடைபெற்று, 03ஆம் கட்டமாக10,11-09-2004 ஆகிய இரு தினங்களும் கிளி/கிளிநொச்சி ம.வி.மண்டபத்தில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.ப.அரியரத்தினம் அவர்கள் தலைமையில் வெகு சிறப்பாக நடந்தேறியுள்ளது.

நிகழ்விற்கு தலைமை தாங்கிய கல்விப்பணிப்பாளர் திரு.ப. அரியரத்தினம் அவர்கள் பேசுகையில், வன்னி வலயங்களின் க்ல்வி நிலை ஏனைய மாவட்டங்களோடு ஒப்பிடுகையில் மேலோங்கிருப்பதற்கு தமிழீழ கல்விக்கழகத்தின் கணிசமான பங்களிப்பே காரணமென்றும், யுத்தத்தினால் சிதையுண்டுபோன கல்வியை இப்பிரதேசங்களில் கட்டியெழுப்புவதற்கு தொண்டர் ஆசிரியர்களினதும் ஏனைய ஆசிரியர்களதும் அர்ப்பணிப்புடன் கூடிய செயற்பாடே காரணமெனக் குறிப்பிட்டார். அறிவியல் வளர்ச்சியில் எமது கல்விவலயங்கள் வடகிழக்கில் 10 வருடங்கள் பின்னும், இலங்கைத்தீவில் 25வருடங்கள் பின்னும் நிற்கின்றன. இவ்வாறான செயலமர்வுகள்மூலம் பெறுகின்ற வாண்மை விருத்தித் திறன்களை பிள்ளைகளுக்குப் பயன்படுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு.வெ. இளங்குமரன்- அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்; இப்பிரதேசங்களில் தொடக்கக் கல்வி ஆசிரியர்களது பற்றாக்குறை இன்னும் நிலவுவதாகக் குறிப்பிட்டதோடு, பல்கலைக்கழகங்களிற்கு திறமையடிப்படையில் செல்லும் மாணவர்களில் தமிழ் மொழி மூல மாணவர்களது தொகை மிகக் குறைவானதே. இன்னும் 2,3ஆண்டுகளில் மாவட்டக் கோட்டா நிறுத்தப்பட்டு திறமையடிப்படையில் தெரிவாகும் போது வடகிழக்கு மாகாணத்திலிருந்து தெரிவாகும் நிலை அறவே இல்லாது போகும். இவையனைத்தும் தமிழ்மாணவ சமூகம் மீதான கல்வியின் பாதிப்பாகவே அமையும்.தமிழ், சமூகக்கல்வி, ஆரம்பக்கல்வி பாடநெறிகள் மீதான ஆசிரியர் பயிற்சியின் தேவை வடகிழக்கில் இன்னுமுள்ளது. இதனை தேசிய கல்வியியற்

**மீனலோஜினி**

கல்லூரிகள் கருத்திற்கொண்டு இப்பாடநெறிகளை அதிகரித்தும், இல்லாதவற்றை தொடக்கவும் வேண்டுமென்றார். இன்று நாடளாவிய ரீதியில் 2003ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரத்தில் 3 பாடத்திலும் சித்தியெய்தி பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதி பெற்றோர் வீதாசாரத்தில் 66% மாக கிளிநொச்சி மாவட்டம் முதலிடத்திலும், 65%மாக முல்லைத்தீவு மாவட்டம் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளது. இந்நிலையில் 2004 இல் முறையே 72% மாகவும் 68% வீதமாகவும் உயர்ந்துள்ளது. இந்நிலை தொடரவேண்டும். இத்தகைய செயற்பாடுகளை முன்னெடுக்கும் ஆசிரிய சமூகத்தினர் இவ்வாறான வாண்மை விருத்தியூடாக தம்மையும் வளர்த்துக்கொள்ளவேண்டுமென்றார்.

அறிவுத்தொகுதியின் வரவேற்பு நிகழ்வாக முல்லைவலய ஆசிரியர்களது நடனவிருந்து பலருக்கும் நீண்ட காலத்தின் பின் கிடைத்த ஒரு பெருவிருந்தாக அமைந்து அனைவரையும் பரவசத்தில் ஆழ்த்தியது. 10 அறிவுத்தொகுதிகளாக செயலமர்வு ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. ஒவ்வொன்றும் ஒவ்வொரு மணித்தியாலயம் கொண்ட செயற்பாடாக இருந்ததோடு, மணி அடிக்க அடுத்த செயற்பாட்டுக்கு நகரும் படியாக ஒழுங்குபடுத்தப்பட்டு இருந்தது. நேர முகாமைத்துவம் என்பது உச்சப் பயன்பாடுடையதாக இருந்ததோடு, ஒருவரையொருவர் குசலம் விசாரிக்கவோ, கதைக்கவோ வாய்ப்பில்லாது செயற்பாடுகளுக்கு ஆசிரியர்களை நகர்த்தியமை பெறுமதியாகவிருந்தது.



*அறிவு-01*

**விளையாட்டு மூலம் ஆரம்ப கணிதம் கற்றல் உத்திகள்.**

வகுப்பறையில் பயிற்சிக் கொப்பிகள், புத்தகம் இல்லாமலே கற்பிக்கலாம், கற்பித்தலூடே கணிப்பீட்டையும் மேற்கொள்ளலாம் என்பதை விளையாட்டு மூலமாக மிகவும் இலகுவாக பதிய வைத்தனர். ஒரு மணிநேரமும் பங்குபற்றிய ஆசிரியர்கள் ஆரம்பக்கல்வி மாணவர்களாகவே செயற்பட்டனர்.

*அறிவு-02*

**செயலாய்வும் செயற்பாடு சார் பாடத்திட்டமிடலும்.**

வகுப்பற்றையில் மாணவர்களது கற்றலுக்கான இடர்பாடுகளைக் கண்டறிந்து, ஆசிரியர் தன்னை மாற்றியமைத்துக் கற்பிக்கும் விதத்தை செயற்பாடுகளினூடாக முன்வைத்தனர். பொதுவாக ஒவ்வொரு ஆசிரியரும் தம்பணிசிறக்க, கற்றல் கற்பித்தலை எவ்வாறு ஒழுங்கமைக்க வேண்டுமென்பதை சிந்திக்க வைத்தது.

*அறிவு-03*

**ஆசிரிய வாண்மை விருத்தியில் ஜீ.ரி.சற்**

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் முன்னெடுக்கப்படும் கல்விச் செயற்பாடுகளை அறிமுகப்படுத்தும் வகையிலும், குறிப்பாக வன்னிப் பிரதேசங்களின் கல்விச் செயற்பாடுகளை விளக்கும் வகையிலான காட்சிப்படுத்தல்கள், ஜீ.ரி.சற் பற்றி அறிந்திராத பலரையும் அறியவைத்தது.

*அறிவு-04*

**வினைத்திறன் மிக்க கற்றலின் பிரதிபலிப்புக்கள்.**

மாணவர் கற்றலை மேம்படுத்தும் வகையிலான சிந்தனையை கிளற வைத்ததோடு, ஒவ்வொரு ஆசிரியரும் தனது இயலுமை, இயலாமையை அறிந்து தமது செயற்பாடுகளை திட்டமிட்டு ஒழுங்கமைக்க வேண்டுமென்பதை உணர வைத்தது. இச் செயற்பாடானது சிங்கள சகோதரர்களால் முன்வைக்கப்பட்டு தமிழாக்கம் செய்யப்பட்டமை இன்னொரு மொழியிலான செயலமர்வில் பங்கு கொண்ட திருப்தியையும் மகிழ்வையும் ஆசிரியரிடையே ஏற்படுத்தியது. விளக்கப்பட்டது.

*அறிவு-07,*

**மகிழ்ச்சிகரமான கற்றல்.**

வகுப்பறையில் பிள்ளைகள் மகிழ்ச்சியாக இருக்கவேண்டியதன் அவசியமும், பாடப்பிரவேசம், கற்பித்தல் என்பன ஆடல், பாடல் மூலம் ஆரம்பிக்கும்போது கற்றலுக்கான சிறந்த வியூகத்தை வகுக்க முடியுமே என செயற்பாடுகளின் மூலம முன்வைத்தமை சிறப்பாகவிருந்தது.


*அறிவு-08*

**புத்துணர்வூட்டல் நுட்பங்கள்.**

*அறிவு-05,*

**குழுவாக்கல் உத்திகள்.**

செயற்பாடுகளுக்காக மாணவர்களை குழுவாக்கும்போது பல்வேறு நுட்பங்களைக்கையாண்டு வெவ்வேறு விதமான-அணுகுமுறைகளில் குழுக்களை; விளையாட்டு, ஒத்தகருத்து எதிர்க்கருத்து, வசனம் அமைத்தல்; ஒலியெழுப்புதல் முதலான நுட்பங்களைப்பயன்படுத்தி அமைக்கலாம் என்பதை செயற்பாடுகள் மூலம் முன்வைத்தனர். மிகவும் கலகலப்பாக இருந்ததோடு இறுதியில் ஒரு மணிநேரம் முடிந்து விட்டதா? என்ற ஐயம் பலரிடம் ஏற்பட்டது. ஆரம்பம் முதல் இறுதிவரை திட்டமிட்ட செயற்பாடாகவிருந்தது.



*அறிவு-06,*

**மாணவர்கள் எதிர்நோக்கும் உளவியல் சவால்கள,**

போரினால் உளநெருக்கீட்டிற்கு உட்பட்ட மாணவர்களை அதிகளவு கொண்டுள்ள வன்னிப் பிரதேசத்திற்கு மிகப்பொருத்தமான தலைப்பாக இருந்தது. உளவியல் ரீதியாக தாக்கமுறும் ஒவ்வொரு பிள்ளைக்குமான முதலும் வட்டியுமாகவுள்ள தாக்கங்கள் பற்றி

சூழலால் உருவான கல்வி சூழலுக்கு எவ்விதம் சென்று சேர வேண்டுமென்பதை விளக்கியதோடு, செயற்பாடுகள் குழு ரீதியாக முன்வைத்து செயற்பாட்டினூடாக உணர வைத்தனர்.

*அறிவு-09*

**கற்றல்-கற்பித்தல் ஊடகமாக பொம்மலாட்டம.**

கற்றல். கற்பித்தலின் போது வகுப்பறையை மகிழ்ச்சியாக வைத்திருக்க பொம்மலாட்டம் உதவும் விதத்தை செயற்பாட்டின்மூலம் செய்து காட்டினர். விரல் பொம்மை, கையுறைப்பொம்மை என வித விதமான பொம்மைகளினூடாக கற்றலை எவ்வாறு முன்னெடுக்கலாம் எனவும், உரைநடை கற்பித்தலுக்கு எவ்விதம் பயன்படுத்தலாம் என்பதையும் விளக்கினர். ஆசிரியர்களுக்கு புதுவித அனுபவத்தைக் கொடுத்தது.

*அறிவு-10*

**நவீன கற்றல்-கற்பித்தல் துணைச்சாதனங்கள்.**

அறிவுத் தொகுதிகளின் அதிசய நுழைவாயிலாக இது விளங்கியது. கரும்பலகையையும், வெண்கட்டியையும் உபகரணமாகக் கண்ட எமது ஆசிரியர்களுக்கு கற்பித்தலில் இவ்வளவு நுட்பமா? நாம் எத்தனையோ வருடங்கள் பின்நிற்கிறோம் எனும் உணர்வை ஏற்படுத்தியது. இத்தகைய உபகரணங்களை அறியவாவது வாய்ப்புக் கிடைத்ததே என பலர் சந்தோசப்பட்டனர்.

பொதுவாக புதிய கல்விச் சீர்திருத்தத்தின் நோக்கம் குறிக்கோள்களை உணர்த்தும் வகையில் ஒவ்வொரு அறிவும் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது, எது சிறந்தது? என்று சீர்தூக்கிப் பார்க்க முடியாதளவிற்கு ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையான புத்தூக்கத்தை (Ice break) ஏற்படுத்தியது. எனினும் வரையறுக்கப்பட்ட நேரம் என்பது சில செயற்பாடுகள் முற்றுப் பெறாமலே முடித்து வைக்கப்பட்டன. தொடர்ச்சியாக வளவாளர்கள் செயற்பட்டதால் களைப்புத்தன்மையுடையவர்களாகத் தென்பட்டனர். எனினும் விளையாட்டு மூலம் ஆரம்பக்கல்வியைத்தான் கற்பிக்கலாம் என்ற பலரது எண்ணக்கருவையும் மாற்றி, இடைநிலை, உயர் நிலைக்கும் பயன் படுத்தலாம் என்பதை அனுபவவாயிலாக உணரவைத்தனர்.

தமிழ், சிங்கள, முஸ்லிம், பறங்கியர் என பல்வேறு சமூகத்தினரும் ஒன்றிணைந்து செயற்பட்டமை இன்றைய யதார்த்தத்திற்கு மிகவும் தேவையான ஒன்றாகவிருந்தது. இலங்கை முழுவதிற்கும் முன்மொழியப்பட்ட இச் செயற்பாடு வடக்கு கிழக்கு கல்வி வலயங்களில் மட்டுமே வெற்றிகரமாக நடைபெற்று வருவதற்கு ஆசிரிய நிலையங்களின் இணைப்பாளர் திரு.கு. முருகுப்பிள்ளை அவர்களது சிறந்த வழிநடத்தலும், வடகிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினது முன்னேற்றகரமான செயற்படுத்துகையுமே காரணம் என்றால் மிகையல்ல. எல்லாவற்றிற்கும் மேலாக இத்தகையதொரு அரும்பணியை ஒப்பேற்றிய பெருமை கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய் கல்வி வலயங்களினது ஆசிரிய நிலைய முகாமையாளர்களாகிய திரு.ந. செந்தில் வடிவேல், திரு.க. இதயசிவதாஸ், திரு.கா.சுகுமார், திரு.சோ. தியாகராஜா என்பவர்களோடு, வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், சேவைக் கால ஆசிரிய ஆலோசகர்கள், பணியாளர்கள், பாடசாலை மாணவர்கள் இவர்களது அயராத அர்ப்பணிப்பே ஏனைய கல்வி வலயத்தினர் மெச்சி பாராட்டும் அளவிற்கு வழிசமைத்தது எனலாம். ●



# திரைவிமர்சனம்



## நிலாகாலம்

எந்தப் பரபரப்புமில்லாமல் ஒரு நல்லபடமாக வந்திருக்கிறது நிலாகாலம். எத்தனை கோடிரூபா பட்ஜெற், யார்யார் நடிகர்கள், எங்கெங்கே எப்படியெல்லாம் படப்பிடிப்பு, மற்றும் பாடல் ஒலிப்பதிவு கசெற் வெளியீட்டிலும் யாரெல்லாம் கலந்துகொண்டார்கள் என்று 'பிரம்மாண்டமான படங்களின்' வருகைக்கு முன்னான கட்டியங்கள், அறிவிப்புகள் எதுவுமில்லாமல் வந்துள்ளது நிலாகாலம்.

மூன்று பிள்ளைகள்தான் படத்தின் மையப்பாத்திரங்கள். பதின்னான்கு வயது, பன்னிரண்டு வயது, எட்டுவயது என்று சிறுபிராயத்தில் நிற்கும் இந்தப்பிள்ளைகளின் மனவுலகும், இயல்பும்தான் படம்.

யாரும் கண்டுகொள்ளாத உலகமாக சிறுவர்களின் மனவுலகம் இருக்கிறது. எங்களின் வீடுகளிலெல்லாம் பிள்ளைகள் - சிறுவர்கள் இருக்கிறார்கள். அவர்களை அவர்களுடைய விருப்பு, வெறுப்புகளுடன் நாங்கள் அணுகுவதில்லை. பதிலாக எங்களின் விருப்பங்கள், ஆசைகள், லட்சியங்கள் என்பவற்றுக்கூடாகவே நாங்கள் சிறுவர்களைப் பார்க்கிறோம். எங்களால் முடியாமல் போனதை எங்களின் பிள்ளைகளூடாக எட்டப் பார்க்கிறோம். அவர்களூடாகவே அவற்றைச் சாதிக்க முனைகிறோம்.

நிலாகாலம் சிறுபிள்ளைகளை மையமாகவைத்து வெற்றிகரமாக எடுக்கப் பட்டுள்ளது. படத்தில் நல்ல கதையும் அதை சினிமாவாக கொண்டுவரக்கூடிய திரைக்கதையமைப்பும், நெறிப்படுத்தலும் இருந்தால் அந்தப்படம் வெற்றியடையும் என்பதற்கு நிலாகாலம் ஒரு சாட்சியம்.

படத்தில் நடிக்கின்றவர் யார் என்பதை விட, எப்படிப்படம் சினிமாவாக வெற்றிபெற்றிருக்கிறது என்பதையே கவனிக்க வேண்டும்.



நிலாகாலத்தில் பிரபுதேவாவும் ரோஜாவும் நடிக்கிறார்கள், ஆனால் அவர்களை விட படத்தில் வருகின்ற மூன்று சிறுவயதுடையோரே அதிகம் கவனத்தைப் பெறுகின்றனர். அதிலும் எட்டு வயதுடைய 'புள்ளி' என்ற அந்தக் குட்டிச்சிறுவன் எங்களிடம் பெறுகின்ற இடம் அசாதாரணமானது. அவனுடைய நடிப்பும், அதன் இயல்பும் மிக நுட்பமானவை. பெரும்வியப்புக்கும் தனிக்கவனத்துக்குமான பாத்திரம் அவன்.

நிலாகாலம் தவறான புரிதலை அடிப்படையாகக்கொண்ட கதை. ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளாமை. ஒன்றையும் சரியாகப் புரிந்துகொள்ளாமை, எல்லாவற்றையும் பழைய அளவுகோல்களினால் அளக்கும் நமதுஅணுகுமுறைகளுக்கு விழுகின்ற அடி தவறான புரிதல்கள் எப்படியான விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பதை மிக வெளிப்படையாக அதேவேளையில் இயல்பாகச் சொல்கிறது படம்.

மிகவும் ஏழ்மையான சூழலில் 'கராஜ்' ஒன்றில் மிகச் சிறுவயதிலேயே வேலை செய்கின்றனர் இரண்டு சிறுவர்கள். ஒருவன் அமர் மற்றவர் புள்ளி, அயலில் ஒரு சிறுமி நிலா வசதியான வீட்டுப்பெண். இவர்களின் உலகத்தையும் இவர்களைக்கண்டு கொள்ளத் தவறுகிறவர்களின் உலகத்தையும் வைத்து கதை சுழல்கிறது.

ஒரு கட்டத்தில் இந்தச் சிறுவர்கள் இருவரும் மற்றவர்களின் தவறான புரிதலால் பொலிசால் பிடிக்கப்பட்டு நீதிமன்றில் நிறுத்தப்படுகிறார்கள். நியாயமற்றமுறையில் எல்லாக் காரியங்களும் நடக்கின்றன. சட்டம், நீதி எல்லாம் முறைகேடாக, இவர்களின் பருவத்துக்கும் அதன் அறிவுக்கும் முரணாக தீர்ப்பை எழுதுகின்றன.

அப்பாவித்தனமாக, இயலாமையாக, அறியாமையாக, எல்லாவற்றிலுமாக இரண்டு சிறுவர்களும் தண்டனைக்குட்படுகின்றார்கள். இந்த மகாகொடுமையை எப்படி இந்தச் சமூகம் பார்த்துக்கொண்டிருக்கிறது என்பதை நமக்குள் கேள்வி அலையாக எழுப்புகிறது படத்தின் இறுதிக்கட்டம். இருக்கின்ற சமூக அமைப்பில் ஏழைகள் பாதிக்கப்படுவதும் வசதியானோர் பாதிப்பின்றித் தப்புவதும் கூட யதார்த்தமாக தெரியப்படுத்தப்படுகின்றது.

குறைபாடுடைய சமூகநீதியின் யதார்த்தத்தில் பலியாடுகள்யார் என்பதைச் சொல்வதில் படம் பெறுகின்ற இடம் இன்றைய 'பிரமாண்ட சினிமா' கனவில் மாறுபாடான ஒரு அடையாளமே.

காந்தி கிருஷ்ணா நிலாகாலத்தை இயக்கியிருக்கின்றார். திரைக்கதை வசனம் சுஜாதா.திரைக்கதையில் மெல்லிய பல வீனங்கள் இருந்தாலும் படம் தருகின்ற சேதிகளும் அவை உணர்த்துகின்ற அடையாளங்களும் அந்தப் பலவீனத்தை ஓரளவுக்கு தணிக்கின்றன. குறிப்பாக படத்தை ஒரு இயல்புச்சினிமாவாக கொண்டுவர முயன்றிருப்பதே வெற்றி. பாத்திரங்களுக்குப் பொருத்தமான வார்த்தைகள், சூழலுக்குப் பொருத்தமான காட்சித்தேர்வு, நடிப்பு எல்லாம் நேர்த்தி.

குழந்தைகள் எதை விரும்புகிறார்கள். அவர்கள் எப்படி பாதுகாப்பற்ற நிலையில் வாழ்கின்றார்கள், அவர்கள் எப்படித் தனித்துப் போகிறார்கள், எப்படி அபாயமான எல்லைகளை நோக்கிப்போகிறார்கள் என்பதையெல்லாம் அறிய நல்லதொரு வாய்ப்பு. குற்றவாளிகள் எப்படி தப்பவிடப்படுகிறார்கள் என்பதைக் காணவும் நிலாகாலம் ஒரு சந்தர்ப்பம்.

எப்போதும் அடிதடி, வில்லன்- கதாநாயகன், நாயகன் நாயகி நடனம், காதல், கண்ணீர் என்ற சூழலுக்குள் நின்று நீச்சலடிக்காமல் நல்ல படத்தைப் பார்க்கின்ற ஒரு வாய்ப்பை பெறவேண்டும் என்பது இன்றைய சினிமாப்பார்வையாளருக்கான ஒரு பொது அறைகூவலாகவுள்ளது. இப்போது நல்ல சினிமாக்களுக்கான சிறு முயற்சிகள் மெல்லியதாக நடக்கின்றன. பதில் ஒன்று நிலாகாலம்.

ஒரு நடிகையின் பிள்ளையாக இருப்பதில் இருக்கின்ற அவலத்தையும் மனக்கசப்பையும் கூட நிலாகாலம் காட்டுகிறது. கனவின் வர்ண முகமாக படர்ந்திருக்கிற சினிமா நாயகிகளின் உள்வெளி எப்படி சிதையுண்டு கிடக்கின்றது என்பதற்கும் நிலாகாலம் ஒரு ஆதாரம்.

மனதில் ஒரு பள்ளத்தாக்காக நிலாகாலத்தின் நினைவு அழியாதிருக்குது என்றால் அதன் சிறப்பு எப்படியென்று அறியலாம்.

சிறுவர்களுடன் சேர்ந்திருந்து பார்க்கப் பயன்படுகின்ற இன்றைய தமிழ்ச்சினிமாச் சூழலில் சிறுவர்களுக்கே காண்பிக்கவும் சிறுவர்கள் பற்றி அறியவுமான ஒரு படம் வந்திருப்பது எவ்வளவு நல்லது?

நிலாகாலம் நமது நிலா நாட்கள் போல இனியதே. துயரும் கனவும் மகிழ்வும் பிரிவும் இழப்பும் நிரம்பிய ஒரு வினோதமான கலவை.

**ஆரதி**

# புதிய குளக்கோட்டன்கள்

பத்தாயிரம் குளங்களைக் கட்டுகிற மாபெரும் கனவில் அல்லது திட்டத்தில் திளைக்கிறது ஜே.வி.பி. இந்தத்திட்டத்தில் தமிழ்ப்பகுதிகள் அடங்கவில்லை என்றொரு தகவல் உண்டு.

புதிய உலகத்தைக் கனவுகண்ட ஜே.வி.பி புதிய பொருளாதாரக் கற்பனைகளையுடைய ஜே.வி.பி, புதிய அரசியற்கலாசாரத்துக்காக இரத்தம் சிந்திய ஜே.வி.பி சிரிப்புக்கிடமான விதத்தில் இப்போது காரியங்களாற்றிக் கொண்டிருப்பதுதான் பெரும் சுவாரஷ்யம்.

ஜே.வி.பிக்கு அடிசறுக்கல், தலைகீழாக நிற்றல், முரண்படல், குதர்க்கம் பேசுதல் எல்லாமே இன்று அவசியமாகிவிட்டன. இப்போது அதற்கு குளங்களும் அவசியமாகிவிட்டன. உண்மையில் குளங்கள் ஜே.வி.பிக்குத் தேவை என்பதைவிடவும் யப்பானுக்கும் மேற்குலகிற்கும்தான் தேவையாக இருக்கின்றன.

ஜே.வி.பி நினைக்கிறது சிங்களப் பகுதிகளில் குளங்களைக் கட்டுவதன்மூலம் கிராமப்புற விவசாயிகளிடையே தனது கட்சிக்கான அடித்தளத்தை உறுதியாக விஸ்தரிக்கலாம் என்று. 'இலங்கையின் விவசாயத் துறைக்கு புத்துயிரளித்தல்' என்ற பெயரில் கட்சிக்கான புதிய வேகத்தை குளங்களூடாகப் பாய்ச்சலாம் என்பது அதனுடைய திட்டம்.

ஆனால், யப்பானோ அல்லது பிற மேற்குலகமோ தங்களுடைய உற்பத்திப் பொருட்களை இங்கே விற்பதற்கான சந்தைக்காக குளங்களைக் கட்டுகின்றன. இதற்காக அவை பத்தாயிரமென்ன அதற்கும் மேலாக குளங்களைக் கட்டுவதற்கு பேருதவியளிக்கத் தயாராக இருக்கின்றன. இதில் குளங்களைக் கட்டுவதற்கும் அவர்களுடைய சந்தைக்கும் என்ன சம்பந்தம் என யாரும் கேட்கலாம்.



எங்களைத் தொடர்ந்தும் விவசாயிகளாக வைத்திருப்பதில்தான் மேற்சொன்ன நாடுகளின் கவனமிருக்கிறது.தமக்குத் தேவையான உணவுப்பொருட்களை வழங்குவோராக எம்மை வைத்திருப்பதுதான் அவற்றின் நோக்கம். நாம் கைத்தொழில் மயப்பட்டு விடுவதில் அவர்களுக்கு ஏற்படும் நட்டத்தைச் சந்திக்க அவை தயாராக இல்லை. கைத்தொழிலில் நாம் ஈடுபடத்தொடங்கும் போது அவற்றின் பொருட்களை நாம் வாங்கவேண்டிய அவசியம் இராது. ஆதலால், எப்பொழுதும் நாம் விவசாய உற்பத்தியாளர்களாக இருக்க வேண்டும். அவர்களுக்குத்தேவையான உணவுற்பத்தியை வழங்குவோராக இருக்கவேண்டும். அதன்மூலம், அதாவது விவசாயத்தின் மூலம் எட்டப்படுகின்ற சிறு லாபத்தை வைத்து எங்களின் நாளாந்த வாழ்க்கையை மட்டும் நகர்த்தக்கூடியவாறான ஒருபொருளாதரத் திட்டத்தை அவர்கள் வரைந்து எங்களுக்கு 'உதவி'என்ற பெயரில் இலவசமாகப் பணத்தைத் தந்து எங்களைத் தேக்குகிறார்கள்.

அவர்கள் குளத்தில் நீரை மட்டும் தேக்கவில்லை எங்களுடைய அறிவியல், பொருளாதார வளர்ச்சி வாழ்விலும் தேக்கத்தையே ஏற்படுத்துகிறார்கள்.

எப்பிடியென்றால், விவசாய உற்பத்திக்கு நிலம், நீர், உடலுழைப்புப் போன்றவை பெருமளவில் தேவை. அதேவேளையில் இந்த உற்பத்திக்கான வருவாய் எப்பொழுதும் குறைவானது. தவிர இந்த உற்பத்திகளை நீண்ட காலத்துக்கு வைத்திருக்கவும் முடியாது. அத்துடன் களஞ்சியப்படுத்துதல் வசதிகளிலும் சிரமங்கள் அதிகம். சந்தைவாய்ப்பும் சிரமங்கள் நிறைந்தது. அதேவேளையில் எமது உற்பத்திகள் பிராந்தியத்தனமானவை.

ஆனால், கைத்தொழில் உற்பத்திகள் அப்படியானவையல்ல இயந்திரங்கள், இலத்திரனியல் சாதனங்கள், மருந்துவகைகள், மற்றும் பிற உற்பத்திப் பொருட்கள் யாவும் சந்தை மதிப்பில் கூடுதலான பெறுமானத்தை உடையவை. சர்வதேச அளவில் சந்தை வாய்ப்பையும் கொண்டவை; காலநீட்சி கொண்டவை.

உதாரணமாக அரிசியை கிழக்கு நாடுகள்தான் கூடுதலாக விரும்பும்; அவைதான் வாங்கும். மேற்குநாடுகளில் அரிசிக்கு மதிப்புக் குறைவு. ஆனால் ஒரு இலத்திரனியல் சாதனத்துக்கு அல்லது ஒரு இயந்திரத்துக்கு எங்கும் மதிப்புண்டு.

உணவு முறை பண்பாட்டின் அடிப்படையில் புவியியல் தட்ப வெட்பச் சூழ்நிலையின் அடிப்படையில் பயன்படுத்தப்படுகிறது. கைத்தொழில் உற்பத்திகள் அப்படியல்ல. புதிய யுகத்தின் கண்டுபிடிப்புகள் அவை என்பதால் சர்வதேச மயப்பட்ட உலகின் பொதுமைப் பயன்பாட்டுக்கானவை. தவிரவும் கைத்தொழில் உற்பத்திகள் காலத்துக்குக்காலம் மதிப்புயர்வு அடைபவை. அவற்றின் தேவை இன்னுமின்னும் புதிதாக விரிவடைபவை.

உணவுத்தேவை அடிப்படைத் தேவைகளில் முதன்மையானது என்றாலும் அதற்கு கட்டுப்பாடுகள் அதிகம் உண்டு.

நண்பர் ஒருவர் ஒருதடவை சொன்னதுபோல "எத்தனைதான் அறிவியல் வளர்ச்சி வந்தாலும், மனிதன் கோள் விட்டுக் கோளுக்குப் பயணமானாலும் இன்னும் விவசாய உற்பத்தியைத்தான் உணவாக உண்ண வேண்டியிருக்கிறது. உணவுக்குப் பதிலாக பசியைத்தீர்க்கவும் உடல் வலுவுக்குமாக இன்னும் எதையும் புதிதாகக் கண்டுபிடிக்கப்படவில்லையே" என்றாலும் விவசாயப் பொருட்களுக்கும் அந்த உற்பத்தி முறைமைக்கும் உரிய மதிப்பு இன்றும் உலகஅளவில் இல்லை.

இதனால் தங்களுடைய நிலவளத்தையும் நீர்வளத்தையும் மனிதவளத்தையும் விரயமாக்காமல் எங்களைக்கொண்டு எங்களின் நிலத்திலும் நீரிலும் தமக்கான உற்பத்தியைச் செய்து கொண்டு போக யோசிக்கிறார்கள். பதிலாக எங்களிடம் வாங்குகின்ற தானியங்களுக்கு மாற்றாக, தமது உற்பத்திகளை விற்றுவிடுகிறார்கள்.

விவசாயத்துக்கு கடன் அடிப் படையிலும் 'உதவி' என்ற பெயரில் மானியமாகவும் தானமாகவும் வழங்கப்படும் பணத்தை கையேந்துகிறோம் நாங்கள். உண்மையில் அவர்கள் வைக்கிற வணிகப்பொறியில் அறியாமல் வீழ்ந்து விடுகிறோம் நாம். ஒரு கட்டத்தில் எங்களுடைய உற்பத்திகளுக்கான விலை நிர்ணயத்தைக்கூட அவர்களே செய்யும் பிடியைக் கூட அவர்கள்தான் வைத்திருக்கிறார்கள்.

இப்போது குளங்களை அவர்களாகவே வந்து கட்டுகிறார்கள். புதிய குளங்கள் கட்டப்படும் போது இன்றும் பல ஏக்கர் காடு அழிக்கப்படுகிறது. குளத்திற்காகவும் காடு அழிக்கப்படுகிறது. பிறகு, விவசாயத் தேவைக்காகவும் காடு அழிக்கப்படுகிறது. இவ்வாறு காடு அழியும்போது சூழலில் சமநிலைப் பாதிப்பு அதிகரிக்கின்றது. மழைவீழ்ச்சி குறைகிறது. காட்டு வளம் பாதிப்படைய விலங்குகள் பறவைகளின் சேதமும் நில அமைப்பிலேற்படும் பாதிப்பும் கூடுகிறது. இது எமது தேசத்தின் வளத்திலும் சூழலிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி விடும்.

(23- ஆம் பக்கம் பார்க்க)

**வெளிவாசல்பாலன்**

# வீடு

இன்றைய உலகில் பெண்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. அதில் ஒன்று கணவன் மனைவிக் கிடையேயான. புரிந்துணர்வின்மையை குறிப்பிடலாம்.

இந்த கணவன் மனைவிக்கிடையேயான புரிந்துணர்வற்ற செயற்பாடுகள் பெண்களின் மனதை பாதிக்கின்றன. இதனால் வீட்டில் பல பிரச்சினைகள் தோன்றும். பிரச்சினைகளுக்கு எவ்வாறான சந்தர்ப்பங்களில் ஆண்கள் காரணமாக இருக்கின்றார்கள் என்பதை ஒரு ஆண் என்ற நிலையில் இருந்து எடுத்துநோக்கின் ஒரு குடும்பத்தில் ஆண்கள் வேலைக்கு வெளியே சென்றுவிடுகின்றார்கள். வேலைக்கு செல்கின்ற ஆண்கள் தங்களுடைய கடமையை குறிப்பிட்ட நேரத்திற்கு மாத்திரம் செய்கின்றனர். அதுவும் அவர்களுக்கு ஓய்வு நேரம் கூட உண்டு. இவ்வாறு ஆண்கள் தங்கள் கடமை என்ற வட்டத்துக்குள் மாத்திரம் செயற்படுகின்றனர்.

ஆனால் பெண்கள் அவ்வாறு அல்ல முன்னைய காலத்தில் தோன்றிய 'முன்தூங்கி பின் எழுதல்' எனும் சொல்லுக்கமைய ஆண்களுக்கு முன்பு எழுந்து காலை உணவு தயாரித்தல், பிள்ளைபராமரித்தல் என தொடங்கும் அவர்களின் செயற்பாடு இரவு நித்திரைக்குப் போகும்வரை தொடர்கின்றது. இதில் ஒரு குறிப்பிட்டநேரத்தில் பிள்ளைகளுக்கு பாடம் கற்பித்தல் செயற்பாட்டையும் செய்கின்றாள்.

ஆனால் இவ்வாறான பெண்கள் வாழும் குடும்பத்தில் உழைக்கின்ற ஆண் என்ற வகையில் அக்குடும்பத்தில் எம்மை உயர்த்திக் கொள்வதுடன் ஓய்வுக்காக அதிக நேரத்தையும் எடுத்துக்கொள்கிறோம் அத்துடன் உடல் களைப்பை போக்கவெனக்கூறி எங்கள் உழைப்பில் கிடைத்த பணத்தை ஒரு தொகையை செலவு செய்கிறோம்.

ஆனால் ஒரு பெண் தன்னுடைய வீட்டை பராமரித்தல், உணவு தயாரித்தல், பிள்ளைகளை பாடசாலைக்கு தயார்படுத்தல், கால்நடைகளை பராமரித்தல், பிள்ளைகளுக்கு கல்வி புகட்டுதல் என அவளால் ஓய்வின்றிய செயற்பாடு சொல்லிக்கொண்டே போகலாம். ஆண்களின் கடமைக்கு ஒரு குறிப்பிட்ட தொகை வழங்கப்படுகிறதாயின் பெண்கள் வீட்டில் செய்யும் வேலைக்கு கூலி வழங்குவதாயின் அது ஆண்களின் சம்பளத்தைவிட உயர்ந்த சம்பளம் வழங்கவேண்டும். இதனை எந்த



## குற்றம் சுமத்துவதால் பிரச்சினைகள் தீரப்போவதில்லை

ஆணும் சிந்தித்துப்பார்ப்பதில்லை. தானே உழைப்பதாகவும், தானே இக்குடும்பத்தின் நிறைவேற்று அதிகாரம் கொண்டவனாகவும் ஆண்கள் காட்டிக்கொள்கின்றனர். இவர்களின் சிந்தனை மாறுபட வேண்டும்.

ஒரு பெண் தன்னுடைய வீட்டில் ஒரு நாளைக்கு பல கிலோ மீற்றர் நடந்து வேலை செய்வதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

எனவே ஒரு குடும்பத்தில் வேலைக்குச் செல்லும் கணவனை (ஆண்களை) விட பெண்களே அதிகம் உழைக்கின்றனர். ஆனால் அவர்களின் உழைப்பை ஏற்று நடக்கும் மனப்பாங்கு ஆண்களிடம் இல்லை என்றே கூறவேண்டும். இதனால் குடும்பங்களில் ஆண் பெண்களிடையே பிரச்சினைகள் எழுகின்றன. இவற்றை தீர்க்க வேண்டுமாயின் தாங்கள் செய்யும் கடமைக்கு மேலாக பெண்கள் வீட்டில் கடமை புரிகின்றனர். என்பதை மனதளவில் ஆண்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அதேவேளை ஒரு ஆண் தன் உடல் உழைப்பினால் ஏற்படுகின்ற களைப்பை போக்க மது அருந்துவதாயின் ஒரு பெண் தன் உடல் உழைப்பினால் ஏற்படுகின்ற களைப்பை போக்க தேனீர் கூட ஒழுங்காக அருந்த நேரம் பிரச்சினையாக உள்ளது. இது உண்மையில் ஒவ்வொரு ஆண்களாகிய நாம் சிந்தித்து உணர வேண்டியவிடயமாகும். பெண்ணியத்திற்கு அப்பாற்பட்டு ஆணாதிக்க அடக்கு முறைக்கருத்துக்களுக்கு அப்பாற்பட்டு ஆறறிவு கொண்ட மனிதகுலத்துக்கு இருக்க வேண்டிய உயர் பண்பில் இருந்து ஒவ்வொரு ஆண்களும் சிந்திக்க தலைப்பட வேண்டும். அப்போதுதான் பரஸ்பர புரிந்துணர்வு ஏற்பட்டு குடும்பம் ஒரு கோவிலாக அமையும். ஒரு குடும்பத்தில் பிரச்சினைகள் ஏற்படுகின்றபோது அதிகாரத்தோரணையில் பெண்ணின் மீது குற்றம் சுமத்துவதை விட இப்பிரச்சினைக்கு ஆண்களாகிய நாம் எவ்வாறு காரணமாய் அமைந்துள்ளோம் என பிரச்சினைக்கான காரணத்தை முதலில் ஆண்களாகிய நாம் எம்மில் தேட வேண்டும். அப்போதே பல பிரச்சினைகளுக்கு முடிவு வந்துவிட்டது என்று அர்த்தம் தோன்றும். இல்லையேல் பிரச்சினைகளும் உளநெருடல்களும்கூடி மாறிமாறி ஒருவர் மீது ஒருவர் குற்றம் சுமத்தப்பட்டு குடும்பம் குலைந்து போகவே வாய்ப்புண்டு.

பல்வேறு குடும்பங்களில் ஏற்படுகின்ற பிரச்சினைகள் ஆண்களாகிய நாம் உழைக்கின்றோம் எனும் கர்வத்தில் பெண்கள் மீதான அதிகாரப் பிரயோகமே காரணமாய் அமைகின்றது.

இவ்வாறு சிந்தனையில் மாறுபட்டு செயற்படுகின்ற ஆண்களாக நாம் மாறுகின்றபோது குடும்பம் பல்கலைக்கழகமாய் தோன்றும்.

அ.பிரகாஷ்

# உணவு

மனித உடலின் சிறப்பான தொழிற்பாட்டிற்கும், வளர்ச்சிக்கும் உணவு இன்றியமையாதது ஆகும். நாம் உட்கொள்ளும் உணவானது உடல் தொழிற்பாடுகளுக்குத் தேவையான சக்தியை வழங்குதல். வளர்ச்சியை ஏற்படுத்தல், நோய்களில் இருந்து உடலைப் பாதுகாத்தல் போன்ற கருமங்களுக்கு உதவுகிறது. நாம் நாளாந்தம் எடுக்கும் உணவில் காபோவைதரேற்று, புரதம், கொழுப்பு, விற்றமின்கள், கனியுப்புக்கள் போன்ற போசணைக் கூறுகள் சரியான அளவில் உள்ளடக்கப்பட்டிருத்தல் அவசியமானது. நவநாகரிகமயப்படுத்



தப்பட்ட உலகில் அசுரப்பசியை போக்க அவசர உணவின் Fast Food உதவியை அநேகமானோர் நாடுகின்றனர். இத்தகைய உணவுகளில் சேர்க்கப்படும் செயற்கை நிறமூட்டிகள், சுவையூட்டிகள் உடலினுள் புரியும் அட்டகாசங்கள் ஏராளம். எனவே இத்தகைய உணவுகளில் இருந்து இளஞ்சிறார்களையும் இளைஞர்களையும் காப்பாற்ற வேண்டியது அனைவரினதும் பொறுப்பாகும். தற்காலத்தில் பாடசாலை போகும் சிறுவர்கள் உணவுப் பொதி பாடசாலைக்கு கொண்டு செல்கின்றனர். இவர்களில் அநேகமானோரின் உணவு பிட்டும் சம்பலும். அல்லது



பிட்டும் வாழைப்பழமும். இதையே நாளாந்தம் அவர்கள் சாப்பிடக்கூடிய நிலையை கண்ணாரக் காண்கின்றோம். எனவே இத்தகைய பிள்ளைகளின் பெற்றோர்கள் கூடிய அவதானம் எடுக்க வேண்டும். காலை ஆகாரமாக தானிய வகை உணவுகளை தயாரித்துக் கொடுப்பதன் மூலம இச் சிறார்களுக்கு ஓரளவு உணவுச் சத்து அதிகரிக்க வாய்ப்புண்டு. எனவே உணவு பற்றிய அறிவுறுத்தல்களை பெறுவதன் மூலமும் அதனை செயற்படுத்துவதன் மூலமும் சுபீட்சமுள்ள நல்ல எதிர்கால சந்ததியை உடலால், உளத்தால் திடமான சமுதாயமாக உருவாக்க முடியும்.

ந.கங்கா

# இப்படிச் செய்யலாம்...

கேக்குகளில் முட்டை சேர்ந்திருப்பதால் விரைவாக இவை பழுதடைந்து போகும். கேக்குகள் பழுதடையாமல் இருக்க, கேக்குகளை ஒரு பேணியில் போட்டுவைக்கவேண்டும். கேக்குகளுடன் ஒரு ரொட்டித் துண்டையும் போட்டு வைக்க வேண்டும். கேக்குகள் பழுதடையாது.

* * *

தேங்காய் தக்காளி ஆகியவைகள் பழுதடைந்து போகாமல் இருக்க, அவைகளை உப்பு நீரில் போட்டுவைக்க வேண்டும். போட்டு வைத்தால் அவைகள் இரண்டு மூன்று நாட்கள் வரைக்கும் பழுதடைந்து போகாமல் இருக்கும்!

* * *

எலுமிச்சம்பழம், மலிவாகக் கிடைக்கும்போது, அதை வாங்கிச் சாறு பிழிந்து, நாலுபங்குச் சாறுக்கு ஒரு பங்கு உப்பு வீதம் அதில் சேர்த்துக் கலந்து, போத்தலில் அடைத்து வைத்துக் கொள்ளுங்கள். இது பல நாட்களுக்கு பழுதடைந்து போகாமல் இருக்கும்.

* * *

முகம் பார்க்கும் கண்ணாடியை முதலில் ஒரு மெல்லிய துணியினால் துடைக்க வேண்டும். கடதாசியைக் கசக்கி கண்ணாடி முழுவதும் துடைக்க வேண்டும். இப்படிச் செய்தால் முகம் பார்க்கும் கண்ணாடி பளபளப்பாக இருக்கும். முகம் தெளி வாகத் தெரியும்!

* * *

## இறைச்சிக் கறி




| | |
|---|---|
| இறைச்சி | - 250 கிராம் |
| தனியா | - 15கிராம் |
| மிளகாய் | - தேவையான அளவு |
| மிளகு | - 10கிராம் |
| தயிர் | - 1/4லீட்டர் |
| எலுமிச்சம் பழச்சாறு | - 2தேக் கரண்டி |
| கொத்துமல்லி | - சிறிதளவுபூண்டு-2 |
| இஞ்சி | - 1துண்டு |
| வெங்காயம் | - 3 |
| உப்பு | - தேவையான அளவு |
| தேங்காய்த்துருவல் | -சிறிதளவு |
| நெய் | - தாளிப்புச் செய்ய |

தனியா, மிளகாய், மிளகு, பூண்டு, இஞ்சி, வெங்காயம் ஆகியவற்றை அரைத்துக் இறைச்சியில் போட்டு, அத்துடன் உப்பையும் தயிரையும் சேர்த்துத் தேவையான அளவு தண்ணீரையும் ஊற்றி நன்கு கொதிக்க வைக்கவும். இறைச்சியை கறிச் சட்டியில்தான் வேகவைக்க வேண்டும்.

கொதி வந்ததும் எலுமிச்சம் பழச்சாற்றையும் தேங்காய்த்துருவலையும் அதில் போட்டு மேலும் சுண்டுமளவிற்கு அதனைக் கொதிக்க விட வேண்டும். நன்றாகக் கொதித்துச் சுண்டியவுடன் நெய்யில் தாளித்து இறக்கி விடவேண்டும்.

## முட்டை அரிசித்தோசை

| | |
|---|---|
| முட்டை | -நான்கு |
| தோசைமா | - ஒரு பேணி |
| பச்சைமிளகாய் | -ஒன்று |
| வெங்காயம் | -இரண்டு |
| உப்பு | -தேவையானஅளவு |
| எண்ணெய் அல்லது நெய் | -தேவையான அளவு |

*செய்முறை -*

முட்டைகளை உடைத்து நன்றாக அடித்துத் தோசை மாவுடன் கலந்து கொள்ளவும். வெங்காயம் பச்சை மிளகாய் ஆகியவற்றைப் பொடியாக நறுக்கி வைத்துக் கொள்ளவும். நறுக்கிய வெங்காயம், பச்சை மிளகாய், உப்பு ஆகியவற்றைத் தோசைமா முட்டைக் கலவையுடன் சேர்த்து நன்றாகக் கலக்கிக் கொள்ளவும்.

தோசைக்கல்லை அடுப்பில் வைத்து வெண்ணெய் அல்லது எண்ணெய்விட்டுச் சூடானவுடன் மாவுக் கலவையை ஊற்ற அதன் எல்லாப் பக்கத்திலும் எண்ணெய் விட்டு நன்றாக வெந்தபின் அடுப்பிலிருந்து இறக்கிச் சூடாகச் சாப்பிட வேண்டியதுதான்.

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத் திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*




குமரகுரு பல்பொருள் புடைவை வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

குமரகுரு பரிசுத்திட்டம்—15

பெயர்:.................................................

முகவரி:...............................................

.........................................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

# அவுஸ்திரேலியாவின் இறுமாப்புக்கு பரிசா? வோகனின் நம்பிக்கைக்கான பரிசா?





எதிர்பார்ப்பு பரபரப்பு யார் அந்த பாக்கியத்தை பெறப்போகின்றார்கள். உலக விளையாட்டு ரசிகர்களின் அங்க லாய்ப்புக்கு மத்தியில் இங்கிலாந்தின் எஜ்பட்சன் மைதானத்தில் அந்த போர் ஆரம்பமானது.

ஐ.சி.சி. கிண்ணத்துக்கான இறுதிப் போட்டிக்கு தகுதி பெறப்போவது அவுஸ்திரேலியாவா? இங்கிலாந்தா?

இரு அணிகளுமே இதுவரை ஐ.சி.சி கிண்ணத்தை கைப்பற்றாததுடன் இறுதிப் போட்டிக்கு கூட தகுதிபெறாத நிலையில் இத்தொடர் அனைவரது கவனத்தையும் ஈர்த்திருந்தது.

மழை, வெயில் என போட்டியின் போக்கை மாற்றியமைத்து எதிர்பாராத முடிவுகளை கொடுக்க; நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணித்தலைவர் அவுஸ். அணியை மட்டைவீச அழைக்கின்றார்.

இதன்படி களம் புகுந்து அவுஸ்திரேலியாவின் பந்துகளை நாலாபுறமும் அடித்து துவம்சம் செய்யும் ஆரம்ப கேடிகளான அடம் கில்கிறிஸ்ட், மத்யூ ஹெய்டன் என்னசெய்யப்போகின்றார்கள். முதல் பந்து வீச்சிலேயே ஓட்டக் கணக்கை ஆரம்பிக்கின்றனர். பின்னர் படிப்படியாக ஓட்ட எண்ணிக்கை விக்கெட் இழப்பின்றி உயர்ந்து செல்ல கேள்வி எழுகின்றது. மைக்கல் வோனின் கணிப்பு வேறாகி விட்டது. அவுஸ்திரேலியா மிகப்பெரும் ஓட்ட எண்ணிக்கைக்கு செல்லப் போகின்றது.

வோன்- அவரின் தீர்மானம் சரியானது என்பதை நிரூபிக்க வேண்டாமா? தானும் ஒரு முழுநேர பந்து வீச்சாளராகின்றார்.

இதனால் அவுஸ் அணி விக்கெட்டுக்களை தக்கவைத் திருந்தபோதும் ஓட்ட எண்ணிக்கையை அதிகரிக்கமுடியவில்லை. அதற்காக அவ் அணி திணறியது என்ற அர்த்தமல்ல.

இறுதியில் 9 விக்கெட்டுக்களை இழந்து 259 ஓட்டங்களை பெறுகின்றது. அவுஸ்திரேலிய அணியை பொறுத்தவரை தாங்கள் பெறும் ஓட்ட எண்ணிக்கை எப்பொழுதுமே எதிரணிக்கு சவால் நிறைந்ததாகவே அமையும்.

ஏனெனில் எதிரணி வீரர்களை தாங்கள் பெறும் ஓட்ட எண்ணிக்கைக்கு செல்லவிடாது தடுப்பதில் கைதேர்ந்தவர்கள். அதுவே அவர்களின் வெற்றிப் பயணத்தின் ரகசியமாகவும் விளங்குகின்றது.

அதனை மாற்றியமைக்கவேண்டும் என்ற நம்பிக்கையை பலமாக கொண்ட மைக்கல் வோன் தனது சொந்தமண்ணில் அவுஸ்திரேலியாவுக்கு தோல்விப் பரிசை வழங்குவதில் உறுதியாக இருந்ததால் போட்டியில் பரபரப்புக்கு பஞ்சமிருக்கவில்லை. அவரின் கனவும் நனவானது.


அசைக்க முடியாத நான்கு வேகப்பந்து வீச்சின் பலத்தைக் கொண்ட அவுஸ்திரேலிய அணி இங்கிலாந்து அணியிடம் கண்ட தோல்வி அதன் இறுமாப்புக்குக் கிடைத்த பரிசா? அன்றி இடையில் ஏற்பட்ட சரிவா என்பது இந்திய அணியுடனான டெஸ்ட் தொடர் பதில் சொல்லும்.

இங்கிலாந்தில் நடைபெறும் ஐ.சி.சி சம்பியன் கிண்ணம் நாளையதினம் எந்த அணியின் கைகளுக்கு சென்றடையும் என்பது தெரியவந்துவிடும்.

கடைசியாக 2002ம் ஆண்டு நடைபெற்றபோட்டியில் இந்திய அணி இறுதிப் போட்டிவரை முன்னேறி, மழை காரணமாக இந்திய அணி கிண்ணத்தை சிறிலங்காவுடன் பகிர்ந்து கொண்டது. எனினும் இந்தத் தொடரில் அரையிறுதிக்குத்தானும் இரு அணிகளும் முன்னேறமுடியாமல் போனமை ரசிகர்களுக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்துவிட்டது.

சிறிலங்கா அணி அண்மைக்காலமாக

இவ்வாறு தொடர் தோல்விகளை சந்தித்த இந்தியா கடைசியாக நடைபெற்ற ஐ.சி.சி போட்டிகளுக்காக தனது தவறுகளை திருத்தி அணியில் மாற்றத்தை ஏற்படுத்தி களம் புகுந்திருக்கலாம். இந்திய A அணியில் கௌதம் காம்பீர் போன்ற பல துடுப்பாட்ட



வீரர்களும் தினேஷ் கார்த்திக்கையும் இறுதி நேரத்திலாவது அறிமுகப்படுத்தியிருக்கலாம். அணித்தலைவர் அனைத்துப் போட்டி



## கற்க வேண்டிய பாடங்கள் நிறையவே இருக்கிறது...

சிறப்பாக விளையாடி தொடர்ந்து வெற்றி பெற்றதால் இப்போட்டிகளில் இறுமாந்திருந்து விட்டதா என எண்ணத்தோன்றுகிறது. அதே போன்று இந்திய அணி இவ்வருட ஆரம்பத்தில் பாகிஸ்தான் நாட்டில் அவ்வணியை வென்று வந்ததிலிருந்து தன்னை விழுத்தமுடியாத அணியாக கருதியிருக்கலாம். ஆயினும் அதன் பின்பு நடைபெற்ற அனைத்து போட்டிகளிலும் ஓரிரு போட்டிகளைத்தவிர அது மண் கவ்வியது. குறிப்பாக பாகிஸ்தானை அதன் மண்ணில் வீழ்த்திய இந்தியா ஆசிய கிண்ணப் போட்டியில் சிறிலங்காவிலும், வீடியோகோன் தொடரில் இங்கிலாந்திலும் பாகிஸ்தானிடம் நன்றாக பாடம் கற்றது. அதனோடு தொடர்ந்த நட்வெஸ்ட் கிண்ணப்போட்டித்தொடரிலும் இங்கிலாந்திடம் தோல்வியை சந்தித்தது.

களிலும் தனது வீரர்கள் சிறப்பாக ஆடவில்லை என்று மட்டும் கூறுகிறாரே ஒழிய, தனது தவறு என்ன என்பதை உணர்வதாகத் தெரியவில்லை.

கடந்த ஐ.சி.சி போட்டிகளில் இணை தடுப்பாட்டத்திலும் பந்துவீச்சிலும் சாதனை ஏற்படுத்திய வீரர்களே அநேகமாக இப்போதும் அணியில் இடம்பெற்றிருப்பினும் அவர்களின் தனிப்பட்ட திறன் எங்குபோய் ஒளிந்துவிட்டது என சிந்திக்கவைத்துள்ளது. இதுவரை நடைபெற்ற போட்டிகளில் கலந்து கொண்ட பார்வையாளர்களைவிட கடந்த 19ஆம் திகதி பாகிஸ்தான்- இந்திய அணிகளின் போட்டியை காண பெருந்திரளானோர் வந்திருந்ததால் கங்குலி- சேவாக் யுவராஜ் ஆகியோரின் துடுப்பாட்டம் பயத்தில் ஒளிந்துவிட்டதோ?

சம்பத்


---

# கவலையை கலைத்தவர்கள்

ஒவ்வொரு விளையாட்டு வீரனும் தனது திறமையை எப்போது இல்லாவிட்டாலும் ஒருநாள் வெளிப்படுத்தியே தீருவார். அந்த வகையில் ஜோர்ன் போர்க், ஜோன் மக்கன்ரோ அன்றி றொடிக் ஆகியோர் குறிப்பிடத் தக்கராவார். அதேபோன்று சிலகாலம் தனது திறனை வெளிக்கொணர முடியாதிருந்த றோஜர் பெடரர் டெனிஸ் போட்டியில் தனது திறனை வெளிக்காட்ட தொடங்கியிருக்கிறார்.

அண்மைக்காலமாக ஆண்களுக்கான டென்னிஸ் இல்லாமல் போய்விடலாம் எனக்கருதப்பட்டது. அந்த அச்சத்தைப் போக்கும் முகமாக றோஜர் பெடரர் தனது திறமையை வெளிக்காட்டிவருகிறார். அவரது திறமை அமெரிக்க ஓபன் டென்னிஸ் பந்தயங்களில் வெளிப்பட்டிருக்கிறது. அவர் எதிராளி முற்றிலும் எதிர்பாராதவகையில் தாக்குதல் நடத்துவதும் எதிரணியின் தாக்குதலை உற்றுநோக்கி பந்தை திருப்பி அனுப்புவதிலும் திறமை காட்டுகிறார். அன்று அகஸி தனது எதிரணியோடு விளையாடுவது போல றோஜர் பெடரரும் ஆடுகிறார்.

விம்பிள்டன் போட்டிகளை அவதானிக்க அநேகமானோர் திரண்ட போது றொடிக்கை போன்று இவரும் தோல்வியடைந்து விடுவாரா என ரசிகர்கள் சிந்தித்தனர் எனினும் தமது ரசிகர்கள் நல்ல போட்டிகளை விரும்பு வார்கள் அவர்களை ஏமாற்றக் கூடாது என றோஜர் பெடரர் தெரிவித்திருந்தார்.




தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பு
Information Technology Association
TamilITA.org

TITA
TAMIL INFORMATION TECHNOLOGY ASSOCIATION

## பதவி வெற்றிடம்

தமிழ் தகவல் தொழில் நுட்ப ஒருங்கமைப்பினால் செயற்படுத்தப்பட்டு வரும் கிராமியத் தகவல் தொழில்நுட்ப திட்டத்தின் கீழ் பணியாற்றுவதற்காக பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான தகுதியுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

### பதவி நிலை 1 : இணைப்பாளர் (பகுதி நேரம்/முழு நேரம்)

போதிய ஆங்கில அறிவுடன் மின்னஞ்சல், இணையப் பாவனை உட்பட போதிய கணினிசார் தகைமை உடையவராகவும். அமைப்பின் அனைத்து பயிற்சி நிலையங்களையும் ஒருங்கிணைத்து, நிலையங்களுடன் தொடர்புகளைப் பேணி நிர்வகிக்கக் கூடியவராயும் இருத்தல் வேண்டும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்

### பதவி நிலை 2 : கணினிப் போதனாசிரியர் / பயிற்றுநர் (முழு நேரம்)

மன்னார், கல்லடி (மட்டக்களப்பு), திருகோணமலை, கிளிநொச்சி, யாழ்ப்பாணம்

போதிய ஆங்கில அறிவுடன் MS - Office உட்பட போதிய கனினிசார் தகைமை உடையவராகவும், இருத்தல் வேண்டும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

ஆர்வமுடைய, தகுதியான விண்ணப்பதாரிகள் தமது சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் எதிர்பார்க்கும் சம்பளம், தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு ஏழு நாட்களுக்குள் தபால் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் விண்ணப்பிக்கவும்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் ஆக்ககுறைந்தது ஒருவருட காலம் பணியாற்றுவதற்கான உடன்படிக்கையில் ஒப்பமிடவேண்டும்.

**Please Apply to:**
*Chairman, Tamil Information Technology Association,*
*75, Lorenz Road,admin@tamilita.org*
Colombo - 04

*admin@tamilita.org*
077 7271467, 077 7780304

(4916)

# பயிர் வளர்ச்சிக்கு ஏற்ற முக்கிய மூலகங்களின் பயன்பாடு!

பயிருக்கு அத்தியாவசியமான மூலகங்கள் 16 இவற்றில் நைதரசன், பொஸ்பரசு, பொட்டாசியம் (N.P.K) மிகவும் முக்கியமானதாகும். அதில் நைதரசன்

***நைதரசன் (N)***

நைதரசன் பயிரில் 1-4 வீதம் இருக்கிறது. நைதரசனை அதன் மூலக நிலையில் எப்பயிரும் பயன்படுத்த முடியாது. நைதிரேற்றாகவோ அமோனியாவாகவோ மாறிய பின்னரே அது பயிராக்கப்படுகிறது. பயிரில் முதலுரு பச்சை மெலிதாவதோடு முதலுருவும் நீர்த்தன்மையடையும். இவற்றினால் நோய்த் தாக்கத்தின் பயிர் பாதிப்படையும். நிலை அதிகளவில் பாதிக்கும். பொட்டாஸ் ஓரளவில் இத் தீமைகளைக் குறைக்க உதவும். நைதரசன் மிதமிஞ்சி அதிகளவில் காணப்படின் இலைகள் பழுத்தாலும் அவற்றின் ஒளித்தொகுப்புச் சக்தி பருப்பத்திற்கமையப் பெருகுவதில்லை.

***மண்ணில் நைதரசனின் செயற்பாடு***

காபன், ஐதரசன், ஒட்சிசன் யவை யாவும் மண்ணில் இருந்தே பெறப்படுகின்றன. ஆகையால் மண் உண்டாவதற்கு மூலப் பொருளாய் உள்ள பாறைகளின் கனிப்பொருட்களில் இருந்தே அவை எல்லாம் கிடைக்கின்றன. எனப்பலரும் கருதக் கூடும்.

ஆனால் அதி முக்கியம் வாய்ந்த போசணியான நைதரசனைக் கொண்ட கனிப்பொருள் எதுவும் எவ்வித பாறையிலும் கிடைப்பதில்லை. அப்படியாயின் நைதரசன் எவ்விதம் பெறப்படுகிறது. ஆரம்பத்தில்

யம். பலவகை அமினோ அமிலங்கள், அமைட்டுக்கள், புரதங்கள் காரப்போலிகள் ஆகியவற்றின் அமைப்போடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதால் எல்லா வகைப் பயிருணவுள்ளும் அதி முக்கியம் வாய்ந்தது நைதரசனாகும்.

எனவே வேண்டிய அளவில் அது கிடைக்குமாயின் பயிர் செழித்து வளர்ந்து சிறந்த பலனை அளிக்கும். குறைந்தாலோ கூடினாலோ பல வழிகளில் பயிர்கள் பாதிக்கப்படும். குறையும் போது இலைகள் மஞ்சள் நிறமடைந்து வளர்ச்சி குன்றும். இலையின் நடு நரம்பை அடுத்து இலைக் கருகல் உண்டாகும். அளவுக்கு அதிகமானால் இழையங்களில் சாறு அதிகரித்து புதிய வளர்ச்சி மிதமிஞ்சும். அதனால் விளைவு பாதிக்கப்படும். விளைவு காலம் நீடிக்கும்.

மேலும் கலங்கள் அளவுக்கு மீறிப்பருப்பதால் கலச்சுவர்கள் ஆகிய மூன்றும் காற்றிலும் நிலத்திலும் போதிய அளவு இருப்பதால் பொதுவாக அவற்றால் பயிருணவுப் பஞ்சம் ஏற்படுவதில்லை. சுவட்டு மூலகங்களும் மிகக் குறைவாகவே தேவைப்படுவதால் பெரும்பாலான நிலங்களில் அவற்றையும் இட வேண்டிய அவசியமில்லை.

எனவே நைதரசன், பொஸ்பரசு, பொட்டாசியம், கல்சியம், மகனீசியம், கெந்தகம் ஆகியவற்றையே பசளையாகவோ, வளமாக்கிகளாகவோ இட வேண்டியிருக்கும். அவற்றுள்ளும் நைதரசன் பொஸ்பரசு பொட்டாசியம் ஆகிய மூன்றுமே முறையே மிக முக்கியம் வாய்ந்தவை ஆகும். அவற்றைப் பெரும்பாலும் செயற்கை வளமாக்கிகளை அநேகமானோர் இடும் வழக்கத்தை அடிப்படையாகக் கொண்டு காணப்படுகிறது.

காபன், ஒட்சிசன், ஐதரசன் ஆகிய மூன்றையும் தவிர மற்றை

காற்றிலுள்ள நைதரசனும் ஒட்சிசனும் மின்னல் காரணமாய் உண்டாகும் சக்தியினால் நைதரேற்றாக மாற அது மழைநீரில் கரைந்து நிலத்தை அடைகின்றது. நுண்ணுயிர்கள அதைப் பயன்படுத்தி விருத்தியடைந்து காலகெதியில் காற்றிலிருந்து நைதரசனை சேர்க்காமலும் சேர்த்தும் கிரகிக்கும் பற்றீரியா போன்ற நுண்ணுயிர்களாகப் பரிணாம முறைப்படி தோன்றி நைதரசனை மேலும் மேலும நிலத்துக்கு வழங்கி வந்துள்ளன. நைதரசனை பயிருணவாக ஒரு புறம் கிரகிக்க மறுபுறம் மண்ணில் நிலவும் சூழ்நிலைக்கேற்ப அது ஆவியுருவில் அமோனியாவாகவும் நைதரைற்று நைதரேற்று ஆகியவற்றிற்கு இறக்கம் உண்டாகி மூல நைதரசனையும், நைதரேற்றாய் படி நீரில் கழித்தும் அழிகிறது. அதனாலேயே வளமாக்கியாய் நிலத்தில் இடப்படும் நைதரசனில் 75 வீதமே பயிருக்குப் பயன்படுகிறது.

**சிவகமலா**

---



எங்கள் மண்ணில் தனிப்பெரும் வளங்களில் முதன்மையானது பனை. அதுமட்டுமல்ல எங்கள் வாழ்க்கையின் குறியீடு பனைதான்.

எத்தகைய இடர் வந்தாலும் தமிழ் மக்கள் தலைவணங்காது தங்கள் சொந்த மண்ணில் தனித்துவமாக வாழுகின்றார்கள் என்றால் அதற்கு பனையும் ஒரு காரணம் தான்.

பொருண்மிய வாசல்

# எங்கள் பொருண்மிய வளம்

**சிதம்பரதிரு**

ஆனால் தமிழ் மண் எங்கும் நிற்கிற நிறைந்துள்ள பனை மரங்கள் கடந்த இருபது வருடயுத்தத்தால் அழிக்கப்பட்டுள்ளன.

எம்மையும் எமது மண்ணையும் ஆக்கிரமிக்க முனைந்த சிங்கள அரசும் அதன் இராணுவம் என்றால் என்ன. இந்திய இராணுவம் என்றால் என்ன. எங்கள் பொருண்மிய வளங்களை அழித்தது போல பனை மரங்களையும் அழித்து வந்துள்ளன.

பல லட்சம் பனை மரங்கள் தமிழ் மக்கள் வாழும் பிரதேசம் எங்கும் அழிக்கப்பட்டுள்ளன.

பனை மரங்கள் அழிப்பு எங்களைப் பொறுத்தவரை என்பது பொருண்மிய இழப்பினை ஏற்படுத்தக் கூடியது.

பலவிதமான பயன்களைத் தரக் கூடிய பனை வளத்தை நாங்கள் அழியவிடக் கூடாது என்பதை யாவரும் உணர்வோம்.

எனவே அழிக்கப்பட்ட/ அழிக்கப்படுகின்ற பனைகளுக்காக நாங்கள் பனைவிதை நடுகையை மேற்கொள்ள வேண்டும்.

எதிர்வரும் ஐப்பசி, கார்த்திகை மாதங்கள் பனம் விதை நடுகைக்குரிய மாதங்களாகும். எனவே பனம் விதை நடுகையை மேற்கொள்ள வேண்டிய ஆரம்ப நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவசியமாகிறது.

(சி-10044)

---

(14 பக்கத் தொடர்ச்சி)

தங்கச்சி இப்ப ஆமி வந்தால் என்ன செய்வியள் என கேட்டாலே கோபம் தலைக்கேறிவிடும்.
இப்ப வந்தானென்றாள் சுட்டுவிட்டுத்தான் சாவன் என்பாள்.

தங்கச்சி சமாதானம் வந்தாப்பிறகு உனக்கு பக்கத்தில ஆமி வந்தால் என்ன செய்வியள் என்று மேலும் சீண்டினால்.

லெப்.விவேக்காவிற்கு மனதில் ஆறாத வடுவாகி உருவெடுத்தது. மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் முஸ்லிம் சகோதரர் கள் தமிழ்மக்களுக்கு எதிராக மேற்கொண்ட கொடூரமான நடவடிக் கையே.

கூடி வாழ்ந்தவர்களே இப்படிச்செய்துவிட்டார்களே என்று கவலைப்பட்டு சிலவேளை கதறி அழுதுவிடுவாள். நாளுக்கு நாள் முஸ்லிம் காடையர்கள் கட்டவிழ்ந்து விட்ட வன்செயல்களால் நடக்கும் சம்பவங்களை அடியோடு வெறுத்தாள். அந்தச்சம்பவங்களை யாராவது சொன்னால் அதை கேட்கத் திராணியற்றவளாய் தனது காதுகளைப் பொத்திக்கொள்வாள்.

அவளது சிந்தனைகளெல்லாம் புதுப்புது புரட்சி கவிதைகளாக எழுதப்படும் சிலவற்றை கிடைக்கும் சந்தர்ப்பங்களில் உணர்ச்சி ததும்பி வாசிப்பாள். சில வரிகள் அவளுடனேயே உறங்கிப் போய்விட்டன.

91ஆம் ஆண்டின் மத்தியகாலப்பகுதியில் 09-04-91 அன்று காடுகளுக்குள் புகுந்துவிட்ட எதிரியானவன் சில போராளிகளின் வீரச்சாவிற்கு காரணமாயிருந்தான். அவர்களின் உடலையும் கைப்பற்றி புலிகளுக்கு பொறி அமைத்து காத்திருந்தான். காலை உக்கிரமான சண்டை நடந்தது. அந்தச் சண்டையில் உதவிச்சூடுகளை வழங்குவதிலும், உலங்கு வானூர்திகள் மீது தாக்குவதிலும் விவேக்கா ஈடுபட்டாள்.

உலங்கு வானூர்திகள் மேல் தாக்குதலை நடத்திக் கொண்டிருந்த போராளி ரஜனியின் ஜீ.பீ.எம்.ஜீ துப்பாக்கியை வாங்கித் தானும் சுட்டுப்பார்க்க தவறவில்லை. இப்படியாகத் தான் அவளது போராட்ட காலங்கள் சுறுசுறுப்பாக நகர்ந்து கொண்டிருந்தது.

12-09-91இல் நடந்த சித்தாண்டி பொலிஸ் நிலைய தாக்குதலிலும் குறிப்பிடக்கூடிய சண்டையை செய்தவள் தொடர்ந்து 25-06-92இல் பொலநறுவை சிங்கபுர இராணுவத்தினரை தாக்கச் சென்றபோது எதிரியின் வருகையை எதிர் பார்த்துக் கொண்டிருக்க நாம் எதிர்பார்த்ததிற்கு மாறாக எதிரி நகரத்தொடங்கிவிட்டான். திடீரென விவேக்காவின் பக்கமாக ஒரு வெடிச்சத்தம் கேட்க திரும்பிப்பார்த்தோம். சந்தேகத்தில் நாய் காட்டிய பாதையை பின்தொடர்ந்து சென்ற எதிரி ஒருவனை அதே பற்றையில் விவேகா சுட்டுவிட்டாள்.

எதிரி எதுவித மூச்சும் இன்றி வீழ்ந்துவிட்டான். நாய் குரைத்துக்கொண்டே ஓடத்தொடங்கியது. சில விநாடிகள் அதிர்ச்சியும். அமைதியுமாக எங்களது அணிகள் திகைத்துநிற்க. எதிரி பலபேர் சத்தங்கேட்டபக்கமாக ஓடிவந்துகொண்டிருக்க, சண்டை தொடங்க வேண்டிய இடத்தில் தொடங்கிவிடவே, எங்களது துப்பாக்கிகள் எதிரியை இலகுவாக தாக்கத்தொடங்கியது.

பார்க்கக்கூடிய தூரத்தில் விவேக்கா சுட்டுச்சுட்டு முன்னேறினாள் நாம் எதிர்பார்த்தது போலவே சண்டை வெற்றிபெற்றது எல்லோரும் திரும்பிவந்து மீண்டும் எம்மை தயார் படுத்தியவர்களாய் எதிரியை தாக்கச்செல்கின்றோம்.

வழமை போலவே விவேக்கா எல்லோரிடமும் விடை பெறுகிறாள். போயிட்டு வாறன், போயிட்டுவாறன் என்று சொன்னபடியே செல்பவளை வழமைபோலவே களம் வரவேற்கிறது.

03-08-92இல் கரடியனாற்றில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் காவல் சுற்றுலாவிற்கென வந்துகொண்டிருந்த வேளை. இடைமறித்து தாக்குதல் தொடங்கப்பட்டது. எதிர் பார்த்திராத எதிரி எம்மைக்கண்டு அதிர்ச்சியடைந்தான். அவன் அதிர்ச் சியிலிருந்து மீள்வதற்குள் எமது துப்பாக்கிகள் முந்திக்கொண்டு அவர்களைத் தாக்கத்தொடங்கியது. விவேக்கா அவளது எம்.70 துப்பாக்கியால் சுட்டுக்கொண்டே முன்னேற எதிரியும் எதிர்த்தாக்குதலை தொடர்ந்து கொண்டிருந்தான்.

ஆனால் எல்லோரும் இடைவிடாது தாக்கிக் கொண்டிருக்க விவேக்காவின் தாக்குதல் எதிரிக்கு கடுமையான சேதத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். எதிரியில் ஒருவனோ? இருவனோ? செத்திருக்க வேண்டும் எனவேதான் எதிரி மூர்க்கத்தனமாக தாக்கிக்கொண்டிருந்தான். அத்துமீறியவனுக்கு அபராதம் என கவிதை பாடியவள் களத்திலே நிசமாகவே எதிரிக்கு அபராதம் கொடுத்துவிட்டு முன்னேறிக்கொண்டிருக்க.

எதிரியின் நடுத்தர இயந்திரத் துப்பாக்கி ஒன்று மூர்க்கமாக தனது அனல் நாக்கை கக்கத்தொடங்கியது. லெப். விவேக்காவும், லெப். நிலாந்தியும் எதிரியின் குண்டுபட்டு மண்ணை முத்தமிட்டு விட்டார்கள். இலட்சியத்துடிப்புடன் ஓய்வில்லாது இயங்கிக் கொண்டிருந்த எங்கள் காவியம் மண்ணில் கரைந்துபோனது ஆனால் அவளின் களக்கவிதைகள் இன்னும் வாழ்ந்துகொண்டே இருக்கிறது. அதில் சில வரிகள் உயிர்ப்புடனேயே இருக்கிறது.

துடிப்பான என் இளமையில்.
துடி துடித்த என் இலட்சியத்தாகத்தில்
துரு துருத்த கைகளால் உனை
என்று தொட்டேனோ!
என் கருவியே!
அன்றிலிருந்தே நான் துணிந்து விட்டேன்
எதிரியை கொல்வதற்கு!

---


(11 பக்கத் தொடர்ச்சி)

சங்க நாதம் எனும் நிகழ்ச்சி இன்றுவரைக்கும் அங்கம் நான்கு, என மலர்ந்துள்ளது. சங்கநாதம் ஒரு புரட்சி என்றுதான் கூற வேண்டும் அதாவது தற்கால உலகை ஆட்டிவித்துக்கொண்டு சமூக சீரழிவுகளை உருவாக்கிவரும் சினிமா மோகத்திற்கு ஒரு அடியாகவே, இந்த சங்கநாதம் அமைந்துள்ளது.

சினிமாவைப்பார்த்து சினிமா மோகம் கொண்டு சினிமாவை ரசித்துக்கொண்டு, சினிமாவிலே மூழ்கிப்போய் இருக்கும் இளம் சமுதாயங்களைத் திசைதிருப்பும் வகையில் நான் விடுதலைப் போராட்டத்தின் சில எழுச்சிப் பாடல்களை தெரிவு செய்து அதாவது தாயகப் பாடல்களை எடுத்து ஓரளவு நவீனபாணியில் அந்தப்பாடல்களில் வருகின்ற கவி வடிவங்களுக்கு உயிர்கொடுத்து தரம் வாய்ந்த கலைஞர்களை உள்வாங்கி அரங்க அமைப்பில் மிகக்கூடிய கவனம் செலுத்தி எல்லா மக்களும் ரசிக்கும் வகையில் அதனை, நெறியாள்கை செய்து இன்றுவரை நானூறிற்கு மேற்பட்ட (400) மேடைகளில் அரங்கேற்றம் செய்துள்ளேன், இம்மாதம் யாழ் நல்லூர் ஆலய உற்சவகாலத்தில் புலிகளின்குரல் வானொலியின், கேணல் கிட்டு, தியாகி லெப்கேணல் திலீபன் ஞாபகார்த்த சிறப்பு முத்தமிழ் கலையரங்க நிகழ்வினை கடந்த 11.09.2004 முதல் 15.09.2004 வரையும் ஒழுங்குபடுத்தியிருந்தது. இச்சிறப்பு முத்தமிழ் கலையரங்க நிகழ்வில் இருநாட்கள் சங்கநாதம் நிகழ்வு இடம் பெற்றிருந்தும் பல்லாயிரக் கணக்கான ரசிகர்களைக் கவர்ந்த இச்சங்க நாதத்தினை ஏராளமான ஆர்வலர்கள் மீண்டும் போடும்படியும் தமது பிரதேசங்களில் பிரதேச ரீதியாக அரங்கேற்றுமாறும் கேட்டிருந்தனர்.

இச்சங்கநாதமானது பெரும்புரட்சியினையும் பெரிய ஒரு வெற்றியையும் பெற்றுத் தந்திருக்கின்றது. இச்சங்கநாத நிகழ்வு மல்லாவியில் 20 கலைஞர்களை கொண்டு ஒரு பலப் பரீட்சையாக ஆரம்பிக்கப்பட்டது. அதாவது, எனது நீண்டநாள் ஆசை அதாவது தேனிசை செல்லப்பா அவர்களின் பாடல்களைத் தொகுத்து ஒரு நிகழ்வாக உருவாக்க வேண்டும் என்ற நீண்டநாள் ஆசை இருந்து வந்தது அதனை கருத்தில் கொண்டு முதல் தடவையாக 5பாடல்களை தெரிவுசெய்து அந்தப் பாடல்களின் கவி வடிவிற்கு ஏற்ப அசைவுகளை ஏற்படுத்தி, மல்லாவியின் திறந்தவெளி அரங்கில் அரங்கேற்றம் செய்திருந்தேன்.

முதன் முதலாக மேடை யேற்றப்பட்ட சங்கநாதம் நிகழ்வு பல ரசிகர்களின் ஆதரவைப் பெற்று மீண்டும் ஒரு தடவை, மேடையேற்றும்படி கேட்டதற்கு இணங்க அடுத்த நாள் மீளவும் மேடை யேற்றப்பட்டது. தொடர்ந்து புதுக்குடியிருப்பு முள்ளியவளை, பாலிநகர், வட்டக்கச்சி, விசுவமடு என சகலபிரதேசங்களிலும் மேடை யேற்றப்பட்டு பல்லாயிரக்கணக்கான ரசிகர்களின் உள்ளத்தில் இடம்பிடித்துக் கொண்டுள்ளது. அதே மாதிரி. இவ் அரங்க நிகழ்வு தொடர்ந்தும் அரங்கேற்றப்பட்டு வருகின்றது. இச்சங்கநாதம் நிகழ்வானது அங்கம் 01, அங்கம் 02, அங்கம் 03, அங்கம் 04 எனபகுதி பகுதியாக மேடையேற்றப்பட்டு வருகின்றது.




வணக்கம் எல்லாருக்கும்! உங்கட சுகங்களை விசாரிக்க முதல் உங்களை நான் கேக்கோணும்; என்னமாதிரி சின்னமுத்து, ருபெல்லா ஊசியள் எல்லாம் போட்டீட்டாங்களோ? என்ர குஞ்சுகள், தயவுசெய்து சும்மா ஆவெண்டு கொண்டு கிடவாமல், உதுகளைப் போய்ப் போடுங்கோ! நீங்களெல்லாம் நூறு வருசம் வாழிறதை என்ர இந்த இரண்டு கண்ணாலயும் பார்த்துக்கொண்டு நிம்மதியா நான் சாகோணும்! அதுக்கு நானும் ஒரு 150 மட்டும் எண்டாலும் இருக்கோணும் எண்டிட்டுத்தான், ஒரு பாதுகாப்புக்குப் போட்டு வைப்போம், என்ன குறைஞ்சிது எண்டு அங்கை போனால், என்ர வயசுக்குத் தேவையில்லையாம்! 'உந்த வயசில உவர் எல்லாம் வந்திட்டாரோ வெளிக்கிட்டு!' எண்டமாதிரி அந்த இளசுகளுக்கு ஒரு நக்கல் சிரிப்பு வேற! உப்பிடித்தான் பாருங்கோ உலகம்! 'காவோலை விழ குருத்தோலை சிரிக்குமாம்!'

ஆனால் காவோலை, குருத்தோலை எண்டு எல்லா ஓலையும் சிரிக்கிற சம்பவங்களும் உலகத்தில நடக்கிதுதான். நீங்கள் நினைப்பியள் சுப்பிரமணிய சுவாமியின்ர கதை ஏதோ சொல்லப்போறன் எண்டு. அது பாவம் மனுசன்; ஆகலும் முத்தீட்டுதாம். என்ன இருந்தாலும் புத்தி பேதலிச்சிருக்கிற ஆக்களைப் பற்றி நாங்கள் கிண்டல் பண்ணக்கூடாது. ஆரிட்டையாவது சுத்தமான புளியெண்ணெய் கையில இருந்தால், கோடி புண்ணியம் அந்த மனுசனுக்கு அனுப்பிவிடுங்கோ! ஐயோ நான் சொல்ல வந்த விசயத்தை விட்டிட்டன். எங்கட பக்கத்து நாட்டின்ர கடலுக்குப் பொறுப்பானவர் இலங்கைக்கு விஜயம் செய்தவர் எல்லோ! அப்ப அவர் சொல்லியிருக்கிறார் "மீண்டுமொரு யுத்தம் ஏற்படாமல் இருப்பதற்கான சகல நடவடிக்கைகளிலும் இரு தரப்பும் உறுதியாக இருக்கவேண்டும்", எண்டு. சரி எங்கட தரப்பு உறுதியா இருக்கு! ஆனால், நீங்கள் சமாதானப் பேச்சு வார்த்தைக்கு உங்கட நாட்டில இடம் தராத 'காந்திய ஊற்றுக்கள்',ஏதோ வேற வழியில்லாமல் பேசித்தான் ஆகவேணும் எண்ட நிலமையில இருக்கிற சிங்கள அரசுக்கு, இராணுவ உதவியளைச் செய்துகொண்டு என்னெண்டு உப்பிடிப் போதிக்கலாம்? கடலுக்குப் பொறுப்பானவர் நல்லா சிறிலங்காத் 'தண்ணி'யில ஆழமா நிண்டு கொண்டு சொன்னாரோ தெரியேல்லை. பத்தாக்குறைக்கு 250 மில்லியன் அமெரிக்க டொலர் உதவியின் படி ஹெலி இறங்கி ஏறக்கூடிய யுத்தக்கப்பல் குடுக்கப் போயினமாம்! உதிலை ஒரு கொஞ்சக் காசெடுத்து கும்பகோணத்தில ஒழுங்காக் கூரை போட்டுக் குடுத்திருந்தால், அந்த 90 குஞ்சுகளும் கருகியிருக்காது.

பள்ளிக்கூடத்துக் கூரையை ஒழுங்காப்போட்டு அந்தச் சின்னஞ்சிறுசுகளைக் காப்பாற்றிறதைவிட்டுட்டு, இஞ்ச எங்களைப் பலி எடுக்கிறதுக்கு உதவி செய்ய வெளிக்கிட்டாச்சு! உங்கட பாரதி பாடின "முப்பது கோடியும் வாழ்வோம்-வீழில் முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்...." வரிகள் எங்களுக்கு நல்லாப்பிடிச்ச வரிகள். ஏன் எங்கட பெண் கவிஞர் ஒரு ஆள் சொல்லிறா "...உடல் சிதறிக்கிடந்த இரத்தப்பூக்களை எரிக்கையில், புதைக்கையில் எம் விழி வழி வழிந்தது கண்ணீரல்ல-நெருப்பு....," எண்டு. எங்கட மண்ணில சுதந்திரமா வாழோணும் எண்டு எங்களுக்கிருக்கிற அதே மாதிரித் தாகம், இலட்சியம் தான் உங்களிட்டையும் 1947 வரைக்கும் இருந்திச்சு. அதை ஏன் அடிக்கடி மறக்கிறியள்? உப்பிடித்தான் அண்டைக்கு ரீவியில பேட்டி ஒண்டு. ஜம்மு-ஹாஸ்மீர் போராட்டக்குழுவைச் சேர்ந்த ஒருத்தரை இந்தியாக்கார நிருபர் ஒருத்தர் கேட்கிறார், "இந்தியாவோடு இணைக்கப்பட்டு 50 வருசங்கள் ஆனாப்பிறகும், சுதந்திரம் வேணுமெண்டு விடாப்பிடியா நிற்கிறதில ஏதாவது அர்த்தம் இருக்கோ?" பேட்டி கண்டவர் 400 வருசமா ஐரோப்பிய ஆதிக்கத்துக்குள்ள இருந்து தொடர்ச்சியான கடும் பிரயத்தனங்கள், போராட்டங்கள், உயிர்ப்பலிகள் மூலமா சுதந்திரத்தை ஈட்டிக் கொண்ட நாட்டின் குடிமகன் தான்! நாங்கள் பட்ட வேதனையை, அடுத்தவனும் படேக்கிள்ளை அதுக்காக குறைஞ்சது நாங்கள் இரங்கவேணும். அதை விட்டிட்டு இதயம் இல்லாத மாதிரி ஓரவஞ்சகப் போதனை செய்யக்கூடாது!

மற்றது பாருங்கோ ஒரு முக்கியமான விசயம். புத்தபிரான் அருளின போதனையளை நீங்கள் அறிஞ்சிருப்பீங்கள். அப்பிடி அறியாத ஆக்கள் புத்தகங்களை எடுத்துப் படிச்சறியலாம். ஆனால், புத்தர் சொல்லியிருக்காட்டியும், எங்கட சிங்களப் பிக்குமார் ஒரேயொரு நல்ல காரியமும் வாழ்க்கையில செய்திருக்கினம். அதை நாங்களும் அறிஞ்சு, உணர்ந்து பின்பற்றோணும் எண்டிறது என்ர விருப்பம். அமெரிக்காவில எடுத்த 'ஹொலிவுட் புத்தர்' எண்ட ஆங்கிலப்பட விளம்பரத்தில புத்தரின்ர தலையில ஒரு ஆள் உட்கார்த்திருக்கிற மாதிரி ஒரு காட்சி. அது புத்தமதத்தைப் பின்பற்றிற ஆக்களின்ரை உணர்வுகளை அவமதிக்கிற மாதிரி இருந்ததால, அப்படியான காட்சியளை நீக்கோணும் எண்டு பிக்குமார் கொழும்பில ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கினம். இங்கிலாந்தில இருக்கிற ஒரு நிறுவனம் 'பிக்கினி' எண்ட நீச்சல் உடையில முருகன்ரை உருவத்தைப் பதிச்சிருக்குது. ஏன் ஈராக்கை ஆக்கிரமிச்ச அமெரிக்காவுக்கு, ஈராக்கின்ர தேசியக்கொடி பிடிக்கேல்லையாம். அப்ப தங்களுக்குப் பிடிச்சமாதிரி (தேசியக் கொடி, sponsoredby Coca Cola எண்டாக்கும்!) ஒரு டிசைன போட வெளிக்கிட, ஒட்டுமொத்த ஈராக் சனமும் வேறுபாடில்லாமல் எதிர்க்கத் தொடங்கிட்டுதாம்! நான் என்ன சொல்லவாறன் எண்டால் எங்கட, தேசிய, குழும அடையாளங்கள், விருப்பு-வெறுப்புகளுக்கு ஒவ்வாத நியாயமில்லாத காரியங்கள் நடக்கேக்கிள்ளை, நாங்கள் துணிஞ்சு அதைத் தட்டிக் கேக்கோணும். ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்களெண்டு ஆராவது ஒழுங்குசெய்தால், பக்கத்தில எண்டால் மட்டும் சும்மா போய் முகத்தைக் காட்டிப்போட்டு வாறதா இருக்கக் கூடாது! எங்களுக்காக ஏதாவது மற்றாக்கள் நிண்டு செய்யேக்கிள்ளை, நாங்களும் நிண்டு கூடமாட ஒத்துழைக்கவேணும். அது தான் பாருங்கோ 'கேடயமா மட்டும் இருக்காமல், வாள் ஆகவும் மாறவேணும்'!

உதே மாதிரித்தான் இன்னுமொரு படம். 'மெல்கிப்சன்'ரை 'The Passions of t he Jesus Christ (யேசு கிறிஸ்துவின் பெருவிருப்பங்கள்) அதில யூத இனத்தைக்கடுமையாக விமர்சிக்கிற கருத்துக்கள் வருகிதெண்டு சொல்லி, உலகம் பூராவுமுள்ள யூத அமைப்புக்கள் கடுமையான விசனம் தெரிவிச்சவை. அவையின்ர பக்கத்தில நியாயம் இருக்கிதோ எண்டிறதுக்கு அப்பால, தங்களுக்கு எதிரா ஒரு கருத்து முன்வைக்கேக்கிள்ளை அவையள் முழுமையா ஒண்டுசேர்ந்து குரல் குடுக்கிற ஓர்மத்தைப் பாருங்கோ! நாங்கள் பொங்கு தமிழ், அடையாள உண்ணாவிரதம், ஊர்வலம் எண்டெல்லாம் செய்தாலும்,இது இன்னும் விரிவுபடுத்தப்படோணும் எண்டு நீங்கள் நினைக்கேல்லையோ! ஒவ்வொரு ஈழத்தவனுக்குள்ளையும், ஈழத்தவளுக்குள்ளேயும் இயக்கம் இருக்குதெண்டு உலகம் உணரக் கூடிய மாதிரி! 'ஒற்றை ஈழவன்/ஈழவளிலே யாராவது கைவைத்தால், உலகம் பூராவும் உள்ள ஈழத்தவர்களும் சுட்டு விரல் நீட்டி, எச்சரித்து எழுவார்கள்', எண்ட எண்ணம் எல்லாருக்கும் வரக் கூடியதாக! ஒட்டு மொத்தமாக எல்லாரும் அணி சேர்ந்து, எல்லாருக்குமாக குரல் கொடுக்கக் கூடியமாதிரி!

எனக்குத்தெரியுது பிள்ளையள்! நீங்கள் எல்லாரும் கனக்கச் செய்யிறியள், நல்ல விசயம்! ஆனால், நாங்கள் இன்னும் என்ன செய்யலாமெண்டு தேடவேணும். சங்கங்களாக, பாடசாலைகளாக, வகுப்புக்களாக ஏன் தனிமனிசனாவே செய்யக்கூடிய விசயங்கள் கனக்க இருக்கு. எங்கட மண்ணின்ர விடுதலைக்கும், நல்வாழ்வுக்கும் முரணானதையெல்லாம் இனம் கண்டு எங்களை மாற்றிக் கொள்ளலாம்! பிழையான கருத்துக்கள் ஊடகங்களில வர்றநேரம், எதிர்த்து உங்கட விளக்கத்தை எழுதுங்கோ. எடுத்துக்காட்டாக பி.பி.சி. தமிழோசையில பேட்டி கொடுக்கிற ஆக்கள் எங்களுக்கெதிரான அநியாயமான கற்பிதங்களை முன்வைச்சால், நீங்கள் பதிலுக்கு ஒரு நாலு மாணவர்கள் சேர்ந்து தமிழோசைக்குக் கடிதம் எழுதலாம் உயர் பாதுகாப்பு (?)வலயம் பற்றியும் கொழும்புப் பத்திரிகைகளுக்கு எழுதலாம். ஆங்கிலப் பத்திரிகைகள் கவனிக்காமல் விடலாம். ஆனால், தமிழ்ப்பத்திரிகைகள் போடுவினம். இப்படி இனத்துக்கான உங்கட குரலை எழுப்பலாம். உங்கட படிப்புகளை ஒரு தேடலோட திறமையாக் கற்றுத் தேர்தலும் போராட்டம் தான்!

அச்சாப்பிள்ளையள், அடிக்கடி அப்பு அரிகண்டம் தாறார் எண்டு நினைக்கப்படாது! நீங்களெல்லாரும நல்லா இருக்கோணுமெண்டுதான் சொல்லிறன். அந்தப்பிள்ளை திலீபன்ர தியாகத்தை நினைச்சுப்பார்க்கிற நாட்கள் இவை. அப்பமாதிரியான அதேயுத்தநிறுத்த சூழல்தான் இப்பையும்! பொறிக்கிடங்குகளை ஆங்காங்கு வைக்கிறதுக்கு, ஆலாய்ப்பறக்கிற வல்லூறுகள் நிறைஞ்ச கால கட்டம். இந்தியா உதவிசெய்யத்தான் வந்ததெண்டு மக்கள் கனபேர் நம்பியிருந்த நேரம். பாரதத்தின்ர உண்மையான நயவஞ்சக முகத்தை எல்லாருக்கும் இனம் காட்டிறதுக்காக, தன்னையே உருக்கிக்கொண்ட எங்கட தியாகி திலீபனின்ர இறுதி மூச்சு எங்களிட்டைக் கேட்டதெல்லாம் என்ன? 'மக்கள் புரட்சி வெடிக்கட்டும்!' எண்டது த்தான். மக்களுக்கான போராட்டம், தனது சகல தளங்களிலும் மக்களின் போராட்டமாக மாறி, எங்கட தலைவரின்ர வழிகாட்டலில நடைபோடவேணும்! நான் சொல்லிறது விளங்குதோ? அதாவது கல்வியும், கருவியும் ஒவ்வொருத்தற்றை கைகளிலையும் தூக்கப்படோணும்.

நான் முதல்ல சொன்ன 'மெல்கிப்சன்ர' படத்தில கதை என்னெண்டால் இறை தூதனாகிய யேசு தன்னைச் சிறைப்பிடிச்சவையிடம் இருந்து, ஏன் தன்னை விடுவிக்க, கடவுள் குடுத்த சக்தியைப் பாவிக்கேல்லை. எத்தினையோ அற்புதங்கள் செய்த அவர் ஏன், சிலுவை முதுகில் சுமத்தப்பட்ட நேரம், தப்பிறதுக்கு ஒரு முயற்சியும் எடுக்கேல்லை? தமிழகச்சினிமாக்காரர் எண்டால் 4 சண்டைக் காட்சியள் எப்பிடியும் போட்டிருப்பினம். இதுகளைப் பற்றி அந்தப்படத்தில கேள்வி எழுப்பியிருக்கினம்.

தன்னுடைய தெய்வ சக்தியைப் பாவிச்சு ஒரு அதிசயத்தை நிகழ்த்தி, தன்ரை உயிரைக் காப்பாற்றிறதை விட, ஆணிகள் நுழைந்து அணுவணுவாய் உயிர் உருக, தான் நேசித்த அந்த மக்களிடையே உயிர் பிரித்திடவே அவர் விரும்பினார்; தன்னுடைய சாவு, தான் நேசித்தவர்களுக்கு ஒளி வழங்கிடுமென்றால், அதையே அவர் தேர்ந்தெடுக்கத் துணிந்தார். அந்தப் புனிதனைக் கொடியவர்களின்பிடிவாதச் சிலுவையில் பலிகொடுத்த போது, அங்கே காலாகாலமாய் நிலவிவந்த 'மனக் கட்டுக்கள்' அவிழ்ந்து, ஒரு மாற்றம் ஏற்பட்டது; மக்கள் புரட்சி வெடித்தது.

சரி பிள்ளையள் வாறன்! முடிஞ்சா அந்தப் படத்தைப் பாருங்கோ! சிலநேரம் தமிழில வந்தாலும் வரும். 26ஆம் திகதி எல்லா வீட்டிலையும் பூவைச்சு வணக்கம் செலுத்துங்கோ! எங்கட அந்தப்பிள்ளையின்ர'உயிர் உருக்கிற உச்சக்கட்டத் தியாகத்திற்கு' பூக்களோட இன்னும் என்னென்ன வைக்கோணும் எண்டு எண்ணப்பாருங்கோ!

---

(19 ஆம் பக்கத்தொடர்ச்சி...)

பழைய குளங்களை ஆழமாக்கும் போதும் இந்தப்பிரச்சினைகள் இருந்தாலும் அவை அதிகம் பாதிப்பைத்தராது. ஏற்கனவே பெருங்குளங்களால் ஏற்படுகின்ற பாதிப்புகள் ஏராளம். சிறுகுளங்களை அமைப்பதற்குப் பதிலாக பெருங்குளங்களை- நீர்ப்பாசனத்துக்காக அமைத்திருப்பதால் பல குடியேற்றத்திட்டங்கள் இன்றும் நீர்ப்பிரச்சினையாலும் ஏனைய வள நெருக்கடியாலும் சிரமப்பட்டுக்கொண்டுதானிருக்கின்றன. குளங்களை ஆதாரமாக வைத்த எந்தக் குடியேற்றத்திட்டமும் அந்த மக்களின் கடினமான உழைப்புக்குரிய பயனைத் தந்ததாக இல்லை. ஏதோ இந்தளவிற்குப் போதும் என்ற நிலையில் ஒருவாறு அவை கிராமங்களாகியிருக்கின்றனவே தவிர அந்தத் திட்டங்கள் அடுத்தகட்ட வளர்ச்சியை நோக்கிப் பயணிக்கவில்லை. இது ஆய்வு பூர்வமாக ஆதாரமானது.

இப்போது புதிதாக குளங்கள் கட்டப்படப் போகின்றன. ஜே.வி.பி விரும்பியோ இல்லையோ தமிழ்ப்பகுதிகளிலும் அடுத்துவரும் ஆண்டுகளில் பல குளங்களைக் கட்டுவதற்கு யப்பான் முன்வந்திருக்கிறது. நியாப், நிகொட் போன்ற தொண்டர் அமைப்புகள் இந்தக் குளம் கட்டும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் முன் நிற்கின்றன.குளங்களைக் கட்டுதல், அவற்றினடியாக வீதிகள் அமைத்தல், வீதிப்புனரமைப்புகள் எல்லாமே அவர்களுடைய ஒருங்கிணைந்த வணிகத்திட்டத்தின் ஏற்பாடுகள்தான்.

விவசாய உற்பத்தியாளர்களாக மட்டும் எங்களை வைத்திருப்பதன்மூலம் ஏற்கனவே இருக்கின்ற சமுதாய அமைப்பின் ஏற்றத்தாழ்வுகள், வளர்ச்சியின்மைகள் எல்லாவற்றோடும் நாங்கள் கிடந்து மாரடிக்கவேண்டியதுதான். விவசாய உற்பத்திமுறை மேற்கில் நவீனமடைந்துவிட்டது. ஆனால், இங்கோ பாரம்பரிய முறையிலான உற்பத்திமுறையும் கண்ணோட்டமுமே இன்றும் உண்டு. விவசாய உற்பத்தி முறையை புதிய உலகத்தின் போக்குக்கேற்ப மாற்றியமைக்கக்கூடிய சுய அனுபவத்தோடும் ஆய்வோடுமான திட்டங்கள் எம்மிடம் இன்னும் வளரவில்லை. சிறுசிறு அளவில் பரீட்சார்த்தமாக வைத்து நகர்த்தப்படும் திட்டங்களை மட்டும் வைத்துப் பெரிய பிரச்சினையை உடன டியாக அணுக முடியாது. பரீட்சார்த்த முயற்சிகளை நடைமுறைப்படுத்துவதற்கும் தொண்டர் நிறுவனங்களின் கைகளை எதிர்பார்த்திருக்கும் நிலையில் எப்படி அவற்றை பரந்த தளத்தில் நடைமுறைச்சாத்தியத்துக்கு கொண்டுபோக இயலும்? இலங்கை முழுவதிலும் இதுதான் நிலைமை. ஆக இப்போது குளங்களைக் கட்டவேண்டாம்; விவசாய உற்பத்திகளைச் செய்யவேண்டாம் என்பதல்ல இதன் பொருள்.

சமநிலையற்ற உற்பத்திப் பொருளாதாரத்தையும் சுரண்டலுக்கு ஏதுவான தொழில்-உழைப்பு முறையையும் வெளியார் எங்களுக்குத் தந்துவிடுகிறார். இப்பொழுது இனாமாக குளத்தைக் கட்டித்தந்துவிட்டு குளத்தைச் சுற்றி எம்மைக் குடியமர்த்திவிடுவார்கள். விவசாயம் சார்ந்த தொழில் முறையிலேயே பெரும் உற்பத்தியைப் பெருக்கவேண்டிய கட்டாயம் எமக்கு ஏற்பட்டுவிடும். அப்படியான பெரும் உற்பத்திக்குரிய இயற்கைச் சேதனவளத்திலிருந்து பலதையும் ஈடுசெய்யக்கூடிய அளவுக்கு அதற்குரிய பொறிமுறை கூட எம்மிடம் இல்லை.

பதிலாக எமது விவசாய உற்பத்திக்கான பசளையைக் கூட அவர்களே தடுப்பார்கள். தங்களுடைய கழிவுப் பொருட்களிலிருந்து தயாரிக்கப்படுகின்ற பசளையை நாங்கள் பாவிப்போம். அவர்களுடைய கழிவுகளையும் எங்களின் மண்ணில் எங்களுடைய காசைப் பெற்றுக்கொண்டு கொட்டிவிட்டுப்போவார்கள். விவசாய உற்பத்தி முறைகளைக்கூட அவர்களே கற்றுத்தரவும் கூடும்.சுதந்திரமாக சிந்திக்கவும்,செயற்படவும் கூடிய வெளியை இல்லாது செய்வதுதான் அவர்களுடைய நோக்கம். தமது நலன்சார்ந்த சிந்தனையின் வெளிப்பாடுகளாகவே இந்தக் குளக்கோட்டன்கள் இன்று இங்கே குளம் கட்ட வந்துள்ளார்கள். நீர்ப்பாசனத்துக்கல்லாமல் , நிலத்தடி நீர்சேகரிப்புக்களை சிறுகுளங்களைக் கட்டும் திட்டத்துக்கு பெரும் ஆர்வத்தை இந்த நாடுகளின் உதவித்திட்டத்தில் காணமுடிய வில்லை. இதிலிருந்தே அவர்களுடைய நோக்கத்தை இனங்காணமுடியும்.

குடிநீர்ப்பிரச்சினை இன்று பெரும் சவாலாக மேலெழுந்திருக்கிறது. எமக்கு நிலத்தடி நீர்மட்டம் வெகுவாகக் குறைந்து வருகிறது. நீரியல் ஆய்வுகள் சரியாக மேற்கொள்ளப்படவில்லை? காணப்பட்ட பிரச்சினைகளுக்கான தீர்வு நோக்கிய செயற்பாடுகளும் துலங்கக்காணோம். அடிப்படைப்பிரச்சினை இப்படியிருக்கும்போது அவசரப்பட்டு பாசன நீருக்கான ஏற்பாடுகளில் ஆர்வம் காட்டுவதன் நோக்கத்தை எப்படி ஆராயாமல் இருக்க முடியும்.

எமது தேசவளத்தில் விவசாயப் பொருளாதாரத்துக்கு கணிசமான பங்குண்டு என்றாலும் இன்றைய உலகவளர்ச்சிப்போக்கில் தனியே அதனுடன் மட்டும் நாம் தேங்கிவிடமுடியாது. கைத்தொழில் துறையை பயில்வதும் அத்தொழிற்றுறையில் வளர்ச்சியடைவதும் இன்று எமக்கு அவசியமானது. கைத்தொழில் சமூகமாதலில் ஏற்படுகின்ற சமூகவிளைவு புதிய சவால்களை ஏற்கக்கூடிய அளவுக்கு எம்மை உயர்த்தும். அதேவேளையில் சுய பொருளாதாரத்திட்டத்தின் பன்முகத்தளத்தில் எங்களை அது நிலைநிறுத்தும். ஒரு காலகட்டத்தில் குளங்களை அமைத்தவர்கள் நாங்கள்-எங்களின் முன்னோர்கள். ஆனால் அது பெரும்பாலும் கிராமிய வாழ்விலும் விவசாயப் பொருளாதாரத்திலும் தங்கியிருந்தகாலம் இன்று அப்படியல்ல. இன்றைய உலகம் வேறானது. இந்த உலகைப் புரிந்துகொள்வதற்கும் ஈடுசெய்வதற்கும் நாங்கள் தயாராகவேண்டும். வேறுயாரும் தயார்ப்படுத்துவதை விட நாங்கள் முயல்வோம். யாருடைய பொறிக்குள்ளும் நாம் சிக்க வேண்டாம்.




# உளவியல் நவீனம்...

**அத்தியாயம்- 03**

**பகுதி -15**

ஆனால் டிப்ஸை ஆராய்வதன் மூலம் மனித நடத்தைகள் பற்றிய புரிந்துணர்வை நீங்கள் சிறிதளவிலாவது முன்னேற்ற முடியுமெனில் நாங்கள் மனப்பூர்வமாக ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம்.

அதை என்னால் நம்பமுடியாமல் தவித்தேன். மிகச் சிறப்பான அறிவியல் சார்ந்த முறையிலே நான் ஆராய்வதற்கென ஏதோ தரவுகளைத் தரப்போகின்றவள் போல் அவள் அங்கே நின்றாள். சிக்கலுக்குள்ளாகியிருக்கிற குழந்தையை...... அவளது பிள்ளையைப் பற்றி பேசுபவளாக தெரியவில்லை.எனக்கு ஒழுங்கு படுத்தப்படாத தரவுகளை தரப்போகின்றவளாகவே அவள் நின்றாள். அந்தத்தரவுகளில் மாற்றங்கள் எதுவும். .....அதாவது நல்ல விதமான மாற்றங்கள் ஏதும் ஏற்படும் என்பதைத் தான் எதிர்பார்க்கவில்லை என்பதைத் தெட்டத் தெளிவாக எனக்கு கூறினாள். டிப்ஸ் பற்றிய முக்கிய விவரங்களை மிகச் சுருக்கமாக அவள் கூறுவதை நான் கேட்டுக் கொண்டிருந்தேன் அவனுடைய பிறந்த திகதி..... மெதுவான முன்னேற்றம்..... வெளிப்படையாக தெரிந்த உளவளக் குறைபாடு.... உடற் கூற்றியல் சார்ந்த எதுவோ பிசகியிருக்க வேண்டும் ...... என்று சொல்லிக்கொண்டே போனாள். கிட்டத்தட்ட ஆடாமல் அசையாமல் அந்த இருக்கையில் அமர்ந்திருந்தாள். மிகுந்த பதட்டத்துக்குள்ளாகியிருந்தாள். ஆனால் மிகுந்த கட்டுப்பாட்டுக்குள் அதனை வைத்திருந்தாள். அவளுடைய முகம் வெளிறிப்போயிருந்தது. நரைத்த அவளது கேசங்கள் நடுவில் வகிடு எடுக்கப்பட்டு கழுத்தின் பின்புறம் முடிந்து விடப்பட்டிருந்தன. இளநீலநிறக்கண்கள். உதடுகள் மெலிந்து மெல்லிய கோடுபோல் தெரிந்தன. இடைக்கிடை பதட்டத்துடன் தன் உதட்டைக்கடித்துக் கொண்டாள். உருக்குச் சாம்பல் நிற ஆடைகளை அணிந்திருந்தாள். மிக எளிமையான ஆனால் சிறப்பானவையாக அவை இருந்தன. கிளர்ச்சியற்ற ஒருவகை அழகைக் கொண்ட பெண்ணாக அவள் தெரிந்தாள்.



அவளது வயதை ஊகிப்பது கடினமானதாக இருந்தது. தனது ஐம்பதுகளில் அவள் இருக்கக்கூடும். ஆனால் அதைவிட மிகவும் இளையவளாகவும் இருக்கட்டும். அவளுடைய பேச்சு நுணுக்கமானதாகவும் புத்திசாலித்தனமானதாகவும் இருந்தது. துணிவுடன் தன் துன்பங்களை எதிர்கொள்ளும் தோற்றத்தை காட்டிக்கொண்டிருந்தாள். ஆனால் அநேகமாக அவளும் டிப்ஸ்ஸைப் போலவே ஆழமானதும் அவலமானது மான துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கலாம்.

அதன்பின்பு அவள் வீட்டின் பின்புறம் இருக்கும் மேல்மாடியில் உள்ள விளையாட்டு அறையில் வைத்து டிப்ஸை ஆராயப்போகிறீர்களா என்று கேட்டாள்.

"அது மேல் மாடியில்..... வீட்டுக்கு பின்னால் இருக்கிறது..... அங்கு உங்களை யாரும் குழப்பவோ தொல்லை தரவோ மாட்டார்கள். அவனிடம் பல விளையாட்டுப் பொருட்கள் இருக்கின்றன. நீங்கள் விரும்பும் அல்லது உங்களுக்குத் தேவையான வேறு பொருட்களையும் நாம் பெற்றுத்தருவோம்" என்றாள் அவள்.

"நன்றி. அப்படி எதுவும் அவசியமில்லை" என்று மறுத்த நான் ,"குழந்தைகளுக்கான வழிகாட்டல் மையத்தில் வைத்தே அவனைப் பார்ப்பதுதான் சிறப்பாக இருக்கும். வாரம் ஒரு முறை , ஒரு மணித்தியாலத்துக்கு அங்கே வரவேண்டும்" என்றேன்.

இந்த ஒழுங்கு அவளுக்கு அதிகம் பிடிக்கவில்லை என்பது வெளிப்படை யாகத் தெரிந்தது. அவள் மீண்டும் முயற்சி செய்தாள். "அவனது அறையில் அழகான விளையாட்டுப் பொருட்கள் இருக்கின்றன. நீங்கள் இங்கே வந்தால் உங்களுக்கு கூடிய கொடுப்பனவுகளைக் கொடுக்க முடியும்". என்று ஆசை காட்டினாள்.

"மன்னித்துக்கொள்ளுங்கள் என்னால் அப்படிச் செய்யமுடியாது" என்று தெரிவித்த நான், "இதில் கொடுப்பனவுகள் எதுவும் இருக்காது." என்றேன்.

"அப்படியா.....ஆனால் எங்களால் உங்களுக்கு கொடுப்பனவுகளைத் தரமுடியும்" என்று அவசர அவசரமாகச் சொன்னவள் "இந்த ஆய்வுக்கென நீங்கள் எதாவது கொடுப்பனவை பெறவேண்டும் என்று விரும்புகிறேன்" என்றாள்.

(தொடரும்....)



# மூடுபனிக்குள் ஒரு தேடல்

மொழியாக்கம் :- வி.பி.யோசப்

---

## நீங்கள்....

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

சரி, பிழைவந்தால் மன்னிப்பு கேட்கிறது. அல்லாமல் அந்த சிற்பத்தை செதுக்கிட்டால், அந்த திறமைவந்திட்டால், ஈழத்தமிழ் வீரத்தை வரலாற்றை வடித்த சிற்பி என்ற பெரிய பெயர் எனக்குவரும். ஈழமண்ணின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் நானும் ஒரு மூலையிலாவது இடம்பிடிச்சிடுவன். நானும் இந்த வரலாற்றில் வாழ வேணும் நீண்டகாலம். அப்ப நான் சாக மாட்டன்.

வீட்டை பார்த்த உடனேயே அசந்து போனார் பாஸ்கரண்ணர். பெரியவீடு கதிரை மேசைகள், மின்சாரம், வெளியில் சிற்பம் செய்வதற்கு சிறிய கொட்டில். நிறைய மரங்கள் நிழல். உள்ளே ஒரு அறையில் இரண்டு இஞ்சிக்கனத்தில் பலகைகள் ஏராளமாய், உளி, வாள், தச்சுவேலைக்குரிய ஆயுதங்கள்.

இவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறானா அன்பன். என்னால் சிற்பம் செய்ய முடியுமா? அந்தக் கலை என்னுள் இருக்கிறதா? அன்பன் அதை என்னில் கண்டு கொண்டானா? ஒரு பிரமாவாகினார். பாஸ்கரண்ணர் வெற்றிலை குதப்பிய படி எந்தச்சிந்தனையுமின்றி சிலை வடிக்கும் சிப்பியானார் மன்னர் காலத்தில்.

"வீடு பிடிச்சிருக்காம் என்று சொல்லு, நாளைக்கே வேலை தொடங்கிடுவனாம் என்று சொல்லு"

உள்ளுக்குள் நெஞ்சு அடித்துக்கொண்டது. பயம் ஒரு முறை தொண்டையை திருகிப் போனது,"மரியாதை போகுமோ காளித் தாயே எனக்கு எல்லாவற்றையும் கற்றுக்கொடம்மா.

எந்தக் கலைஞனும் அப்படித்தான், எதையும் தொடங்கும் போது பயந்துதான் போகிறார்கள். பின்னர் ஆறுகுதிரைகள் பூட்டிய தேரில் பெருமையாய் பவனிவருவார்கள். எப்போதும் எந்தப்பெரிய காரியத்தை செய்த போதும் உள்ளுக்குள் பிச்சைக்காரர்கள் தான், ஆறுவகைக் கறியும் சோறும் அன்றாடம் உண்பவர்கள்.

ஆனையிறவுச் சண்டை தொடங்கினது ஆருக்குமே தெரியாது. சின்ன இராணுவத்தளம்தான். கட்டைக்காட்டுப் பக்கம் இராணுவம் தரையிறங்கியதையும் கட்டுப்படுத்த முடியவில்லை புலிகளால். வீரச்சாவுகளும் இழப்புகளும் அதிகரித்துக் கொண்டிருந்தது. காயப்பட்டவர்கள் நிறைய.

பாஸ்கரண்ணர் அந்தச்சிற்பத்தை அந்தப்படத்தில் உள்ள போராளியின் உருவம் போலவே செதுக்கி முடித்திருந்தார். சந்தோசம் அவருக்கு. ஒரு சிற்பக்கலையின் தலைவாசலில் நுழைந்திருந்தார் அவர் இப்போது. அந்தக்கலையை அதன் முழுமையையும் அறிய அவர் இன்னும் எத்தனையோ சிற்பங்களை செதுக்கியாகவேண்டும். இப்போது ஒரு வெற்றி இதை அன்பனுக்கு காட்டவேண்டும், அவன் கலைஞன், அரசன் சோழச்சிம்மாசனத்தின் தளபதி, என்னை, தமிழை தமிழர்கலைகளை, உலகில் உயர்த்தி வைக்கப் போகும் உயர் கலைஞன்.

எல்லாம் முடிந்துவிட்டது இந்தச் சிற்பத்தின் காதுப்பகுதி மட்டும் சரிவராமல் இருக்கிறது. அந்தச் சைக்கிள் கம்பி உளியால் அதை சீர் செய்துகொண்டிருந்தான்.

"ஐயோ கடவுளே" உளி காதின் கீழ் பகுதியை பொத்துக் கொண்டு போய்விட்டது. அவசரம், அவசரம் பொறுமை இல்லாதவன் நான். பேந்தேனடா இதை செய்யப் போனாய் தனக்குத்தானே தலையில் குட்டிக்கொண்டார்.

இனி ஆரம்பத்தில் இருந்து படம் வரைந்து மெல்லமெல்ல உளியடித்து இன்னும் எத்தனை நாள் வேணும். இதேபோல அதுவருமா? அழுகையேவந்துவிட்டது. இனி என்னசெய்கிறது இதை அப்படியே கொண்டுபோய் அன்பனிடம் கொடுப்போம் பிழை என்றால் திருப்பிச்செய்வோம்.

அன்பனும் ஆனையிறவுச் சண்டைக்கு போனவனாம் நல்ல காயமாம். ஆஸ்பத்திரியில் இன்னமும் கண்திறவாமல் கிடக்கிறானாம். பாஸ்கரண்ணனுக்கு பேரிடி ஐயோ காளித்தாயே அவன் சாகக்கூடாதம்மா இது அவனுக்காக செய்தசிற்பம் இதை அவனுக்கு காட்டும் வரைக்கும். அவன் சாகக்கூடாது ஓடினார்.

அன்பன் செத்துப்போய் விட்டால் நிச்சயமாய் இந்தக்கலையும் அவனோடு போய்விடும். இதற்கு வாழ்வு தர வேறெவர் இருக்கிறார்கள். எங்கள் வாழ்வு சிற்பமாகுமா? கடவுளே அவன் சாகக்கூடாது.

ஆஸ்பத்திரி வாசலில் நிறையச்சனம், காயப்பட்டவரை ஏற்றிக்கொண்டு வாகனங்கள் வந்தபடி, வீரச்சாவடைந்தவர்களின் உடல்கள் பெட்டிகளில் வாகனங்களில் ஏற்றியபடி. அந்தத் துயரத்தில் தோய்ந்துபோனார் பாஸ்கரண்ணர். மனதைப்பிழிந்தது அந்தக்காட்சிகள். இரவின் மஞ்சள் நிலவின் மணப்பயம். சோழகக் காற்றின் வெம்மை உலகமே முடிந்துவிடப்போகிறதென்கிற கடைசிப்பயம். எல்லாப்பக்கமும் மனம் உளைந்தது. அந்த உளைவு அத்தனையும் ஒரு சிற்பமாய் மனதில் பதிந்தேவிட்டது அவர் கலைஞர்.

கட்டிலில் நிறையக் கட்டுகளோடு படுத்திருந்தான் அன்பன். கண்திறக்கவில்லை இன்னும் அவன். "அவன் கண்திறக்கவேண்டும் காளித்தாயே" சுற்றிவர உறவினர்கள் அவனோடு பழகியவர்கள் நிறைய. கண்களில் கண்ணீருடன்.

மெதுவாய் சிற்பம் சுற்றி வைக்கப்பட்டிருந்த பையைத்திறந்து, அப்படியே அவனது கட்டில் கால் மாட்டின் கம்பியில் வைத்து நிமிர்த்தினார். அவன் எழுந்தவுடன் பார்க்க வேண்டும். அவன் எழும்புவதாயில்லை ஒருக்கா எழும்பிப்பாரடா கெஞ்சினார் மனதில். தாதி ஒருவர் வந்து பேசிவிட்டு போனார். "என்னண்ண உந்தப் பலகையை இதில வச்சுக்கொண்டு நிக்கிறியள் இறங்குங்கோ கீழே" ஒரு பயித்தியக்காரன் மாதிரித் தெரிந்தார் பாஸ்கரண்ணன்.

அன்பனைப் பார்க்க வந்த ஒரு அம்மா சிற்பத்தைப்பார்த்துவிட்டு கொஞ்சநேரம் கிட்டவந்து உற்றுப் பார்த்தார். அவரின் பார்வை சிற்பத்தின் காதில்போய் நின்றது.

சே.பிழை விட்டுட்டன் அந்த அம்மாவுக்கு அந்தக் காதுப் பிழை தெரிஞ்சு போச்சுது. அன்பனும் எழும்பினால் அதைத்தான் பார்க்கப்போறான். அவனுக்கு அது உடன தெரியும், திருப்பிக்கொண்டு போவமோ? யோசிப்பதற்கிடையில் அந்த அம்மா விக்கி விக்கி அழத் தொடங்கிவிட்டார். என்ர பிள்ளை சாகேல்ல உயிரோடதான் இருக்கிறான். அவன் எப்பவும் இருப்பான். மற்றவர்களுக்கு சிற்பத்தை காட்டி "என்ரமகன்" என்றார். பாஸ்கரண்ணனை ஒருமுறை கட்டிப்பிடித்துக் கொஞ்சினார். சந்தோசமும் அழுகையும் பாஸ்கரண்ணனுக்கு "சே அந்தக் காதையும் வடிவா செய்யாமல் விட்டுட்டனே."

அன்பனின் அசைவு மெல்லத் தெரிந்தது. எல்லோரும் அவனுக்குக்கிட்டே ஓடினார்கள். எல்லோருக்குமே அவன் பிழைத்து விட்டான் என்கிற சந்தோசம், பாஸ்கரண்ணனுக்கும்தான். ஆனாலும் இன்னமும் அவர் அவனுடைய கால்மாட்டில் சிற்பத்துடன் நின்று கொண்டிருந்தார்.

அவன்முதலில் கூப்பிட்டது பாஸ்கரண்ணனைத்தான். ஓடிப்போய் அவர் செய்தவேலை அவனுக்கு முன்னால் சிற்பத்தைப்பிடித்ததுதான். எல்லோருமே அவரை ஒரு பயித்தியக்காரன் என்று நினைத்திருப்பார்கள். அன்பனையும் இவன் என்னடா என்று நினைத்திருக்கலாம்.

உயிர் பிழைத்தவனுக்கு முன்னால் போய் சிற்பத்தை தூக்கிப் பிடிக்கிறான் இவன். அவனும் அதையே பார்த்துக்கொண்டிருக்கிறான்.

சிற்பத்தை ஆராய்ந்த அன்பனின் கண்கள் நேரே அந்தக் காதில் போய் நின்றது. பேயன் நான் இவன் இதைக் கவனிப்பான் என்று தெரிஞ்சும் இன்னொருக்கா அதைத் திருப்பிச் செய்திருக்கலாம் என்று நினைத்தார் பாஸ்கரண்ணர்.

அன்பன் கிட்டக்கூப்பிட்டான் அவரை. தன்னுடைய காதை அவனுக்குக் கிட்டவாய்க் கொண்டு போனார் பாஸ்கரண்ணர். தன் சக்தி முழுவதையும் திரட்டி மெதுவாய்ச் சொன்னான், "அண்ண அவனுடைய காது இப்பிடித்தான் என்று உங்களுக்கு என்னண்டு தெரியும். ஆரும் உங்களுக்கு சொன்னவங்களே? நான் படத்தில கூட இப்படிக்கீறவில்லை. ஆனா அவனுடைய காதை அப்படியே செய்திருக்கிறியள். "அது தற்செயலாய் அன்பன் அவரைப் பேச விடவில்லை."


ஈழத்தமிழனும் சிற்பக் கலையில் வல்லவன்தான். அவனுயடைவீரத்தை அடுத்தசந்ததியும் உலகமும் அறியத்தான் போகுது சிற்பங்களுக்கூடாகவும்.

"அண்ண நீங்கள் சிற்பிதான்."

பாஸ்கரண்ணர் வானத்துக்கும் பூமிக்கு மொருமுறை குதித்தார், சோழச்சக்கரவர்த்தி பத்தாயிரம் பொற்காசுகளை நீட்டிக் கொண்டிருந்தார் தாம்பாளத்தில். ●

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*



# பாவலன் பதில்கள்

*பாவலரே!*

*அவுஸ்திரேலியா அணியின் விமர்சனங்கள் இலங்கை அணியின் வளர்ச்சியைப் பாதிக்குமா?*

**இ.குமார்.**
**புளியம்பொக்கணை.**

பொறாமை, காழ்ப்புணர்ச்சி, அதீத மேதாவித்தனம், கொண்டோரின் விமர்சனங்களுக்கு மதிப்பளித்தலோ, பயப்படுதலோ வளர்ந்து வரும் ஒருவரின் எழுச்சிக்கும் தன்னம்பிக்கைக்கும் பாதிப்பையே ஏற்படுத்தும். விவேகமும், வீரமும் விமர்சக தடைக்கற்களைப் பற்றி கருத்தில் கொள்வதே கிடையாது.

*பாவலா!*

*புத்தர் வாழ்ந்த பூமியில் இரத்தம் சிந்தலாமா?*

**தி.ஆதவன்.**
**புலுமச்சிநாதகுளம்.**

புத்தம் சரணம் கச்சாமி என்று ஒலிக்க வேண்டிய குரல்கள் யுத்தம் சரணம் கச்சாமி என ஒலித்தால் என்ன செய்வதாம்?

*பாவலரே!*

*தேசியத்தலைவரை அம்மையார் சந்தித்தால் இனப்பிரச்சினைக்கு தீர்வு வந்து விடுமாமே?*

**கி.ஸ்ரீதர்.**
**உடையார்கட்டு.**

முற்றிய பேரினவாத நோயால் பீடிக்கப்பட்டவர் தமிழ் தேசிய வாதத்தை ஏற்றுக்கொள்ளவே மாட்டார்.

*பாவலா!*

*சிலர் வளர்ந்த அளவிற்கு மூளை வளரவில்லையே ஏன்?*

**மு.வ.சுதா.**
**பரந்தன்.**

ஆளும் வளர்ந்து, அறிவும் வளர்ந்தும் சிலருள் ஆணவமும் வளர்ந்து மனிதம் மட்டும் வளராத தன்மையைப் பார்க்கும் போது இது பரவாயில்லைப் போல் தெரிகிறது.

*அன்பின் பாவலரே!*

*வணக்கம்! கிளிநொச்சிக்கு மின்சாரம் வரப்போகிறதாம். 2005 பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் பெறுபேறுகள் பற்றி நீர் என்ன நினைக்கிறீர், பதில் தாரும் பாவலரே.*

**நிதா.**
**இராமநாதபுரம்.**

மின்சாரம் வெளிச்சத்தைக் கொண்டுவரும்... அறிவொளியை மாணவர்களின் கற்கைத் திறன் மட்டுமே ஏற்படுத்தும்.

*அன்பின் பாவலரே!*

*A9 வீதியில், மேல் நாட்டு உடைகள் அணிந்து திரியும் இளைஞர், யுவதிகள் பற்றி நீர் என்ன நினைக்கிறீர்?*

**ப.ஆயிலி.**
**இராமநாதபுரம்.**

மேல் நாட்டு உடையணிந்தால் தான் தம்மை மற்றவர்கள் மேலானவர்கள் என நினைப்பார்கள் என்று அவர்கள் கருதுகிறார்கள் போலும்.

*அன்பின் பாவலரே!*

*இளம் விதவைப் பெண்களுக்கு மறுவாழ்வு கொடுப்பது போல் இப்பொழுது தமிழீழ நாடகங்களிலும், சிறுகதைகளிலும் வெளிவருகின்றனவே, இவை எல்லாம் சொல்லளவில்தானா? அல்லது செயல்வடிவில் அப்பெண்களுக்கு ஒளி கிடைக்குமா? உங்கள் கருத்து என்ன?*

**அ.அனு.**
**கிளிநொச்சி.**

கருத்து விதைக்கப்படுகிறது. அவ்வளவுதான். இந்தக் கருத்து விதை வெறும் நாடகக் கருவாகவும், கதையாகவும் மட்டும் இருக்கக் கூடாது என்பதே விருப்பம்.

*பாவலரே!*

*இன்றைய இளைய சமுதாயம் சினிமா என்னும் கொடிய யுகத்தில் மூழ்கிக்கொண்டிருக்கிறார்கள். இவர்களைக் காப்பாற்ற வழி கூறும் பாவலரே?*

**தே.ஆரணி.**
**மல்லாவி.**

சீனிக்கும் மாவுக்கும் தட்டுப்பாடு வந்தாலும் இந்த சினி மாவுக்குத் தட்டுப்பாடு இல்லை கட்டுப் பாடுமில்லையே!

*பாவலரே வணக்கம்!*

*சிறிலங்கா படையினர் தற்போது சமாதானப்படையாக வெளிநாடு செல்ல உள்ளனர். இது பற்றி உங்கள் கருத்து என்ன?*

**வே.தமிழ்மாறன்.**
**தம்பகாமம்.**

இந்தியப்படையும் அமைதிப் படையென்று கூறிக்கொண்டுதானே இலங்கைக்குள் நுழைந்தது.!

*பாவலரே!*

*நல்லூர் கந்தன் திருவடியை தரிசித்தீர்களா? சிறப்பாக அமைந்திருந்ததா?*

**சி.பாஸ்கரன்.**
**வவுனியா.**

கந்தன் திருவடியை தரிசிக்கப்போய் சனவெள்ளத்துள் எந்தன் திருவடியில் போட்டிருந்த புதுச் செருப்பை இழக்க வேண்டியதாயிற்று.

*பாவலரே!*

*உங்களுக்கு பாடல்கள் பிடிக்குமா? அண்மையில் வெளியான பாடல்களில் தங்களுக்கு பிடித்த பாடல் எது?*

**கே.முரளி.**
**மன்னார்.**

இசையால் வசமாகா இதயமெது? ஆனால் இப்போதைய பாடல்கள் வசையாக அல்லவா ஒலிக்கின்றன.....

---




## நேற்றைய உலகம்

***எமதர்மராஜன்:–*** யார் அங்கே? இன்று அறுபத்திமூன்று உயிர்களைப் பறித்து வரும்படிதானே கணக்குத்தந்தேன். நீ என்ன ஆயிரக்கணக்கில் கொண்டு வந்திருக்கிறாய்?

***எமதூதன்:–*** உண்மைதான் பிரபு தாங்கள் அறுபத்திமூன்று பேருக்குத்தான் கணக்குத்தந்தீர்கள். ஆனால் நான் பூவுலகம் சென்றபோது அங்கே கிபிர் அடித்ததில் ஆயிரக்கணக்கானோரின் கணக்கு முடிந்து விட்டது. அதுதான் கொண்டு வந்திருக்கிறேன்.

* * *

## இன்றைய உலகம்

***எமதர்மராஜன்:–*** யாரங்கே ஆயுள்கொண்டு வருவதற்காக பூவுலகம் சென்றாய் ஏன் இவ்வளவுதாமதம்?

***எமதூதன்:–*** மன்னிக்க வேண்டும் பிரபு உடனே வந்து விடலாம் என்றுதான் எண்ணினேன் ஆனால் ஆயுள் எடுப்பதற்காக இவன் வீட்டிற்கு சென்றபோது இவன் வீட்டுத் தொலைக்காட்சியில் வேலன் சீரியல் போய்க்கொண்டிருந்தது. பார்த்துக் கொண்டிருந்தேன பொழுது போனதே தெரியவில்லை.

* * *

## நாளைய உலகம்

***எமதர்மராஜன்:–*** யாரங்கே? ஏன் இன்று பூவுலகில் இருந்து எந்த ஆயுளையும் கொண்டு வரவில்லை கடமை செய்கிறாயா? அல்லது கலியாட்டம் நடத்துகிறாயா?

***எமதூதன்:–*** மன்னியுங்கள் பிரபுவே! பூவுலகில் எமது படைப்புக்களுக்கெல்லாம் ஆயுள் முடிவடைந்துவிட்டது. இப்போது அங்கே வசிப்பவர்கள் இயந்திர மனிதர்கள் மட்டுமே அவர்களுக்கு மரணமே இல்லையாம் கிட்டவே நெருங்கமுடியவில்லை

* * *

---

# படத்திற்கு மெருகூட்டுங்கள் – 87



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் – 87

..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................

பெயர் : ..........................................................
முகவரி : ..........................................................
..........................................................

**ஈழநாதம்**
யாழ்சாலை,
கிளிநொச்சி.

# படத்திற்கு மெருகூட்டுங்கள் – 86



**தி.திலீப்குமார்,**
**சி.க.கூ.ச. சமாசம்,**
**மல்லாவி.**

## பரிசுக்குரிய வரிகள்

*விண்மேலெழுந்து வேற்று மண் கொண்டிறங்கும் காலமதில்*
*உடைந்து மண்ணில் புதைநத வண்டியிலேறி வாகாய் நிற்கும் தங்காய்*
*அறிவால் உலகை ஆளும் காலம் அடைவாய் நீ – அதற்காய்*
*வருவாய் நாளும் பள்ளி, பெறுவாய் நிதமும்–கல்வி*

## பாராட்டுக்குரிய வரிகள்

*சோதனை நிறைந்த எமது மண்ணில் - நீ*
*சாதனை செய்கிறாய் கண்ணே - எம்*
*வேதனைகள் வெகுதூரம் இல்லை என்றோ!*
*போதனை செய்கிறாய் உன் புன்சிரிப்பால்.*

க.இரத்தினசிங்கம்,
கிளிநொச்சி.

*சைகை காட்டி உனக்கு புதுச்சைக்கிள் வேண்ட*
*உன் தந்தை கடலுக்கு சென்றார் - எதிரியின்*
*சன்னங்களால் தந்தை சிதையுண்டதை அறியா- நீ*
*புதுச் சைக்கிள் ஓட பயிற்சி பெறுகின்றாயா?*

ஜீ.சாம்
புதுக்குடியிருப்பு.

*எதிரியின் எறிகணை வீச்சில் எரிந்ததோ*
*உந்தன் ஊர் உன்னை*
*பெற்றவர் எங்கே சிறுமியே*
*உனது வாழ்க்கையை தொலைத்தவன் யார்.*

எஸ்.பொழில்வண்ணன்,
முள்ளியவளை.

*துவிச்சக்கர வண்டி பழையது என்று எண்ணி-உன்*
*துணிவை விட்டு விடாதே பெண்ணே - நம்பிக்கையும்*
*விடா முயற்சியும் உன்னிடம் இருந்தால் நீ போகுமிடம்*
*விரைவில் உன் காலடியில்.*

சு.சிவாஜினி,
புதுக்குடியிருப்பு.

*உருப்படியான உதிரிகள் எதுவுமில்லை-இதில்*
*தொடருமா என் பயணம்! சிந்திக்கிறீர்களா என் உறவுகளே?*
*என் குருதியில் கலந்த உறுதி மரிக்கும் வரை*
*இடர்களையும் தாங்கி தொடரும் என் பயணம்*

வே.பிரியநிலா,
கணடாவளை.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
**அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.





அண்மையில் கிளிநொச்சிக்கு வருகைதந்த கனேடிய தூதுவர் திருமதி வலேரி ரேமண்ட் அம்மையார் கிளிநொச்சியில் அமைந்துள்ள மனித உரிமை செயலகத்தின் பணிப்பாளர் கருணாரத்தினம் அடிகளாரைச் சந்தித்து மனித உரிமைகள் தொடர்பான விடயங்களை அவரோடு கலந்துரையாடிய போது எடுக்கப்பட்ட படங்கள்.



யாழ் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய பவளவிழாவினை முன்னிட்டு 21-09-2004 அன்று நடத்தப்பட்ட பவளவிழா நடைபவனியில் எமது செய்தியாளரின் கமராக்குள் அகப்பட்ட படங்கள் இவை.

(படப்பிடிப்பு: செல்வா)












Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்--IV

நாதம் -15 திருவள்ளுவர் ஆண்டு- 2035 புரட்டாதி-08 24-09-2004 வெள்ளிக்கிழமை ஓசை -219




## – மட்டு–பொலனறுவை எல்லைப்பகுதியில் –

# மாதுறு ஓயா இராணுவ முகாம் அருகாமையில்

# கருணாவின் சகோதரன் றெஜி சுட்டுக்கொலை

## – மேலும் இருவர் தாக்குதலில் பலி

(மட்டக்களப்பு)

**'தமிழ் தேசியப் படை' என்ற பெயரில் தமிழ் இனவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்த குழுவின் முக்கிய உறுப்பினரான றெஜி என அழைக்கப்பட்ட கருணாவின் சகோதரனான விநாயகமூர்த்தி சிவநேசதுரை நேற்று முன்தினம் இரவு சுட்டுக் கொல்லப்பட்டார். இவருடன் இக்குழுவைச் சேர்ந்த மேலும் இருவரும் கொல்லப்பட்டனர். இச்சம்பவம் மாதுறுஓயா இராணுவ முகாமிற்கு அண்மித்த பகுதியில் இடம்பெற்றது.**



மட்டக்களப்பு-பொலனறுவை மாவட்ட எல்லைப் பகுதியில் உள்ள மாதுறு ஓயாவை அண்மித்த காட்டுப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதல் ஒன்றிலேயே இவர்கள் கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்ட ஏனைய இருவர் துமிலன் மற்றும் எழிலன் என தெரிவிக்கப்படுகின்றது. இதில் துமிலன் என்பவர் லெப். கேணல் நீலன் அவர்களின் படுகொலையுடன் சம்பந்தப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

றெஜி எனப்படும் விநாயகமூர்த்தி சிவனேசதுரை கருணாவின் மூத்த சகோதரன்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் கருணாவின் சார்பிலான முக்கிய செயற்பாட்டாளராக இருந்த இவர், தமிழ் தேசியப் படை என்ற பெயரில் இராணுவத் துணைப்படையாக செயற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

(iv ஆம் பக்கம் பார்க்க)

## மன்னம்பிட்டியில் இளைஞன் துப்பாக்கிச்சூட்டுக்குப்பலி

பொலநறுவை மாவட்டம் மன்னம்பிட்டியில் நேற்று முன்தினம் இரவு அடையாளம் தெரியாத நபர்களினால் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். மன்னம்பிட்டியைச் சேர்ந்த குட்டி எனப்படும் இராஜதுரை சிவானந்தம் (24 வயது) என இவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.இவரது வீட்டிற்குச் சென்ற இனந்தெரியாத நபர்கள் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டுத் தப்பிச் சென்றுள்ளார்கள். இந்தக் கொலை குறித்து வெலிக்கந்தப் பொலிசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றார்கள்.

## ஈ.பி.டி.பி.யின் சிரேஷ்ட உறுப்பினர் கொழும்பில் நேற்று சுட்டுக்கொலை

### மனைவியும் மற்றுமொருவரும் காயம்

சிறிலங்காவின் தலைநகர் கொழும்பு - வெள்ளவத்தையில் இராணுவத் துணைப்படையைச் சேர்ந்த ஈ.பி.டி.பி.யின் சிரேஷ்ட உறுப்பினரான சிங்கம் எனப்படும் சோமசுந்தரம் வர்ணகுலசிங்கம் (வயது 39) நேற்று பிற்பகல் இனந்

(1[illegible] ஆம் பக்கம் பார்க்க)

### -மட்டக்களப்பில் இராணுவத்துடனான சந்திப்பு-

## புலிகளின் தளபதிகள் கலந்து கொள்ளாமை குறித்து அதிருப்தி!

நேற்று முன்தினம் மட்டக்களப்பில் இடம்பெற்ற படைத்தரப்பினருடனான சந்திப்பின் போது விடுதலைப் புலிகளின் இராணுவப் பிரிவுத் தளபதிகள் கலந்து கொள்ளாமை குறித்து இலங்கை இராணுவத் தரப்பு அதிருப்தி வெளியிட்டுள்ளது.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்ட நேற்றுமுன்தின சந்திப்பில் விடுதலைப் புலிகளின் இராணுவப் பிரிவுத் தளபதி ரமேஷ் புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பாளர் ரமணன் ஆகியோர் கலந்து கொள்வது அவசியம் என படைத்தரப்பு வலியுறுத்தியிருந்தது. இச் சந்திப்பு

(iv ஆம் பக்கம் பார்க்க)

## டோக்கியோவில் இணக்கம் தெரிவித்த நிதியை கட்டம் கட்டமாகப் பெற்று வருகின்றோம்

### அமைச்சர் மங்கள சமரவீர

(கொழும்பு)

டோக்கியோவில் இணக்கம் தெரிவித்தமைக்கு அமைய 45 பில்லியன் ரூபா தற்போது கிடைக்கக் கூடிய வாய்ப்பு உள்ளதென அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். நேற்று அமைச்சரவைக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஐ.தே.க. கூறியது சமா தான முயற்சிகளை மேற்கொண்டால் மட்டும் தான் இந்நிதியைப் பெற முடிவுமெனவும், ஆனால், அரசின் வேலைத் திட்டங்களை முன்வைத்து தற்போது அந்நிதியில் ஒவ்வொரு கட்டமாகத் தாங்கள் பெற்றுக் கொண்டு வருவதாகவும் இதற்கமைய 1000 மில்லியனுக்கும் மேற்பட்ட நிதியினை தாங்கள் இது வரை பெற்றுக் கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

2004ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட நிதியுதவியில் 70 வீதத்ததைப் பெற்றுக் கொள்ளவதற்குத் தேவையான உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (32)

## அடுத்த வாரத்தில் சூல்ஹெய்ம் பாலசிங்கத்தைச் சந்திப்பார்

நோர்வே நாட்டின் சமாதானத் தூதர் எரிக் சூல்ஹெய்ம் எதிர்வரும் வாரத்தில் லண்டனில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்திக்கவுள்ளார்.

இதனையடுத்து அடுத்த மாதம் அவர் இலங்கைக்கு வருகை தரவுள்ளார். இதேவேளை எரிக்சூல்ஹெய்ம் இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்து அண்மையில் இந்திய அதிகாரிகளுடனும் கருத்துக்களைப் பகிர்ந்துக் கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மூன்று நிபந்தனைகளுடன் உலகவங்கி சிறிலங்காவுக்கு 53 மில்லியன் நிதியுதவி

சிறிலங்கா திட்டத்தின் கீழ் இலங்கைக்கு உலக வங்கி 53மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு முன்வந்துள்ளது. இந்தத் தகவலை உலக வங்கியின் வதிவிடப் பிரதிநிதி பீட்டர் ஹரல்ட் வெளியிட்டுள்ளார். எனினும் மூன்று அம்சங்களை வலியுறுத்தியே இது வழங்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். வடக்குத் தெற்குக்கு இணைப்பாக இருந்து சமாதானத்தைக் கட்டியெழுப்புவதாக இந்தத் திட்டம் அமைய வேண்டும், தகவல் பரிமாற்றம் என்ற வரையறைக்குள் இல்லாமல் ஏனைய துறைகளிலும் இது செயற்படுத்தப்படவேண்டும், மக்கள் மத்தியில் சமதன்மை பேணப்படுவதனை உறுதிப்படுத்துவதாக அமைய வேண்டும் என்பனவே உலக வங்கியின் நிபந்தனைகளாக குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த 53 மில்லியன் உதவித்தொகையை இலங்கை 40 வருடங்களில் திருப்பிச் செலுத்த வேண்டும் அதேநேரம் இந்தத் திட்டம் எதிர்வரும் நவம்பரில் இருந்து நடைமுறைக்கு வருகிறது. (32)

## சுத்தியலால் அடித்து குடும்பஸ்தர் கொலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சியில் உள்ள கரணவாய்ப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் சுத்தியலால் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார்.

கரணவாய் கிழக்கு மணற்பாதி எனும் இடத்தில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான முருகன் சிவஞானம் (வயது54) என்பவரே இவ்வாறு கொடூரமான முறையில் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார்.

(iv ஆம் பக்கம் பார்க்க)

## தியாகி திலீபனின் நினைவு நிகழ்வு இறுதி 3நாள் விசேட நிகழ்வுகளுக்கு ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

தியாகி திலீபன் அவர்களின் பதினேழாவது ஆண்டு நினைவின் இறுதி மூன்று நாட்களும் மிகவும் உணர்வெழுச்சியுடன் இறுதிநாள் இரவு கலை நிகழ்ச்சிகளுடன் சிறப்பான முறையில் தமிழீழமெங்கும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சிக்கு உட்பட்ட எட்டுப் பிரதேசங்களிலும் நிகழ்வுகள் மிகவும்

(iv ஆம் பக்கம் பார்க்க)

எமது போராட்டப் பாதை அமைதி தழுவியதாகவோ, அல்லது இரத்தம் தோய்ந்ததாகவோ அமைய வேண்டுமெனத் தீர்மானிக்க வேண்டியவர்கள் இங்குள்ள முதலாளித்துவ ஆட்சியாளர்களே.

தியாகி லெப்.கேணல் திலீபன்



# கால் நடைகளைக் கட்டுப்படுத்துக த.பொ.மே.நிறுவனம் கோரிக்கை

(முள்ளியவளை)

முள்ளியவளைப் பிரதேசத்தில் கால போக நெற் செய்கையினை கருத்திற் கொண்டு கால்நடைகளைக் கட்டுப்படுத்துமாறு முள்ளியவளைப் பிரதேச பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் இ.றொபேர்ட், முள்ளியவளை கமநல அபிவிருத்தித் திணைக்கள பெரும்பாக உத்தியோகத்தர் செல்வி சு. இராசலட்சுமி ஆகியோர் கால்நடை வளர்ப்பாளர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இவ்வேண்டுகோளில் தெரிவிக்கப்படுவதாவது, கால்நடை வளர்ப்போர் தங்கள் கால்நடைகளைப் பகல் வேளைகளில் மேய்ப்போர் வைத்து மேய்த்து மாலை 6.00 மணிக்கு அவைகளைக் கட்டியோ, பட்டிகளில் அடைத்தோ வைத்திருந்து, மீண்டும் மறுநாள் காலை 6.30 மணிக்கு மேய்ப்போர் மூலம் மேய்ச்சலில் ஈடுபடுத்தி கால்நடைகளால் மக்களுக்கோ, அன்றி விவசாயிகளுக்கோ தொல்லைகள், இடர்கள் ஏற்படாது நடந்து கொள்ளுமாறும், பராமரிப்பற்று கட்டாக்காலியாக திரியும் கால்நடைகளைப் பிடியாட்கள் மூலம் பிடிக்கப்பட்டு, விபரம் அறிவிக்கப்பட்டு இரு நாட்களுக்குள் தண்டப்பணம் செலுத்தி உரியவர்கள் பெற்றுக் கொள்ள வேண்டியதுடன், இரு நாட்களிலும் உரிமை கோராத கால் நடைகள் மூன்றாம் நாள் பொதுச் சேவைக்காக ஏலத்தில் விடப்படும் எனவும், இவைகளை அத்துமீறி நடப்போர் சட்ட நடவடிக்கைக்கு முற்படுத்தப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஆ)

## பெற்றுக்கொள்க

பெறுமதி வாய்ந்த மூக்குக் கண்ணாடி ஒன்று ஒட்டுசுட்டான் வீதி, கற்சிலைமடு எனும் இடத்தில் ஹெயார் நிறுவன உத்தியோகத்தரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இக் கண்ணாடியுடன் 100/= பணமும் இதயநாதன் சுத்திகரிப்பு நிலைய பற்றுச்சீட்டும் உள்ளது. இதற்குரியவர் ஈழநாதம் பணிமனையில் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

## மன்னாரிலும் டயலக் தொலைபேசி

மன்னாரில் நேற்று முதல் டயலொக் தொலைபேசி இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இது அதன் பணிப்பாளரால் நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நேற்று 275இற்கு மேற்பட்ட இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கென டயலொக் உபமுகவர்கள் மன்னார் நகரத்தில் நியமனம் பெற்றுள்ளார்கள்.

## விழிப்புணர்வு கருத்தரங்கு

(மன்னார்)

மன்னார் பிரதேச செயலகத்தில் நேற்று சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பான ஒரு விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம்பெற்றது.

இந்தக் கருத்தரங்கை "யுனிசெப்" நிறுவனம் ஒழுங்கு செய்திருந்தது. "சேவாலங்கா" நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட இந்தக் கருத்தரங்கிற்கு சேவாலங்கா நிறுவனம் மன்னார் மாவட்ட இணைப்பாளர் திருமதி ஜோயிஸ்அனர்த் அவர்கள் தலைமை தாங்கினார். சிறப்புரையை மன்னார் பிரதேச செயலகப் பணிப்பாளர் ஆர்.வலதீஸ்வரன் அவர்கள் ஆற்றினார். பயிற்றுவிப்பாளராக செல்வரமேஸ் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். இந்தக் கருத்தரங்கில் மன்னார் பிரதேச செயலக சகல கிராம உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். இந்தச் சிறுவர் உரிமைகள் சம்பந்தமான சட்ட விரிவுகளும் இடம்பெற்றன. (மி)

## மன்னாரில் பல்வேறு வேலைத்திட்டங்களுக்கு சேவாலங்கா 73 இல. ரூபா ஒதுக்கீடு

(மன்னார்)

சேவாலங்கா நிறுவனம் மன்னாரில் 2004ஆம் ஆண்டு வேலைத் திட்டங்களுக்கென 73 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்நிதியானது மன்னார் பிரதேச செயலக பிரிவில் உள்ள ஓலைத்தொடுவாய்ப் பகுதியிலும், மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பெரியமடு, ஈச்சிலைப்பற்று ஆகிய இடங்களிலும், முசலிப் பிரதேச செயலக பிரிவில் உழாங்குளம், பொற்கணி ஆகிய பிரதேசத்திலும், மடு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கட்டையடம்பன் பிரதேசத்திலும் இவ்வேலைத் திட்டங்கள் நடைபெறவுள்ளன. வீதி நிர்மாணம், முன்பள்ளிகள், கிராம அபிவிருத்திக் கட்டடங்கள், சிறுவர் பூங்கா, விளையாட்டு மைதானம், பாடசாலை, குழாய் நீர் வசதி, மலசல கூடங்கள் போன்ற வேலைத் திட்டங்கள் இந்த நிதி ஒதுக்கீட்டில் நடைபெறவுள்ளன. (மி)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் நினைவுக்கல் திரைநீக்கமும்

பூவுலகில் 15 - 06 - 1949



விண்ணுலகில் 06 - 10 - 2003

உயர் திரு.

**சின்னையா பொன்னையா**

அவர்கள்

(கனகராயன்குளம் தெற்கு)

திதி - 24.09.2004

எங்கள் அன்புச் சுடர் விளக்கே மகிழ்ச்சிக் கடலிலாழ்த்தி
எம்மை மகிழ்விக்கும் மாமலரே புகழ் பெற்று
நீங்கள் புவியில் வாழ்ந்து எமைத் துயரத்தில்
ஆழ்த்தி பிரிந்து ஓராண்டு சென்றிடினும்
உங்களை மறக்க - ஓர் ஜென்மம் போதாதையா
எமைத் தவிக்கவிட்டு - நீங்கள் மட்டும்
தனிமையானது ஏன்?

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

**அன்புக் குடும்பத்தினர்.**
**கனகராயன்குளம் - தெற்கு**

(5115)

## நன்றி கூறுகின்றோம்

ஈழநாதம் மக்கள் தினசரியின் விளம்பர இலக்கம் 5117இற்கு அமைய இதுவரை காலமும் எமைப்பிரிந்து இருந்த எமது சகோதரன் ஜேசுதாசனை எம்முடன் இணையச் செய்த ஈழநாதம் தினசரிக்கு எமது அன்பு கலந்த நன்றிகள்.

கேசவன் ஆசிரியர்,
மு/மாங்குளம் ம.வி.,
மாங்குளம்.

(5117)

## துயர் பகிர்கின்றோம்

எமது முன்னாள்

ஆஷான் அருட்சகோதரி
ஆமண்டீன் அந்தோனிப்பிள்ளை

அவர்கள் தன் பணி முடித்து இறைபதம் அடைந்ததையிட்டு துயருறுவதோடு, இவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தார், உறவினருடன் துயரில் நாமும் இணைகின்றோம்.

உதயன் புத்தகசாலை
குடும்பத்தினர்,
திருநகர் வீதி, கிளிநொச்சி.

(சி--10409)

## 31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பிதழ்

பிறப்பு 15 - 07 - 1941



இறப்பு 25 - 08 - 2004

அமரர்

**உயர் திரு.இராசேந்திரம் வரதராசா**

24.09.2004

கடந்த 25.08.2004 புதன்கிழமை சிவபதமடைந்த முன்னாள் வவுனியா வடக்கு கோட்டக்கல்வி அதிகாரியும், வற்றாப்பளை கண்ணகையம்மன் ஆலய நிர்வாக இணைச் செயலாளரும், ஊற்றங்கரை விநாயகர் ஆலய நிர்வாகத் தலைவரும், சமூக சேவகருமான உயர் திரு "இராசேந்திரம் வரதராசா" அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியை 24.09.2004 வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

4 ஆம் வட்டாரம்,
பிரதான வீதி, முள்ளியவளை.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

(5124)

மீண்டும் புதுப்பொலிவு பெற்று வரும் கிளிநொச்சி நகரில் இன்று முதல்

## தகவல் தொழிநுட்ப கற்கைநெறிகள்

டிப்ளோமா பாடநெறிகள் தமிழ் விளக்கங்களுடன்

Diploma in MS Office

Diploma in Desktop Publishing

Diploma in Computer Studies



Diploma in Computer Programming

Diploma in Web Design

Diploma in Computer Programming

அறிமுக கட்டணச் சலுகை
**2900/- மட்டுமே**
(தவணை முறையிலும் செலுத்தலாம்)

அனைத்து பாடநெறிகளுக்கும் இலவச பாடநூல்களும் பாடக்குறிப்புகளும் இலவசமாக வழங்கப்படும்.

இப்பாடநெறிகளுக்கான காலம் 4 மாதங்கள்

பாடநெறிகள் யாவும் மூன்றாம் நிலை தொழில் கல்வி அமைச்சின் அங்கீகாரம் பெற்றவை.

**கணினியியல் கல்லூரி - The Computer College**

(Affiliated to Asian Computers)
யாழ்சாலை, கிளிநொச்சி.

(சி.10408)

# சமாதான முயற்சிகளுக்கு எதிராக 10 இலட்சம்

# கையொப்பம் திரட்ட ஹெலஉறுமய முயற்சி

## இன்று கண்டியில் ஆரம்பம்

(கொழும்பு)

**ஜாதிக ஹெல உறுமய 10 இலட்சம் கையெழுத்துக்களைத் திரட்டி ஐந்து கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை சனாதிபதியிடம் சமர்ப்பிக்கவுள்ளதாக எல்லாவெலமே தானந்ததேரர் நேற்றுத் தெரிவித்துள்ளார்.**

கையெழுத்தைத் திரட்டும் முயற்சி அவர் கூறியுள்ளபடி இன்று கண்டியில் தொடங்கும் நோர்வே அரசாங்கத்துடனான இராஜதந்திர உறவுகளை நிறுத்தவேண்டும். வட-கிழக்கைத் தனித்தனி மாகாணங்களாகப் பிரிக்கவேண்டும். சங்கைக்குரிய தங்கொடவில சோமதேரரின் இறப்பிலுள்ள மர்மத்தை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட சனாதிபதி ஆணைக்குழுவை இயங்க வைக்க வேண்டும். மற்றும் புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனைகளை நிராகரிக்க வேண்டும் போன்றன பிரதான கோரிக்கைகள் என மேதானந்ததேரர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றக் கட்டடத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அத்துடன் புலிகளால் முன் வைக்கப்பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி யோசனைகளைத் தமது அமைப்பு கடுமையாக ஆட்சேபிப்பதாகவும் அவற்றின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளைத் தொடங்க எண்ணினால் நிபந்தனைகளை முன்வைக்கவேண்டுமென்றும் அவர் கோரியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்..

# "சிரான்" அமைப்பைச் செயற்படுத்தாமையாலேயே புலிகள் இ.நி.யோசனையை முன் வைத்தனர்

## பிரதி அமைச்சர் திலான் பெரேரா

சிரான் குழுவை உரிய முறையில் செயற்படுத்தாமை காரணமாகவே தமிழீழ விடுதலைப்புலிகள் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனையை முன் வைக்க நேர்ந்ததாகப் பிரதி அமைச்சர் திலான் பெரேரா தெரிவித்தார். நேற்று முன்தினம் பாராளுமன்றக் கட்டடத்தில் வைத்து ஊடகவியலாளர்களைச் சந்தித்த அவர், முன்னைய ஆட்சியின் போது சிரான் குழுவை உரிய வகையில் செயற்படுத்த வாய்ப்புகள் இருந்தன.

ஆனால் அது மேற்கொள்ளப்படவில்லை. இந்த நிலையில் தற்சமயம் ஏற்றுக்கொள்ளப்பட்ட இடைக்கால நிர்வாகம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த முடியும் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை அமைச்சுக்களிலும் திணைக்களங்களிலும் முறைகேடுகள் இடம்பெறுவதைத் தடுக்கும் முகமாக அரசாங்கக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும், பிரதி அமைச்சர்களும் இணைந்து அமைப்பு ஒன்றை அமைத்துள்ளனர். இந்த அமைப்பின் தலைவராக பிரதி அமைச்சர் திலான் பெரேரா செயற்படுகிறார். ஐக்கிய தேசியக் கட்சியின் ஊழல்கள் தொடர்பாக குற்றம் சுமத்தப்பட்டு வரும் நிலையில் ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி உட்பட்டவர்களின் ஊழல்களையும்,

இந்தக் குழு வெளிக்கொணரும் என திலான் பெரேரா தெரிவித்தார். இந்தக் குழு முதற் கட்டமாக நேற்று முன்தினம் அமைச்சர் ஜெயராஜ் பர்னாண்டோ புள்ளேயை வைத்து ஊடகவியிலாளர்களின் முன்னிலையில் சில கேள்விகளைத் தொடுத்து அதற்கான பதில்களைப் பெற்றுக் கொண்டது. இதன் போது கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த அமைச்சர் ஜெயராஜ் பர்னாண்டோ புள்ளே திருகோணமலையில் ஊர் காவல் படைவீரர்களை விடுவிக்கக் கோரி உண்ணாவிரதப் போராட்டம் இடம்பெறுவதால், கோதுமை மாவின் விநியோகம் தடைபட்டுள்ளதாகவும், அதனால் அடுத்து வரும் இரண்டு நாட்களுக்கு மாத்திரம் கோதுமை மாவுக்குத் தட்டுப்பாடு நிலவும் எனவும் தெரிவித்தார். அதேநேரம் நாட்டில் தற்சமயம் ஏற்பட்டுள்ள அரிசிக்

கான விலையுயர்வைத் தடுக்கும் வகையில் இறக்குமதியை மேற்கொள்ளப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

(32)

# சேமமடுப் பகுதியில் த.பு.கழகத்தால் விபுலானந்தர் முன்பள்ளி திறப்பு

போரினால் முற்றாகச் சிதைவுண்டு, அழிவுற்ற வவுனியா சேமமடுவில் டெனிஸ் அகதிகளுக்கான ஆலோசனை சபையின் அனுசரணையுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் விபுலானந்தர் முன்பள்ளிக்கான புதிய கட்டடத்தினை கடந்த புதன்கிழமை திறந்து வைத்தது.

மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பித்து வைக்கப்பெற்ற நிகழ்வில் தமிழீழ தேசியக்கொடியினை தமிழர் புனர்வாழ்வுக்கழக நடுவப்பணியக ஒருங்கிணைப்பாளர் ஜெகா அவர்கள் ஏற்றிவைக்க, தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கொடியினை வவுனியா மாவட்டப் பணிப்பாளர் திருஞானசம்பந்தமூர்த்தி அவர்கள் ஏற்றிவைத்தார். வவுனியா அபிவிருத்திப்




புனர்வாழ்வுக் கழக கொடியினை அதன்இணைப்பாளர் இராசரத்தினமும், முன்பள்ளிக்கல்வி மேம்பாட்டு நிலையக் கொடியினை அதன் வவுனியா இணைப்பாளர் தர்சினியும் ஏற்றிவைத்தனர். விபுலானந்தர் முன்பள்ளிக் கொடியினை அதன் ஆசிரியர் ஏற்றிவைத்தார். முன்பள்ளிக்கான பெயர்ப்பலகையினை ஜெகா அவர்கள் திரைநீக்கம் செய்து வைத்தார்.

கட்டடத்தினை அகதிகளுக்கான டெனிஸ் ஆலோசனை சபையின் சிரேஷ்ட திட்டமிடல் ஆலோசகர் திறந்து வைத்தார். வரவேற்புரையினை இந்திராணியும், சிறப்புரையினை அகதிகளுக்கான டெனிஸ் சபையின் ஆலோசகரும், தமிழர் புனர்வாழ்வுக் கழக ஒருங்கிணைப்பாளரும் நிகழ்த்தினர். நன்றியுரையினை சேமமடுக் கிராம மக்கள் சார்பாக திரு.அ.அருமைநாயகம் அவர்கள் நிகழ்த்தினார். பின் நடைபெற்ற மரநடுகை நிகழ்விலும் முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு விழாவிலும் பெற்றோர்களும், ஆசிரியர்களும், பொதுமக்களும் மிகவும் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர்.

# கிளிநொச்சியில் இருவிபத்துகளில் உந்துருளியில் வந்த இருவர் படுகாயம்

(அலுவலக செய்தியாளர்)

இரு உந்துருளிகள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் உந்துருளி ஒன்றின் ஓட்டுநர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் கிளி.மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றார்.

மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் காலை 8.30 மணியளவில் டிப்போ கோணாவில் வீதியில் இடம்பெற்றது.

முன்னால் சென்றுகொண்டிருந்த உந்துருளி வீதியில் இருந்து மறுபக்கம் திரும்புவதற்கு எத்தனித்த பொழுது, பின்புறமாக வந்த உந்துருளி மேற்படி உந்துருளியுடன் மோதியதன் விளைவாக பின்னால் வந்த உந்துருளியின் ஓட்டுநரே சம்பவத்தில் படுகாயமடைந்து கிளி. மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். இரு உந்துருளிகளும் பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளது. தமிழீழ காவல்துறை வீதிப்போக்குவரத்துப் பிரிவினர் விசாரணையினை மேற்கொண்டு வருகின்றனர். அக்கராயனைச் சேர்ந்த தீபன் (வயது21) என்பவரே மேற்படி சம்பவத்தின் போது படுகாயமடைந்தவராவார்.

இதேபோன்று நேற்று முன்தினம் இரவு கிளி.நகர மத்தியபகுதி ஏ-9 வீதியில் இரு உந்துருளிகள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இரு உந்துருளிகளும் சேதத்திற்குள்ளானதுடன் உந்துருளி ஓட்டுநர் ஒருவர் படுகாயமடைந்து கிளி.மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

கிளிநொச்சியைச் சேர்ந்த கந்தையா கணேசன் (வயது 51) என்பவரே மேற்படி சம்பவத்தில் படுகாயமடைந்தவராவார். மேற்படி இரு சம்பவங்களும் வேகக்கட்டுப்பாட்டினை உதாசீனம் செய்து அதிவேகமாகச் சென்றமையினால் இடம்பெற்றுள்ளதென்பது காவல்துறையினரின் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ,கு)

# சேது சமுத்திரத்திட்டத்தின் பாதிப்புக் குறித்து அரசாங்கத்திற்கு அறிவுறுத்தப்படும்

## இலங்கை துறைமுக அதிகாரசபை தெரிவிப்பு

(கொழும்பு)

சேது சமுத்திரத்திட்டத்தால் இலங்கைக்கு ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து அரசாங்கத்தை அறிவுறுத்துவதாக, இலங்கை துறைமுக அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தீவிர கவனம் செலுத்தி வருவதாகவும், அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட குழுவிற்கு இந்தத் திட்டம் குறித்து விளக்கமளிக்கவுள்ளதாகவும், அதிகார சபையின் உப தலைவர் கலாநிதி கிஷானந்த தெமர கொட கூறியுள்ளார்.

சேது சமுத்திரத்திட்டத்தால் கொழும்புத் துறைமுகம் உட்பட நாட்டின் ஏனைய துறைமுகங்களுக்கு பாதிப்பு ஏற்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சேது சமுத்திரத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் இலங்கையின் தென்பகுதிக் கடலைச் சுற்றிச் செல்லும் சர்வதேசக் கப்பல் மார்க்கம், வடபகுதியால் செல்லுமென்று அவர்விளக்கமளித்துள்ளார்.

இந்த நிலை ஏற்பட்டால் இலங்கையின் துறைமுகம் தொடர்பான சர்வதேசக் கவனம் குறையும் வாய்ப்புக்கள் உண்டு. சுற்றாடல் பிரச்சினைகளும் பெருமளவில் ஏற்படுமென்றும் அவர் கூறியுள்ளார்.

# லெப்.கேணல் திலீபன் நினைவாக செம்மலை ம.வியில் கண்காட்சி

தியாக தீபம் திலீபனின் 17ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு மு/செம்மலை மகாவித்தியாலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை கண்காட்சி நிகழ்வொன்று செம்மலை மகாவித்தியாலய மாணவ முதல்வன் செல்வன் செ.பிறேம நாதன் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்வில் பொது ஈகச்சுடரினை குமுழமுனை மகாவித்தியாலய ஆசிரியர் திருமதி கு.சந்திரகலா ஏற்றினார்.

தமிழீழ தேசியக் கொடியினை செம்மலை மகாவித்தியாலய ஆசிரியர் யோகலிங்கம் ஏற்றினார். தியாகி லெப். கேணல் திலீபனின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினைக் குமுழமுனை மகாவித்தியாலய ஆசிரியர் செல்வி க.உமாப்பிரபா ஏற்றினார். கண்காட்சி மண்டபத்தினை செம்மலை ம.வி அதிபர் திருமதி ஜெ.சூரியகாந்தி நாடாவினை வெட்டித் திறந்துவைத்தார்.

இப்பிரதேசத்தில் கிடைக்கக்கூடிய கழிவுப்பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பொருட்களே கண்காட்சிக்கு வைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், அயல்பாடசாலை அதிபர், ஆசியர்கள், மாணவர்கள் பெற்றோர்கள் எனப்பெருமளவானோர்கள் கலந்து கொண்டனர். இதேவேளை, தியாக தீபம் திலீபன் நினைவுநாளை முன்னிட்டு கடந்த திங்கட்கிழமை வட்டக்கச்சிப் பிரதேச பெண்கள் மேம்பாட்டுப் பொறுப்பாளர் தமிழ்மலரின் ஒழுங்குபடுத்தலிலும், இராமநாதபுர மாதர் சங்கத் தலைவி தங்கேஸ்வரி தலைமையிலும் இராமநாதபுர சுகாதார நிலையத்தில் சிரமதானப்பணி நடைபெற்றது.

கரைச்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களால் கூட்டுறவுச் சங்க வளாகம் சிரமதானப்பணி மூலம் துப்புரவு செய்யப்பட்டது. இதேவேளை கல்மடு அ.த.க.பாடசாலையில் தேசிய எழுச்சிப்பேரவை, கிராம சேவகரின் தலைமையில் பாடசாலை வளாகத்தில் சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் மற்றும் பல இடங்களிலும், பாடசாலைகளிலும் சிரமதானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (12, 20)

# 'நிழல்' சமூக பொருளாதார அபிவிருத்தி இதழ் இன்று வெளிவருகின்றது

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் வெளியீடான 'நிழல்' சமூக பொருளாதார அபிவிருத்தி இதழ் இன்று வெளிவருகின்றது.

தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் சிந்தனையைத் தாங்கி, "போரால் பாதிக்கப்பட்ட சிறார்களின் நல்வாழ்விற்காக தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நடாத்தும் கல்வி, தொழிற்கல்வி, அபிவிருத்தி நிறுவனம்" என்ற பிரதான தலைப்புச் செய்தியுடன் "பல்கலைக்கழகத்திற்கு நாங்கள் தெரிவாவதற்கு இனிய வாழ்வு இல்லமே காரணம் - யாழ். பல்கலைக்கழக முதலாம் வருட மாணவி ஆ. அனுராதா" மற்றும் "தட்டுவன்கொட்டி கிராம அபிவிருத்தித் திட்ட ஒப்பந்தத்தில் T.R.O. - GTZ கைச்சாத்து" என்ற முக்கிய செய்திகளுடன் வைத்திய கலாநிதி பா. யூடி எழுதிய "உடற்பயிற்சியும் சுகமான வாழ்வும்" என்ற மருத்துவக் கட்டுரையும், பு. சத்தியமூர்த்தி எழுதிய "பற்றாக்குறைகளிலிருந்து முதலிடத்திற்கு" என்ற கட்டுரையும், வேலணையூர் சுரேஷ் எழுதிய "ஆதிவாசிகள் போல் வாழும் மக்கள் அவலங்கள் தீர்வது எப்போது? என்ற கிராம தரிசனமும், தமிழ் மக்களுக்காகப் பணி புரியும் அவுஸ்திரேலியப் பெண்மணி திருமதி மார்க்கிரட் பரராஜசிங்கம் அவர்களுடனான நேர் காணலும், அ.சுமன் எழுதும் கணினியில் "ஓர் துளி"; அன்ரன் அன்பழகன் எழுதிய "உதயமாகியது ஒலிம்பிக்" வணபிதா எ. றெஜினோல்ட் அவர் களுடனான "உளவளம்" பற்றிய செவ்வி என்பவற்றுடன் உதவும் கரங்கள், கவிதைக் கனிகள், விழிப்புடன் இருப்போம் உட்பட பல்வேறு சிறப்பம்சங்களைத் தாங்கி நிழலின் முதலாவது இதழ் வெளிவருகின்றது.

# சனாதிபதியின் ஐக்கிய நா. சபை உரைக்கு ஜாதிக ஹெல உறுமய பலத்த கண்டனம்!

## புலிகளின் செயற்பாடுகளை நியாயப்படுத்துகின்றாராம்

ஐக்கிய நாடுகள் சபையில் சனாதிபதி ஆற்றிய உரையினை ஜாதிக ஹெல உறுமய வன்மையாகக் கண்டித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையில் சனாதிபதி ஆற்றிய உரையானது விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை நியாயப்படுத்துவது போல் அமைந்துள்ளதாகவும், பயங்கரவாத நடவடிக்கைகளை புலிகள் தொடர்வதற்கு ஏற்புடையது போல் சனாதிபதி உரையாற்றியிருப்பதாகவும் ஜாதிக ஹெல உறுமய குற்றம் சுமத்தியுள்ளது.

பயங்கரவாதம் தோற்றம் பெறுவதற்குரிய காரணம் என்ன என்பதைதான் அறிந்திருப்பதாக சனாதிபதி தெரிவித்துள்ளார். சனாதிபதியின் இது போன்ற சிறுபிள்ளைத்தனமான உரை விடுதலைப் புலிகளை மேலும் பலப்படுத்தும் என்றும் இதன் மூலம் அவர்களின் செயற்பாடுகளுக்கு சர்வதேச ரீதியில் அங்கீகாரத்தை ஏற்படுத்திக் கொடுக்க சனாதிபதி முயல்வதாகவும் ஜாதிக ஹெல உறுமய வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இனப்பிரச்சினை இருப்பதாக சனாதிபதி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். அப்படி ஒரு இன முறுகல் இந்த நாட்டில் இருந்தால் பெருமளவு தமிழ் மக்கள் எப்படித் தென்பகுதியில் வாழ முடியும் என்றும் ஜாதிக ஹெல உறுமய கேள்வி எழுப்பியுள்ளது. நாட்டின் தலைவியாக உள்ள ஒருவர் வெளியிடும் அறிக்கைகள் தொடர்பில் மிக அவதானமாகச்செயற்படவேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ள அந்த அமைப்பு சனாதிபதியின் தவறான அறிக்கைகள் சர்வதேச மட்டத்தில் மாறுபட்ட விளைவுகளை ஏற்படுத்திவிடும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

# வாகனச் சாரதிகளுக்கு காவல்துறை வேண்டுகோள்

(அலுவலக செய்தியாளர்)

மணல், சல்லிக்கல், கிரவல் ஏற்றும் வாகன சாரதிகளுக்கு தமிழீழ காவல்துறையின் கிளிநொச்சிப் பகுதி வீதிப்போக்குவரத்து பிரிவின் பொறுப்பாளர் சி.சிவகுமாரன் முக்கியமான வேண்டுகோள் ஒன்றினை விடுத்துள்ளார்.

அதாவது எமது பிரதேசத்தில் மணல், கிரவல், சல்லிக்கல் ஏற்றும் வாகனங்களான டிப்பர், லொறி, லான்மாஸ்டர், உழவு இயந்திரம் ஆகியவற்றின் சாரதிகளாகிய நீங்கள் உங்கள் வாகனத்தில் இவ்வாறான பொருட்களை ஏற்றி வீதியால் கொண்டு செல்லும்போது, இவை வாகனத்தின் வேகத்தாலும், காற்றினாலும் வீதியில் வீசப்படுகிறது. இதனால் இவ் வீதியால் பயணிக்கும் ஏனையோர் தொடர்ந்து பிரயாணம் செய்ய முடியாது சிரமத்திற்கு உள்ளாகுவதைக் காணமுடிகின்றது.

இதனைக் கருத்தில் கொண்டு மேற்குறிப்பிட்ட பொருட்களை ஏற்றும் வாகன சாரதிகள் இப் பொருட்களைத் தறப்பாளினால் மூடிக்கட்டி வீதியால் கொண்டுசெல்லுமாறும், ஏனைய பயணிகளின் பயணத்திற்கு ஒத்துழைக்கும் வண்ணமும் அன்புடன் வேண்டிக்கொள்கின்றேன் என்று அறிவித்துள்ளார்.

மேலும் நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டிற்கும் மேற்பட்ட வீதிவிபத்துக்கள் பற்றி சிவகுமாரன் குறிப்பிடுகையில், அதிக விபத்துக்கள் உந்துருளிச் சாரதிகளினாலேயே ஏற்படுகின்றது. எனவே இவற்றை சகல வாகன சாரதிகளும் மிகக் கவனத்தில் எடுத்து வீதிப் போக்குவரத்தை மேற்கொள்வதுடன், அநியாயமான உயிரிழப்புக்களைத் தடுக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

அத்துடன் எவராக இருந்தாலும் கடுமையான சட்ட நடவடிக்கை எடுத்து நீதிமன்றத்தில் முற்படுத்தி விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (கு)

# சனாதிபதி சந்திரிகாவின் ஐ.நா.உரை இருவேறுபட்ட பிரதிகளாக வெளியீடு

## சமாதான முயற்சியில் தெளிவான நிலைப்பாடு இல்லையென பீரிஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஐக்கிய நாடுகள் சபையின் 59ஆவது கூட்டத் தொடரில் ஆற்றிய உரையின் இரண்டு வேறுபாடான பிரதிகளை சனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அரசியல்யாப்பு விவகார அமைச்சருமான ஜீ.எல்.பீரிஸ் கூறியுள்ளார். நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் இது தொடர்பாக மேலும் கூறுகையில் செப்ரெம்பர் 21ஆம் திகதி சர்வதேச சமூகத்திற்கு வெளியிடப்பட்ட பிரதிக்கும், 22ஆம்திகதி கொழும்பில் வெளியிடப்பட்ட பிரதிக்கும் இடையே தெளிவான வேறுபாடு காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

21ஆம் திகதி வெளியிடப்பட்ட அறிக்கையில் நோர்வே அரசாங்கத்திற்குப் பாராட்டுத் தெரிவிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் 22ஆம் திகதி வெளியிடப்பட்ட அறிக்கையில் அந்தவரி நீக்கப்பட்டிருந்தது.

இதேவேளை விடுதலைப் புலிகள் இயக்கத்தின் செயற்பாடுகள் தொடர்பாக சனாதிபதி வழங்கிய விளக்கம்21ஆம் திகதி வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் 22ஆம் திகதி வெளியிடப்பட்ட பிரதியில் அது நீக்கப்பட்டுள்ளது. இந்தச் செயற்பாடானது வருந்தத்தக்க ஒன்றெனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை அரசாங்கம் தெளிவான நிலைப்பாட்டில் இல்லாமையால் சமாதான செயற்பாடுகளை முன் கொண்டு செல்லமுடியாதுள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

# தனிப்பட்ட பரீட்சார்த்திகள் விண்ணப்பிக்கலாம்

## க.பொ.த. உயர்தரப் பரீட்சை

(முல்லை)

முல்லை மாவட்டத்தில் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்காகத் தோற்றவுள்ள தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான விண்ணப்பத்தினை அனுப்புமாறு பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளதாக முல்லை மாவட்ட தபால் அதிபர் தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 20ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 20ஆம் திகதி வரை விண்ணப்பிப்பதற்கான பரீட்சைக் கட்டணம் ஒரு பாடத்திற்கு 60 ரூபாவும், மூன்று பாடத்திற்கு 180 ரூபாவும், ஐந்து பாடத்திற்கு 300 ரூபாவும் கட்டணம் கட்ட வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், இக்காலப் பகுதிக்குள் பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தவறினால் 21-10-2004 தொடக்கம் 15-11-2004 இறுதித் திகதிக்குள் விண்ணப்பிக்கலாம். அதற்கான பரீட்சைக் கட்டணம் இரு மடங்காகக் கட்டப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். ஒரு பாடத்திற்கு 90 ரூபா வீதம் மூன்று பாடத்திற்கு 270 ரூபாவும், 5 பாடங்களுக்கு ரூபா 450 ரூபா வீதம் கட்டணமாக கட்டப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். (20)

# திருமலையில் உண்ணாவிரதிகளை அமைச்சர்கள் சந்தித்துப்பேச்சு!

திருகோணமலையில் தமிழீழ விடுதலைப்புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஊர்காவல்படைவீரர்களை விடுவிக்கக் கோரி மேற்கொள்ளப்பட்டு வரும் உண்ணாவிரதப் போராட்டக்காரர்களை அமைச்சர்களான மங்கள சமரவீர,மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் பொலிஸ்மா அதிபருடன் நேற்றுச் சென்று சந்தித்தனர்.

இதன்போது ஊர்காவல் படைவீரர்களை விடுதலை செய்யக்கோரி போராட்டத்தில் ஈடுபட்டிருப்போர், அமைச்சர்களிடம் வலியுறுத்தினர்.

இதன் பின்னர் கிழக்குப் பிராந்திய பொலிஸ் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தின் போது பௌத்த பிக்குமாரின் குழு தமிழீழ விடுதலைப்புலிகளின் நிபந்தனை தொடர்பில் எதனைச் செய்தாவது ஊர்காவல் படை வீரர்களை விடுதலை செய்ய அமைச்சர்கள் முயற்சிக்க வேண்டும் எனக் கோரினர்.

இதனையடுத்து இரண்டு வாரகால அவகாசத்தைக் கேட்ட அமைச்சர்கள் அதற்குள் இந்தக் பிரச்சினைக்கு தீர்வை எட்ட முயற்சிப்பதாக உறுதியளித்தனர். இந்த நிலையில் ஊர்காவல் படைவீரர்களின் உறவினர்கள் தமது போராட்டம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படும் வரை தொடரும் என அறிவித்துள்ளனர்.

### தியாகி...

சிறப்பான முறையில் நடைபெறவுள்ளன. கிளிநொச்சிப் பிரதேசத்தில் சந்திரன் பூங்காவில் சிறப்பாக அமைக்கப்பட்ட திலீபனின் நினைவு மண்டபத்தில் இன்று வழமையான நேரத்தில் நிகழ்வுகள் ஆரம்பமாகி, மாலை 1.00 மணிவரை உண்ணா நோன்பு அனுஷ்டிக்கப்பட உள்ளது. இதில் கிளிநொச்சிப் பிரதேச அரச சார்பற்ற நிறுவன ஊழியர்கள் பங்குபற்றுவார்கள்.

அதேபோன்று நாளைய தினம் கிளிநொச்சிப் பிரதேச தேசிய எழுச்சிப்பேரவை, கிராம அபிவிருத்திச் சங்கம் என்பவற்றின் ஊழியர்கள் கலந்துகொள்வார்கள். நாளைமறுதினம் இறுதிநாள் நிகழ்வில் சகல நிறுவனங்களும் மூடப்பட்டு எழுச்சி பூர்வமாக உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட உள்ளது.

இந்த மூன்று தினங்களும் வீடியோப் படக்காட்சியும் இடம்பெறவுள்ளது. அன்று இரவு கலை நிகழ்ச்சிகளைச் சிறப்பிக்கும் முகமாக தமிழீழ விடியல் இசைக் குழுவினரின் இன்னிசை கானங்களும் இடம்பெறவுள்ளன. எனவே இந் நிகழ்வுகளில் அனைத்துத் தமிழீழ மக்களும் எழுச்சிபூர்வமாகக் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பிக்கும் வண்ணம் மாவட்ட அரசியல்துறையினர் வேண்டியுள்ளனர். (கு)

# சிறப்புச் செயற்குழுக் கூட்டம்

வன்னிப்பெருநிலப்பரப்பில் உள்ள அனைத்துப் பகுதி நேர ஆங்கில ஆசிரியர் சங்க உறுப்பினர்களையும் ஒருமித்துப் பதிவு செய்து கொள்வதற்காகவும் முக்கிய செய்தியொன்றை வழங்குவதற்குமான கூட்டம் நேற்று முன்தினம் மாலை கிளிநொச்சியில் நடைபெற்றது. கிளிநொச்சி, முல்லைத்தீவு,வவுனியா, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த அனைத்துப் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களையும் ஒருவாரத்திற்குள் ஒன்று திரட்டும் இரண்டாவது சிறப்புச் செயற்குழுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது எனவும் போராட்டம் தொடர்பான செய்தி ஒருவாரத்திற்குள் அறிவிக்கப்படுமெனவும் சங்கத்தின் வ.கி.மாகாணத் தலைவர் அறியத்தருகிறார்.

# ஹெக்கிராவையில் ஆயுதங்கள் மீட்பு

அனுராதபுரம்மாவட்டஹெக்கிராவையிலுள்ள மலசல கூட குழியொன்றிலிருந்து நேற்று முன்தினம் மாலை ஒரு தொகுதி ஆயுதங்கள் பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளன. 81 எம்.எம். மோட்டார்-4, 61 எம். எம்.மோட்டார்-4 மற்றும் கிரனைட்-1 ஆகியன மீட்கப்பட்டுள்ளன.

இவை பாவனைக்கு உதவாத நிலையில் காணப்பட்டதாக ஹெக்கிராவைப் பொலிசார் கூறுகின்றார்கள்.

### ஈ.பி.டி.பி...

தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

ஈ.பி.டி.பி. அலுவலகத்திலிருந்து காரில் விகாரை லேனில் உள்ள தனது வீட்டிற்கு வழமை போல் வந்திறங்கிய சமயம் எதிர்கொண்ட இனந் தெரியாத நபர்கள் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார்கள். ஈ.பி.டி.பி.யே சிறிலங்கா அரசின் முக்கிய இராணுவத் துணைப்படை என்பதும், அதன் உறுப்பினர்கள் ஆயுதப்படைகளிற்கான சம்பளப்பட்டியலில் இருக்கிறார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த சம்பவம் குறித்து வெள்ளவத்தைப் பொலிசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றார்கள். வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு வெளியே கடந்த ஒன்றரை மாதத்திற்குள் ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் 3 பேர் இவ்வாறு இனந் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள்.

இதன்போது இவரது மனைவியும்,மேலுமொருவரும் காயமடைந்துள்ளனர். இவர்கள் கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### புலிகளின்...

அரசியல் வேலைத் திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பாகவே ஆராயப்பட்டதால் தமது அரசியல் பிரிவுப் பிரதிநிதிகளே கலந்து கொள்வார்கள் என்று விடுதலைப்புலிகள் முன்கூட்டியே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மாவட்டத்தின் பாதுகாப்புத் தொடர்பில் தாம் விடுதலைப் புலிகளின் இராணுவத் தளபதிகளோடு பேசுவதற்கு விருப்பம் கொண்டிருந்த போதிலும், அவர்கள் நேற்று முன்தினம் சந்திப்பில் கலந்து கொள்ளாதது தமக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளதாக படைத்தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஒவ்வொரு மாதமும் இரு தடவைகள் சந்தித்துப் பேசுவது என இருதரப்பும் இணக்கம் கண்டுள்ளன.அதன் அடிப்படையில் அடுத்த மாதம் 6ஆம் திகதி மீண்டும் சந்திக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

### மாதுறு...

மாதுறு ஓயாப் பிரதேச இராணுவ முகாமில் தங்கியிருந்த இவர்கள் முகாமிற்கு அருகிலான காட்டுப்பகுதிக்குள் வந்தபோதே இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விடுதலைப் புலிகள் மீது அண்மைக்காலங்களில் மேற்கொள்ளப்பட்ட சில தாக்குதல் சம்பவங்கள் இவரது வழிநடத்தலிலே இடம்பெற்றதாகவும், குறிப்பாக இவர் தலைமையிலான அறுவரே காயாங்கேணி இராணுவ முகாமருகிலான தாக்குதல் மற்றும் புல்லுமலை எல்லைநிலை மீதான தாக்குதல் ஆகியவற்றில் இராணுவப் புலனாய்வுப் பிரிவுடன் இணைந்து பங்கேற்றதாகவே தெரிவிக்கப்படுகின்றது.

### சுத்தியலால்...

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது நேற்று முன்தினம் மாலை மதுபான விருந்தொன்றிற்காக சக நண்பர்கள் மூவருடன் சென்ற இவர் அன்றிரவு அப் பகுதியில் உள்ள வீதி ஓரமாக தலையில் பலத்த அடிகாயங்களுடன் குற்றுயிராக மீட்கப்பட்டு மந்திகை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது அவர் நேற்று அதிகாலை 3மணியளவில் உயிரிழந்தார்.

இவர் குற்றுயிராக மீட்கப்பட்ட இடத்திலிருந்து இரத்தம் தோய்ந்த நிலையில் சுத்தியல் ஒன்றும் மீட்கப்பட்டது. பிரஸ்தாப நபர் இச்சுத்தியலாலேயே அடித்துக் கொல்லப்பட்டிருப்பதாக வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இச் சம்பவத்தையடுத்து இவரை வீட்டிலிருந்து அழைத்துச் சென்ற 3 பேரும் சந்தேகத்தின் பேரில் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (33)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.